# இந்துவேத சிந்தனைகள்

நான் வேதம்

இலிங்கம், சத்திலிங்கம், சிவலிங்கம்

முதல் பாகம்

அருளுபவர் :
அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார்

இருக்கு வேதம்

அசுர வேதம்



அதர்வான வேதம்


யாம வேதம்

காஞ்சி பெரியவர்

பதினெண் சித்தர் மடம் வெளியீடு
அம்பத்தூர், சென்னை—53

விலை ரூ. 12

# இந்து வேதாகமப் பாடசாலை




## அம்மையப்பர்

**பூசை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்**
**மந்தரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்**
**அருள் பெறக் கற்றுக் கொள்ளுங்கள்**
**அருள் வழங்கக் கற்றுக் கொள்ளுங்கள்.**

# இந்துவேத சிந்தனைகள்

(முதல் பாகம்)

அருளுபவர்

## அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்

பதினெண் சித்தர் மடாதிபதி, பீடாதிபதி

தொகுப்பாசிரியர்

**சித்தர் ஊழித்தாண்டவர்**

**கு. இரவிமணி** B.Sc., B.Tech.,

வெளியீடு

**பதினெண் சித்தர் மடம்**

**அம்பத்தூர் சென்னை-53**

தொலைபேசி : 654447

முதல் பாகம்

முதற்பதிப்பு : இந்துமத ஆண்டு 43,73,095 (சித்திரைதிங்கள்)
கிறித்துவ ஆண்டு 1994, ஏப்ரல்.

வெளியீடு எண் : 453

உரிமை : பதினெண் சித்தர் மடம்

**விலை. ரூ. 12-00**

[கடந்த, அறுபது ஆண்டுகால இடைவெளியில்; பலமுறை இந்துக்களின் விழிச்சிக்காகவும், எழிச்சிக்காகவும், சிறுசிறுகட்டுரைகளாக; தனித்தனி நூல்களாக வெளியிடப்பட்டவைகள்; இன்றைய நாட்டுநிலைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப விரிவு செய்யப்பட்டு **'இந்து வேத சிந்தனைகள்'** என்ற தலைப்பில் பல தொகுதிகளாக வெளியிடப்படுகின்றன].

பதிப்பகத்தார்:

இந்துவேதம் பரப்பும் நாயகம் பதிப்பகம்
266 - கீழ வெளி வீதி
மதுரை-1 தொலைபேசி-39046

அச்சிட்டோர்

ஆசிரியர் குழு
'இந்து ஆரணம்'
சித்தர் ஆன்மீக மாத இதழ்,
10, டிரசுடுபாக்கம் (தெற்கு)
மந்தைவெளி, சென்னை-28.
தொலைபேசி : 4939426.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | A-1 |
| நூல் வெளியீட்டாளர் முன்னுரை | B-1 |
| வரவேற்புரை | C-1 |
| போற்றியுரை | D-1 |
| அணிந்துரை | E-1 |
| சிறப்புரை | F-1 |
| இந்து வேதமும், இந்து மதமும் பிறந்த இடம் காலம், தோற்று வித்தவர்கள் (பிறப்பித்தவர்கள், வழங்கியவர்கள்) | G-1 |
| இந்து வேதம் | H-1 |
| ஆதிசிவனார் இந்து வேதம் | I-1 |
| இந்துமதம் 'இறந்திடுமா?' 'மறந்திடுமா?' | 1 to 32 |
| இந்து வேதமும், இந்து மதமும் அருளப்பட்ட முத்தமிழ் மொழி | J-1 |
| இந்து வேதமும், தமிழ் மொழியும் | K-1 |
| அன்றுடப் பூசைமொழி | L-1 |
| நிறைவுரை | M-1 |

# பதிப்புரை

## இந்து மதம் காத்திட பத்தியுணர்வுள்ள இந்துக்கள் இந்துவேத முன்னேற்ற கழகத்தில் உடனேயே உறுப்பினராக வேண்டும்

### இந்து வேத முன்னேற்றக் கழகம் (தென்மண்டலம்)

| | | |
|---|---|---|
| தலைவர் | - சித்தர் உருத்திரத்தேவர், | ச. துரைராசன் B.Sc., |
| செயலாளர் | - சித்தர் முத்தீசர், | வெ. செகதீசன் B.Sc., |
| பொருளாளர் | - சித்தர் வேதகணநாதர், | த. கேசவன் B.Com., |
| அமைப்பாளர் | - சித்தர் கொங்கணர், | இராம. செல்லம். |

இந்துவேதம் வளர்க்கவும், இந்துமதம் காத்திடவும்; இந்துக்களை தயாரிப்பதற்குரிய வேதநூல்களையும், வேதம் சார்ந்த மற்ற நூல்களையும்; இன்றைக்கு இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடமாக இருக்கின்ற ஞாலகுரு, அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்களின் படைப்புக்களையும், பதினெண் சித்தர்கள் பற்றிய நூல்களையும் வெளியிடும் மாபெரும் பணி சென்னையில் பதினெண்சித்தர் மடத்தில் நிறைவேறி வருகிறது.

இப்பணியின் சுமையினை ஓரளவாவது குறைக்கவேண்டும் என்பதற்காக, இ.மு.கவின் தென்மண்டல நிர்வாகத்தினர் 'இந்துவேதம் பரப்பும் நாயகம் பதிப்பகம்' என்ற கூட்டு நிறுவனத்தை உருவாக்கிச் செயல்படுகிறோம். நாங்கள், இந்துக்களுக்கு இந்துமதத்தை மிகக் குறுகிய கால அளவிற்குள் புரியவைக்கும் வண்ணம் சிறிய சிறிய வெளியீடுகளை வெளியிடவும் அன்றாடப் பூசைகளுக்கும், பரிகாரங்களுக்கும், சடங்குகளுக்கும் திருநாள்களுக்கும், திருவிழாக்களுக்கும் உரிய செய்திகளை சிறுசிறு புத்தகங்களாக வெளியிட முன்வந்துள்ளோம். இதற்காக, கூட்டு முயற்சியாக பத்தியுணர்வுள்ள இந்துக்களை தங்களால் இயன்ற பொருள் முதலீடுகளையும், உடல் உழைப்பு முதலீடுகளையும், எங்களுடைய இ.வே.ப.நா பதிப்பகத்திற்கு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துச் செயல்படுகிறோம்.

எங்களுடைய கூட்டு முயற்சி ஞான வேந்தர், அருட்கொடை வள்ளல், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்களால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டு எங்களுடைய

பதிப்பகத்தையே 'இந்துவேத சிந்தனைகள்' என்ற நூலுக்குப் பதிப்புரை எழுதுமாறு பணித்துள்ளார். இதற்காக, நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். ஒவ்வோர் இந்துவின் கையிலும் இருக்கவேண்டிய, இருக்கப்போகிற பெருமையை உடைய இந்த நூலில் எங்களுடைய இந்துவேதம் பரப்பும் முயற்சியும், மக்களுக்கு அறிமுகப்படுத்துவது குருதேவரின் திட்டமிட்ட முயற்சிக்குச் சான்றாகும்.

இன்றைக்கு நாட்டு நடப்பில் வெளிநாடுகளிலிருந்து வந்து குவிகின்ற வகைவகையான உதவிகளால் இந்துவேதமான இந்துமதத்திற்கு நேரடியான பாதிப்புக்களும், மறைமுகமான பாதிப்புக்களும் வளர்ந்து வருகின்றன. இதனால், நமது, முன்னோர்களான சித்தர்களும், முத்தர்களும், புத்தர்களும், போத்தர்களும், முனிவர்களும், மகான்களும் இருடிகளும், ஞானிகளும், நமது மண்வளத்திற்கும், இயற்கை வளத்திற்கும், தட்ப வெட்ப நிலைகளுக்கும், வானிலுள்ள ஒன்பது கோள்களும், பன்னிரண்டு இராசிகளும், இருபத்தேழு விண்மீன்களும், நம் நாட்டு பயிரினங்கள் மீதும், உயிரினங்கள் மீதும் நிகழ்த்தும் ஆட்சி நிலைகளுக்கும் ஏற்ற வண்ணம் உருவாக்கிக் கொடுத்திருக்கும் நமது இந்துவேத, இந்துமத அகப்பண்பாடுகளும், புற நாகரீகங்களும் வாழ்வியல் மதிப்பீடுகளும். உணவு, உடை, உறையுள் முதலியவற்றிற்குரிய பழக்க வழக்க நடைமுறைகளும் மிகப்பெரிய அளவுகளில் சிதைவுகளையும், சீரழிவுகளையும், தலைகீழ் மாற்றங்களையும், முரண்பாடுகளையும் பெற்று விட்டன, பெற்று விட்டன, பெற்று விட்டன; பெற்று வருகின்றன, பெற்று வருகின்றன, பெற்று வருகின்றன.

இவற்றின் விளைவாக நம்நாட்டில் படித்தவர் படிக்காதவர் என்ற வேறுபாடின்றி; நகரத்தார், கிராமத்தார் என்ற வேறுபாடின்றி; பணக்காரர் ஏழை என்ற வேறுபாடின்றி; முதலாளி, தொழிலாளி என்ற வேறுபாடின்றி; நூற்றுக்கு எழுபத்தைந்து (75) பேர்கள் அன்னிய மதத்தவர்களைப் போன்று உடை உடுத்தவும், உணவு உண்ணவும் தாய்மொழியை மறந்து அந்நிய மதத்தவர்களுக்குரிய பழக்க வழக்கங்களையும், நடைமுறைகளையும், திருநாள்களையும், திருவிழாக்களையும், இவை சார்ந்த பிறவற்றையும் ஏற்று நடைமுறைப் படுத்துபவர்களாகவுமே இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள்.

இதனால், இதனால், இதனால் நம் நாட்டவர்களை நமது இந்துக்கள், நமது இந்தியர்கள் தங்கள் தங்களுடைய இன உரிமைகளையும், பெருமைகளையும்; மொழி உரிமைகளையும், பெருமைகளையும்; வரலாற்றுப் பாரம்பரியக் கூறுபாடுகளையும், உரிமைகளையும், பெருமைகளையும்; பண்பாட்டுப் பாரம்பரியத்தின் வீரியமிக்க உணர்வுகளையும் ... துறந்தவர்களாக, மறந்தவர்களாக, மறுப்பவர்களாக, வெறுப்பவர்களாக, எதிர்ப்பவர்களாக, பகைப்பவர்களாக, நகைப்பவர்களாக, இழித்துப் பழிப்பவர்களாக, அழித்தொழிக்க முற்படுபவர்களாக ... தங்களையும், அறியாமல்!? தங்களையும் அறியாமல்!?!? தங்களையும் அறியாமல்!?!?!? ... மாறி வருகிறார்கள், மாறி வருகிறார்கள், மாறிவருகிறார்கள்.

அதாவது! .. அதாவது!! .. அதாவது!!! .. நமது இன்றைய மக்களும்; வருங்கால மக்களாகப் போகின்ற நமது வாரிசுகளாகிய நமது இளைய தலைமுறையினர்களும் வேற்று

மதத்துக்குரிய நாட்டினரை, நம்மைவிட உயர்ந்தவர்களாக, சிறந்தவர்களாக, நமது தலைவர்களாக, நமது வழிகாட்டிகளாக, நமது வழித்துணைவர்களாக .. **போற்றிப்** புகழ்ந்து ஏற்று அடிமைகளாகி வருகிறார்கள்.

இந்த அடிமை உணர்வு, நம்மவர்கள் தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும், அரசியல் வாழ்விலும் தொன்றுதொட்டு நமக்கென இருந்து வரக்கூடிய **அனைத்துவகைப்பட்ட தனித்தன்மைகளையும்** உணர்வுகளையும், இயல்புகளையும், பண்பாட்டு நடைமுறைகளையும், நம்பிக்கைகளையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும், முழுமையாக இழக்க நேரிட்டு விடும், இழக்க நேரிட்டுவிடும், இழக்க நேரிட்டுவிடும்.

அப் பேரிழப்பால்! .. அப்பேரிழப்பால்!!... அப்பேரிழப்பால்!!!... வருங்காலத்தில் நம்மவர்களே வலியச் சென்று அந்நிய மதங்களுக்குரிய நாட்டவர்களின் தலைமையை ஏற்று; அவர்களின் **அடிமைகளாக! எடுபிடிகளாக! கூலிகளாக! வேலைகளாக!** வாழவேண்டிய காலிநிலை, போலிநிலைதான் உருவாகிடும், உருவாகிடும், உருவாகிடும். அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது! தடுத்து நிறுத்தமுடியாது!! தடுத்து நிறுத்த முடியாது!!! தடுத்து நிறுத்தவே முடியாது!!!!

இவற்றையெல்லாம் எண்ணித்தான் நீண்ட; நெடிய, காடோடி, நாடோடி... , கடலோடி... வாழ்வியல் அநுபவங்களோடு இந்துவேத அடிப்படையில், இந்துமத வாழ்வை நிலை நிறுத்துவதற்காக, பாதுகாப்பதற்காக, முறையான, நிறைவான, புதிய புதிய நிறுவன நிர்வாகக் கட்டமைப்புகளை உருவாக்கிச் செயல்படப் புறப்பட்டிருக்கிறார். அருட்கொடை வள்ளல், ஞானவள்ளல், ஞானவேந்தர் ஞாலகுரு, குருமகா சன்னிதானம், சித்தர் அரசயோகி கருவூறார், அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள்.,

இவர், நாட்டளவிலும், ஏட்டளவிலும் ஆற்றி வந்துள்ள அளப்பரிய பணிகளால் மக்கள் இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளவும், இந்துமதத்தைப் புரிந்து கொள்ளவும், அக்கறையும் ஆர்வமும் கொண்டு, ஏறத்தாழ பெரும்பாலான பட்டி தொட்டிகளிலும், குக்கிராமங்களிலும், சிற்றூர்களிலும், பேரூர்களிலும், நகரங்களிலும், மாநகரங்களிலும், இந்துக்களுக்கென சங்கங்கள், சபைகள், மன்றங்கள், கழகங்கள், குழுக்கள், இயக்கங்கள், மடங்கள் .. முதலிய பல்வேறுவகையான நிறுவன நிர்வாகக் கட்டமைப்புகள் உருவாக ஆரம்பித்து விட்டன, உருவாக ஆரம்பித்து விட்டன, உருவாக ஆரம்பித்து விட்டன.

இப்படி, கணக்கற்று, உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்காக, உலகப் பொது வேதமான இந்துவேதம் தழைப்பதற்காக உலக மதங்களுக்கெல்லாம் மூலமதமாக, ஆதார மதமாக, அடிப்படை மதமாக, உயிரோட்ட மதமாக இருக்கின்ற இந்துமதம் பிழைப்பதற்காக, உழைக்க உருவாகியிருக்கும் நிறுவன நிர்வாகங்களையும் தனிப்பட்ட பத்தியாளர்களையும், சத்தியாளர்களையும், சித்தியாளர்களையும், முத்தியாளர்களையும், பிணைத்து ஒருங்கிணைப்பதற்காகத்தான்; பதினெண் சித்தர் மடத்து இந்து வேதாகமப் பாடசாலையின் இந்து முன்னேற்றக் கழகம் தனது செயல்திட்டங்களை வெளியிட்டிருக்கிறது, வெளியிட்டு வருகிறது. இவற்றின் ஆதார சுருதிகளை விளக்கும் வண்ணம்தான் 'இந்துவேத சிந்தனைகள்' என்ற தலைப்பில் பலபாகங்களாக, தொடர்நூல் வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இம் முயற்சிக்கு, மிகப்பெரிய அளவில் பேராதரவுகள், எல்லா வகைப் பட்டவர்களிடமிருந்தும் வருவதைப் பொறுத்துத் தான், இந்து வேதத்துக்குரிய பூசை மொழி நூல்கள் (108) நூற்றெட்டும், பூசைவிதி நூல்கள் நாற்பத்தெட்டும் (48), தத்துவ நூல்கள் (96) தொண்ணூற்றாறும், செயல் சித்தாந்த நூல்கள் (144) நூற்று நாற்பத்து நான்கும், இந்துமத நூல்கள் (36) முப்பத்தாறும், பதினெண் சித்தர் பீடாதிபதிகள் எழுதிடும், எழுதிவந்துள்ள குருபாரம்பரியங்களும், அரசபாரம்பரியங்களும், இலக்கிய பாரம்பரியங்களும் ... அடுத்தடுத்து விரைவில் அச்சேறி நூல்களாக வெளிவந்து அருட்கொடைகளையும், அறிவுக்கொடைகளையும், கலைச் செல்வங்களாக, உலக மானுட இனங்களின் மேம்பாட்டிற்காக அருளிடமுடியும், அருளிடமுடியும், அருளிடமுடியும் என்பதைச் சொல்லி பதிப்பகத்தின் பதிப்புரையை நிறைவு செய்கிறோம்.

இந்து வேதம் பரப்பும் நாயகம் பதிப்பகத்தார்.

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**

# நூல் வெளியீட்டாளர் முன்னுரை

## 'இந்து வேதம் தழைத்தால்தான் இந்துமதம் பிழைக்கும்'

பதினெண் சித்தர் மடம்,
G.N.T. சாலை, காரனோடை,
சென்னை-67, தொ.பே. 654447.

ஞாலகுரு, குவலயகுருபீடம்,
அந்தணர் அண்ணல்,
ஞானாச்சாரியார்,
31—1—1994.

அகமகிழ்வுக்கும் அமைதிக்குரிய அன்பும், ஆழ்ந்த பற்றுப்பாசமும், அனைவரின் அரவணைப்பும், அம்மையப்பன்களின் அருளும் கிடைத்திடும் வாழ்க்கை அண்ட பேரண்டத்தார் அனைவருக்கும் கிடைத்திடச் செய்ய அருளப்பட்டதே இந்துவேதம்.

இந்த இந்துவேதம்தான், பிண்டம், அண்டம், பேரண்டம், அண்ட பேரண்டம், விண்மீன், கோள், இராசி, நாள், அணு, உயிரணு, ஆவி, ஆன்மா, ஆருயிர், சீவன், பயிரினம், உயிரினம், மணீசர், மனிதர், முற்பிறப்பு, மறுபிறப்பு, இப்பிறப்பு, அருளுலகு, பொருளுலகு, பத்தி, சத்தி, சித்தி, முத்தி, கடவுளைக் காணல், கடவுளாகவே மாறுதல், மனிதனுக்கு மொழி, இனம், நாடு என்றுள்ள முக்கோண எல்லை; கடவுளுக்கும் மொழி, இனம், நாடு என்ற முக்கோண எல்லை; மதத்துக்கும் மொழி, இனம், நாடு என்ற முக்கோண எல்லை முதலிய, அரிய பெரிய உண்மைகள் மிகமிகத் தெளிவாகவும், எளிதாக எல்லோரும் புரிந்து கொள்ளும் படி விளக்கமாகவும் எடுத்துக் கூறுகிறது.

இவற்றால், ஒவ்வொரு மனிதனும் பகுத்தறிவுப் பூர்வமாக எதையும் தெரிந்து, ஆராய்ந்தறிந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, ஏற்றுச் செயல்படுத்தி நல்வாழ்வு வாழமுடிகிறது. அதாவது, இந்துவேதம் அனைத்து வகையான மடமைகளையும், மாயைகளையும், மூடநம்பிக்கைகளையும், கண்மூடிப் பழக்க வழக்கங்களையும், ஆபாசக் கற்பனைகளையும் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக உள்ள கட்டுக் கதைகளையும் முழுமையாக அகற்றிடும் பேராற்றல் இந்து வேதத்துக்குத்தான் இருக்கிறது.

இவற்றையெல்லாம் எண்ணித்தான் இந்துவேதம் பரப்புகின்ற பணிக்காக 'இந்துவேத முன்னேற்றக் கழகம்' (இ.மு.க) என்ற அமைப்பும்; 'இந்து வேதாகம பாடசாலை' என்ற கல்வி நிறுவனமும்; இந்துவேதவழியில் மக்களுக்கு அருள்வழங்கும் இருக்குவேத, அசுரவேத, அதர்வான வேத, யாமவேத அருட்கோட்டங்களும் ... தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இந்துவேதம் முந்நூற்றுத் தொண்ணூற்ரூறு (396) நூல்களை உடையது என்பதால்; அதிலுள்ள கருத்துக் குவியல்களை, செய்திக் குவியல்களை பற்றிப் பொதுமக்கள் ஓரளவாவது தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான்; 'இந்துவேத சிந்தனைகள்' என்ற தலைப்பில் பலபாகங்களாக தனித்தனி நூல்களை வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

இம்முயற்சிக்கு, இந்துக்கள் பேராதரவு தரமுன் வரவேண்டும். கோயில் உண்டியல் களில் பணம் செலுத்துவது போல்; இந்துவேதநூல்களும், இந்துமத நூல்களும் இவைபற்றிப் பெருவாரியான பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்காக எழுதப்படும் நூல்களும் அச்சேறி வெளிவருவதற்குப் பத்தி உணர்வுள்ள இந்துக்கள் தங்களுடைய உதவிகளை வாரிவாரி வழங்கிட முன்வரவேண்டும்.

பெரும்பாலான இந்துக்களுக்கு 'இந்துவேதம்' என்ற ஒன்று இருப்பதே தெரியாது. இந்தத் 'தெரியாமை' அகற்றப்பட்டால்தான் இந்துமதம் விழிச்சி பெறும்! எழிச்சி பெறும்!! செழிச்சிபெறும்!!! ஆட்சி மீட்சி அடைந்திடும்.

இந்துவேதம் தெரிந்தால்தான் இந்துக்கள் இந்துமதப் பற்ரூேடும் ஒற்றுமையோடும் வாழ்ந்திடுவர் 'இந்துவேதம் புரிந்தால்தான் இந்துக்கள் தங்களின் அகப்பண்பாட்டினையும், புறநாகரிகத்தையும் காப்பாற்றிட முன்வருவார்கள்; உரிய முயற்சிகளைப் பெரியஅளவில் மேற் கொண்டிடுவார்கள்.' 'இந்துவேதம் தெரியாத, அறியாத, புரியாத, சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய, தொழில்துறைத் தலைவர்கள் தான், இந்துவேத வளர்ச்சிக்கும், இந்துமத வாழ்வியல் பயிற்சிக்கும் எதிர்ப்பாளர்களாக! மறுப்பாளர்களாக! வெறுப்பாளர்களாக! நாத்திகர் களாக! வாழுகிரூர்கள். இதைத் தடுப்பதற்காகவே! எல்லாத் துறையையும் சேர்ந்தவர் களுக்கு 'இந்துவேத அறிவை' வழங்குவதற்காகவே 'இந்துவேத சிந்தனைகள்' என்ற தலைப் பில் பலபாகங்கள் தொடர்ந்து வெளிவர உள்ளன!

பாழடைந்த கோயில்கள் ஆயிரமாயிரம் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்குச் செய்யப்படுவ தால் இந்துமதத்துக்கு ஏற்படக்கூடிய பயன்களைவிட; இந்துவேதத்தை அச்சிட்டு மக்களுக்கு நூற்றுக்கணக்கில் வழங்குவதாலும்; இந்து வேதாகமப் பாடசாலைகளைப் பத்தின் மடங்குகளில் பரவலாக ஒருசில கோயில்களில் தோற்றுவிப்பதாலும், இந்துமதத்துக்குப் பலகோடி மடங்கு நன்மை விளையும்.

ஆதிசிவனுர், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும்; அருளூறு அமுத தெய்வீகச் செம்மொழியுமான 'முத்தமிழ் மொழியில்' அருளியுள்ள இந்துவேதத்தில்; இன்றைக்கும் பயன் படவேண்டிய, பயன்படுத்தப் பட்டிட்டால்தான் அருளுலகப்பொருளுலக அறியாமைகளும், புரியாமைகளும், தெரியாமைகளும் அகற்றிடப்பட முடியுமென்ற பொருளாழமிக்க, அழகிய, இனிய, செந்தமிழ்ச் சொற்கள் நூருயிரக் கணக்கில் இருக்கின்றன.

இந்த இந்துவேதத்தால்தான் முத்தமிழ்மொழியின் அருமை, பெருமை, அரிய பெரிய கடவுளாற்றல், தெய்வீக சத்தி முதலியவற்றை உலகுக்கு உணர்த்தமுடியும்.

இந்த இந்துவேதம் தான், 'முத்தமிழ்மொழி கடவுளர் மொழி'; 'முத்தமிழ் மொழி தேவர்களின் மொழி'; 'முத்தமிழ் மொழி தெய்வங்களின் மொழி'; 'முத்தமிழ்மொழி ஆண்டவர்களின் மொழி'; 'முத்தமிழ்மொழி வேதமொழி'... என்ற பேருண்மைகளை விளக்குகிறது.

முத்தமிழ் மொழி விடுதலைபெற, உரிமைபெற, பெருமை பெற, வள வளர்ச்சி பெற, ஆட்சிமீட்சி பெற... இந்துவேதம் பரப்பப்பட்டேயாக வேண்டும்.

முத்தமிழ் மொழியிலுள்ள இந்துவேதம்தான் கடவுளர்களாலேயே எழுதப்பட்ட வேதம். முத்தமிழ் மொழியிலுள்ள இந்து வேதத்தில் தான் கடவுளர்களின் பிறப்பு, இறப்பு, பிறப்பிறப்பற்ற பெருநிலை, வடிவம், வண்ணம், வாழ்வியல், வாழ்விடம், விருப்பு, வெறுப்பு, போதனை, சாதனை... முதலிய அனைத்தும் தெளிவாகப் பட்டியலிட்டு விளக்கப்படுகின்றன. இந்த இந்து வேதத்தில்தான் கடவுள்களைக் கண்டவர்கள் கடவுளர் பற்றி விண்டுரைக்கும் செய்திகளும் வரலாறுகளும்; கடவுளர்களை விண்டுரைத்துச் செயல்பட்டே கடவுளர்களைக் கண்டவர்களுரைக்கும் செய்திகளும் வரலாறுகளும் இருக்கின்றன.

தமிழர்கள், திருவருட் செல்வர்கள், தங்களின் அருளுலக அநுபவங்களைப் பற்றிப் பாடி தோத்தர, தோத்திர, தோத்திறங்களையும்; ஆச்சாரியார்கள் வெளியிட்டுள்ள மதவாழ்வியலுக்குரிய சாத்தர, சாத்திர, சாத்திறங்களையும் மட்டுமே போற்றிப்பேணிப் பரவி வருகிறார்கள். இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டு ஆதிசிவனார் அருளிய இந்துவேதம் தமிழர்களால் பரவலாகப் படிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படல் வேண்டும். ஏனெனில், 'தமிழர்களின் உள்ளங்களும் இல்லங்களுமே; இந்துவேத வித்துக்களைத் தயாரிக்கும் விதைப் பண்ணைகள், நாற்றுப் பண்ணைகள், நாற்றங்கால்கள் ... விரிவுகருதி நிறைவு செய்கிறோம்.

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**

# வரவேற்புரை

**சித்தர் ஊழித் தாண்டவர்**
**கு. இரவிமணி B.Sc., B.Tech., ஆசிரியர்.**
**(இந்து ஆரணம் - சித்தர் ஆன்மீக மாதஇதழ்)**

## "இந்து வேதத்தீ பரவட்டும்
## திராவிட மாயை அகலட்டும்"

'இந்து வேத சிந்தனைகள்' என்ற தலைப்பில், இந்து வேதாகமப் பாடசாலையின் போதனையாக, சாதனையாக வெளிவருகின்ற தொடர் வெளியீடுகளின் முதல்பாகத்தை வரவேற்று உரை எழுதுவதை எமது கடமையாகவும், உரிமையாகவும் கருதுகிறோம்.

இன்றைக்கு, இந்தியத் துணைக் கண்ட அளவிலும் சரி; மாநில அளவுகளிலும்சரி; அரசியல் துறையிலும், சமுதாயத்துறையிலும், கலை, இலக்கியத் துறைகளிலும் .. நாத்திகக் கருத்தோட்டமும், மதநம்பிக்கையின்மையும், மதப்பற்றின்மையும், மதமறுப்புணர்வும், மத வெறுப்புணர்வும், மத எதிர்ப்புணர்வும்... இந்துக்களுக்கு மட்டுமே அதிக அளவில் இருக்கின்றது.

இதுபற்றி, இந்துவேதத்துக்கும், இந்துமதத்துக்கும் தலைமை குருபீட குருதேவராக விளங்கும் பதினெண் சித்தர் மடாதிபதி பீடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள், கால் நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாக முறையான ஆய்வுகளை நிகழ்த்தியதின் பயனாகத் தான் 1. 'அருட்பணி விரிவாக்கத் திட்டம்' 2. 'அருட்கோட்டங்கள்' 3. இந்து' வேதாகம பாடசாலை' 4. சேவலோன் போர்க்கலைப் பயிற்சி சாலை, 5. ஓகாசன, யோகாசன, மோகாசன, போகாசனங்களும், குண்டலினி, குண்டளினி, குண்டழினிகளும் கற்பிக்கும் ஆசிரமம், இந்துவேத முன்னேற்றக் கழகம் . முதலிய பல்வேறு வகைப்பட்ட நிறுவன நிர்வாகங்களைத் தோற்றுவித்தார். இவற்றின் மூலம் இன்றைக்கு இந்துக்களும், மாற்று வேதத்தவர்களும், வேற்று மதத்தவர்களும், நாத்திகர்களும், பகுத்தறிவு வாதிகளும், சீர்திருத்த வாதிகளும் ... குறைகூறி குற்றம் சாட்டி வருத்தப்படுகின்ற சாதிவேற்றுமைகளும், ஏற்றத் தாழ்வுகளும், தீண்டாமைகளும், வருணாசிரமதர்மக் கொள்கைகளும், கோட்பாடுகளும், நெறி முறைகளும், அணுகுமுறைகளும் முற்றிலுமாக தூரோடும், வேரோடும் அகற்றப்படும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இம்முயற்சியில் மாபெரும் வெற்றிகளைப் பெற்று வருகிறார். அதாவது, இந்துவேதத்துக்கும், இந்துமதத்துக்கும் முழுமுதல் தலைமை குருபீடமாக விளங்கும்

அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியார் அவர்கள் ஆதிசிவனுரால் முத்தமிழ் மொழியில் அருளப் பெற்றுள்ள இந்துவேத நூல்களிலும், இந்துமத நூல்களிலும் நான்காவது யுகமான கலியுகத்தில்; கலியுகம் பிறந்து இரண்டாயிரம் (2000) ஆண்டுகள் கழித்து நாராயணர் என்ற கடவுளால், சமசுக் கிருத மொழியில் அருளப்பட்டதாகக் கூறப்படுகின்ற ஹிந்து வேதநூல்களுக்கும், ஹிந்துமத நூல்களுக்கும் இடையில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பங்குக்கு மேல் வேற்றுமைகள், முரண்பாடுகள், வேறுபாடுகள், மாறுபாடுகள் இருக்கின்றன என்ற பேருண்மையையும்; ஆதிசிவனுர் இந்துவேத நூல்களிலும், இந்துமத நூல்களிலும் கூறுத கொள்கைகளும், கோட்பாடுகளும், சடங்குகளும், நடைமுறைகளும், பழக்க வழக்கங்களும், புராண இதிகாசங்களும், கதைகளும், சாத்திரங்களும், பூசை விதிகளும், மந்திரங்களும், பூசைவகைகளும் கலியுகத்தில் நாராயணர் எனும் கடவுள் கூறியதாக உள்ள ஹிந்து வேத நூல்களிலும், ஹிந்து மதநூல்களிலும் இருக்கின்றன என்ற பேருண்மையினையும்; இந்துக்களும், மற்றவர்களும், தெளிவாகப் புரிந்து கொள்ளும் பணியினைத்தான் மேலே குறிப்பிட்ட பதினெண் சித்த மடத்துக்கும், பீடத்துக்குமுரிய அனைத்து வகைப்பட்ட நிறுவனங்களும், நிர்வாகங்களும், ஏட்டுக் கல்வியாகவும், பயிற்சிக் கல்வியாகவும், போதக அறிவாகவும், சாதக அறிவாகவும், பட்டறிவாகவும், ஏட்டறிவாகவும் வழங்குகின்றன.

குருமகாசன்னிதானம், அந்தணர்அண்ணல் ஞானுச்சாரியார் அவர்கள்; தமது நிறுவன நிர்வாகங்களின் மூலம் தம்மிடம் வரக்கூடியவர்கள் எந்த சாதிக்காரர்கள்? உயர்ந்த சாதிக்காரர்களா? தாழ்ந்த சாதிக்காரர்களா?... என்ற விசாரணேயே இன்றி ... வந்தவரின் விருப்பப்படி அவரை

| | | |
|---|---|---|
| 1. அத்தரியார். | 2. சாத்திரியார். | 3. சூத்திரியார். |
| 4. தோத்திரியார் | 5. நேத்திரியார் | 6. வேத்திரியார். |
| 7. வாத்தியார். | 8. ஐயர். | 9. ஆச்சாரியார் |
| 10. அந்தணர் | 11. சன்னிதானம் | 12. ஆதினம். |
| 13. தம்பிரான். | 14. மடாதிபதி. | 15. பீடாதிபதி. |
| 16. பண்டாரம். | 17. பண்டார சந்நதி. | 18. பண்டார சந்நிதி. |
| 19. அரியவாள். | 20. கூரியவாள். | 21. சீரியவாள் |
| 22. பெரியவாள். | 23. நேரியவாள். | 24. வீரியவாள். |
| 25. ஏமகோடி பீடம். | 26. காமகோடி பீடம். | 27. சோமகோடி பீடம். |
| 28. வாமகோடி பீடம். .. | | |

என்ற அருட்பட்டங்களுக்குரிய கலைகளில் பயிற்சி பெற்று பூசாரியாக, குருக்களாக, குருமாராக, குருதேவராகச் செயல்படச் செய்கிருர். இதுமட்டுமல்லாமல் யார் வேண்டுமானுலும்

1. பத்தர், 2. பத்தியார், 3. புத்தர்,
4. புத்தியார், 5. போத்தர், 6. போத்தியார்,
7. முத்தர், 8. முத்தியார், 9. சீவன்முத்தர்
10. சீவன் முத்தியார், 11. அருவசித்தியார், 12. அருவுருவ சித்தியார்,
13. உருவருவ சித்தியார், 14. உருவ சித்தியார் ...... எனும் பதினான்கு நிலைகளுக் குரியவர் ஆகிடலாம்; இவை கடந்து சித்தராகவே ஆகிடுவதற்குரிய எல்லாவகையான வசதி வாய்ப்புக்களையும் தமது குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம் எனும் நான்கு வகைப் பட்ட அருளுலகப் பயிற்சிக் கல்வி நிலையங்களின் மூலம் அருளி அரிய பெரிய சாதனைகளைச் சாதித்து வருகிறார்.

இவ்வாறு, இந்துமதம், ஆதிசிவனார் அருளிய இந்துவேதத்தின் மூலம் புதிய வலிவை யும், பொலிவையும், வாளிப்பையும், வளத்தையும் பெற்றிடும் சாதனைகள் எவ்விதமான விளம் பரமோ, ஆரவாரமோ, ஆர்ப்பரிப்போ, பரபரப்போ இன்றி அமைதியாக இந்துவேதத்துக்கும், இந்து மதத்துக்கும் கருவறையான, பிறப்பிடமான, தாய் வீடான, தமிழ்நாட்டில் அல்லும் பகலும் நிகழ்ந்து வருகின்றன.

இப்பேருண்மையினை, இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும், மூலவர்களாக, காவலர்களாக, வாரிசுகளாக, நாயகங்களாக, தலைவர்களாக ...... வாழையடி வாழையாக, வாழ்ந்து வருகின்ற தமிழ் நாட்டவர்கள், தமிழ் இனத்தவர்கள், தமிழ் மொழிக்காரர்கள், தமிழ்ப் பண்பாட்டிற்குரியவர்கள், தமிழ் நாகரீகத்திற்குரியவர்கள், மொழியாலும், வழிபாட் டாலும் தமிழர்களாக மாறியிருப்பவர்கள் உடனடியாக முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து அறிந்து கொள்ள வேண்டும்!; அறிந்து ஆராய்ந்திடல் வேண்டும்!; ஆராய்ந்து புரிந்திடல் வேண்டும்; புரிந்து தெளிந்திடல் வேண்டும்!; தெளிந்ததை முழுமையாக உணர்ந்து, நம்பி ஏற்றுச் செயலாக்கிடல் வேண்டும் ... அதுதான், அல்லும் பகலும் அயராது இந்து வேதத்திற்காகவும், இந்து மதத்திற்காகவும் ஆயிரமாயிரம் சிந்தனைகளையும், செயல் திட்டங்களையும் உருவாக்கி வரும் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியாருக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

இதற்காகத்தான் இந்த உலகிலேயே இந்து வேதத்திற்காகவும், இந்துமதத்திற்காகவும் இருக்கின்ற ஒரே நாடான இந்தியாவில்; இந்துமதம் பிழைக்கவும், நேரடியாக இந்துவேதத் தின் தாயகமான, பிறப்பிடமான, காப்பிடமான, தமிழகத்தில் முழுமையாக இந்துவேத இந்து மதமறுப்புக்கும், வெறுப்புக்கும், எதிர்ப்புக்கும், பகைப்புக்கும் நகைப்புக்கும், சிதைவுக்கும், சீரழிவிற்கும் காரணமாக இருக்கின்ற நாத்திகப் போக்கையும், நோக்கையும் தடுத்து நிறுத் திட முடிவெடுத்தார். அம்முடிவிற்காக அவர் திருவாய் மலர்ந்தருளி வரும் இந்து வேத இந்து மதப் போதனைகளின் உயிரோட்டமான

"இந்து வேதத்தீ பரவட்டும்
திராவிட மாயை அகலட்டும்" என்ற சிந்தனையை, தலைப்பை, கருத்து

வாசகத்தை எமது வரவேற்புரையின் தலைப்பாக எடுத்துக் கொண்டோம் யாம்.

அதாவது, தமிழ்நாட்டில், தமிழ் மக்களுக்கிடையில் இந்து வேதத்திற்கும், இந்துமதத திற்கும் இருக்கின்ற ஆதரவின்மையும், விருப்பமின்மையும், நம்பிக்கையின்மையும், அக்கறை யின்மையும், ஈடுபாடின்மையும் சீர்திருத்தத்தின் பெயராலும், பகுத்தறிவின் பெயராலும் வளர்க்கப்பட்டு வருகின்ற வெறுப்புணர்வும், மறுப்புணர்வும், எதிர்ப்புணர்வும், பகைப்புணர் வும்... திராவிடம், திராவிடர், திராவிடர் இனம், திராவிடர் மொழி, திராவிடப் பண்பாடு, திராவிடர் நாகரீகம், திராவிடர் மதம், .. எனும் சொற்களைச் சொல்லிக்கொண்டு வளர்ந்து வரும், வாழ்ந்து வரும் கழகங்களும், இயக்கங்களும், சங்கங்களும், மன்றங்களும், பாசறை, பாடி வீடு படை, சேனை முதலிய அமைப்புகள் அனைத்தும் திருந்தும் படிச் செய்யவேண்டும், திருத்தப்பட்டேயாக வேண்டும், என்பதற்காகவே (1) ஆதிசிவனாரின் வழிவழி வாரிசாக, (2) முத்தமிழின் தலைவராக (3) முத்தமிழ் ஞானசபைத் தலைவராக (4) முத்தமிழ் அகஞான சபைத் தலைவராக, (5) முத்தமிழ் புறஞானசபைத் தலைவராக (6) முத்தமிழ் மெய்ஞ்ஞான சபைத் தலைவராக இன்று வாழ்ந்திடும் பதினெண் சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, ஞாலகுரு, இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரி யார் அவர்கள் அருளியுள்ள 'திராவிட மாயை அகலட்டும்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரையின் தொகுப்பு 'இந்துவேத சிந்தனைகள்' என்ற தொகுதியில் இரண்டாவது (அ) மூன்றாவது பாகமாக வெளிவந்தேயாக வேண்டும் என்ற விருப்பம் நூறாயிரக்கணக்கான சித்தரடியான்களிடமும், சித்தரடியாள்களிடமும், சித்தரடியார்களிடமும் தலை தூக்கி நிற்கின் றது என்ற பேருண்மையினை வெளியிடும் வண்ணம்தான், யாம் எமது வரவேற்புரைக்கு

'இந்து வேதத் தீ பரவட்டும்
திராவிட மாயை அகலட்டும்' என்றதலைப்பை தேர்ந்தெடுத்துள்ளோம்.

ஆனால், ஆனால், ஆனால், இத்தலைப்பு பற்றி எதுவும் எழுத முற்படவில்லையாம். ஏனெனில், இதுபற்றி எழுதினால், இந்த வரவேற்புரை மிகப்பெரியதாக விரிந்துவிடும். இருந்த போதிலும், இந்துவேதத்தீ பரவுவதற்கும், திராவிடமாயை அகலுவதற்கும் என்ன தொடர் பிருக்கிறது?! என்ன தொடர்பு இருக்க முடியும்?! என்று அனாவசியமாக யாரும் மூளையைக் குழப்பிக் கொள்ளவேண்டாம் என்பதற்காக ஆதிசிவனார் அருளியுள்ள இந்துவேதமான இருக்கு வேதத்திலிருந்து ஒரேஒரு வேதவாசகத்தை மட்டும் எடுத்துக்கூறி இந்த உரையை நிறைவு செய்கிறோம்.

***இருக்குவேதம் : காண்டம்-1. மண்டலம் 5.***
***நாள் உரைக்கோவை வாசகம்-23.***

**1.** இப்பூவுலகிற்கு அண்ட பேரண்டங்களிலிருந்து வந்து கொண்டிருந்த அருளுலகத் தவர்களான திருக்கல், இந்து வேதமான இருக்கு வேதத்தை இம்மண்ணின் தலைவர்களான, மணிசர்களுக்கு அனாதிக்காலம் எனப்படுகின்ற (4,85,920) நான்கு இலட்சத்து எண்பத்தைந் தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது ஆண்டுகள் காலம் பல்வேறு நிலைகளிலிருந்து எடுத்துக் கூறியும் பட்டறிவாக வழங்கியும் உரிய பயன் விளையவில்லை. இம்மண்ணுலக மணிசர்களுக் கிடையில் உடல் அங்கங்களின் வடிவ அளவு வேறுபாடுகளாலும், உடல் வண்ண வேறுபாடு களாலும், மொழி வேறுபாடுகளாலும், வாழிடமாகிய நாடு என்ற எல்லை வேறுபாடுகளாலும், இயற்கையாக ஏற்பட்டிருந்த எண்ணூறுக்கும் மேற்பட்டிருந்த இனப்பிரிவு வேறுபாடுகளை இணைக்க முடியவில்லை. இணைக்க முடியவில்லை, இணைக்க முடியவில்லை. இணைக்கவே முடிய வில்லை. இவர்களுக்கிடையில் தோன்றிய அருளுலக அநுபவசாலிகளால் தங்கள் தங்கள்

போக்கில் ஆளுக்கொரு கடவுளின் பெயரைச் சொல்லி அக்கடவுளின் பெயரால் உருவாக்கப் பட்டிட்ட கதைகள், புராணங்கள், பூசைவிதிகள், நடைமுறைகள், மந்திரங்கள் முதலிய வற்றால், உருவாகிட்ட வேதங்களுக்குரிய வேதமதங்களின் அடிப்படையில் ஓயாது ஒழியாது சண்டைகளும், சச்சரவுகளும், கலவரங்களும், போராட்டங்களும், போர்களும் காட்டுத் தீ போல திடீர் திடீர் என்று பற்றி எரிந்து பேரழிவுகளை உருவாக்கிக் கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் சரி செய்திட; அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர்கள் ஏழாயிரம் கல் தொலைவிற்கு விரிந்து பரந்து கோணல் மாணலாக எண்ணற்ற நீண்ட குறுகிய அகன்ற சுருங்கிய முள்மரத்துச் சிம்புகள் போல் நிலப்பரப்புக்களைப் பெற்றிருந்த முற்றாத, கடினப் படாத, மென்மையான, பொருபொருப்பான புதைமண் பரப்புக்களை மிகுதியாகப் பெற்றுத் திகழ்ந்த இளமுறியாக் கண்டத்தைச் சுற்றியிருந்த தண்ணீர்கோள பெரும்பரப்பிற்கு இந்து வேதத்தின் பெயரால் 'இந்து மாக்கடல்' என்ற பெயர் வைக்கப்பட்டது போல் இம்மணீசர் களின் மனக்கடலுக்கு இந்து வேதம் என்று பெயரிட; .................................. நிலைத்திட இந்துவேதத்தை முறைப்படி இம்மண்ணுலகில் நிலைநாட்டிட முடிவெடுத்தனர். அதற்காக, பதினெண் சித்தர் குழுவின் தலைவரான ஆதிசிவனாரை இம்மண்ணுலகுக்கு அனுப்பினர். அவரும், தமது பதினெண் சித்தர் குழுவோடும், துணைவர்களான பதினெட்டாம்படிக் கருப்புக ளோடும், மற்றவர்களோடும் இளமுறியாக் கண்டத்தில் இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியும், அருளூறு அமுதத் தெய்வீக செம்மொழியுமான முத்தமிழ் மொழியையும் மணீசர்களுக்குக் கற்றுக் கொடுத்து வளர்த்துப் பரப்புவதற்காக இள முறியாக் கண்டத்தின் வடக்குப் பக்கத்திலிருந்த பனிமூடிய விண்ணுயர்ந்த மலைமுகடுகளை உடைய குளிர்ச்சி மிக்க மலை எனும் பொருளில் அழைக்கப்பட்ட வட இமயமலை முதல் தென் கோடியில் இந்த இளமுறியாக் கண்டத்தின் பிறப்பு நிலைக்குரிய விந்தின் நிலையை விளக்கும் கருங்கற்பாறைகளையுடைய விந்திய மலைக்கும் இடையே நாற்பத்தொன்பது (49) திருவிடங் களைத் தேர்ந்தெடுத்தார். இந்த இடங்களில் விண்ணுலக அருளுலகத்தைச் சேர்ந்தவர்களான திருக்களும், மண்ணுலக அருளுலகத்தைச் சேர்ந்தவர்களான திருக்களும் (திரு = அருளுலகத் தவர்) ஒன்றுகூடிச் செயல்படக்கூடிய திராவிடங்கள் எனும் நிறுவன நிர்வாகங்கள் உருவாக்கப் பட்டிட்டன. இவைகள் செயல்பட்டு கிராமங்களையும், ஊர்களையும், நகரங்களையும் வளர்த்து திராவிட நாடுகள் இந்துவேதத்தையும்; இந்துமதத்தையும் அருளாட்சிக்குரிய மொழியான அருளூறு அமுதச் செம்மொழியான முத்தமிழ் மொழியையும், இம்மண்ணுலகில் பரப்பிடும் பணியையும் பாதுகாத்திடும் பணியையும் நிறைவேற்றின. இப்படி உருவான நாற்பத் தொன்பது (49) திராவிட நாடுகளும் இந்துவேத அருட் செல்வங்களும், இந்துமத அருட் செல்வங்களும் யாண்டும் பரவியிருக்குமாறு செய்யப்பட்ட நிலப்பரப்புக்களே இந்தியாக்களாக மாறின. இம்மண்ணுலகைப் பொறுத்தவரை ஒன்பது கோள்கள் (9), பன்னிரண்டு (12) இராசிகள், இருப்பத்தேழு விண்மீன்கள் (27) எனும் நாற்பத்தெட்டும் சேர்ந்துதான் அனைத்து வகைப்பட்ட பயிரினங்களையும், உயிரினங்களையும் இயக்குகின்றது என்பதால் தான் ஆதிசிவனார் முதன்முதல் வடஇமயமலை அடிவாரத்தில் இந்து ஆறு, யமுனை ஆறு, கங்கைஆறு எனும் மூன்று ஆறுகளும் கூடுகின்ற முக்கூடல பகுதியில், முதன்முதல் உருவாக்கிய முத்தமிழ்ச்சங்கம் நிறுவப் பட்ட மேகம்சிதருநகர், மேகம் சிதருநகரின் புறநகர் பகுதியான மருதமரக் காட்டிடையே உருவாக்கப்பட்ட முக்கூடல் எனும் ஆலவாய் மருதை மாநகர் இவை இரண்டுக்கும் அருகிலேயே உருவாக்கப்பட்ட அருட்பாநகர் எனும் மூன்று பெருநகரங்கள் மூலம் உருவாக்கப்பட்ட முதல் திருவிடத்தை திராவிடத்தை, திராவிட நாட்டை அருளுலக தலைமை இடமாகக் கொண்டுதான் இதன்கீழ் நாற்பத்தெட்டு திருவிடங்கள், திராவிடங்கள் திராவிட நாடுகள் தோற்றுவிக்கப் பட்டன. இந்த நாற்பத்தெட்டும் முறையே ஒன்பது கோள்களின் பெயர்களையும், பன்னிரண்டு இராசிகளின் பெயர்களையும், இருபத்தேழு விண்மீன்களின் பெயர்களையும் பெற்றுத்திகழ்ந்தன.

இந்த (48) நாற்பத்தெட்டு திராவிட நாடுகளையும் சேர்த்து, இவற்றைத் தலைமைதாங்கி இயக்கிய இமயமலை முக்கூடல் திராவிட நாடு உட்பட மொத்தம் நாற்பத்தொன்பது திராவிட நாடுகள் அண்டபேரண்டம் முழுதும் அருளாட்சி செய்யும் இந்துவேத, இந்துமத அருட்கொள்கைகளை, அருட்கோட்பாடுகளை, அருட்குறிக்கோள்களை, அருள் நெறிமுறிகளை, அருள் நடைமுறைகளை, அருள்விதிகளை, அருள் நீதிகளை, அருள் நியதிகளை, அருள் வாழ்வியல் பழக்க வழக்கங்களை முறையாகக் கற்பித்து வளர்க்கின்றன, முறையாகக் கற்பித்து வளர்க்கின்றன, முறையாகக் கற்பித்து வளர்க்கின்றன.

இத்திருவிடங்களால் தான், இத்திராவிட நிறுவன நிர்வாகங்களால்தான், இத்திராவிட நாட்டவர்களால்தான், இந்த உலகமக்கள் அனைவரையும் இணைத்துப் பிணைத்து, ஒற்றுமைப்படுத்தி, நல்உறவோடும், சமத்துவ, சகோதரத் தத்துவ பொதுவுடமைக் கூட்டுறவோடும், அமைதியோடும் மகிழ்வோடும், நிம்மதியோடும் நிறைவோடும் வாழ்வதற்குரிய உலக ஆன்மநேய ஒருமைப்பாடு என்றென்றும் கருக்கொண்டிருக்கச் செய்யப்படுகின்றன. இக்கருவினை வளர்க்கும் தாயாகவே நாற்பத்தொன்பது திராவிட நாடுகளாலும் உருவாக்கப்படுகின்ற நாற்பத்தொன்பது இந்தியாக்களும்; அப்பாற்பட்டு முரண்பட்டு, வேறுபட்டு, மாறுபட்டு, தவறான வேதங்களையும், வேதமதங்களையும் பெற்றுத் திகழும் நாடுகளையும், காலப் போக்கில் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியும், அருளூறு அமுதச் செம்மொழியுமான முத்தமிழ்மொழியின் பூசை மொழிகளும், பூசைவிதிகளும், தத்துவங்களும், செயல் சித்தாந்தங்களும் தான் திருத்திப், பண்படுத்திப் பாதுகாக்கப் போகின்றன.

*[இருக்கு 1:5:23]*

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**



# போற்றியுரை

## ‘இந்துவேதம் வறட்டுத்தத்துவமோ! கண்மூடிப் பழக்க வழக்கச் சடங்கியலோ! அல்ல! அல்ல!! அல்ல!!! அல்லவே அல்ல.

## இந்துவேதம் முத்தமிழின் இனிய, அழகிய, சுவைமிக்க கருநாடகக் கலைகளின் நிலையே! நிலையே! நிலையே!


சித்தர் மூங்கிலடியார்
த. பொன்னுசாமி B.E., M.B.A.,
Reader, Anna Institute of Management
Madras.


‘இந்து வேத சிந்தனைகள்’ என்ற தலைப்பில் அருள்மிகு ‘ஞான வள்ளல்’, ‘ஞான வேந்தர்’, ‘இந்துவேத நாயகம்’, ‘இந்துமதத் தந்தை’, ‘அந்தணர் அண்ணல்’, ‘ஞானாச்சாரியார்’ அவர்கள் தனிநூல்கள் பல தொடர்ந்து பாகம் பாகமாக வெளியிட முன் வந்துள்ளதைப் போற்றி வரவேற்கிறோம் யாம்.

இத்தொடர் நூல்கள், மூன்று கடல்கோள்களால் அழிந்த தமிழிலக்கிய இலக்கணச் செல்வங்களோடு; மீதமுள்ள அனைத்துமே அழிய நேரிட்டால் கூடத் தமிழ்மொழியை, தமிழின் இலக்கிய வளத்தை, தமிழின் தத்துவ வலிமையை, தமிழின் அகப் பண்பாட்டுக்கும், புற நாகரிகத்திற்குமுரிய சித்தாந்தப் பொலிவை, தமிழின வரலாற்றுப் பேருண்மைகளை, தமிழ்ச் சான்றோர்களின் போதனைகளை, முத்தமிழ்க் கலைஞர்களின் சாதனைகளை, தமிழிலக்கிய வாழ்வியல் மரபுகளை, நெறிகளை, விதிகளை, நீதிகளை முழுமையாகச் சுவையோடும், அழகோடும், இனிமையோடும், நிலையாக உலகுக்கு வழங்கிடும் வெற்றியை, பெருமையை, அரிய கருத்துச் செறிவை, நேரிய பேருண்மைகளை பெற்றுத் திகழுகின்றன.

(2) அதாவது, எமது, குறுகிய அநுபவத்தில், அருட்கொடை வள்ளல், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்களின் திருமடத்து உரையாடல்கள், பொதுமேடைச் சொற்பொழிவுகள், கருத்துப் பரிமாற்றக் கலந்துரை நிகழ்வுகள், சிந்தனை அரங்கக் கருத்துரைகள், அவருடைய பல்லாயிரக்கணக்கான அறிவிக்கைகள், நூறாயிரக் கணக்கான அஞ்சல்கள், கையெழுத்துப் பிறதிகளாக உள்ள நூற்றுக்கணக்கான நூல்கள்; பனை ஓலை ஏடுகளிலிருந்து இந்துவேதத்தைத் தாள்களில் எழுதிப் பெட்டி பெட்டியாக அடுக்கி வைத்துள்ள கோப்புகள்; ஆங்கிலத்திலும், தமிழ்மொழியிலும் அவ்வப்போது அருளிய அருளுரைகள், அறிவுரைகள், அருளார்ந்த அறிவுரைகள், அறிவார்ந்த அருளுரைகள்... முதலியவை பதிவு செய்யப்பட்ட 'ஒலிப்பதிவு நாடாப் பேழைகளின்' குவியல்கள் முதலியவை; ஆதியில் முத்தமிழ்ச் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த ஆதிசிவனார் போன்றே; அவரது வழித்தோன்றலாக; வாரிசாக, முத்தமிழ்த் தலைவராக, பதினெண் சித்தர் மடாதிபதியாக, பதினெண் சித்தர் பீடாதிபதியாக வாழும் அந்தணர் அண்ணல் ஞானச்சாரியாரும் முத்தமிழ்க் கலைகள் வளர்க்கிறார் என்பதையே விளக்குகின்றன.

(3) **நாட்டு நடப்பில், தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ் நாட்டிற்கும், சொந்தமாக இசை இல்லாததுபோல் ஒரு 'மாய உணர்வு' உருவாகியிருக்கிறது. அதனால், 'கர்நாடக இசை', 'கர்நாடக சங்கீதம்', 'தெலுங்கிசை', 'தெலுங்குக் கீர்த்தனம்', 'உருதுமொழி', 'அராபிய மொழி' பாரசீக மொழி' இந்திமொழி** முதலியவை **கலந்த 'இந்துசுத்தானி-இசை'; மேலை நாட்டினருக்குரிய** 'மேற்கத்திய இசை' ... முதலியவைகளே தமிழர்களால் ஏக்கத்தோடு ஏற்றுப் போற்றப்படுகின்றன. ஆனால், சங்க இலக்கியங்களிலும், பன்னிரு திருமுறை நூல்களிலும், நாலாயிர திவ்யப் பிரபந்த நூல்களிலும், தொண்ணூற்றாறு வகைப்பட்ட பிரபந்தங்களிலும், பட்டினத்தார், தாயுமானவர், அருணகிரியார், திருவருட் பிரகாச இராமலிங்க அடிகளார்... முதலியோரின் பாடல்களிலும், பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களின் கவிதை இலக்கியங்களிலும் தெய்வீகத் தமிழிசை, மானுடர் தமிழிசை... என்று திட்ட வட்டமாக இசை பற்றியும், இசையின் 'பாட்டு', 'இராகம்', 'தாளம்', 'பல்லவி', 'சரணம்', 'அநுசரணம்', 'பண்', 'சுரம்', 'இசை அச்சரம்', 'இசைக் கருவிகளின் வகை', 'இசைக் 'கடவுளர்கள்', 'ஐந்து வகைப்பட்ட நிலத்துக்குமுரிய 'தனிப்பட்ட இசை', 'இசைப்பண்', 'பாடல் வகை', 'இசைக்கருவி வகை',; கடவுளரின் பெயர்களில் 'வீணையார்', 'வேய்ங்குழலார்', யாழிசையார்', 'விழுப்பறையர்', 'கைக் கொட்டிப்பள்ளர்', 'மேளிசையார்(மேளயிசையார்)',

*'தாளத்தார்', 'இரட்டைத் தாள ஈசுவரர் (இரட்டைத் தாளீசர்), 'பாணர்', 'துடியர்', 'கடம்பர்', 'உடுக்கையார்', 'வங்கியத்தார்', 'நெடுவங்கியத்தார்'... என்று இசையின் பெயரால் உள்ள பெயர்கள் - என்றிப்படி இந்துவேதத்தில் தமிழரின் இசைக்கலை வளர்ச்சி, தமிழ்மொழியின் இசை நுணுக்க வளர்ச்சி, தமிழ்நாட்டின் இசை வரலாற்றுப் பாரம்பரிய மரபுப் பரப்புகள் ... முதலியவை பற்றி நமது ஞானவள்ளல், ஞானவேந்தர், ஞாலகுரு, குவலய குருபீடம், குருமகாசன்னிதானம், அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் கூறியுள்ள கருத்துக்களும், செய்திகளும், குறிப்புகளும், ஆய்வுகளும்... இந்த 'இந்து வேத சிந்தனைகள்' என்ற தொடரில் 'ஒரு பாகமாக', 'ஒரு தனிநூலாக' வெளிவரவேண்டும் என்ற வேண்டுகோள்கள் எம்போன்றோரால் விடுக்கப்பட்டதால்; அவர் வழங்கிய ஒருசில கலையுலகச் செய்திகளை மட்டும் அப்படியே எமது போற்றியுரையில் குறிக்க விரும்புகின்றோம். 'ஏனெனில் தமிழ்நாட்டில், தமிழர்களுக்கிடையில்; "இந்துவேதம்', 'இந்துமதம்' என்ற இரண்டும் அன்னியருடையவை" என்ற ஒரு கருத்தோட்டம், நம்பிக்கை நோக்கு அரசியல்வாதிகளால், ஆராய்ச்சியறிவின்றித் தவறுதலாக வளர்க்கப்பட்டு விட்டது! வளர்க்கப்பட்டுவிட்டது!! வளர்க்கப்பட்டு விட்டது!!!......*

இப்படி, அருளுலக மூலவர்களான தமிழர்களே! தங்களுடைய இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் அன்னியருடையவை; மாற்றாருடையவை, வேற்றுநாட்டாருக்கு உரியவை, புற இனத்தாருக்கு உரியவை, பிறமொழிக்கு உரியவை ... என்று தவறுதலாகக் கருத, நம்ப, நினைக்க, சிந்திக்க நேரிட்டதால் "இந்துமதம் பிறந்த மண்ணிலேயே இறந்த நிலையை எய்திட நேரிட்டு விட்டது".

எனவே! எனவே!! எனவே!!! எனவேதான்... 'இந்துமதம் பிறந்த தமிழ்நாட்டில், எண்ணற்ற கோயில்களும், ஆலயங்களும் ... இருந்தும் கூட; அருளுலக வாரிசுகளாக, மூலவர்களாக, நாயகர்களாக உள்ள "தமிழரின் வாழ்க்கை ஆன்மீகக் கண்ணற்ற குருடர் வாழ்க்கையாகி; எல்லாத் துறைகளிலும் குருட்டுப் போக்குகளும், குருடரின் தடுமாட்டங்களும், குருடரின் இயலாமைகளும், குருடரின் ஊன்றுகோல் வாழ்வும், குருடரின் பிறருடைய உதவியை நம்பியே, எதிர்பார்த்தே வாழும் வாழ்க்கை நிலைகளும்; பிறர் கூறும் காட்சிகளையே நம்பி வாழவேண்டிய அவலக் குருடர் வாழ்க்கைப் பண்புகளும் ... உடையதாகி விட்டது! உடையதாகி விட்டது!! உடையதாகி விட்டது!!! உடையதேயாகிவிட்டது!!!! ..."

இப்படி, ஆதிசிவனார் முத்தமிழில் அருளிய இந்துவேதத்தையும், இந்து வேதமதமான இந்து மதத்தையும் துறந்து, மறந்து, மறுத்து, எதிர்த்து, வெறுத்து, பகைத்து, நகைத்து செயல்பட ஆரம்பித்திட்டதால் தான்; தமிழர்களின் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு .. முதலிய அனைத்து வகைப்பட்ட வாழ்வுகளும், கட்டமைப்புக்களையும், திட்டமிட்ட ஒழுங்கு நிலைகளையும், கட்டுப்பாடுகளையும், பற்றுப் பாசங்களையும்,

ஒற்றுமை நிலைகளையும், இணக்க நிலைகளையும், இணைப்புறவு முறைகளையும், பண்பாட்டு பிடிப்பு நிலைகளையும், நாகரிகப் பற்று நிலைகளையும்... சீர்குலைவிட்டுச் சிதைந்து, சீரழிந்து, பாழ்பட்டு, வீழ்ந்து கிடக்கின்றன! வீழ்ந்து தாழ்ந்து கிடக்கின்றன!!

இந்நிலையில் மக்களின் உணர்வைத் தொட்டுப் பாடம் புகட்டிச் செயல்படச் செய்யும் கலைகளும், கலைஞர்களும், கலையுலக இயக்குநர்களும் வேலியில்லாப் பயிரை ஆடுமாடுகளும், திருடர்களும் விருப்பம் போல் பாழாக்குவது போல்; தமிழர்களின் கலைகள் அனைத்தையும் விருப்பம் போல் பொருளுக்காகவும், புகழுக்காகவும் பாழாக்கி வருகின்றனர்.

இவற்றையெல்லாம் எண்ணியெண்ணி; சிந்தித்துச் சிந்தித்து; 'உலக மானுடர் அனைவரையுமே பண்படுத்தி மேம்படுத்தி காப்பாற்றுவதற்காக, ஆதிசிவனார் உலகப் பொது வேதமாக; உலக மானுடர் அனைவருக்கும் உரிய வேதமாக, எக்காலத்திலும், எல்லா நாட்டிலும், எல்லா மொழி இன மக்களும் பயன்படுத்தி நன்மையடையக் கூடிய மானுட வேதமாக ... முத்தமிழ்மொழியில் அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ் மொழியில் அருளிய இந்துவேதத்திற்கும், இந்துமதத்திற்கும் உரிய நாற்றங்கால்களாக, விதைப்பண்ணைகளாக, நாற்றுப் பண்ணைகளாக இருக்க வேண்டிய தமிழர்களே தங்களுடைய அனைத்து வகையான நிலைகளையும் கவலைக்குரியவைகளாக ஆக்கிவிட்ட அவல கேவலங்களை, இழிவழிவுச் சத்திகளை, ஊதாரிப் போக்குகளை, நோக்குகளை... மாற்றிட இலக்கியத் தலைவர்களை, சமுதாயத் தலைவர்களை, சமயத் தலைவர்களை, அரசியல் தலைவர்களை... மாறிமாறி நம்பினோம், நம்பினோம், நம்பினோம். ஆனால், ஆனால், ஆனால், எல்லாத் துறையைச் சேர்ந்த தலைவர்களும், அவர்கள் தோற்றுவித்திட்ட நிறுவன நிர்வாகங்களும், அந்த நிறுவன நிர்வாகங்களில் உருவாகி விட்ட பெரிய, சிறிய தலைவர்களும், தீவிர மிதவாதத் தொண்டர்களும் உருவாக்கிய போராட்டங்களும், அவற்றின் வெற்றிகளும், அவ்வெற்றிகளால் நாட்டில் நிகழ்ந்திட்ட அரசியல் மாற்றங்களும், அரசு மாற்றங்களும் ... தமிழர் வாழ்வியலில் எள்முனையளவு கூட அவல கேவலங்களைத் தடுக்க முடியவில்லை, இழிவழிவுகளை மாற்ற முடியவில்லை......

இவற்றைக் கண்டுதான் ஆன்மீக மறுமலர்ச்சி அருளுலக விழிச்சி, எழிச்சி, முறையான பயிற்சி, நிறைவான முயற்சி ... முதலியவற்றால் தான் எதிர்பார்க்கின்ற உயர்ச்சிமிகு செழிச்சியினை உருவாக்க முடியும். உருவாக்க முடியும், உருவாக்க முடியும் ... என்று எம்போன்றோர் முடிவெடுத்தோம். எனவேதான், எனவேதான், எனவேதான் ஆன்மீக உலகின் அடிப்படையாக, ஆணிவேராக இருக்கும் இந்து வேதத்தை வெளிக்கொணர வேண்டும் என்ற செயல் திட்டம் உருவாக்கப்பட்டது. அதைச் செயலாக்க இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு அருளிய பதினெண் சித்தர் மடத்தையும், இந்துமதத்தை அருளிய பதினெண் சித்தர் பீடத்தையும், தேடிநாடி ஓடிச் சென்றோம்.

ஆனல், ஆனல், ஆனல் பதினெண் சித்தர் மடாதிபதியாகவும், பீடாதிபதியாகவும் இருக்கின்ற அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்கள்; கவலைதோய்ந்த முகத்தோடு, ஆழ்ந்த வருத்தம் தோய்ந்த குரலில்; "இந்துவேதத்தை, நூலாக அச்சிட்டு வெளியிட்டால்; அதை வாங்கிப் படிப்பவர்கள் யார்? அதை வாங்கிப் படிப்பவர்கள் யார்? அதை வாங்கிப் படிப்பவர்கள் யார்?.." என்று வினவெழுப்பி எங்கள் எல்லோரையும் திகைத்துத் திணறி தடுமாற்ற மடையச் செய்தார்... அடுத்து, அவரே எங்களுக்கு ஆறுதலாக "... நீங்கள், கணிசமானவர்களாய் இருப்பதால்; ஒன்று சொல்லுகிறேம்... முதலில், "இந்துவேதச் சிந்தனைகள்", என்ற தலைப்பில் இந்து வேதம் பற்றிய செய்திகளை பலபாகங்களாகத், தொடர்ந்து வெளியிட முயற்சி செய்யுங்கள். அதனல், விளையும் பயன்களைப் பார்த்து இமயம் முதல் குமரி வரை உள்ள இந்துவேத விற்பண்ணர்கள், இந்துவேதம் வல்ல முனிவர்கள், இருடிகள், மகான்கள், ஞானிகள், தவசிகள், வேதியர்கள்... தாங்களாகவே முன்வந்து இந்துவேத நூல்களையும், இந்துமத நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டிடுவார்கள், அச்சிட்டு வெளியிட்டிடுவார்கள், அச்சிட்டு வெளியிட்டிடுவார்கள். இந்தியா தவிர இவ்வுலகின் பல பகுதிகளில் அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ் மொழியிலேயே இந்துவேத நூல்களும், இந்துமதநூல்களும் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன.. எனவே இந்துவேத நூல்களையும், இந்துமத நூல்களையும், விரும்புகிறவர்கள், நம்புகிறவர்கள், வரவேற்கிறவர்கள் தொகை வளரவளர, அதிகமாக அதிகமாக, இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் பலரால் பல இடங்களிலிருந்து வெளியிடப்பட்டிடும், வெளியிடப் பட்டிடும், வெளியிடப் பட்டிடும்;" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

இப்படியாகத் தான், இப்படியாகத்தான், இப்படியாகத்தான், இந்த 'இந்து வேத சிந்தனைகள்' என்ற தலைப்பில் தயாராகி வரும் நூல்களின் முதல் பாகம் வெளிவருகிறது. இதற்குப் பலரின் கட்டுப் பாடான கூட்டுமுயற்சிகள் தான் காரணம். எனவே, இந்த முதல் பாகத்திற்கு பலரின் கருத்துரைகள் குவிந்திருக்கின்றன. அவையனைத்தையும் வெளியிட்டால் அவையே இரண்டு மூன்று தொகுதிகளாக வெளியிட வேண்டியிருக்கும்; என்பதால், பலரின் கருத்துரைகளின் சாரத்தையே போற்றியுரை என்றதலைப்பில் எழுதியுள்ளோம் யாம்.

இதுவே, ஒரு பெரிய தனிக்கட்டுரையாக உருவெடுத்துவிட்டது என்பதனல்; விரிவஞ்சி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேம். ஆனால், இறுதியாக, இந்துவேதத்தின் அருமை, பெருமைகள், அரியபெரிய பயன்கள் உரிய அளவாவது தமிழருக்கு மட்டுமாவது! தமிழருக்கு மட்டுமாவது! தமிழருக்கு மட்டுமாவது! .. புரியவேண்டும், புரிய வேண்டும், புரிய வேண்டும்..


புரியவைக்கப்பட்டேயாக வேண்டும், புரியவைக்கப்பட்டேயாக வேண்டும என்பதால்; மானுட ருக்கு அங்கவியல் இலக்கணக் கூறுகள் முப்பத்திரண்டு இருப்பது போல் கலையுலகின் அங்க வியல் இலக்கணக் கூறுகள் முப்பத்திரண்டு இருப்பதை மட்டும் இங்கு குறித்து எமது போற்றி யுரையை நிறைவு செய்கிறோம்.

**இருக்கு வேதம்** : காண்டம் : 32, மண்டலம் : 32
நாள் உரைக்கோவை வாசகம் : 32

'கலைகள் இந்துவேதம் போல் நான்கு பெரும் பிரிவுகளாக, 1. இசை. 2. கூத்து. 3. ஓவியம். 4. சிற்பம் என்று நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் நுட்பமாக எட்டு உட்பிரிவுகளைப் பெற்றுள்ளன.

1. குரு+ நாடு+ அகம்+ இசை = குருநாடக இசை.
2. குரு + நாடு+ புறம்+ இசை = குரு நாடு புற இசை.
3. கரு+ நாடு+ அகம்+ இசை = கரு நாடக இசை.
4. கரு+ நாடு+ புறம்+ இசை = கரு நாடு புற இசை.
5. திரு+ நாடு+ அகம்+ இசை = திரு நாடக இசை.
6. திரு+ நாடு+ புறம்+ இசை = திரு நாடு புற இசை.
7. தரு+ நாடு+ அகம்+ இசை = தரு நாடக இசை.
8. தரு+ நாடு+ புறம்+ இசை = தரு நாடு புற இசை.
9. குரு+ நாடு+ அகம்+ கூத்து = குருநாடகக் கூத்து.
10. குரு+ நாடு+ புறம்+ கூத்து = குரு நாடு புற கூத்து.
11. கரு+ நாடு+ அகம்+ கூத்து = கரு நாடகக் கூத்து.
12. கரு+ நாடு+ புறம்+ கூத்து = கரு நாடு புற கூத்து.
13. திரு+ நாடு+ அகம்+ கூத்து = திரு நாடகக் கூத்து.
14. திரு+ நாடு+ புறம்+ கூத்து = திரு நாடு புற கூத்து.
15. தரு+ நாடு+ அகம்+ கூத்து = தரு நாடகக் கூத்து.
16. தரு+ நாடு+ புறம்+ கூத்து = தரு நாடு புற கூத்து.
17. குரு+ நாடு+ அகம்+ ஓவியம் = குருநாடக ஓவியம்.
18. குரு+ நாடு+ புறம்+ ஓவியம் = குரு நாடு புற ஓவியம்.
19. கரு+ நாடு +அகம்+ ஓவியம் = கருநாடக ஓவியம்.
20. கரு+ நாடு+ புறம்+ ஓவியம் = கருநாடு புற ஓவியம்.
21. திரு+ நாடு+ அகம்+ ஓவியம் = திரு நாடக ஓவியம்.
22. திரு+ நாடு+ புறம்+ ஓவியம் = திருநாடு புறஓவியம்.

23. தரு+ நாடு+ அகம்+ ஓவியம் = தருநாடக ஓவியம்.
24. தரு+ நாடு+ புறம்+ ஓவியம் = தருநாடு புறஓவியம்.
25. குரு+ நாடு+ அகம்+ சிற்பம் = குருநாடக சிற்பம்.
26. குரு+ நாடு+ புறம்+ சிற்பம் = குருநாடுபுற சிற்பம்.
27. கரு+ நாடு+ அகம்+ சிற்பம் = கருநாடக சிற்பம்.
28. கரு+ நாடு+ புறம்+ சிற்பம் = கருநாடு புறசிற்பம்.
29. திரு+ நாடு+ அகம்+ சிற்பம் = திருநாடக சிற்பம்.
30. திரு+ நாடு+ புறம்+ சிற்பம் = திருநாடு புற சிற்பம்.
31. தரு+ நாடு+ அகம்+ சிற்பம் = தரு நாடக சிற்பம்.
32. தரு+ நாடு+ புறம்+ சிற்பம் = தருநாடு புற சிற்பம்.



# அணிந்துரை

## எல்லோரும் மந்தரிப்பது இந்து வேத வழியிலேயே

சித்தர் பொன்னுக்கீசர் **பெ. சுப்பையா** B.E.,
முதுநிலை கோட்ட மேலாளர், சோழன் போக்குவரத்துக் கழகம்,
நாகப்பட்டினம்.

'இந்துவேத சிந்தனைகள்' என்ற தலைப்பில் பதினெண் சித்தர் மடத்திலிருந்து பல பாகங்களாக குருமகாசன்னிதானம், அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்கள் எழுதி வெளியிடும் தொகுதிகளின் முதல்பாகத்துக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்கின்றேன்.

பதினெண் சித்தர் மடத்தில் ஞாலகுரு அவர்கள் அவ்வப்பொழுது அருளிய அருளுரைகள், இந்து வேதாகமப் பாடசாலையில் தயாராகின்ற நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட் பட்டத்தவர்களுக்கும் வழங்கிடும் போதனைகள்; குவலய குருபீடம் நாடுமுழுதும் நிகழ்த்தும் மின்னல்வேகச் சுற்றுப் பயணங்களில் மக்களுக்கு வழங்குகின்ற 'அருளுரைகள்', 'அறிவுரைகள்', 'அருளார்ந்த அறிவுரைகள்', 'அறிவார்ந்த அருளுரைகள்'; அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்கள் தமது ஆசிரமத்திலும், குருகுலத்திலும், திருகுலத்திலும், தருகுலத்திலும், கருகுலத்திலும், தம்மைச் சந்திக்க வருகின்றவர்களோடு நிகழ்த்திட்ட கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல்கள் .... முதலியவைகள் நிலையான இலக்கியவடிவம் பெறவேண்டுமென்று; எம்போன்றோர், நெடுங்காலமாக வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டதன் பயனாகவே இந்த 'இந்து வேத சிந்தனைகள்' என்ற தொகுதிகள் வெளிவர ஆரம்பித்துள்ளன.

இந்து வேத நூல்கள் **396** இருக்கின்றன. இந்துமத நூல்கள் **36** இருக்கின்றன. இவையல்லாமல் ஆதி சிவனாரும், அவரையடுத்துப் பதினெண்சித்தர் மடாதிபதியாக, பீடாதிபதியாகத் தோன்றியுள்ள பதினோரு ஞாலகுரு சித்தர் கருவூரார்கள், எழுதியுள்ள குரு பாரம்பரியங்கள், இலக்கிய பாரம்பரியங்கள், அரசபாரம்பரியங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் படித்து இந்து வேதத்தைப் புரிந்து கொள்வதென்பதற்கு நூறாண்டு காலத்திற்கு மேலேயே ஆகிவிடும். எனவேதான், இவற்றையெல்லாம் இளமை முதல் பாடம் கேட்டும், படித்தும், அவ்வப்போது அருளுலகத்தவர்களோடு தொடர்பு கொண்டும், வட இமய மலை முகடுகள் முதல் தென்குமரிக் கடற்கரை மணற்பரப்பு வரை இந்து வேதத்தையே படித்தும் சிந்தித்தும் வருகின்ற முனிவர்களோடும், இருடிகளோடும், தவசிகளோடும், ஞானிகளோடும், மகான்களோடும், ஆச்சாரியார்களோடும், வேதவிற்பன்னர்களோடும் கலந்துரையாடல்கள் நிகழ்த்தியும், இந்து வேதத்தின் கருவாக, உயிர் மூச்சாக, உயிரோட்டமாக, நாடித்துடிப்பாக

உள்ள கருத்துக்களையெல்லாம் நன்கு தேர்ந்தெடுத்துத் தெரிந்து வைத்திருப்பவரே இந்து வேதநாயகம், இந்துமதத்தந்தை, பரபிரம்மம், அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்கள். எனவேதான், இன்றைய இந்துக்கள் இந்துவேத அறிவை, விரிவாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும், தேவையான அளவிற்கு ஆழமாகவும், புரிந்து கொள்வதற்காக 'இந்து வேத சிந்தனைகள்' என்ற தலைப்பில் பலபாகங்களாக தொடர் வெளியீடுகள் வெளிவர வேண்டுமென்று எதிர்பார்த்தார்கள். அந்த எதிர்பார்ப்பு இப்பொழுது நிறைவேறுகிறது. பொது மக்கள், இந்து வேதத்தைப்பற்றித் தெரிந்துகொள்வதன் மூலம்தான்; இந்துமதத்தைப் புரிந்து வாழக்கூடிய நிலை உருவாகிடும்.

இன்றைக்கு, நாட்டுநடப்பிலே கோயில்களுக்குச் சென்று அருள்பெறுவது; அருளாளர்களிடமிருந்து அருளாசி பெறுவது; மந்திரவாதிகளிடம் சென்று பாதிப்புகளுக்கும் நலிவுகளுக்கும் பரிகாரமாக மந்திரித்துக் கொள்ளுவது .... என்ற அருளுலகப் பழக்கவழக்கங்கள் இருந்து வருகின்றன.

நம்நாட்டில்தான், உலகத் தொன்மை மிக பழமையான இந்துவேதமதமான இந்து மதம் தொடர்ந்து புதியபுதிய மதங்களால் தாக்குதலுக்குள்ளாகியும் தலைநிமிர்ந்து வாழ்க்கையைத் தாக்குப் பிடித்து வருகின்றது. இதற்குக் காரணம்,

(i) 'இந்துவேதம் தான் அண்ட பேரண்டங்களிலிருந்து இம்மண்ணுலகுக்கு அருளுலகத்தை முழுமையாகத் தெரிவிக்கவும், அறிவிக்கவும், புரிவிக்கவும் அருளப்பட்ட ஒன்று'.

(ii) 'இந்த இந்துவேதம்தான் கடவுளர்களாலேயே எழுதித் தரப்பட்ட ஒன்று. எனவே, இதில்தான் கடவுளர்களைப் பற்றியும், கடவுளர் உலகைப் பற்றியும், கடவுளர்களோடு தொடர்பு கொள்வதற்குரிய வழிவகைகள் பற்றியும், கடவுளர்களை எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது பற்றியும் முழுமையான செய்திகள் இருக்கின்றன'.

(iii) 'எனவேதான், இந்த இந்துவேத வழியிலேயே கடவுளர்களிடமிருந்து அருளைப் பெறுவது; கடவுளர்களின் அருளைப்பெற்ற அருளார்களிடமிருந்து அருளாசிபெறுவது; நாள், கோள், மீன், இராசி, காற்று, கருப்பு, பேய், பிசாசு, நாகபாதிப்பு, கண்ணேறு..முதலிய பாதிப்புகளுக்குப் பரிகாரமாக மந்திரவாதிகளிடம் மந்தரித்து அருளை மருந்தாகப் பெற்றுக் கொள்வது.... முதலிய அனைத்தும் நிகழவேண்டியதாக இருக்கின்றன. நிகழ வேண்டியதாக இருக்கின்றன, நிகழவேண்டியதாக இருக்கின்றன.... நிகழ்ந்து வருகின்றன, நிகழ்ந்து வருகின்றன. நிகழ்ந்து வருகின்றன'.

(iv) 'அதாவது, இந்த உலகைப் பொறுத்தவரை, நடைமுறையில் உள்ள கடவுள்கள் அனைவருமே 'இந்து வேதம்' கூறுகின்ற கடவுள்கள் தான். எனவே, எந்த ஒரு மதமாக இருந்தாலும் இந்து வேத வழியிலே தான் செயல்பட வேண்டியதாக இருக்கிறது. இதனால் தான், எந்தஒரு, புதிய, அன்னிய, வேற்று மதக் கடவுளாலோ, வேற்று மதத்தாலோ இந்து வேதத்தையோ, இந்து மதத்தையோ முழுமையாக அழித்து ஏப்பம்விட முடியவில்லை; முழுமையாக அழித்தொழிக்க முடியவில்லை.

**குறிப்பு :**

இந்தநாட்டில் புதிய மதங்களுக்கு மாற்றப்பட்ட இந்துக்கள், தங்களுடைய இந்துவேத கொள்கைகளையும், கோட்பாடுகளையும், இந்துமத, பழக்க, வழக்க, நம்பிக்கைகளையும், நடைமுறைகளையும், சடங்குகளையும், முழுமையாக விட்டுவிட முடியாமல்; தங்களையும் மறந்து இந்து வேதவழியில் வாழும் இந்து மதத்தவர்களாகத் தான் வாழ்கிறார்கள். எனவே, புதிய மதத்தவர்களாக மாறியவர்கள்; தங்களுடைய பழைய மதமான இந்துமதத்தை நேரடியாகத் தாக்கி ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட முடியாமல் தயங்கித் தயங்கி!, தேங்கித்தேங்கி!, மயங்கி மயங்கி!, நிற்கிறார்கள்.

(v) இந்நாட்டில் வளர்ந்துள்ள புதியமதத்துக்கு மாறிவிட்டவர்கள் செய்கின்ற பூசைகளில் பயன்படக் கூடிய மலர்கள், நறும்புகைகள், ஒளிவிளக்குகள், பலிபொருள்கள், படைக்கும் படையல்பொருள்கள், அருளுறு பூசனைப் பொருட்களாகப் பயன்படுத்தும் சாம்பல், சந்தனம், முடிகயிறு, தாயத்து, சக்கரம், மணிமாலைகள், முத்து, சிப்பி, சோழி..முதலியவைகள் அனைத்தும் இந்து வேதத்தில் கூறப்படுபவைகளாகவே இருக்கின்றன. இந்துமதத்தில் பயன்படுத்தப்படுபவைகளாகவே இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், புதிய மதங்களுக்கு மாறியவர்களில் மக்களுக்கு அருளாசி வழங்கக் கூடிய அருளாளர்கள் பெரும்பாலும் இந்து மதக் கோயில்களையும், இந்துமதக் கடவுள்களையும் வழிபட்டுத்தான் அருட் சத்தி, சித்திகளைப் பெற்று செயல்படுகிறார்கள். இதேபோல், வேற்றுமதங்களில் வாழுகின்ற மந்தரவாதிகள் எனப்படுகின்ற அனைவருமே இந்துமதக் கோயில்களுக்குச் செல்பவர்களாகவும், இந்துமதக் கடவுள்களை வழிபடுபவர்களாகவும், இந்து **மதத்தவர்களுக்குரிய** சுடுகாடுகளிலும், புதைகாடுகளிலும் **மட்டுமே** பரிகாரப் பூசைகள் அனைத்தையும் செய்பவர்களாகவும் இந்து மதத்தவர்கள் அருள் வழங்குவதற்குப் பயன்படுத்தக் கூடிய மயற்பீலி, மை, சாம்பல், முடிகயிறு, தாயத்து, பச்சிலை (வில்வம், துளசி, அருகம்புல், வெட்டிவேர், சந்தனக்கட்டை)... முதலியவைகளைப் பயன்படுத்துகிறவர்களாகவுமே இருக்கிறார்கள். எனவேதான், வேற்றுமத அருளாளர்களாலோ, மந்தரவாதிகளாலோ இந்து மதத்திற்கு அழிவில்லை.

இப்பேருண்மைகளை எண்ணிக்கூடப் பார்க்காமல்; இந்துக்கள், இந்துவேதத்தையும், இந்துக் கடவுள்களையும், இந்துமத வாழ்வியல்களையும், இழித்துப் பழித்துப் பேசிவருகிறார்கள்; கேலியும் கிண்டலும் செய்து வருகிறார்கள். இவையெல்லாம் மாற்றப்பட வேண்டுமென்தற்காகத்தான்; நம் இந்துக்களுக்கு, 'இந்து வேதம் தெரியவேண்டும்; இந்துமதம் புரிய வேண்டும்' என்பதற்காகத்தான்; இன்றைக்கு, இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடமாகவும்; இந்துவேத நாயகமாகவும், இந்து மதத் தந்தையாகவும், இருக்கின்ற அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்களை; இந்துவேதம் பற்றியும், இந்துமதம் பற்றியும் நூல்கள் எழுதி வெளியிடுமாறு வேண்டிக் கொண்டோம். அதன்படி, வெளிவருகின்ற 'இந்துவேத சிந்தனைகள்' (முதல்பாகம்) என்ற நூலை இந்துக்கள் எல்லோரும் வாங்கிப் படிக்கவேண்டும். இந்தநூலைப் படித்தவர்கள் இந்நூலில் உள்ள கருத்துக்களைப் பலரிடமும் எடுத்துக் கூற வேண்டும். அத்துடன், இதுபோன்ற நூல்கள் பதினெண் சித்தர் மடத்திலிருந்து வெளிவருவதற்கு இந்துக்கள் எல்லோரும் தாராளமாக தங்களால் இயன்ற உதவிகளை, நன்கொடைகளை நல்குமாறு செய்ய வேண்டும்.

# சிறப்புரை

## இந்து வேத மருந்தும் விருந்துமே இந்தியரைக் காப்பாற்றும்

டாக்டர் S. கோவிந்தன் M.D.
அரசினர் பொது மருத்துவமனை
சென்னை.

பதினெண் சித்தர் மடம், இந்துவேதாகம பாடசாலை நிகழ்த்தியும்; ஆசிரம், குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம்....முதலிய பல நிறுவன நிர்வாகங்களைச் செயலாக்கியும், இந்துவேதக் கருத்துக்களை, செய்திகளை, செயல்திட்டங்களை, வரலாறுகளை, வாழ்வியல்களை எளிமையாக எல்லோரும் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து உணர்ந்து செயல்படப் பாடுபடுகிறது.

இப்பொழுது வெளிவரும், இந்த 'இந்து வேத சிந்தனைகள்' என்ற தொடர் நூல்களின் மூலம் இந்திய மக்கள் தங்களுடைய முன்னோர்களின் வழியில் விருந்தும், மருந்தும் பயன்படுத்தி நல்ல உடல் வளத்தோடும், நலத்தோடும் சிறப்பாக வாழமுடியும்! வாழமுடியும்!! வாழமுடியும்!!!

இன்றைய நிலையில், இந்தியர்களின் விருந்துகளும்; நோய்க்குரிய மருந்துகளும் பெருமளவில் மேலைநாட்டினருடையவையாகவே மாறிவிட்டன!மாறிவிட்டன!!மாறிவிட்டன!!! இது, ஒரு வியாபாரத் தந்திரம்; இது ஒரு வணிகத் துறையின் சூழ்ச்சி; இது ஒரு பண்பாட்டு ஆதிக்கம், நாகரிக மேலாதிக்கம். அதாவது, நம் இந்தியமக்கள், நம்நாட்டில் விளையக்கூடிய உணவுப்பொருள்களை; நமது முன்னோர்களின் வழியில் சமைத்து உண்ணவேண்டும். அதுதான் நமக்கு உடல் நலத்தையும் வளத்தையும் தரும். ஆனால், நாம் மேனாட்டார் உணவுப் பொருள்களையும், வகைகளையும் அப்படியே விரும்பியேற்றுக் கடைபிடிக்கிறோம். இதனால் எண்ணற்ற பாதிப்புகள், நோய்கள் உண்டாகின்றன. இதைத் தடுக்க இந்துவேதத்தில் கூறப்படும் உணவுப் பொருள்களை; அடுக்களை சாத்தரம், சாத்திரம், சாத்திறம்; மடநூல் சாத்தரம், சாத்திரம், சாத்திறம் என்ற ஆறுவகை முறைகளில் சமைத்து உண்ண வேண்டும். உணவு, செய்யும் தொழிலுக்கும், ஏழுபருவத்துக்கும் ஏற்ப அளவிலும்; உண்ணும்காலத்திலும் வேறுபட வேண்டுமென்று **இந்துவேதம் கூறுகிறது**. இப்படி, இந்துவேதம் கீழைய நாட்டு உணவுப் பொருள்கள் சமைக்கும் முறைகள், சமைக்காமல் உண்ணப்படுபவை, சமைத்து உண்ணப்படவேண்டியவை, அவரவர் வயதுக்கேற்ப ஒருநாளைக்கு எத்தனை முறை உண்ண வேண்டும்; எந்த அளவு உண்ண வேண்டும் ... என்பன போன்ற பேருண்மைகளை; **இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடம்,** இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, ஞாலகுரு, குருமகா சன்னிதானம், அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள் திருவுளம்கொண்டு நூல்களாக எழுதி வெளியிட வேண்டும் என்ற எங்களது வேண்டுகோளின் பயனாக இந்த '**இந்துவேத சிந்தனைகள்**' என்ற தொடர்நூல், பலபாகங்களாக வெளிவருவதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம் எம்போன்றோர். இந்நூலினைப் பலரும் பேரார்வத்தோடு வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டும்.

மருத்துவத்துறையைப் பொருத்தவரை; இந்துவேதம், மிகமிக உயர்ந்த, மேம்பட்ட, பண்பட்ட, நுட்பமிகு வளர்ச்சியினைப் பெற்றிருக்கிறது. இது, மிகப்பெரிய வியப்புக்குரியதாகும். ஏனெனில் இந்த இந்துவேதம் முப்பத்தெட்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து நூற்று எழுபத்தைந்து (38,87, 175) ஆண்டுகளுக்கு முன் இம்மண்ணுலகுக்கு வழங்கப்பட்டது.

இந்துவேதம் '**சித்த மருத்துவம்**', '**சித்தர் மருத்துவம்**' என்ற இருபெரும் பிரிவைக் குறிப்பதும்; '**உயிர்நோய் மருத்துவம்**' '**உடல் நோய் மருத்துவம்**' என்று மிக நுட்பமான இருபிரிவினைக் குறிப்பதும் இன்றைய மருத்துவ உலகின் ஆராய்ச்சி முன்னேற்றங்களுக்கும் அப்பாற்பட்டு விளங்குவனவேயாகும்.

இந்துவேதம் குறிக்கும் 'பற்பொடிகள்', 'தைலங்கள்', 'சத்தூட்டும் உணவுப் பொருள்கள்', 'இலேகியங்கள்', 'சூரணங்கள்', 'மருந்துகள்' உணவில் வில்வம், துளசி, வெட்டிவேர், அறுகம்புல், தென்னங்குருத்து, பனங்குருத்து, வாழைக்குருத்து, வாழைத்தண்டு, வெற்றிலை, வெற்றிலைக்கிழங்கு, கருவேப்பிலை, வேப்பிலை, வேப்பம்பூ, கொத்தமல்லி இலை, புதினா இலை, சிறு குறிஞ்சா இலை, கீரைவகைகள்....முதலியவை பற்றிய உண்மைகள் எல்லா மக்களும் தெரிந்து பின்பற்ற வேண்டியவை.

இன்றைய இந்திய அரசியல் சட்டப்படி மயக்கப் பொருள்கள் தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால், இந்து வேதத்தில், மயக்கப் பொருள்களான தென்னங்கள், பனங்கள், ஈச்சங்கள், கஞ்சா இலை, போசாக்காய், கடுக்காய், பூசணிப்பட்டை, கடைச்சரக்கு முதலியவைகளால் தயாராகும் இலேகியம், அபின், பதப்படுத்தப்பட்ட பழச்சாறு .... முதலியவை பற்றிய மருத்துவப் பயன்களும்; எந்தெந்த தொழிலாளர்கள் ஏதெதைப் பயன்படுத்த வேண்டும்; என்னென்ன வயதினர் என்னென்ன மயக்கப் பொருளை என்னென்ன அளவில் பயன்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ள செய்திகள் மறுசிந்தனை செய்வதற்குரியனவாக உள்ளன.

ஆதிசிவனார் செந்தமிழில் அருளியுள்ள இந்துவேதத்தில் மந்திரங்களும், பூசைகளும் மட்டுமில்லாமல்; இப்படி, மனித வாழ்வுக்குரிய இன்றியமையாச் செய்திகள் ஏராளமாக உள்ளன. இந்துவேதம், தமிழ்மொழிக்குச் சிறப்பையும், பெருமையையும் தருகிறது. இந்துவேதம், தமிழரின் பெருமையை உலகுக்குப் பறை சாற்றுகிறது.

எனவே, ஒவ்வோர் இந்துவும் தெரிந்துகொள்ள வேண்டிய; '**இந்து வேதம், அருளூறு அமுத தெய்வீகச் செம்மொழியான முத்தமிழில் இருப்பதை**' உணர்ந்து; இந்தியாவில் உள்ள எல்லா மொழியினரும் தங்கள் தங்கள் மொழியில் மொழி பெயர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் உலக மொழிகளில் முத்தமிழில்

உள்ள இந்துவேதத்தை மொழிபெயர்த்தால் தான்; பல்வேறு வகையான மனிதவாழ்க்கைப் பிரச்சினைகள், சமுதாயப் பிரச்சினைகள், சமயப்பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்படுவதற்குரிய வழிவகைகள் கிடைக்கும். இந்துவேதம், இம்மண்ணுலக மானுடர் அனைவரின் நன்மைக்காகவும், மேன்மைக்காகவும், உலகப்பொது வேதமாக அருளப்பட்டதாக உரிமை பாராட்டுகிறது.

இவற்றை முதலில் தமிழரும்; பிறகு மற்ற இந்திய மாநிலத்தவரும்; பிறகு, உலகத்தவரும் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து புரிந்து பயன்படுத்திடல் வேண்டும்.

**குறிப்பு :**

[டாக்டர் S. கோவிந்தனின் ஆங்கிலம் கலந்த நடைமுறைத் தமிழ் வாசகம், குருபீடத்தால் செந்தமிழ் நடையில் மொழித்திருத்தம் செய்யப்பெற்று; வெளியிடப்பட்டிருக்கிறது.]

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**



# இந்து வேதமும், இந்து மதமும் பிறந்த இடம் காலம், தோற்றுவித்தவர்கள் (பிறப்பித்தவர்கள், வழங்கியவர்கள்)

1. கடலுள் மறைந்திட்ட பெருநிலப்பரப்பும்; இன்றைய தென்னிந்தியா, இலங்கை, ஆப்பிரிக்காவின் கடலோரப் பகுதிகள். அமெரிக்காவில் உள்ள மத்திய அமெரிக்காவின் கடலோரப் பகுதிகள் முதலிய எல்லைகளைக் கொண்ட ஏழாயிரம் கல் தொலைவு நீண்டு விரிந்து பரந்து கிடந்த இளமுறியாக் கண்டம் தான்; இந்து வேதமும், இந்து மதமும் இவை வழங்கப்பட்டிட் தமிழ் மொழியும் பிறப்பிக்கப்பட்டன, தோற்றுவிக்கப்பட்டன, பிறந்திட்டன, தோன்றிட்டன.

2. இந்த இளமுறியாக் கண்டம், இதனுடைய தென்கோடிப் பகுதியில் இருந்திட்ட பனிமூடிய மலைச் சிகரங்களைக் கொண்டிட்ட இமயமலையில் பிறந்திட்ட இந்து, யமுனை, கங்கை, பிறம்மண், பிறம்மபுத்தன், பிறம்மபுத்திரன், பிறம்மபோத்தன், குமரி, பஃறுளி மேலே குறிப்பிட்ட, இமயமலை போல் பிற்காலத்தில் தோன்றிய நிலப்பகுதியில் பனிமூடிய இமயமலை ஒன்று தோன்றியதால் அதாவது, முதல் யுகத்தின் முடிவிலேயே மிகப்பெரிய கடல்கோள் ஏற்பாடு தென் இமயமலை கடலுக்குள் போய்விட்டது. அப்போது வட இமயமலை தோன்றியது,

அதனால்தான் அதனை வட இமயமலை என்றும், கடலுள் மறைந்த இமயமலையை தென் இமயமலை என்றும் பெயரிட்டார்கள். இதேபோல், இந்த வட இமயமலையில் பிறந்திட்ட ஆறுகளுக்கு தென் இமயமலையில் ஏற்கெனவே பிறந்து கடலுள் மறைந்திட்ட இந்து, யமுனை, கங்கை, பிறம்மபுத்திரன்... முதலிய பெயர்களை வடக்கு என்று அடைமொழி சேர்த்திட்டு வட இந்து, வடயமுனை, வட கங்கை, வட பிறம்மபுத்திரன் என்று இரண்டாவது யுகத்தில் பெயரிட்டார்கள்.

இதே போல், இரண்டாவது யுகத்தில், இந்துவேத நூல்களிலும். இந்துமத நூல்களிலும், தமிழ் இலக்கியங்களிலும் கடலுள் மறைந்திட்ட இமயமலையை தென் இமயமலை என்றும், அங்கு தோன்றிட்ட ஆறுகள் தென் இந்து, தென் யமுனை, தென்கங்கை... என்று 'தென்' என்ற அடைமொழியைச் சேர்த்து எழுதலானார்கள். அடுத்து இரண்டாவது யுகத்தின் முடிவிலும், மூன்றாவது யுகத்தின் முடிவிலும கடல்கோள் ஏற்பட்டு மீதமிருந்த இளமுறியாக் கண்டத்தின் பெரும் பகுதி அதாவது, இன்றைய தென் இந்தியாவும், இலங்கையும் போக மீதி அனைத்துமே கடலுக்குள் மூழ்கிவிட்டன.

எனவேதான், நான்காவது யுகமான கலியுகத்தில் வட இமயம், வட இந்து, வட யமுனை, வடகங்கை, வடபிறம்மபுத்திரன் என்ற சொற்களே தமிழ் இலக்கியங்களிலும்; கலியுகத்தில் பிறந்திட்ட பத்தாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் காலத்தில் முறையே, ஆதிசிவனாரும், பிரம்மதேவரும் எழுதிய ஆதிசிவனார் (இந்து) வேதத்திலும், பிறம்மதேவன் (இந்து) வேதத்திலும், பத்தாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகளுடைய குருபாரம்பரியம், அரசபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் என்ற நூல்களிலும் வட இமயமலை, வட இந்து, வட யமுனை, வடகங்கை, வட பிறம்மபுத்திரன் என்ற சொற்களே ஆட்சியில் இருக்கின்றன ..) முதலிய பல ஆறுகளால் நன்கு வளம் பெற்றிருந்த போதிலும், 'இந்து, யமுனை, கங்கை என்ற மூன்று ஆறுகளும் ஓடிய நிலப்பகுதிகள்தான் மிகச்சிறந்த வளமிக்க பசுமை மாறாத நிலப் பகுதிகளாக விளங்கின. எனவே, இந்த

மூன்று ஆறுகளும் ஒன்று கூடிய சுற்றுவட்டாரப் பகுதி நிலங்களில்தான் மிகுதியான பயிரினங்களும், உயிரினங்களும், இவற்றின் தலைவர்களான மணீசர்களும் வாழ்ந்திட்டனர்.

அதாவது, இந்தப் பகுதிகளில்தான், 800 வகைக்கும் மேற்பட்ட உடலமைப்புகளையும், உடல் வண்ணங்களையும் உடைய மணீச இனத்தார்கள் வாழ்த்திட்டார்கள். இவர்களுக்கிடையில் அவரவர்கள் வாழ்ந்த வாழ்விடத்தின் நிலப்பகுதியின் எல்லைகளுக்கேற்ப பல்வேறு வகையான நாடுகள் என்ற பகுப்புகள் உருவாகி இருந்தன.

இப்படி இளமுறியாக் கண்ட மக்களிடையில் வடிவமைப்புகளாலும், உடல் வண்ணங்களாலும் வாழ்ந்திட்ட நிலப்பகுதியின் எல்லைகளுக்கேற்ப உருவான நாட்டுப் பிரிவுகளாலும் ஏற்பட்டிருந்த பிரிவினைகள் போதாதென்று, இவர்கள் உருவாக்கிக் கொண்டிட்ட மொழிகளின் அடிப்படையிலும், கடவுட் கொள்கைகளின் அடிப்படையிலும் பல்வேறு வகையான பிரிவுகள் ஏற்பட்டிட்டன. இப்பிரிவுகள் எல்லாம், அனாதிக்காலம் என்று சொல்லப்படுகின்ற; அதாவது அனாதிக்காலம் என்று வேதத்தால் குறிக்கப்படுகின்ற 4,85,920 ஆண்டு என்ற மிகப்பெரிய இடைவெளிக் காலத்தில் நன்கு வடிவமைப்பும் மிகத் தெளிவான தனித்தன்மைகளையும் பெற்று இளமுறியாக் கண்டம் முழுதும் பரவின. இவற்றையெல்லாம், இந்த அனாதிக் காலத்தில் அடுத்தடுத்து இம்மண்ணுலகுக்கு வந்து செயல்பட்டிட்ட பதினெண் சித்தர்கள் மிகத்தெளிவாக தங்கள் தங்களுடைய நூல்களில் குறித்துள்ளார்கள்.

இவற்றைக் கொண்டுதான் இம்மண்ணுலகுக்கு இந்துவேதமும், இந்து மதமும் பதினெண் சித்தர்களின் தாய் மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளப்பட்டிட்டது. ஏன்? எப்பொழுது? எப்படியெப்படி? என்ற முழு விவரங்களும் இந்து வேதமான இருக்கு வேதத்தை வழங்கிய ஆதிசிவனாரால் குறிக்கப்படுகின்றன.

3. ஆதி சிவனார் வழங்கிய இந்து வேதமான இருக்கு வேதத்தில்; இளமுறியாக் கண்டத்தின் தென்கோடியில் இருந்திட்ட இமயமலையில் பிறந்திட்ட இந்து, யமுனை, கங்கை என்ற மூன்று ஆறுகளும், ஒன்று கூடிட்ட வளமான நிலப்பகுதியில் இம் மண்ணுலகுக்கென அனுப்பப்பட்டிட்ட

1. பதினெண் சித்தர்களும்,
2. பதினெட்டாம்படிக் கருப்புகளும்
3. நாற்பத்தெட்டுவகை கடவுளர்களும்
4. நாற்பத்தெட்டுவகை வழிபடு நிலையினர்களும்
5. நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும்

மணீசர்களுடைய மோகம் சிதறாமல் பாதுகாப்பதற்கென மோகம் சிதறா நகர் என்ற பெயரில் ஒரு மாபெரும் நகர் அருளுலகத்தவர்கள் வாழுகின்ற நகர் போல் உருவாக்கினர்.

4. இப்படி உருவாக்கப்பட்ட மோகம் சிதறா நகரில், பதினெண் சித்தர்களின் தாய் மொழியும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான **'முத்தமிழ்'** மொழியை தோற்றுவித்து, வளர்த்து பரப்புவதற்காக **'முத்தமிழ்ச் சங்கம்'** தோற்றுவிக்கப்பட்டது. இதில் தரம், திரம், திறம் என்ற மூன்று தகுதிகளையும் பெற்றுத் திகழும் முத்தமிழ் மொழி முறையாகப் பயிற்றுவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டது. இத்தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக, ஆதிசிவனாரே இந்த முத்தமிழ்ச் சங்கத்தின் முழு முதற் தலைவராகப் பொறுப்பேற்றார். இவரின் கீழ், அண்டபேரண்டங்களிலிருந்து வந்திருந்த கடவுளர்

களும், வழிபடு நிலையினர்களும், சித்தர் களும் தமிழ் மொழியைப் போதிக்கும் போதகர்களாகச் செயல்பட்டிட்டார்கள்.

இப் போதகர்களில்,

1. பொருளியலாக அதாவது, உலகியலாக முத்தமிழ் மொழியையும், அதிலுள்ள இலக்கிய, இலக்கணச் செல்வங்களையும் கற்பிக்கும் **ஆசிரியர்கள்** என்ற வகையை சேர்ந்த போதகர்கள்;

2. முத்தமிழ் மொழியிலுள்ள அருளுலகு சார்ந்த இலக்கிய, இலக்கணச் செல்வங்களைக் கற்பிக்கும் **குரு** என்ற வகையைச் சேர்ந்த போதகர்கள்;

3. முத்தமிழ் மொழியில் உலகியலாக உள்ள கலைச் செல்வங்களை பட்டறிவாக' பயிற்சி அறிவாக வழங்கக்கூடிய **சாத்திரியார்கள்** என்ற வகையைச் சேர்ந்த போதகர்கள்

4. முத்தமிழ் மொழியில் உள்ள அருளுலகு சார்ந்த கலைச் செல்வங்களை பட்டறிவாக, பயிற்சி அறிவாக வழங்கக் கூடிய **ஆச்சாரியார்கள்** என்ற வகையைச் சேர்ந்த போதகர்கள்;

5. முத்தமிழ் மொழியிலுள்ள மனித வாழ்வுக்குத் தேவையான சாதனங்களை இயற்கையாகக் கிடைக்கக் கூடிய பொருள் களிலிருந்து அவற்றின் குற்றம் குறைகளை ஆராய்ந்து தேவையான பொருள்களை உருவாக்கிடுகின்ற கலைகளைக்கற்றுத் தரக்கூடிய **ஆசாரியார்கள்** என்ற வகையைச் சேர்ந்த போதகர்கள் என்று பல்வேறு வகையைச் சேர்ந்த போதகர்கள் இருந்து செயல் பட்டிட்டார்கள்.

எனவே, அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியாகிய அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியாகிய முத்தமிழ் மொழி முழுமை பெற்ற ஒரு மொழியாகவே இம்மண்ணுலகு மக்களுக்கு அருளப் பெற்றது, அருளப் பெற்றது, அருளப் பெற்றது, என்ற பேருண்மையினைத்தான் இந்து வேதமும், இந்து மதமும் மிக மிகத் தெளிவாக, ஆணித்தரமாக விளக்குகின்றன. அதாவது, இந்த முத்தமிழ்மொழி இம் மண்ணுலகில் தோன்றி, வளர்ந்த அல்லது வளர்க்கப்பட்டிட்ட 'மண்ணுலக மொழி' அல்ல, அல்ல, அல்ல, அல்லவே அல்ல இப்பேருண்மையினைத் தான் இந்து வேத நூல்களிலும், இந்து மத நூல்களிலும் காணப் படுகின்ற;

1. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழியே இம் மண்ணுலகின் மூலமொழி

2. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழியே இம் மண்ணுலகம் பெற்றுள்ள முழுமை முதல் மொழி.

3. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழியே இம் மண்ணுலகு மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி.

4. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழியே கடவுளருக்குரிய மொழி.

5. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழியே தேவர் களுக்குரிய மொழி

6. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழியே தெய் வங்களுக்குரிய மொழி.

7. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழியே ஆண்டவர்களுக்குரிய மொழி

8. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழியே

அருளுலகத்தார் அனைவரையும் இப் பொருளுலகத்துக்கு வந்து அனைவரையும் சந்தித்து செயல்படச் செய்யும் அருளாட்சி மொழி.

9. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழியே இப் பொருளுலகத்தார் அனைவரும் அருளுலகத் திற்குச் சென்று, அருளுலகத்தார் அனைவரையும் சந்தித்துச் செயல்படச் செய்யும் அருளாட்சி மொழி... என்பன போன்ற சொற்றொடர்கள், கருத்து விளக்க வாசகங்கள் விளக்குகின்றன’ விளக்குகின்றன, விளக்குகின்றன.

5. பனிமூடிய மலைமுகடுகளைக் கொண்ட •இமயமலை (தென்னிமய மலை) யின் அடிவாரத்தில், தென் இந்து ஆறு, தென் யமுனை ஆறு, தென் கங்கை ஆறு என்ற மூன்று ஆறுகளும் கூடிய முக்கூடல் (மூன்று ஆறுகளின் சங்கமத்தில்) பகுதியில் மருதமரக் காடுகள் மிகுந்த பகுதியில் முத்தமிழ்ச் சங்கத் திற்காக அமைக்கப்பட்ட மாநகரம் ‘மருத மரக் காட்டு மாநகர்’— என்ற பொருளில் ‘மருதநகர்’ என்றும், மருதை என்றும், மருதை மாநகர் என்றும், முக்கூடல் பெருநகர் என்றும், கூடல் மாநகர் என்றும், முத்தமிழ்ச் சங்க மாமதுரை என்றும், முத்தமிழ்ச் சங்க கூடல் மாநகர் என்றும், முத்தமிழ்ச் சங்க கூடல் மாமருதை என்றும், முத்தமிழ்ச் சங்க மாமருதை நகர் என்றும், முத்தமிழ்ச் சங்க கூடல் மருதமரக்காட்டு மாமூதூர் என்றும், முத்தமிழ்ச் சங்கக் கூடல் மருதமரக்காட்டு மாநகர் என்றும், பல்வேறு பெயர்களால் இந்து வேத நூல்களிலும், இந்துமத நூல் களிலும்; முத்தமிழ்ச் சங்கப் புலவர்களின் இலக்கிய, இலக்கண நூல்களிலும் சிறப் பித்துப் பாராட்டிப் போற்றிப் புகழப்படு கிறது.

இந்த மருதை மாநகர் மிகவும் குளிர்ச்சி யுடைய நகரமாக இருந்ததால்; ‘ஆலவாய்த் திருநகர்’ என்று பெயரிடப்பட்டது. [ஆலம்— பனிக்கட்டி—குளிர்ச்சி என்று பொருள்.] அதாவது, பனிக்கட்டிகள் மிகுந்த மலையின் அருகில் உள்ள மாநகர் என்றும்; எப்போதும் குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையை உடைய குளுமையான மாநகரம் என்றும் பொருள்பட ‘ஆலவாய்த் திருநகர்’ என்ற சொல் உருவாக்கப்பட்டது.

இதே பெயரில், முத்தமிழ்ச் சங்கத்திற் காக பஃறுளி ஆற்றங்கரையில் ‘தொன் மருதை’என்ற நகரும், குமரி ஆற்றங்கரை ‘தென்மருதை’ என்ற நகரும், வைகை ஆற்றங்கரையில் ‘மருதை’ என்ற நகரும், தோற்றுவிக்கப்பட்டு இளமுறியாக் கண்டத் தில் முத்தமிழ் வளர்க்கப்பட்டது. இப்படி, முதன் முதல் பனிமூடிய இமயமலையின் அடி வாரத்தில் இந்து, யமுனை, கங்கை என்ற மூன்று ஆறுகளும் கூடிய மருதமரங்கள் மிகுந்த காட்டிலேயே முத்தமிழ் வளர்ப்பதற் காக முத்தமிழ்ச் சங்கம் நிறுவி உருவாக்கப் பட்ட மருதை என்ற கூடல் மாநகருக்கு, ஏற் பட்டிட்ட சிறப்புப் பெயர்களான மருதை, மாநகர், முக்கூடல் பெருநகர், முத்தமிழ்ச் மாமதுரை நகர், முத்தமிழ்ச் சங்க கூடல் மாநகர், முத்தமிழ்ச் சங்க கூடல் மருதை, முத்தமிழ்ச் சங்க கூடல் மாமூதூர், ஆலவாய்த் திருநகர், ஆலவாய் மருதை மாமூதூர், ஆல வாய் மதுரை மாநகர் என்ற பெயர்கள் அனைத்தும் மற்ற மூன்று மதுரை மாநகரங் களுக்கும் சிறப்புப் பெயராக வழங்கப்பட்டன.

அதாவது, முதன்முதல் இந்து, யமுனை, கங்கை என்ற மூன்று ஆறுகளும் கூடிய முக் கூடல் பகுதியில் முத்தமிழ் வளர்க்கப்படுவதற் காக உருவாக்கப்பட்டிட்ட மருதை மாநகர் என்ற பெயரிலேயே மிக விரைவில் பஃறுளி ஆற்றங்கரையிலும், குமரி ஆற்றங்கரை யிலும், வைகை ஆற்றங்கரையிலும் முத் தமிழ் வளர்க்கப்படுவதற்காக முத்தமிழ்ச் சங்கம் நிறுவி செயல்படுவதற்காக மருதை மாநகர்கள், [மதுரை மாநகர்கள், முக்கூடல் நகர்கள்] மூன்று தோற்றுவிக்கப்பட்டன.

இந்த மாநகரங்கள் தொன்மையான, முதன்மையான மேன்மையான முதல் மூல நகரான, மதுரை மாநகரை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டவை என்பதால் மாமூதூர் என்ற சிறப்பு அடைமொழிப் பெயரைப் பெற்றிட்டது. எனவே தான், பஃறுளி யாற்றங்கரை மதுரை மாநகரம், குமரியாற்றங்கரை மதுரை மாநகரம், வைகை யாற்றங்கரை மதுரை மாநகரம், மதுரை மாமூதூர், மருதை மாமூதூர், கூடல் மாமூதூர், மமூதூர் கூடல் நகர், மாமூதூர் ஆலவாய்த் திருநகர். மதுரை மாமூதூர் ஆலவாய்த் திருநகர் என்றெல்லாம் சிறப்பிக்கப் படுகின்றன.

இந்த நான்கு மதுரை மாமூதூர் நகரங்களிலுமே, ஆதிசிவனார் முத்தமிழ்ச் சங்கத்தை நிறுவி தமிழ் வளர்த்திட்டதால் தான் ஏழாயிரம் (7000) கல் தொலைவிற்கு நீண்டு விரிந்து பரந்து கிடந்திட்ட இளமுறியாக் கண்டம் எனும் குமரிக்கண்டத்தில் எண்ணூறுக்கும் (800) மேற்பட்டிட்ட மொழிகள் அனைத்திற்குமே அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியும், அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியுமான முத்தமிழ் மொழியே மூல மொழியாக, தாய்மொழியாக, அடிப்படை மொழியாக, ஆதார மொழியாக, இருமொழியாக குருமொழியாக அமைந்திட்டது. அமைந்திட்டது. அமைந்திட்டது.

(எனவேதான் இன்றைக்கும், இம் மண்ணுலகில் உள்ள அனைத்து மொழிகளும் அனைத்து மொழிகளின் எழுத்துக்களும், அவற்றின் உச்சரிப்பு ஒலிகளும், இன்றைக்கும் தமிழ்மொழியையே அடிப்படையாகவும், ஆதாரமாகவும், தாயாகவும், கருவாகவும், குருவாகவும் பெற்றுத் திகழுகின்றன, பெற்றுத் திகழுகின்றன, பெற்றுத் திகழுகின்றன. இதனால் தான், இன்றைக்கும், என்றைக்கும் இப் புவிப்பரப்பில் வாழும் மனித இனத்திற்குள் தமிழ் இனத்தார் ஒருவர் மட்டுமே இப் புவியில் உள்ள அனைத்து வகைப்பட்ட மொழிகளையும் கற்று அம்மொழியினரைவிட மேம்பட்ட மொழிப் புலமையும், சொல்லாற்றலும் பெற்றுத் திகழ முடிகின்றது, முடிகின்றது, முடிகின்றது. முடியும், முடியும், முடியும்).

6. இப்படி, ஆதிசிவனார் (7000) ஏழாயிரம் கல் தொலைவிற்கு நீண்டு விரிந்து பரந்து கிடந்திட்ட இளமுறியாக் கண்டமெனும் குமரிக்கண்டத்தில்; ஏறத்தாழ சம இடைவெளி அளவு உள்ள தூரத்தில் நான்கு மதுரை மாநகர்களை உருவாக்கி முத்தமிழ்ச் சங்கம் நிறுவி, முத்தமிழ் வளர்க்கும் பணியை சிறப்பாகச் செய்திட்டார். அதனால், இந்த இளமுறியாக் கண்டத்தின் மண்ணுக்கும், மண்ணில் தோன்றிய அனைத்து வகையான பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் தலைவர்களாக, அதாவது ஈசர்களாகத் தோன்றிட்ட மணீசர்களுக்கு இடையில் (மண் + ஈசர் = மணீசர்) அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியும், அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியுமான முத்தமிழ் சிறுகச் சிறுக மெல்ல மெல்ல நான்கு இடங்களிலும், நிறுவப்பட்ட முத்தமிழ்ச் சங்கங்களின் மூலம் பரப்பப்பட்டு பரவத் தொடங்கிற்று, பரப்பப்பட்டு பரவத் தொடங்கிற்று, பரப்பப்பட்டு பரவத் தொடங்கிற்று.

அதாவது, இந்த முத்தமிழ் மொழி இளமுறியாக் கண்டத்தின் தெற்கே இருந்த இமய மலை முதல், வடக்கே இருந்த விந்திய மலை (விந்துமலை + இந்துமலை = விந்து + இந்து + மலை = விந்தியமலை) வரை உள்ள (7000) ஏழாயிரம் கல் பெரு நிலப்பரப்பு முழுவதும் வாழ்ந்திட்ட இம்மண்ணுலகின் தலைவர்களான மணீசர்களுக்கிடையில் பரப்பப்பட்டு பரவிற்று.

அதனால், அதனால், அதனால் இம் முத்தமிழ் மொழியால் எண்ணூறுக்கும் மேற்பட்ட வகைவகையான தனித்தனி மொழிகளை பேசிக்கொண்டு ஒற்றுமையற்று விளங்கிய இளமுறியாக் கண்டத்து மணீசர்களுக்கிடையில் இணைப்பும், பிணைப்பும், ஒற்று

மையும், ஒருமித்துச் செயல்படும் கூட்டு வாழ்வும் உருவாயிற்று, உருவாயிற்று, உருவா வாயிற்று; அதாவது, இளமுறியாக் கண்டத்தில், அனைத்து வகைப்பட்ட மொழியினரையும் (எண்ணூறுக்கும் (800) மேற்பட்ட வகை வகையான மொழியினரையும்) அன்றாட வாழ்வியலில் ஒன்றாக இணைக்கின்ற ஓர் இணைப்பு மொழியாக, பிணைப்பு மொழியாக, அறிமுக மொழியாக, புரிமுக மொழியாக, இம்முத்தமிழ் மொழி வளர்ந்தது, வளர்க்கப்பட்டது, இதனால், அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர்களுடைய இந்து வேதநூல்களும், இந்து மதநூல்களும், இந்த இளமுறியாக் கண்டத்து மணீசர்களுக்கிடையில் முத்தமிழ் மொழிமூலம் பரப்பப்படுவதற்குரிய வாய்ப்பு கிடைத்தது.

7. ஆதிசிவனார், மோகம் சிதறா நகரை உருவாக்கி முத்தமிழ்ச் சங்கத்தை நிறுவி இம் மண்ணுலகில், அண்ட பேரண்டங்களுக்குரிய அகப் பண்பாட்டையும், புற நாகரீகத்தையும் வளர்த்திட்டார். மோகம் சிதறா நகரம் உலகியலாக மிக விரைவில் பரபரப்பும், ஆரவாரமும் மனிதச்சந்தடியும் மிகுந்த பெரு நகராக, விரைந்து வளர்ந்திட்டது.

அதனால்தான், ஆதி சிவனார் முத்தமிழ்ச் சங்கத்திற்கென்றே அண்ட பேரண்ட அருளுலக நகரங்களைப் போலவே இம்மண்ணுலகில் அமைத்திட்ட மோகம் சிதறா நகருக்கு சில கல் தொலைவிலேயே; மோகம் சிதறா நகரின் புறநகர் போல மருதமரங்கள் மிகுந்த காட்டுக்கிடையே முத்தமிழ்ச் சங்கத்திற்கென்றே மருதை மாநகர் (மதுரை) என்ற ஒரு மாநகரைத் தோற்றுவித்திட்டார்.

அப்படித் தமிழ்மொழிக்கென தனியாக இயற்கை வளங்கள் மிதந்த சூழலில் மருதை மாநகர் அமைக்கப்பட்டு முத்தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டிட்டதால்தான்; மிகக்குறுகிய காலத்திற்குள்; முத்தமிழ் நெறியை, முறையை, கலையை, கலாச்சாரத்தை பண்பாட்டை, நாகரீகத்தை... முத்தமிழ் மொழியின் இலக்கிய, இலக்கண அடிப்படையில் பரப்பிடுவதற்குரிய அல்லது வளர்த்திடுவதற்குரிய ஐந்து வகைப்பட்ட போதகர்களான

1. ஆசிரியர்
2. குரு
3. வாத்தியார்
4. ஆச்சாரியார்
5. ஆசாறியார்

எனும் ஐவரும் உருவாக்கப்பட்டிட்டார்கள்.

அவர்களைக் கொண்டுதான், அடுத்தடுத்து பஃறுளி ஆற்றங்கரையிலும் குமரி ஆற்றங்கரையிலும், வைகை ஆற்றங்கரையிலும் மருதை மாநகர் தோற்றுவிக்கப்பட்டு; அவற்றில் முத்தமிழ் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு முத்தமிழ் மொழிக்குரிய இலக்கிய இலக்கணங்கள் வளர்க்கப்பட்டன.

அம்முத்தமிழ் மொழி வழியாக கலைகள் கலாச்சாரங்கள், அகப்பண்பாடுகள் புறநாகரீகங்கள் எல்லாம் பரப்பப்பட்டு இளமுறியாக் கண்டத்து மணீசர்களுக்கிடையிலே தமிழ் மொழி ஏற்றுக் கொண்டிட்ட தமிழர்கள் உருவாக்கப்பட்டிட்டார்கள். தமிழ்மொழியைக் கற்றுக் கொண்டிட்ட தமிழர்கள் உருவாக்கப்பட்டிட்டார்கள், தமிழ்மொழியை ஏற்றுக் கொண்டிட்ட தமிழர்கள் உருவாக்கப்பட்டிட்டார்கள்,

8. இப்படி, ஆதிசிவனார் உருவாக்கிய நான்கு மருதை மாநகர்களிலும் தோற்றுவிக்கப்பட்ட முத்தமிழ்ச் சங்கங்களின் ஐந்து வகைப்பட்ட போதகர்களின் (1. ஆசிரியர், 2. குரு, 3. வாத்தியார், 4. ஆச்சாரியார், 5. ஆசாறியார்) போதனைகளின் சாதனை

களாக! போதனைகளின் சாதனைகளாக!! போதனைகளின் சாதனைகளாக!!!...

இளமுறியாக் கண்டம் முழுவதும் பரவலாக தமிழ்மொழி ஏற்றுக் கொண்டிட்டு தமிழர்களாக ஆகிட்ட, உருவாகிட்ட 'தமிழர்களே, இம்மண்ணுலகின் பூர்வீகக் குடிகளானார்கள்' 'தமிழர்களே இம் மண்ணுலகின் பூர்வீகக் குடிகளானாரகள்; 'தமிழர்களே இம்மண்ணுலகின் பூர்வீகக் குடிகளானார்கள்;

'தமிழ் மொழியே இம்மண்ணுலகத்தவர்களை இணைத்துப் பிணைத்து ஒற்றுமையுற்று ஒருமித்த கூட்டுறவுச் சமுதாய வாழ்வு பெறுமாறு செய்திட்ட முதல்மொழி, மூல மொழி'

'தமிழ் மொழியே இம்மண்ணுலகத்தவர்களை இணைத்துப் பிணைத்து ஒற்றுமையுற்று ஒருமித்த கூட்டுறவுச் சமுதாய வாழ்வு பெறுமாறு செய்திட்ட முதல்மொழி, மூல மொழி'

'தமிழ் மொழியே இம்மண்ணுலகத்தவர்களை இணைத்துப் பிணைத்து ஒற்றுமையுற்று ஒருமித்த கூட்டுறவுச் சமுதாய வாழ்வு பெறுமாறு செய்திட்ட முதல்மொழி, மூல மொழி'.

9. இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் இம்மண்ணுலகுக்கு அருளுவதற்குரிய அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான, அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழியை இம்மண்ணுலக மணீசர்களுக்குக கற்பிப்பதற்காகவே மோகம்சிதறா நகர் (இதுவே, காலப் போக்கில் மொகஞ்சதாரா என்று இந்துவேத ஏடுகளிலும், இந்து மத ஏடுகளிலும் திரிபு பெற்ற சொல்லாக ஆகியிருக்கிறது),

இந்து, யமுனை, கங்கை என்ற ஆறுகளின் முக்கூடல் பகுதியில் உருவாக்கப்பட்டது போல், **அருட்பா** என்ற ஒரு பெரு நகரம் உருவாக்கப்பட்டது. இந்நகரம், அண்ட பேரண்டங்களில் இந்து வேதம் வளர்க்கும் பதினெண் சித்தர் மடமும், இந்து மதம் பரப்பும் பதினெண் சித்தர் பீடமும் செயல்படுவதற்கென உருவாக்கப்பட்டுள்ள அருட்பா நகரங்களைப் போலவே உருவாக்கப் பட்டது.

இந்த அருட்பா நகரம் மோகம் சிதறா நகரோடு எல்லாவகையான தொடபுர்களையும், பெற்றுத் திகழும் வண்ணமே மூன்று ஆறுகளும் (இந்து, யமுனை, கங்கை) கூடுகின்ற முக்கூடல் பகுதியிலேயே உருவாக்கப் பட்டது. மேலும், மோகம் சிதறா நகரின் எல்லையிலிருந்த மருதமரக்காட்டுப் பகுதியில் முத்தமிழ் வளர்பதற்கென உருவாக்கப் பட்ட மருதை மாநகரில் நிறுவப்பட்ட முத்தமிழ்ச் சங்கத்திற்கு தலைமை தாங்கி முத்தமிழை அருளியது போலவே; இந்த அருட்பா நகரில் தோற்றுவிக்கப்பட்ட பதினெண் சித்தர் மடத்திற்கும் தலைமை தாங்கி 'இந்து வேத நாயகமாக இருந்து' இந்து வேதத்தையும்; பதினெண் சித்தர் பீடத்திற்குத் தலைமை தாங்கி 'இந்து மதத் தந்தையாக' இருந்து இந்துமதத்தையும் இம்மண்ணுலகிற்கு வழங்கினார், அருளினார்.

அதாவது, இம்மண்ணுலகிற்கு வந்திட்ட பதினெண் சித்தர் குழுவின் தலைவரான ஆதிசிவனார் (அனாதி சிவனார் என்பவர் இவருக்கு முன்பிருந்தவர்). முத்தமிழையும், இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் இம்மண்ணுலகுக்கு அருளி இந்து மத ஆண்டு என்ற காலக்கணக்கை ஆண்டுக் கணக்காகத் தோற்றுவித்தவர் ஆவார்.

இவர், இப்படி இந்து மத ஆண்டுக் கணக்கின் 'முதல் சிவனார்' எனும் பொருளிலே 'ஆதிசிவனார்' என்று அழைக்கப்படுவதால், நான்கு யுகங்களுக்குரிய காலக் கணக்கீடு இந்து மதத்திற்கு மிகத் தெளிவாகக் கிடைக்கிறது. இதன்படி தான், மூன்று

உகங்களின் கால அளவும் இந்த 1994 என்ற கால எல்லையோடு கலியுக ஆண்டு 5095 என்பதையும் கூட்டித்தான் இன்றைக்கு

| | | |
|---|---|---|
| முதல் யுகமான கீரன் உகம் (கிரேதாயுகம்) | — | 17,28,080 |
| இரண்டாவது யுகமான தீரன் உகம் (திரேதாயுகம்) | — | 12,90,000 |
| மூன்றாவது யுகமான தூரன் உகம் (துவாபர யுகம்) | — | 8,64,000 |
| நான்காவது யுகமான கலியின் உகம் (கலியுகம்) | — | 5095 |
| | | 38,87,175 |

முப்பத்தெட்டு இலட்சத்து, எண்பத் தேழாயிரத்து, நூற்று எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஆதிசிவனாரால் இம் மண்ணுலகில் முத்தமிழ் மொழி வழங்கப் பட்டது; இந்து வேதம் வழங்கப்பட்டது, இந்து மதம் தோற்றுவிக்கப்பட்டது என்ற காலக் கணக்கீடு பதினெண் சித்தர் பீடாதிபதியால் தரப்படுகிறது. அதாவது, ஆதி சிவனாரை அடுத்து வாழையடி வாழையென பதினெண் சித்தர் பீடாதிபதிகள் முத்தமிழ்ச் சங்கத்தின் தலைவர், இந்துவேத நாயகம், இந்து மதத்தந்தை, இந்து மதத்தின் முழு முதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், குவலய குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் என்ற உரிமையையும், பெருமையையும், பொறுப்பையும் சிறப்பாகப் பெறுறுச் செயல்பட்டு வருகிறார்கள்.

ஆதிசிவனார் முதல் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராரவது பதினெண் சித்தர் பீடாதிபதி வரை கட்டிக்காத்து போற்றிப்பேணி பாதுகாக்கப்பட்ட முத்தமிழும், இந்து வேதமும், இந்து மதமும் தான் இன்றைக்கு பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார், அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்களால் அருளப்படுகின்றன; அருளப்படும் பணி பதினெண் சித்தர் மடத்தாலும், பீடத்தாலும் நிகழ்ந்து வருகின்றன. நிகழ்ந்து வருகின்றன. நிகழ்ந்து வருகின்றன. நிகழ்த்தப்பட்டு வருகின்றன. நிகழ்த்தப்பட்டு வருகின்றன. நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

அதாவது, முத்தமிழும், இந்து வேதமும், இந்து மதமும் வழங்கப்பட்ட காலம், அருளப்பட்ட காலம் இன்றைக்கு (38,87,175) முப்பத்தெட்டு இலட்சத்து, எண்பத் தேழாயிரத்து நூற்று எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஆகும். அதாவது, இந்துமத ஆண்டுகள் கணக்கின் படி

1. முத்தமிழின் அகவை (வயது) 38,87,175 ஆண்டுகள்.

2. இந்து வேதத்தின் அகவை (வயது) 38,87,175 ஆண்டுகள்.

3. இந்து மதத்தின் அகவை (வயது) 38,87,175 ஆண்டுகள் ஆகும்.

10. முத்தமிழும், இந்து வேதமும், இந்து மதமும் பிறந்த இடம், பிறப்பிக்கப்பட்ட இடம், தோன்றிய இடம், தோற்றுவிக்கப்பட்ட இடம், கடலுள் மறைந்திட்ட இலமுரியாக் கண்டம் எனும் குமரிக் கண்டத்தின் தென்கோடியில் இருந்திட்ட எப்போதும் பனிமூடிய வானுயர்ந்த மலைமுகடுகளைக் கொண்டிட்ட இமயமலையின் அடிவாரத்தில் இந்து, யமுனை, கங்கை என்ற மூன்று ஆறுகள் இணைந்திட்ட, கூடிட்ட முக்கூடல் பகுதியாகும்.

11. முத்தமிழ் தோற்றுவிக்கப்பட்ட நகரம் இந்த முக்கூடல் பகுதியில் இருந்திட்ட

மோகம் சிதறா நகரின் புறநகரான மருதை மாநகராகும்.

12. இந்து வேதமும், இந்துமதமும் இம்மண்ணுலகில் தோற்றுவிக்கப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட இடம் இம் முக்கூடல் பகுதியில் உருவாக்கப்பட்டிட்ட அல்லது அமைக்கப்பட்டிட்ட அருட்பா நகரம் ஆகும்.

13. இப்படி முத்தமிழும், இந்து வேதமும், இந்து மதமும் ஆதிசிவனாரால் இம் மண்ணுலகிற்கு அருளப்படுவதற்கு முன்னால் இம்மண்ணுலகில் அருவங்களும், அருவுருவங்களும், உருவருவங்களும், உருவங்களும் பயிரினங்களாகளாக, உயிரினங்களாக வடிவப்பட்டு அதாவது இயற்கையாகவே தோன்றி வளர்ந்து அனைத்துக்கும் தலைவர்களாக மணீசர்கள் தோன்றி வளர்ந்து அம்மணீசர்களுக்கிடையில் உடல் வடிவ தோற்றங்களாலும் உடலின் வண்ணங்களாலும், உடலின் அங்க அளவுகளாலும், எண்ணூற்றுக்கும் (800) மேற்பட்டிட்ட மணீச இனங்களும், இந்த மணீசர்களுக்கிடையே இளமுறியாக் கண்டத்தின் புவிப்பரப்பில் ஆங்காங்கு வாழ்ந்திட்ட மக்களின் இயல்பான முயற்சியால் எண்ணூற்றுக்கும் மேற்பட்டிட்ட மொழிகளும், மொழியினர்களும், இவர்கள் வாழ்ந்திட்ட இடங்களின் எல்லை உரிமைகளால் ஆயிரத்திற்கும் மேற்பட்டிட்ட நாடுகளாகவும், நாட்டினர்களாகவும் தனித்தனியாகப் பிரிந்து வகைவகையாக வளர்ச்சி பெற்றிட்ட காலம் அனாதிக் காலம் என்று இந்துவேத நூல்களாலும், இந்துமத நூல்களாலும் குறிக்கப்படுகின்றது.

அதாவது, ஆதிசிவனார், பண்பாடற்று விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்திட்ட மண்ணின் தலைவர்களான மணீசர்களை பக்குவப்பட்ட மனதையுடைய மனிதர்களாக ஆக்குவதற்காக முயற்சிகளைத் துவக்கிய கால எல்லையை முடிவான எல்லையாகவும், பயிரின உயிரினத் தோற்ற காலத்தை ஆரம்ப எல்லையாகவும் கொண்டு, இந்த அனாதிக் காலம் 4,85,920 (நான்கு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது) ஆண்டுகள் ஆகும் என்று அண்ட பேரண்டமாளும் மூலப்பதினெண் சித்தர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்கள். இவர்களுடைய இந்தக் கால அளவு குறிப்பு; இம்மூலப் பதினெண் சித்தர்கள் இம் மண்ணுலகுக்கு கல் தோன்றி மண் தோன்றாக் காலம் முதல் நேரிலேயே எண்ணற்ற முறை வந்து தங்கி அனைத்தையும் கண்டு ஆய்வுகள் நிகழ்த்திப் பெற்றிட்ட அநுபவ அறிவினால் வழங்கப்படுவதாகும், வழங்கப்படுவதாகும், வழங்கப்படுவதாகும்.

14, அதாவது, இம்மண்ணுலகில் அருவங்கள், அருவுருவங்கள், உருவருவங்கள், உருவங்கள் எனும் நான்கின் கூட்டால் இயற்கையாக இம்மண்ணுலகில் பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றி மணீசர்களின் ஆளுகைக்குட்பட்டு: அம்மணீசர்களும் எண்ணூற்றுக்கும் (800) மேற்பட்ட மொழியினராகவும், இனத்தவராகவும், ஆயிரத்திற்கும் (1000) மேற்பட்ட நாட்டினராகவும் வளர்ச்சி பெற்றிட்ட காலம் 4,85,920 ஆண்டுகள் ஆகும்.

இந்தக் கால எல்லைக்குப் பிறகு தான் இம்மண்ணின் தலைவர்களான மணீசர்களுக்கிடையில் உருவாகிட்ட மொழி வெறி, இன வெறி, நாட்டுவெறி என்ற மூன்று வெறிகளும் இணைந்து உருவாக்கிய மதவெறி அனைத்து வகைப்பட்ட பயிரினங்களையும், உயிரினங்களையும் பேரழிவுக்கு உள்ளாக்கிடக்கூடிய அச்சநிலை, அழிநிலை, பழிநிலை, இழி நிலை, ஒழி நிலை......உச்ச கட்டத்தை அடைந்திட்ட காலத்தில் தான்; அண்ட பேரண்டமாளும் மூலப் பதினெண் சித்தர்கள் அனைத்து வகையான இன உரிமைகளையும், பெருமைகளையும், தனித் தன்மைகளையும் மொழி உரிமைகளையும், தனித்தன்மைகளையும் நாட்டு உரிமைகளையும், பெருமைகளையும், தனித் தன்மைகளையும் பாதுகாப்பதற்காக உலகப் பொது வேதமாக, இந்து வேதத்தையும், பொதுமதமாக

இந்து வேதமதமான இந்து மதத்தையும், ஆதிசிவனார் மூலம் இம்மண்ணுலகிற்கு அருளினார்கள்; மணீசர்களுக்கு வழங்கினார்கள்.

அதாவது இந்த அனாதிக் காலத்தில் வாழ்ந்த மக்களிடையில் தோன்றிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாடுகள், எண்ணூற்றுக்கும் மேற்பட்ட இனப்பகுப்புகள், எண்ணூற்றுக்கும் மேற்பட்ட மதங்கள், அம் மதங்களுக்குரிய வேதங்கள் வளர்ந்திருந்தன. ஆனால், ஒவ்வொரு மதத்தவரும் தங்கள் தங்களுடைய கடவுளர்களைத் தான், வேதங்களைத் தான், வேத வாழ்வைத்தான் மற்றவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும், என்ற கண்மூடித்தனமான வெறியை வளர்த்துக் கொண்டிருந்தனர்.

அதனால் மொழியால், இனத்தால், நாட்டால் ஏற்பட்ட சண்டைச் சச்சரவுகளை விட, போராட்டங்களைவிட, போர்களைவிட மதத்தின் பெயரால் ஏற்பட்டிட்ட சண்டைச் சச்சரவுகளும், போராட்டங்களும், போர்களுமே அதிகமாயின, அதிகமாயின, அதிகமாயின. அதாவது கடவுள்களின் பெயர்களாலும், மதங்களின் பெயர்களாலும் காட்டுமிராண்டித் தனமான கடுமையான போர்கள் ஓயாமல் நிகழ்ந்து மிகப்பெரிய அழிவுகளும், இழப்புக்களும், இழிவுகளும் கொடுமைகளும், நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போயின. அவற்றைத் தடுப்பதற்காகத் தான் அண்ட போண்டமாளும் பதினெண் சித்தர்கள் அண்ட பேரண்டங்கள் முழுதும் பரவியுள்ள இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியாள முத்தமிழ் மொழியில் இம் மண்ணுலகுக்கு அருளினார்கள்.

அதாவது. அதாவது, அதாவது, இம் மண்ணுலகில் இயற்கையாகத் தோன்றிட்ட அனைத்து வகைப்பட்ட பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் தலைவர்களாக (ஈசர்களாக) தோன்றிட்ட மணீசர்கள் (மண்+ஈசர்கள்) ஏழாயிரம் கல் நீண்டு பரந்து விரிந்திட்ட இளமுறியாக் கண்டம் எனப்படும் குமரிக் கண்டத்தின் நிலப்பரப்பில் பரவலாக எண்ணூறுக்கும் மேற்பட்ட உடல் அமைப்பு வேறுபாடுகளை உடைய இனத்தவர்களாக, இயற்கையாகத் தோன்றினார்கள்.

இவர்கள், தங்கள் தங்களுடைய இயற்கைச் சூழ்நிலைக்கும்; உடல் கூறுகளுக்கும்; வாழ்வியல் தேவைகளுக்கும் ஏற்ப எண்ணூறுக்கும் மேற்பட்ட வகைவகையான மொழிகளை உருவாக்கிக் கொண்டிட்டார்கள். ஆனால், உடலால் வேறுபட்டிட்ட இனத்தவர்களும், மொழியால் வேறுபட்டிட்ட இனத்தவர்களும் இயற்கை வசதி வாய்ப்புகளுக் கேற்ப இளமுறியாக் கண்டத்திற்குள் குறிப்பிட்ட இட எல்லைகளுக்குள் கூட்டம் கூட்டமாக கூடி வாழ்ந்திட்டார்கள். அப்படி கூட்டம் கூட்டமாகக் கூடி வாழ்ந்திட்ட நாடு [இன மொழி வேறுபாடுகளைக் கடந்து நாடி வந்து கூடி வாழ்ந்திட்ட இடம் 'நாடு' என்று பெயரிடப்பட்டது] என்று பெயரிட்டு அழைத்தனர். அப்படி உருவாகிட்ட நாடுகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வகைகளாக இருந்தன.

இப்படி உருவான நாட்டின் எல்லைக்குள் வாழ்ந்திட்ட மணீசர்கள் தங்கள் தங்களுடைய கனவுகளுக்கும், கற்பனைகளுக்கும் தேவைகளுக்கும் அனுபவங்களுக்கும் இயற்கை கடந்த இறை உணர்வுகளுக்கும், பட்டறிவுகளுக்கும் ஏற்ப பல்வேறு வகையான கடவுளர்களையும், அந்தக் கடவுளர்களைப் பற்றிய செய்திகளையும், அவர்களை வழிபடுகின்ற முறைகளையும், விளக்கும் வேதங்களையும் அந்த வேதவழியாக வாழுகின்ற நடைமுறைகளையும், சடங்கியல்களையும் பழக்க வழக்கங்களையும் வரையரைப் படுத்தி செயல்படுத்தும் மதங்களையும் தோற்றுவித்திட்டார்கள்.

இப்படித் தோற்றுவிக்கப்பட்ட கடவுளர்களும், வேதங்களும், மதங்களும் ஆரம்ப காலத்தில் மணீசர்களுக்கிடையில் ஒற்றுமையையும், பற்றையும், பாசத்தையும், அன்பையும், நட்பையும், தோழமையையும் உருவாக்கி எல்லோரும் கூடி வாழக் கூடிய கூட்டுறவுச் சமுதாயத்தை வளப்படுத்தின, வலிவூட்டின, பொலிவு பெறச் செய்தன. ஆனால், ஆனால், ஆனால் காலம் செல்லச் செல்ல ஒவ்வொரு வேதத்தவரும், மதத்தவரும் மற்ற வேதத்தவர்களையும, மதத்தவர்

களையும், தங்கள் தங்களுடைய வேதத்தை ஏற்று தங்கள தங்களுடைய மதத்தவர்களாக மாற வேண்டும் அல்லது மாற்றப்பட வேண்டும் என்ற உணர்வை, எண்ணத்தை, கருத்தை, கொள்கையை குறிக்கோளைப் பெற்றிடலானார்கள்.

எனவே தான், எனவே தான், எனவே தான் ஆரம்ப காலத்தில் நன்மை வழங்கிட்ட அல்லது விளைவித்திட்ட கடவுளர்களும், வேதங்களும், மதங்களும், அழிவையம், கடுமையையும், கொடுமையையும், இழப்பையும் இழிவையும் உருவாக்குவனவாக மாறி விட்டன என்பதை அறிந்திட்ட அண்ட பேரண்டமாளும் மூலப் பதினெண் சித்தர்கள்; மணீசர்களுடைய தவறான கடவுட் கொள்கைகள், வேதங்கள், வேதமதங்கள் முதலியவற்றிடமிருந்து மணீசர்களை காப்பாற்றுவதற்காக நன்மைத்தரக் கூடிய உண்மையான இந்து வேதத்தையும், இந்து வேதமதமான இந்து மதத்தையும், இம்மண்ணுலகுக்கு அருளினார்கள், வழங்கினார்கள்.

அதனால் தான், இந்து வேதமும், இந்து மதமும் 'மொழி விடுதலை வேண்டும்' 'இனவிடுதலை வேண்டும்', 'நாட்டு விடுதலை வேண்டும்'. என்ற முப்பெரும் கொள்கையை அறிவித்து; இம்மண்ணுலகில் மணீசர்களால், உருவாக்கப்பட்டிட்ட கடவுளர்களையும், வேதங்களையும், வேத மதங்களையும் முழுமையாக அகற்றிடும் அருட்பணியைத் துவக்கிட்டார்கள்.

அந்த அருட்பணிக்காகத்தான், இந்த அண்ட பேரண்டமாளும் மூலப் பதினெண் சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும்; அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியும், அருளூறு அமுதத் தெய்வீக செப்மொழியுமான முத்தமிழ் மொழியை இந்து யமுனை கங்கை என்ற மூன்று ஆறுகளும் கூடிய முக்கூடல் பகுதியில் மருத மரக் காட்டிடையில் உருவாக்கிய மருதை மாநகர் போல் பஃறுளி ஆற்றங்கரையில் தொன் மருதை என்ற நகரையும், குமரியாற்றங்கரையில் தென் மருதை என்ற நகரையும், வைகையாற்றங் கரையில் ஆலவாய் மருதை என்ற நகரையும் தோற்றுவித்து வளர்த்திட்டனர்.

எனவேதான் பண்பாடற்று விலங்கு களோடு விலங்குகளாக வாழ்ந்திட்ட மணீசர்கள் பண்பட்ட மனதையுடைய மனிதர்களாக ஆக்கிட்ட இந்து வேதமும், இந்து மதமும், முத்தமிழ்மொழியும் மானுட இனத்துக்கு மூலவேதம், மூலமதம், மூலமொழி; தாய் வேதம், தாய்மதம், தாய்மொழி; முதல் வேதம், முதல் மதம், முதல்மொழி; திரு வேதம், திருமதம், திருமொழி; தருவேதம், தருமதம், தருமொழி; கருவேதம், கருமதம், கருமொழி; குருவேதம், குருமதம், குருமொழி என்று பலவாறு போற்றிப் புகழ்ந்து பாராட்டி, சீராட்டி பயன்படுத்தப்படுகின்றன.

எனவேதான், எனவேதான், எனவே தான், இன்றைக்கும் மொழியுரிமை, இன உரிமை, நாட்டுரிமை, மொழிப் பெருமை, இனப் பெருமை, நாட்டுப் பெருமை, மொழியின் தனித்தன்மை, இனத்தின் தனித்தன்மை, நாட்டின் தனித்தன்மை முதலியவைகளையெல்லாம் முழுமையாகப் பாதுகாப்பதற்குரிய, முறையாக காப்பாற்றுவதற்குரிய தத்துவமும், செயல் சித்தாந்தமுமான மொழி விடுதலை, இன விடுதலை, நாட்டு விடுதலை என்ற மூன்று கொள்கையின் முக்கோண வடிவப் பீடமே அல்லது முக்கோணக் கோட்டையே அல்லது முப்பெரும் சத்தியே மானுடருக்குத் தேவை, என்ற முழக்கம் முத்தமிழின் நூல்களிலும், இந்து வேத நூல்களிம்லு உயிர்மூச்சாக, உயிரோட்ட நாடித்துடிப்பாக இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன. காணப்படுகின்றன, காணப்படுகின்றன, காணப்படுகின்றன.

இதனால்தான், இதனால்தான், இதனால்தான் இன்றைய அழிவு சத்திகளால், அகப்பாவ ஆணவ ஆதிக்க ஆக்கிரமிப்பு வெறிகளால் மனித இனம முடிவை எய்திடாமல் தடுக்கும் வல்லமை அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழிக்கும், முத்தமிழ் மொழியில் அருளப்பட்டுள்ள இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும்தான் உண்டு, உண்டு, உண்டு.... என்று அழுத்தந் திருத்தமாக ஆணித்தரமாக அறிவிப்பை வழங்கிச் செயல்படப் புறப்பட்டிருக்கின்றது பதினெண் சித்தர் மடம், பதினெண் சித்தர் பீடம் இவை இரண்டையும் சார்ந்த நிறுவன நிர்வாகங்கள்.

□ □

# இந்து வேதம்

1. இந்து வேதம் என்ற பெயர் உடைய வேதம் [illegible] முந்நூற்று ஐம்பதிரெண் பது ([illegible]) [illegible] பேரண்டங்களிலும் அருளாட்சி புரிகின்ற ஒருவேதம். இந்த வேதத்தை அண்ட பேரண்டங்களை ஆளு கின்ற முப்பத்திரெண் சித்தர்களும், அவர் களுடைய செயலாளர்களான முப்பதினெட் டாம்படிக் கருப்புகளும் உருவாக்கினார்கள். இந்த 'இந்து [illegible]' கோடான கோடி [illegible] ஆண்டுகளிலும் காலம் [illegible] உருவா[illegible] சித்தர் களாலும் [illegible] கருப்புகளாலும் மு[illegible] புதிய[illegible] முதலியவை இந்த முப்பத்திரெண் சித்தர் களாலும், பதினெட்டாம்படிக் கருப்புகளா லும் அருளுப்[illegible]

க.
1. நா[illegible]
2. நா[illegible]
3. நாற்பத்தெட்டு [illegible]
4. நாற்பத்தெட்டு [illegible]

உ.
1. நாற்ப[illegible]
2. நா[illegible]
3. நாற்ப[illegible]
4. நாற்பத்தெட்டு [illegible]

ங.
1. நாற்பத்தெட்டு [illegible] சித்தர்கள்
2. நாற்பத்தெட்டு [illegible]
3. நாற்பத்தெட்டு வகைப்பட்ட [illegible]
4. நாற்பத்தெட்டு வகைப்பட்ட [illegible]

என்ற மூன்று வகையினரோடு [illegible] கலந்து ஆராய்ந்து முடிவெடுத்தே [illegible] வாக்கப்படும் இந்த இந்துவேதம், மூலப்[illegible] ளெண் சித்தர்களின் [illegible] மொழியும், அ[illegible] பேரண்ட அருளாக ஆட்சி மொழியமா[illegible] அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியிலேயே முழுமையாக அருள்பெற்[illegible] ருக்கிறது.

2. இந்தச் செந்தமிழ் மொழி [illegible] முந்நூற்று ஐம்பத்திரெண்பது [illegible] சொற்களால்

1. [illegible] மொழி 2. [illegible] 3. [illegible]மொழி 4. வேத மொழி 5. [illegible] [illegible]மிழ் மொழி 6. [illegible]தமிழ் மொழி 7. [illegible] [illegible]மிழ் மொழி 8. [illegible]தமிழ் மொழி 9. [illegible] [illegible]மிழ் மொழி 10. அருந்தமிழ் மொழி 11. [illegible] மொழி 12. [illegible] மொழி 13. அரு[illegible] 14. அருட்சினை மொழி 15. [illegible] மொழி 16. [illegible]மொழி 17. [illegible] மொழி 18. [illegible] மொழி 19. [illegible] மொழி 20. [illegible] மொழி 21. [illegible] மொழி 22. [illegible] மொழி 23. [illegible] மொழி 24. [illegible] 25. [illegible]மொழி 26. கருமொழி 27. [illegible] மொழி.

[illegible] சிறப்பித்துக் கூறப்படுகிறது.

3. [illegible] என்ற [illegible]

ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்தொன்பது (1359) சொற்களும் இந்த **'இந்து'** என்ற சொல்லுக்குப் பொருளாகக் கூறப்படு கின்றன. அதாவது

I. **'இந்து'** என்றால்

1. அன்பு (அன்புத் தமிழ்)
2. அருள் (அருட்டமிழ்)
3. அழகு (அழகுத் தமிழ்)

II. **'இந்து'** என்றால்

1. ஆவி (ஆவித்தமிழ்)
2. ஆருயிர் (ஆருயிர்த் தமிழ்)
3. ஆன்மா (ஆன்மாத் தமிழ்......)

என்றிப்படி தமிழிலிலுள்ள அகர வரிசைக் குரிய எழுத்துக்களின் அடிப்படையிலும், க, கா......எனும் உயிர்மெய் எழுத்துக்களின் வரிசை அடிப்படையிலும் 'இந்து' என்ற சொல்லுக்குரிய பொருள் விளக்கச் சொற்கள் பட்டியலிட்டு இந்து வேதத்தில் காட்டப்படு கின்றன.

4. இப்படி இந்து என்ற சொல்லும், 'தமிழ்' என்ற சொல்லும் ஒரே பொருளுடைய சொற்களே என்று கூறுவதன் மூலம், இந்து வேதம் தமிழ் மொழியில்தான் கூறப்பட்டிருக் கிறது; கூறமுடியும்; செயல்படுத்த முடியும்; என்ற பேருண்மை இந்து வேதத்திலேயே நிலைநாட்டப்படுகிறது, வற்புறுத்தப்படு கிறது.

5. **'வேதம்'** என்ற சொல்லுக்கு 'வேதித்தல், வேகவைத்தல், வேகவைத்துப் பக்குவப்படுத்தல், வேகவைத்து பக்குவப் படுத்தப் பயன்படுவது, வேகவைத்து பக்கு வப்படுத்தப்பட்டது'... என்ற பல்வேறு வகை யான பொருள்களை, நுட்ப திட்ட ஒட்பத் துடன் பெற்றுத் திகழும் ஓர் உயர்த்தனிச் செந்தமிழ்ச்சொல் என்று இந்து வேதம் விளக்குகிறது.

6. இந்து வேதம், என்பது சமைத்துப் பக்குவப்படுத்தித் தருகின்ற வாழ்வியல் நெறி தான் 'சமயம், இந்து சமயம், சீவசமயம், சிவசமயம், சைவசமயம் என்றும்; இந்து வேதம் விளைவித்துத் தரும் 'வாழ்வியல், வாழ்க்கை, மதப்பு மிகுந்தது, மதமதப்பு மிகுந்தது, மதர்ப்பு மிகுந்தது, மதமுடையது, மதமாவது, மதமாகிறது; இதுவே **'இந்து மதம்'** இந்த இந்து மதம் இந்துவேத மத மாகும் என்றும் இந்து வேதத்தில் பொருள் கூறப்படுகிறது.

7. இந்து சமயம் என்றால், வாழ்வியலில் சுற்றுப்புற சூழ்நிலை, தனக்குள்ள சந்தர்ப்ப சூழ்நிலை, தனக்குள்ள வாய்ப்பு வசதி நிலை... முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்துதான் ஒவ்வொரு மனித னும் செயல்பட வேண்டும் என்ற அறி வுரையை வழங்குகின்ற ஒன்று.

8. இந்து மதம் என்றால், வாழ்க்கையில் செழுமையை, செழிச்சியை, கொழுமையை, கொழிச்சியை, திமர்வை, நேர்மையை, கூர்மையை, ஆர்வத்தை, அக்கறையை, வலிமையை, வாளிப்பை, வளத்தை, பொலிவை, வல்லமையை, முழுமையை, நிறைவை, நிம்மதியை, வெற்றியை, அமை தியை, மகிழ்வை, உண்மையை, திண் மையை, நன்மையை, மேன்மையை, அறத்தை, மறத்தை, ஈகத்தை, அன்பை, அருளை, பாசத்தை, நட்பை, தோழமையை, உறவை, உரிமையை, பெருமையை * வளர்த்து நிலைநிறுத்தித் தருகின்ற ஒன்று.

* இங்கே விரிவஞ்சி நாற்பத்தெட்டு சொற் களும் குறிக்கப்படவில்லை.

# ஆதி சிவனார் இந்து வேதம்

1. இந்து வேதம் இம்மண்ணுலகுக்கு அண்ட பேரண்டமாளும் மூலப்பதினெண் சித்தர்களால் அருளப்பட்டது. இந்த இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு அருளுவதற்காகவே பதினெண் சித்தர் குழு ஒன்று ஆதி சிவனார் தலைமையில் இம்மண்ணுலகுக்கு அனுப்பப்பட்டது. இக்குழுவிற்குத் துணையாக (i) பதினெட்டாம்படிக் கருப்புகள் (ii) நாற்பத்தெட்டு வகைக் கடவுள்கள் (iii) நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு நிலையினர்கள் (iv) நாற்பத்தெட்டு வகைப்பட்ட சித்தர்கள் என்று நான்கு வகைப்பட்ட குழுவினர்கள் அனுப்பப்பட்டார்கள். இந்த விண்ணுலக ஐவர் குழுதான் இம்மண்ணுலகுக்கு இந்து வேதத்தை அருளிற்று.

2. இந்த இந்து வேதம், இம்மண்ணுலகுக்கு அருளப்பட்ட காலத்தில், இந்த உலகம் தோன்றிய வரலாற்றையும், இந்த உலகில் பயிரினங்கள், உயிரினங்கள் தோன்றிய வரலாற்றையும், அனைத்துக்கும் தலைவர்களாக மணீசர்கள் தோன்றிய வரலாற்றையும் காலக்கணக்கீட்டு அடிப்படையில் தெளிவாக, துல்லியமாகக் குறிப்பிடுகிறது. அதாவது, இந்த இந்துவேதம் ஆதிசிவனாரால் இம்மண்ணுலகுக்கு அருளப்படுவதற்கு முன்பு இம்மண்ணுலகு தோன்றிய விவரங்களையும், தோன்றி வளர்ந்த விவரங்களையும் மிகத் துல்லியமாகக் கூறியே இந்து வேதம் ஆரம்பமாகிறது. இந்தச் செய்திகளை தொகுத்துக் கொடுத்தவர்கள், அனாதிகாலத்தைச்சேர்ந்த விண்ணுலகத்தவர்களும், இம்மண்ணுலகில் தோன்றிய ஐவர் குழுவினரும் ஆவார்கள்.

3. அனாதி காலத்திலேயே அருவங்கள், அருவுருவங்கள், உருவருங்கள், உருவங்கள் என்ற நான்கு வகைப்பட்டவர்கள் தோன்ற ஆரம்பித்து படிப்படியாக இவர்களிலிருந்தே அனைத்து வகைப்பட்ட பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றலாயின, என்ற வரலாறு மிகத் தெளிவாக இந்து வேதத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. இதில்தான் அணு, அருளணு, பொருளணு என்பவை பற்றிய குறிப்புகளும், இவற்றிலிருந்து தோன்றிய ஆன்மா, ஆருயிர், ஆவி என்ற மூன்று பற்றியும் முறையான விளக்கங்கள் மிக விரிவாக வழங்கப்பட்டிருக்கின்றன. இவை மூன்றின் இணைப்பால் சீவன் உருவாயிற்று என்பது பற்றிய விளக்கங்களும், அந்தச் சீவன் ஆண் சீவன், பெண் சீவன், அலி சீவன் என்று மூன்று வகைப்படுவது பற்றியும், இவற்றிலிருந்து ஆண், பெண், அலி என்ற மூவகை மணீசர்கள் தோன்றியது பற்றியும், விரிவான விளக்கங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

[ குறிப்பு : இங்கு கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செய்தி பற்றியும் 'இந்து வேத சிந்தனைகள்' என்ற தலைப்பில் பல பாகங்கள் எழுதப்பட்டுள்ளன. அவை விரைவில் வெளிவரும். ]

4. இம்மண்ணுலகுக்கென்று இயற்கையாக கட்டுக்கடங்காத ஆற்றலைப் பெற்று நன்மை தீமைகளை எண்ணிப் பாராமல் காட்டுத் தீ போல், காட்டாற்று வெள்ளம் போல், கடும் மழை போல், பெரும் புயல் போல் செயல்பட்டிடும் தானாக இயற்கையாகத் தோன்றிய காற்று, கருப்பு, பேய், பிசாசு என்ற நான்கையும் பற்றிய முறையான, நிறைவான, முழுமையான, தெளிவான விளக்கங்கள் அறிவுப் பூர்வமாக ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து ஏற்றுக்கொள்ளும் வண்ணம் விளக்கப்பட்டிருக்கின்றன. இதேபோல் இம்மண்ணுலகுக்கும், இம்மண்ணுலகு பயிரின உயிரினங்களுக்கும் தலைவர்களாக, இயற்கையாகத் தோன்றிய மணீசர்களின் வாழ்வியல் நெறிமுறைகளால், கொள்கை கோட்பாடுகளால், போதனை, சாதனைகளால் இவர்கள் (1) குடும்ப ஆண்டவர்களாக (பட்டவர்கள், அமரர்கள்.........) (2) குல தெய்வங்களாக (3) கிராமத்துத் தேவர், தேவதைகளாக (4) நாட்டுக் கடவுளர்களாக உருவாகிய நால்வர்களையும் பற்றிய முறையான, நிறைவான, முழுமை

யான, தெளிவான, விளக்கங்கள் அறிவுப் பூர்வமாக, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து ஏற்றுக் கொள்ளும் வண்ணம் விளக்கப்பட்டிருக்கின்றன.

5. இப்படி, இந்துவேதம் இம்மண்ணுலகுக்கு ஆதி சிவனாரால் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியும், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியுமான முத்தமிழ் மொழியில் வழங்கப்படுவதற்கு முந்திய காலத்தைப் பற்றிய செய்திகள் எல்லாம் அனாதிக் காலச் செய்திகள் என்று மிகத் தெளிவாகத் தலைப்பிடப்பட்டு ஆதி சிவனாரால் இந்து வேதத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்த செய்திகளை அண்ட பேரண்டமாளும் மூலப் பதினெண் சித்தர்களின் அருளாணைப்படி ஆதி சிவனாருக்கு அருளி உதவியர்கள் **'மண்ணுல ஐவர் குழுவினர்'** எனப்படுபவர்கள் ஆவார்கள்.

இவர்கள்

1. முப்பத்து மூவாயிரங்கோடி தேவர்கள்.
2. நாற்பத் தெட்டாயிரம் கோடி இருடிகள்.
3. ஆயிரங் கோடி தேவதைகள்.
4. தொண்ணூற்றா றாயிரங்கோடி கணங்கள்.
5. நூற்றெட்டாயிரங் கோடி முனிவர்கள் எனப்படுபவர்கள் ஆவார்கள்.

இந்த ஐவர் குழுவினரை இந்து வேத நாயகமாக இந்து மதத் தந்தையாக, குவலய குருபீடமாக, இம் மண்ணுலகுக்கு முத்தமிழைக் கற்பித்த முத்தமிழ்ச் சங்கத்தின் தலைவராக, இம் மண்ணுலகுக்கு இந்து வேதத்தை முறைப்படி அருளிய பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியாக, இம் மண்ணுலகில் இந்து மதத்தை நெறிப்படித் தோற்றுவித்த பதினெண் சித்தர் பீடத்தின் பீடாதிபதியாக, அந்தணர் அண்ணல் ஞானச்சாரியாராக தோன்றிடக் கூடியவர்கள் அழைத்து கலந்து ஆய்வுகள் நிகழ்த்தியே தங்கள் தங்களுடைய கால நிலைமைகளுக்கேற்ப, இந்து வேதத்திலிருந்து தேவையானவைகளை மட்டும் தேர்ந்தெடுத்து வழங்க வேண்டும் என்றவிதி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது, காலங்கள் தோறும் அண்ட பேரண்டமாளும் மூலப் பதினெண் சித்தர்களால் இம்மண்ணுலக நன்மைக்காகவும், மேன்மைக்காகவும், இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் அருளுவதற்காகத் தோற்றுவிக்கப்படுகின்ற அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார்கள் விண்ணுலக ஐவர் குழுவையும், மண்ணுலக ஐவர் குழுவையும் இரு கண்களாகக் கொண்டுதான் செயல்பட வேண்டும் என்று அருளாணை வழங்கியுள்ளனர். இப்படித், தோன்றக் கூடிய அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார்கள் நான்கு யுகங்களுக்கும் சேர்த்து மொத்தம் நாற்பத்தெட்டு (48) பேர்கள் ஆவார்கள் என்ற வரையறையையும் செய்துள்ளார்கள்.

6. இந்த மண்ணுலகம் இருபத்தேழு (27) விண்மீன்கள், பன்னிரண்டு (12) இராசிகள், ஒன்பது (9) கோள்கள் என்ற மூன்றின் கூட்டுத் தொகையான நாற்பத்தெட்டு (48) என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் எல்லா வகையான பயிரின, உயிரின வாழ்வியல்களையும், வாழ்வியல் இயக்கங்களையும் பெற்றிடும். இம்மண்ணுலகில் உள்ள பயிரினங்களின் வகைபோல், உயிரினங்களின் வகைபோல் இவற்றின் தலைவர்களான மனிசர்களுக்குள்ளும் உடல் அமைப்புக்களின் அடிப்படையிலும், உடல் வண்ணங்களின் அடிப்படையிலும், பேசும் மொழிகளின் அடிப்படையிலும், வாழும் நாட்டு எல்லைகளின் அடிப்படையிலும் தங்கள், தங்கள் குழு மூலமுதல்வர்களின் அடிப்படையிலும், வாழ்க்கையில் பயன்படுத்துகின்ற வாழ்வியல் நெறிமுறைகளின் அடிப்படையிலும், பல் வேறு வகையான வேறுபாடுகள் அறிவு விழித்த நிலையில் தோன்றிக் கொண்டே இருந்திடும்.

எனவே, இந்த வேறுபாடுகளின் அடிப்படையில் 'மனித வாழ்வு' பாதிக்கப்பட்டு

விடக்கூடாது என்பதற்காகவே 'மனித வாழ்வு பற்றிய பேருண்மைகளை விளக்கி யுரைத்து மனிதவாழ்வில் ஒற்றுமை, அமைதி, நிறைவு, மகிழ்ச்சி, சமாதானம், கூட்டுறவு, நட்பு, தோழமை... முதலியவை தழைத் தோங்கிடுவதற்காகவே இந்துவேதம் அரு ளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ் மொழியில் வழங்கப்பட்டது.

அதாவது மனிதருக்குள் எந்தவிதமான பிரிவின் அடிப்படையிலும் ஏற்றத்தாழ்வோ, போட்டி பொறாமைப் பகையோ, சண்டைச் சச்சரவோ, போரோ நிகழ்ந்துவிடக் கூடாது என்ற அருளுலகக் கொள்கையையும், கோட் பாட்டையும் குறிக்கோளையும் உடையது தான் கடந்த நான்கு-யுகங்களாக இருந்து வரும் ஆதிசிவனாரின் இந்துவேதம் பெற்றுத் திகழ்கிறது என்று பத்தாவது பதினெண் சித்தர் மடாதிபதி, பீடாதிபதியாகத் தோன் றிய இந்துவேத நாயகம், இந்து மதத் தந்தை, குவலய குருபீடம், அந்தணர் அண் ணல், ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் குறிப் பிடுகிறார். இவர், இந்தக் கலியுகத்தின் முதல் பதினெண் சித்தர் பீடாதிபதி, மடாதி பதியாவார்.

அதாவது, முதல் மூன்று யுகங்களில் ஒன்பது பதினெண் சித்தர், மடாதிபதி, பீடாதிபதிகள் தோன்றி இந்து வேதத்தின் மூலமும், இந்து மதத்தின் மூலமும் இவ் வுலகைக் காப்பாற்றிய பிறகு. நான்காவது யுகமான கலியுகம் பிறந்து மூவாயிரம் ஆண்டு கள் கழித்து, இந்தக் கலியன் உகத்தின் முதல் பதினெண் சித்தர் பீடாதிபதியாகத் தோன்றிய, இந்து மதத்தின் பத்தாவது பதி னெண் சித்தர் பீடாதிபதியாகிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதி யாற்றங்கரைக் கருவூறார், மீண்டும் முதல் மூன்று உகங்களிலும் அருளாட்சி புரிந்திட்ட, நிகழ்த்திட்ட இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் தமது காலத்திற்கேற்பப் புதுப் பிக்கும் பணியில் ஈடுபடுகின்றார், ஈடுபட்டார்.

அந்த வரலாறு மிகவும் விரிவாக இவரது குருபாரம்பரியத்தில் விளக்கியுரைக்கப்படு கிறது. இவருடைய குரு பாரம்பரியச் செய்தி கள் விளக்குகின்ற, தருகின்ற மதவரலாற்றுக் குறிப்புகளுக்கு; இவர் எழுதியுள்ள இலக்கிய பாரம்பரிய தருகின்ற மொழி வரலாற்றுக் குறிப்புகள், இலக்கிய வரலாற்றுக் குறிப்புகள், மக்களுடைய அகப்பண்பாட்டுக் குறிப்புகள், புறநாகரீக குறிப்புகள் முதலியவற்றிலும்; அரச பாரம்பரியம் தருகின்ற அரசர்களின் வரலாற்றுக் குறிப்புகள், அரசாங்க நிகழ்ச்சி கள் பற்றிய குறிப்புகள், போர்கள் பற்றிய குறிப்புகள், வைகையாற்றங்கரை முக்கூடல் நகரான ஆலவாய் மாமூதூர் மதுரையின் பேரழிவு பற்றிய குறிப்புகள், முத்தமிழ் சங்க நிறுவன நிர்வாகங்களும், அவற்றிற்குரிய மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும், பட்டிமன்ற மண்டபங்களும், கவியரங்க மண்டபங்களும், சங்க நூல்களின் நூலகங் களும், சங்க நூல்கள் படியெடுக்கப்பட்ட நகல்கள் எடுக்கப்பட்ட மண்டபங்களும், சங்கப் புலவர் இருக்கைகளும், முத்தமிழ்ச் சங்க புலவர் பள்ளிகளும், குருகுலங்களும், ஆசிரமங்களும், மாணவர் விடுதிகளும், முத் தமிழ்ச் சங்கக் கோட்டமும் இடித்துத் தகர்க் கப்பட்ட குறிப்புகள், முத்தமிழ் நூல்கள் கட்டவிழ்க்கப்படாத ஏடுகளாகவே வெட்டப் பட்டு முறித்தும், ஒடித்தும் நெருப்பிலிட்டு சாம்பலாக்கப்பட்ட நிகழ்ச்சிகளை விளக்கு கின்ற குறிப்புகள், பதினெண் மேல்கணக்கு, கீழ்கணக்கு நூல்களைவிட பதினெண் மையக் கணக்கு நூல்கள் பெருமளவு நாடு முழுதும் தேடப்பட்டு எரித்துச் சாம்பலாக்கப்பட்ட நிகழ்ச்சிகளை விளக்குகின்ற குறிப்புகள், முத்தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த தமிழ்ப் புலவர்கள் மட்டுமன்றி நாடு முழுவதும் இருந் திட்ட தமிழ்ப் புலவர்களும், தமிழ் மாணாக்கர் களும் விரட்டி விரட்டி வேட்டை யாடப்பட்டு வெட்டிக் கொலை செய்யப்பட்டு தமிழ்நாடு முழுதும் தமிழ் கற்றோரின் செங்குருதியால் ஈரமாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புகள்... முதலிய

இன்னோரன்ன குறிப்புகள் மிகச் சிறந்த விளக்கங்களைத் தருகின்றன.

7. அதாவது கலியுகத்தின் முதல் பதினெண் சித்தர் பீடாதிபதியாகவும், மடாதிபதியாகவும், இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடத்தின் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியாகவும், மடாதிபதியாகவும் தோன்றிட்ட இந்துவேத நாயகம், இந்து மதத்தந்தை, பரப்பிரமம், எல்லாம் வல்ல சித்தர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு, சித்தர் அமராவதியாற்றங் கரைக் கருவூறார் அவர்கள்தான் தமக்கு முன்னாள் வாழ்ந்திட்ட ஒன்பது பதினெண் சித்தர் பீடாதிபதியும் சந்திக்காத சோதனைகளையும், பெற்றிடாத வேதனைகளையும், வகைவகையாக பல அளவுகளில், பல நிலைகளில், பல காலக் கட்டங்களில் ஏற்று இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் காப்பாற்றியுள்ளார்.

விரிவஞ்சி, இவர் ஆதிசிவனார் அருளிய இந்து வேதமும், இந்து வேதமதமான இந்து மதமும்' என்ற தலைப்பில் அருளியுள்ள வற்றில் ஒரு சில மட்டும் இங்கு **'இந்து வேத சிந்தனைகள்'** விழிச்சியும், விழ்ச்சிமிகு எழிச்சியும், எழிச்சி மிகு முயற்சியும் பெற்றிடுவதற்காக வழங்கப்படுகிறது. அதாவது, இவர் "...கடந்த மூன்று யுகங்களிலும், செயல்பட்டு வந்திட்ட இந்து வேதத்தையும், இந்து வேதமதமான இந்து மதத்தையும், கட்டிக் காத்திடும் முத்தமிழ்ச் சங்கங்கள், கடலுள் மறைந்திட்ட குமரிக் கண்டம் எனும் இலமுரியாக் கண்டத்தின் 'மோகம் கிதறா' நகரத்தின் மருதமரக் காட்டிடையே தோற்றுவிக்கப்பட்ட முக்கூடல் நகரான ஆலவாய் மாமூதூர்மருதை (மதுரை) மாநகர், பஃறுளி ஆற்றங்கரையில் இருந்திட்ட தொன்மருதை மாநகர், குமரியாற்றங் கரையில் இருந்திட்ட தென்மருதை மாநகர், வைகையாற்றங்கரையில் இன்றைக்கும் இருக்கின்ற முக்கூடல் மாநகரான ஆலவாய் மாமூதூர் மருதை (மதுரை) மாநகர் எனும் நான்கு நகரங்களிலும், கடல் கோள்களையும், கடந்து வென்று நின்று நிலவி விளங்கிடும் முத்தமிழ்ச் சங்க நூல்களின் மூலம் நிலையாக ஏட்டுலகில் காக்கப்பட்டும் கூட இந்தக் கலியுகத்தில் எப்படியோ ஹிந்து மதம் என்ற ஒன்று; நாராயணன் எனும் கடவுளால் சமஸ்கிருத மொழியில் அருளப்பட்ட வேதங்களின் அடிப்படையில் தோன்றியதாகக் கூறப்படுவது மிகப் பெரிய குழப்பத்தை உருவாக்கியிருக்கிறது.

எனவேதான், ஆதிசிவனார் அருளியுள்ள இந்து வேதத்திற்குரிய 396 நூல்களையும், இந்து மதத்திற்கென அருளியுள்ள 36 நூல்களையும், அருளுலகத்தவர் படித்துக் கொண்டேயிருப்பது போல் இந்தப் பொருளுலகத்தவர்களும் வாழையடி வாழையெனத் தொடர்ந்து படித்துக் கொண்டேயிருப்பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்தோம். இதற்காகவே உலகியலாக அதிக தொடர்போ, தொல்லையோ இல்லாமல் காவிரியாற்றங் கரை நடுவில் உள்ள **நட்டாற்றீசுவரர்** ஆலயத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கு ஆதிசிவனாரை வரவழைத்துத் தங்கச் செய்து அனைத்து நூல்களையும்; மொத்தமுள்ள 432 (நானூற்று முப்பத்திரண்டு) நூல்களையும் எழுதித்தரச் செய்தோம். இவற்றிற்காக குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம் முதலிய கல்வி நிறுவன நிர்வாகங்களையும் தவப்பள்ளி, பத்திப்பாட்டை, சத்திச் சாலை, சித்திச்சோலை, முத்தி மன்றம் முதலியவற்றையும், மக்களுக்கு நாள், கோள், மீன், இராசி; கட்டுக்கடங்காத காற்று, கருப்பு, பேய், பிசாசு முதலியவற்றால் வரக்கூடிய பாதிப்புக்களுக்கும், தவறான வழியில் முறைகேடான அருட் சத்திகளையும், சித்திகளையும், சித்து விளையாடல்களையும் பெற்றிடுபவர்களால் செய்யப்படும் பில்லி, சூன்யம், ஏவல், செய்வினை, வைப்பு, கழிப்பு, மருந்து, கண்ணேறு முதலியவற்றால் வரக்கூடிய பாதிப்புக்களுக்கும்; ஆவி,

ஆருயிர், ஆன்மா என்ற மூக்கூட்டால் விளையும் சீவனின் முற் பிறப்புக்களால் ஏற்படும் ஊழ்வினை, இப்பிறப்பில் ஏற்படும்விதி, ஆள்வினை, சூழ்வினை, முதலியவற்றால் வரக்கூடிய பாதிப்புக்களுக்கும், தேவையான பரிகாரங்களையும், அருளூறு பாதுகாப்புப் பூசனைப் பொருள்களையும், அருளை மருந்தாக வழங்கும் மந்திரத் தலையும், ஓதுதலையும், இட்டு தொட்டு சுட்டி அருள் வழங்கு தலையும், தீட்சை (தீ + செய் = தீச்சை- தீட்சை) வழங்குதலையும் செய்திடும், நிகழ்த்திடும் இருக்கு வேத அருட் கோட்டம், அசுர வேத அருட் கோட்டம், அதர்வான வேத இருட்கோட்டம், யாமவேத அருட்கோட்டம் எனும் நான்கையும் உருவாக்கியுள்ளோம்...'' என்று குருபாரம்பரியத்தில் குறிப்பிடுகின்றார்.

8. இவர், பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியாகப் பொறுப்பேற்று இந்து வேத நூல்களையும், மட்டுமே கற்பிப்பதற்காக அமராவதி ஆற்றங்கரைக் கரூரில் உள்ள பசுபதீசுவரர் ஆலயத்தை மிகப் பெரிய அளவில் அமராவதி ஆற்றங்கரை வஞ்சியம்மன் கோயில் வரை ஏழு அரண்களை உடைய மிகப் பெரிய ஆலயமாக விரிவாக்கிச் செம்மைப்படுத்தினார். இதேபோல் முத்தமிழ்ச் சங்கத்திற்காக, வைகையாற்றங்கரையிலுள்ள மீனாட்சி சொக்கலிங்கேசுவரர் ஆலயத்தையும் ஏழு அரண்களை உடைய மிகப் பெரிய ஆலயமாக பாண்டியம்மன் கோயில் வரை விரிவாக்கிச் செம்மைப்படுத்தினார். இவற்றிற்காக, மக்களை ஒன்று திரட்டும் வண்ணம் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்', 'இந்து வேத முன்னேற்றக் கழகம்', 'சித்தர் கருவூறார் அருட்பணி விரிவாக்கத் திட்டம்', 'சித்தர் கருவூறார் வழிபாட்டு மன்றம்', சித்தர் கருவூறார் முத்தமிழ் கலை மன்றம்', 'சித்தர் கருவூறார் திருச்சபை'....... என்று பதினெட்டு வகையான நிறுவன நிர்வாகங்களைத் தோற்றுவித்து தென்குமரி முதல் வட இமயம் வரை இந்து வேதமும், இந்து மதமும் முறையான ஏட்டறிவோடு வளமி தவளர்ச்சியையும், ஆட்சி மாட்சியையும் விளைத்திடப் பாடுபட்டார்.

இருப்பினும், எதிர்பாராத மாற்று வேதத் தாக்குதல்களாலும், வேற்று மதத் தாக்குதல்களாலும், அன்னிய மொழியினர்களின் சூழ்ச்சிகளாலும், அரசியல் ஆதாயம் தேடிய இந்துவேத, இந்து மதத் துரோகிகளாலும், விரோதிகளாலும், சமுதாய ஆதாயங்களைத் தேடிட்ட இந்துவேத, இந்துமதப் போலிகளாலும், காலகளாலும்... தொடர்ந்து விளைந்திட்ட நிலைகுலைவுகளும், அழிவுகளும், வீழ்ச்சிகளும், சிதைவுகளும், சீரிழிவுகளும்...இவருடைய மாபெரும் முயற்சிகளுக்கு எல்லையில்லாத சோதனைகளைக் கொடுத்திட்டன. அவற்றின் விளைவாகவும், இவரால் தமது அரசியல் வாரிசாக உருவாக்கப்பட்ட ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் தான்தோன்றிப் போக்குகளாலும், மதுரையின் பேரழிவாலும்... மனம் வருந்திய இவர் அமராவதியாற்றங்கரை கரூர் பசுபதீசுவரர் ஆலயத்தில் உள்ள நிலவறைக்குள் சென்று நீள் தவத்தில் ஆழ்ந்திட்டார்.

குறிப்பு :- இங்கு கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செய்தி பற்றியும் 'இந்து வேத சிந்தனைகள்' என்ற தலைப்பில் பல பாகங்கள் எழுதப் பட்டுள்ளன. அவை, விரைவில் வெளிவரும்.



# இந்து மதம்
# 'இறந்திடுமா ?' 'மறந்திடுமா ?'

## அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார்

1. இன்றைய நிலையில், இந்துக்களில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேர் ஆத்திகர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் நூற்றுக்கு ஐந்துபேர் கூட வாரம் ஒரு முறையாவது கோயிலுக்குக் கூட செல்லவேண்டும் என்ற உணர்வுகள் இல்லாதவர்களே. அதாவது ஏறத்தாழ, நமது இந்துக்களில் எவருக்குமே கோயிலுக்குப் போக வேண்டும் என்ற உணர்வு இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை. அதற்குக் காரணம், கோயிலுக்கும் மனித வாழ்வுக்குமுரிய உண்மையான தொடர்பை ஏறத்தாழ இந்து மதத்தின் படிப்பறிவற்ற பாமரர் முதல் இந்து மதத்தின் படித்த பத்தி நிறைந்த மதத் தலைவர்கள் வரை யாருமே மெய்யாகப் புரிந்து கொள்ளவில்லை, புரிந்து கொள்ளவில்லை, புரிந்து கொள்ளவில்லை, புரிந்து கொள்ளவே இல்லை.

2. அன்புடையீர்! இப்படி, நமது இந்து மதத்தவர் தங்களுடைய இந்துமதக் கோயில் களைப் பற்றி அநேகமாக எதுவுமே தெரியா தவர்களாக, எள்முனையளவுகூடப் புரியா தவர்களாக இருந்து வருகின்ற காரணத் தினால் தான்; நம் நாட்டு மக்களிடையில்,

I இந்துக் கோயில்கள் தேவையற்ற வைகளாகத் தெரிகின்றன.

II இந்துக் கோயில்கள் பயனற்றவை களாக தெரிகின்றன.

III இந்துக் கோயில்கள் தவறுகளுக்கும் தவறானவர்களுக்கும், தீயவர்களுக்கும் தீயவைகளுக்கும் இருப்பிடமாகக் கருதப் படுகின்றன.

IV இந்துக் கோயில்கள், கேள்வி கேட் பாரற்று யார் வேண்டுமானாலும் இந்துக் கோயிலையும், இந்துக் கோயிலுக்கு உரியவை களையும் என்ன வேண்டுமானாலும் செய்ய லாம்; அதைத் தடுக்கவோ, தட்டிக் கேட்க வோ யாருக்கும் உணர்வு இல்லை.

V இந்துக் கோயில்கள் போலியானவை களாக, கேலிக்கு உரியவைகளாக, எதுவுமே இல்லாத காலியானவைகளாக, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரின் கூலிக்காக உரியது.

VI இந்துக் கோயில்கள் அறியாமையும், மூட நம்பிக்கையும், கண்மூடிப்பழக்க வழக்கங்களும், மத வெறி உணர்வும் பிறக் கின்ற அல்லது தோன்றுகின்ற இடங்கள்.

VII இந்துக் கோயில்கள் சமுதாய சமத்துவத்துக்கும், ஒற்றுமைக்கும், முன் னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாக, தடை யாக இருக்கின்றன.

VIII இந்துக் கோயில்களுக்கும், இந்து வின் வாழ்வுக்கும் தொடர்பு இல்லை. அதாவது இந்துக்களாக இருப்பவர்கள் இந்துக் கோயிலுக்கு செல்லத் தேவை யில்லை.

IX இந்துக் கோயில்களுக்குச் செல் கிறவர்கள் வேலை வெட்டி இல்லாதவர்கள்; பொழுது போகவில்லை என்று கருது கிறவர்கள்; இந்துக் கோயிலை வைத்து பிழைப்பு நடத்துபவர்கள்.

X இந்துக் கோயில்கள் தடுக்கி விழுந்த இடமெல்லாம் இருக்கின்றன. இத்தனைக் கோயில்கள் இருப்பதால்தான்; பத்தி இல்லாமல் போய் விட்டது. ஒவ்வொரு இந்து கோயில்களிலும் குறைந்தது ஏழெட்டுப்பத்து கடவுள்கள் இருக்கின்றார்

கள். இப்படியிருக்கிற ஒவ்வொரு கடவுளுக்கும் ஒரு வரலாறு வேறு சொல்கிறார்கள். இப்படி, கணக்கற்ற வரலாறுகள் கடவுள்களைப் பற்றி இருப்பதால்தான்; இந்து மதம் ஒருமைப்படவில்லை, ஒற்றுமைப்படவில்லை.

மேலும், இந்தக் கடவுள்களால்தான் கோயில் குழப்பங்களே வருகின்றன. இந்துக் கோயில்களால்தான் தேவையில்லாத திருநாள்கள், திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் கொண்டாடப்பட்டு மக்களின் பொழுதும், உழைப்பும், பொருளும் வீணாக்கப்படுகின்றன.

XI இந்துக் கோயில்களில் நகைகளாக, வாகனங்களாக, கோபுரக் கலசங்களாக, சிலைகளாக ஏராளமான தங்கம், வெள்ளி உலோகங்கள் முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

XII இந்துக் கோயில்களில் உழைக்காமல் உண்டு கொழுக்கக் கூடிய கூட்டத்தார் வளர்க்கப்படுகிறார்கள்.

...... என்றிப்படி இந்துக் கோயில்களைப் பற்றி இந்துக்களே மரியாதையின்றி, பற்றின்றி, பத்தியின்றி, உரிமை உணர்வின்றி, பெருமித உணர்வின்றி இழித்துப்பழித்து தாழ்வாகப் பேசித்திரியும் நிலை இன்றைக்கு நாட்டில் இருக்கிறது. இவையெல்லாம் மாற வேண்டுமென்றால்; முதலில் நம் இந்துக்களுக்கு இந்துக்கோயில்களின் அருமை, பெருமை, அரிய பயன்கள் தெரியவேண்டும். அதுமட்டுமல்ல,

1) இந்துக் கோயில்கள்தான், நமது அகப் பண்பாட்டையும், புற நாகரீகத்தையும், வரலாற்றையும் பாதுகாக்கும் பெட்டகங்களாக, பாதுகாப்பகங்களாக இருக்கின்றன.

2) நமது இந்துக் கோயில்கள்தான், தொன்றுதொட்டு பாரம்பரியமாக வரக் கூடிய நம்நாட்டுக்குரிய அனைத்து வகைப்பட்ட கலைகளையும், அறிவியல்களையும் வாழவைத்துக் கொண்டிருக்கிறது.

3) நமது இந்துக் கோயில்களில்தான், நமது இலக்கியம், ஆடல், பாடல், இசை, ஓவியம், சிற்பம் முதலிய பலவற்றின் வாழ்வுக்கு வழியும், பாதுகாப்பும் இருக்கின்றன.

4) நமது இந்துக் கோயில்களில்தான், மனிதவாழ்க்கையில் ஏற்படக்கூடிய அனைத்துவகைப் பாதிப்புக்களுக்கும் அச்சம், கூச்சம், இச்சை, மாச்சரியம், பேராசை, ஏமாற்றம், ஏக்கம், எரிச்சல், தோல்வி, நலிவு, மெலிவு, தாழ்ச்சி, வீழ்ச்சி, இகழ்ச்சி, மருந்துக்கும் அப்பாற்பட்ட உடல் நலப் பாதிப்புக்கள் முதலிய அனைத்துக்கும் உரிய அரிய மருந்தாக அருள் வழங்கப்படுகிறது.

5) நமது இந்துக் கோயில்களில்தான், மனித வாழ்க்கையில் உள்ள திருமணம், பிறப்பு, பருவமடைதல், இறப்பு முதலிய அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் உரிய வழி காட்டலும், வழித் துணையும், நிகழிடமும் இருக்கின்றன.

6) நமது இந்துக் கோயில்கள்தான், அந்தந்த வட்டாரத்து மக்களை ஆண்டுக்குச் சிலமுறையாவது திருநாள், திருவிழா முதலியவற்றின் பெயரால் ஒன்று திரட்டி ஒற்றுமைப்படுத்தி ஒருமுகமாகச் செயல்படப் பழக்குகிறது.

7) நமது இந்துக்கோயில்கள்தான், சமய கல்விச்சாலைகளாக, நூலகங்களாக, கலைக் கருவூலங்களாக விளங்குகின்றன.

8) நமது இந்துக் கோயில்கள்தான், சமுதாய நலப் பணிகளும் அரசியல் பணிகளும் நிகழ்ந்தே வதற்குரிய நிகழிடங்களாக இருக்கின்றன.

9) நமது இந்துக் கோயில்களை, இந்துக்கள் சிதைந்து சீரழியவிட்டதால்தான்; இந்துக்களின் வாழ்க்கையில் நலிவு, மெலிவு, வறுமை, வெறுமை, ஏக்கம், ஏமாற்றம்..... முதலியவை அனைத்தும் விளைந்து விட்டன. எனவே, நாம் நமது இந்துக்

கோயில்களை அவை சிறியவையாக இருந்தாலும் சரி; பெரியவையாக இருந்தாலும் சரி; புதைகாட்டுப்பகுதியில் இருந்தாலும் சரி; சுடுகாட்டுப்பகுதியில் இருந்தாலும் சரி; நடுக்காட்டில் இருந்திட்டாலும் சரி; அவற்றையெல்லாம் இந்துக்கள் முறையாகப் பயன்படுத்தி நிறைவான பயனைப் பெறும் படிச் செய்ய வேண்டும். மேலும், நம் இந்துக் கோயில்களின் மூலம்தான் நாள், கோள், மீன், இராசி எனும் நான்கின் பாதிப்புக் களையும்; காற்று, கருப்பு, பேய், பிசாசு எனும் நான்கின் பாதிப்புக்களையும்; மந்திரவாதிகளின் பில்லி, சூன்யம், ஏவல், செய்வினை எனும் நான்கு பாதிப்புக் களையும்; வைப்பு, கழிப்பு, மருந்து, கண்ணேறு முதலிய நான்கு பாதிப்புக் களையும்; தடுத்து நிறுத்தி அகற்றிக் கொள்ளு வதற்குரிய எல்லாவகையான வழிவகை களையும், ஏந்துகளையும், உதவிகளையும், துணைகளையும் நல்கிடக்கூடிய குடும்ப ஆண்டவர்கள், குல தெய்வங்கள், கிராம தேவர் தேவதைகள், நாட்டுக்கடவுள்கள் இருக்கிறார்கள் என்ற பேருண்மைகளை யெல்லாம் நம் மக்களுக்கு விளக்கியாக வேண்டும்.

3. நமது இந்து வேதத்தில் நான்கு என்ற எண்ணிக்கைக்கு சிறப்பு உண்டு. இருக்கு வேதம் ஒன்றுதான் இந்துவேதமாக எழுதப் பட்டது. அதிலிருந்துதான் அசுரவேதம், யாம வேதம், அதர்வான வேதம் என்ற மூன்றும் பிரிக்கப்பட்டு வேதங்கள் நான்கு என்று ஆயின.. இதேபோல், மறை, முறை, நெறி, சுருதி, ஆரணம், ஆகமம், மீமாம்சை, நவ நாதம், பதினெண்சித்தம், முப்பத்தாறு போதம், தொண்ணூற்றாறு ஓதம் முதலிய அனைத்துமே நான்காகப்பகுக்கப்பட்டன. இந்த மண்ணுலகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நான்காகப் பகுக்கப் பட்டது. இதே போல் தான், கடவுள்கள் அருவக்கடவுள்கள், அருவுருவக் கடவுள்கள், உருவருவக் கடவுள்கள், உருவக் கடவுள்கள் என்று நான்காகப் பகுக்கப்பட்டார்கள். மேலும், பொருளுலக வாழ்க்கையை அறவி, உறவி, துறவி, மறவி என்றும்; அருளுலக ஈடுபாட்டை பயிற்சி, முயற்சி, தேர்ச்சி, முதிர்ச்சி என்றும்; அருளுலகத்தவர்களை பத்தியாளர், சத்தியாளர், சித்தியாளர், முத்தி யாளர் என்றும்; அருளுலகிற்கும், பொருளு லகிற்கும் பொதுவாக உள்ளவர்களை ஓகி, யோகி, மோகி, போகி என்றும் நான்காகப் பகுத்துள்ளார்கள். இதேபோல் அருளு லகிற்கும், பொருளுலகிற்கும் உரிய இசைக் கலைஞர்களை * பாணர், பறையர், துடியர், கடம்பர் என்று நான்காகப் பகுத்துச் சிறப்பித் துள்ளார்கள். [* விலங்குகளின் நரம்பு களையும் உலோகக்கம்பிகளையும் பயன் படுத்திச் செய்யப்படும் இசைக்கருவிகளை இசைக்கும் இசைக்கலைஞர் பாணர்; விலங்கு களின் தோல்களால் செய்யப்படும் தோல் கருவிகளை இசைக்கும் இசைக்கலைஞர் பறையர்; மரத்தினால் செய்யப்படும் இசைக் கருவிகளை இசைக்கும் இசைக்கலைஞர் துடியர்; மண்ணினால் செய்யப்படும் மண் பாண்டத்தை இசைக் கருவியாக இசைக்கும் இசைக்கலைஞர் கடம்பர்; என்று அருளு லகின் இயக்கச் சத்தியான இசையைப் பிறப்பிக்கக்கூடிய அருளிசைக் கலைஞர்கள் நான்கு வகைப்பட்டவர்களாக பகுக்கப் பட்டிருக்கிறார்கள்.] இதே போல், கடவுள் கள் பிறப்பெடுக்கின்ற வகையால், தோன்று கின்ற வகையால் திருக்கல், தருக்கல், கருக்கல், குருக்கல் என்று நான்காகப் பிரிக்கப்படுகிறார்கள். இந்தக் கடவுள்கள் வாழுகின்ற இடங்கள் கருவறை, வெட்ட வெளிக்கருவறை, வழிபாட்டு நிலையக் கருவறை, கோயில் மூலக் கருவறை என்று நான்கு வகையாகப் பகுக்கப்பட்டிருக் கின்றன. பதினெண் சித்தர்கள் தங்கள் அருளாட்சிக்குட்பட்டவைகளை பிண்டங் கள், அண்டங்கள், பேரண்டங்கள், அண்ட பேரண்டங்கள் என்று நான்கு வகையாகப் பகுத்திருக்கிறார்கள். இந்த உலகின் வாழ்வை

நான்கு உகங்களாகப் பகுத்திருக்கிறார்கள். அதாவது,

கிரன் உகம் (கிரேதாயுகம்), தீரன் உகம் (திரேதாயுகம்), தூரன் உகம் (துவாபரயுகம்), கலியன் உகம் (கலியுகம்) என்று நான்காகப் பகுத்திருக்கிறார்கள். இந்த நான்காவது யுகமான கலியுகத்தில் மக்களிடம் பத்தி நெறியை வளர்ப்பதற்காக தோத்திரங்களைப் பாடல்களாகப் பாடிய வர்களில் மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி அடிகளார் என்று நான்கு பேரை மட்டும் தேர்ந் தெடுத்துச் சமயக்குரவர் நால்வர் என்று சிறப்பித்திருக்கிறார்கள். இதே போல், மக்களி டையிலே இந்து மதச் சாத்திரங்களைப் பரப்புவதற்கு சாத்திரநூல்களைச் செய்தவர் களில் மெய்கண்ட சிவாச்சாரியார், அருள் நந்திசிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் என்று நால்வரை மட்டும் தேர்ந்தெடுத்து சந்தானக் குரவர் நால்வர் என்று அறிவித்துச் சிறப் பித்திருக் கிறார்கள், பதினெண்சித்தர்கள்.

*4. அன்பு இந்துக்களே!*

நமக்கு தெருத் தெருவாக, ஊர் ஊராக எண்ணற்ற கோயில் கள் இருந்தும்; நம் மக்கள், கண்ணற்ற குருடர் கள் போல் நமது கோயில்களை விட்டு விட்டு மாற்றுவேதக்கோயில்களுக்கும், வேற்றுமதக் கோயில்களுக்கும் போய்க் கொண்டிருக் கிறார்கள். இதற்குக் காரணம், இந்து வேத நூல்களும் இந்த மத நூல்களும் அச் சிடப்பட்டு சிறிய பெரிய புத்தக வடிவில் எல்லா மக்களின் கைகளிலும் இருக்கும்படி செய்யப்படவில்லை, எல்லா மக்களின் கை களிலும் இருக்கும்படி செய்யப்படவில்லை, எல்லா மக்களின் கைகளிலும் இருக்கும்படி செய்யப்படவில்லை. இந்த மாபெரும் குறையைப் போக்குவதற்காகத்தான், இன்று வாழும் இந்து வேத நாயகம், இந்து மதத் தந்தை, குவலய குருபீடம், இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரிய குருபீடக் குருதேவர், குருமகாசன்னிதானம், பதி னெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, அந்த ணர்அண்ணல், ஞானாச்சாரியர் அவர்கள்; இந்து வேத ஆகம பாடசாலை வைத்து நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட் பட்டத்தவர்களை உருவாக்கிச் செயல்பட்டு வருகிறார். இருந்தும், நமது இந்துக்கள், இந்து வேதம் என்ற ஒன்று இருப்பது பற்றியோ, இந்து மத நூல்கள் இருப்பது பற்றியோ; நமது கோயில்களின் வரலாறுகள், கடவுள்களின் வரலாறுகள், அருளாளர்களின் வரலாறுகள், அருளுலக இலக்கியங்கள் பற்றிய வரலாறு கள் முதலியவைகள் இருப்பது பற்றியோ; கவலைப்படாமல் இருக்கிறார்கள், கவலைப் படாமல் இருக்கிறார்கள், கவலைப்படாமல் இருக்கிறார்கள். இதற்குக் காரணம், நமது அரசியல் கட்சிகளும், சமுதாயக்கட்சிகளும், இலக்கியக்கழகங்களும், கலையுலக மன்றங் களும், சீர்திருத்தவாதிகளின் அமைப்புகளும் கண்மூடித்தனமாக இந்துவேத நூல் களையும், இந்துமத நூல்களையும் பற்றிச் சிந்திக்க மறுக்கின்றன, மறுக்கின்றன, மறுக் கின்றன. இவர்களின் இந்துவேத, மத நூல் களின் மறுப்புக்கு மாற்று மதங்களும், நமது மததுரோகிகளும், விரோதிகளும் பேரா தரவும், பெரும் ஊக்கமும் வழங்கி வரு கிறார்கள், வழங்கி வருகிறார்கள், வழங்கி வருகிறார்கள். இவற்றைத் தடுத்து, நாம் வெற்றி கொள்ள வேண்டும் என்றால்; நாம் தனிமனிதருக்காக செய்கின்ற பூசைகளிலும், வீடுகளுக்காக செய்கின்ற யாகங்களிலும், கோயில் புத்துயிர்ப்புக்காக செய்யப்படு கின்ற குடமுழுக்குப் பூசைகளிலும் கூடுமான வரை ஒலி பெருக்கி வைத்து; "நமது பதி னெண் சித்தர்கள் இருக்குவேதம், அசுர வேதம், யாம வேதம், அதர்வான வேதம் என்ற நான்கு வேதங்களை இந்த இந்து வேதமாக வழங்கியிருக்கிறார்கள்"; "இந்த இந்துவேதத்தில் தான் முன்ஜ் ற்றுத் தொண் ணூற்றாறு (396) நூல்கள் இருக்கின்றன"; "இந்த இந்துவேதத்தில்தான், விண்ணு

லகிலும், மண்ணுலகிலும் கோடிக் கணக்கான கடவுள்கள் இருக்கின்றார்கள் என்ற பேருண்மை விளக்கப்படுகின்றது. இந்த இந்து வேதத்தில் தான் எல்லா கோயில் களிலும் கடவுள்கள் அருள் வழங்கக் காத்திருக்கிறார்கள்; யார் பூசை செய்தாலும் நேரில் வந்து உதவுவதற்காக கோடிக்கணக்கான கடவுள்கள் மண்ணுலகுக்கு வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள்; கோடிக் கணக்கான கடவுளர்கள் மனிதராக பிறப்பெடுத்து இலைமறை காயாக வாழ்ந்து மனிதர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள்; கோடிக்கணக்கான மனிதர்கள் கடவுள்களாக மாறி கடவுளர்களோடு கடவுள்களாகவே வாழ்ந்து கடவுளர் உலகத்தார்களையும் கடவுளர் உலகத்துச் செல்வங்களையும் மானுடர் துய்க்கும்படி செய்கிறார்கள்"; "கடவுள்களிலேயே ஆண் நிலைக்கடவுள்கள், பெண் நிலைக் கடவுள்கள், அலி நிலைக் கடவுள்கள் என்று உண்டு;" "கடவுள்களுக்கும், மனிதர்களுக்கும் பிறப்பு, இறப்பு மறுபிறப்பு, முற்பிறப்பு, எனும் நான்கும் மாறிமாறி வருகின்றன;" "கடவுள்களிலும் மனிதர்களிலும் பிறப்பையும் இறப்பையும் வென்று பிறப்பு இறப்பு அற்ற மரணமிலாப்பெருவாழ்வு பெற்றவர்கள் உண்டு;" "கடவுள்களை நாடி தேடிச் செல்பவர்களால்தான் மனித வாழ்வின் மெய்யான பயன்களைத் துய்க்க முடியும்;" "கடவுள்களை நம்புகிறவர்களில் நூற்றில் இரண்டு பேர் அல்லது மூன்று பேர் தான் தவறுகளைச் செய்யும் தீயவர்களாக கொடியவர்களாக இருக்கிறார்கள்;" ஆனால் "கடவுள்களை நம்பாமல் மறுத்து, வெறுத்து எதிர்க்கின்றவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேர்கள், (அ) தொண்ணூற்றெட்டு பேர்கள் முழுமையாக துணிவோடு எல்லாவகையான தவறுகளையும் செய்யக் கூடிய தீயவர்களாக, கொடியவர்களாக, ஏமாற்றுக்காரர்களாக, பேராசைக்காரர்களாக, தன்னல வெறியர்களாகவே இருக்கிறார்கள்;" "கடவுள்களைப் பற்றிக் கூறும் வேத நூல்களும், மத நூல்களும்தான் மனித வாழ்வில் ஒழுக்கம், நேர்மை, கட்டுப்பாடு, அன்பு, குடும்பப்பற்று, சமுதாயப் பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று, ஒற்றுமை உணர்வு, ஒருமைப்பாட்டு உணர்வு, சமத்துவ உணர்வு, சமாதான உணர்வு... முதலிய உணர்வுகளையெல்லாம் வளர்க்கின்றன, வளர்க்கின்றன. வளர்க்கின்றன, என்ற இந்துவேதக் கருத்துகளையெல்லாம் விளக்கிக் கூற வேண்டும்.

நமது இந்து மதம் அனாதி காலத்திலிருந்து இருந்து வருகிற ஒன்று. ஆனால், இன்றைக்கோ நமது இந்து மதம் அனாதை மதமாக ஆகிவிட்டது; நமது இந்துக்களே நமது இந்து மதத்தை இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள்; கேலியும் கிண்டலும் செய்கிறார்கள். நமது இந்து மதத்தில்தான், மதவுணர்வு அற்ற காலிகளும், மதவாதிகள் போல் நடிக்கின்ற போலிகளும், அவ்வப்போது தங்களுக்குக் கிடைக்கின்ற பயன்களுக்காக மதவாதிகள் போல் வாழும் கூலிகளும், அன்னியமதங்கள் செழித்து வளர்வதற்காக இந்து மதத்தில் இருந்து கொண்டே அன்னிய மதங்களுக்கு வேலிகளாக வாழ்பவர்களும், அன்னிய மதத்தவர்கள் தருகின்ற கூலிக்காக இந்து மதத்தை சிதைத்துச் சீரழித்து வரும் இந்து மத துரோகிகளும், விரோதிகளும்; இன்றைய காலகட்டத்தில் அதிகமாகி விட்டார்கள், அதிகமாகி விட்டார்கள், அதிகமாகி விட்டார்கள். இவர்களில் ஏழைகள், பணக்காரர்கள், படித்தவர்கள், படிக்காதவர்கள் என்று எல்லா வகையினரும் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், பதவிவெறி பிடித்த அரசியல் வாதிகளில் பெரும்பாலானவர்கள், நூற்றுக்கு தொண்ணூறு பேருக்கு மேல் இந்து மதத்தைப் பொறுத்தவரை துரோகிகளாகவும், விரோதிகளாகவும், போலிகளாகவும், காலிகளாகவும், அன்னிய மதத்தவர்களின் கூலிகளாகவும் வேலிகளாகவுமே

இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள். எனவேதான், நமது குடியரசு அரசாங்கத்தில் எந்த அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, எந்தவிதப் பயனும் விளையாது, விளையாது, விளையாது, விளைவிக்க முடியாது, விளைவிக்க முடியாது, விளைவிக்க முடியாது, விளைவிக்க முடியவே முடியாது. அதாவது, நமது அரசியல் கட்சிகளின் கொள்கைகளும், குறிக்கோள்களும், நடைமுறைகளும், செயல்திட்டங்களும்; நம் நாட்டுக்கே உரிய பண்பாட்டுக்கும், நாகரீகத்திற்கும், மொழிவழி உணர்வுகளுக்கும், இனவழி உணர்வுகளுக்கும், இந்த நாட்டுக்கே உரிய மண்ணின் உணர்வுகளுக்கும் மாறானவைகளாக, வேறானவைகளாக, ஒத்து வராதவைகளாக, சிதைவையும், சீரழிவையும் தரக் கூடியவைகளாக இருக்கின்றன, என்பதால்; அரசியல் கட்சிகளின் மாற்றங்களால் நமது அரசாங்கத்தில் எந்த விதமான மாற்றங்களும் ஏற்பட முடியாது, ஏற்பட முடியாது, ஏற்பட முடியாது, ஏற்படவே முடியாது. எனவே, நமக்கு புது வாழ்வையும், நல்வாழ்வையும், அமைதியையும், நிம்மதியையும், மகிழ்ச்சியையும், பயனையும் தரக்கூடிய ஆற்றல்; நமது இந்து வேதத்திற்கும் இந்து மதத்துக்கும் தான் உண்டு, உண்டு, உண்டு, என்பது தான் உண்மை, உண்மை, உண்மை.

5. அன்பு இந்து மதப் பற்றாளர்களே! இம்மண்ணுலகுக்கு இந்து வேதத்தை அருட்கொடையாக வழங்கிய பதினெண் சித்தர் மடத்து மடாதிபதியும், இம் மண்ணுலகில் இந்து மதத்தை தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியும் ஆகிய நமது குருதேவர், குருமகா சன்னி தானம், ஞாலகுருசித்தர், அரசயோகிக் கருவூறார், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களால்தான்; இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் இந்துக்களுக்கு புரியும் வண்ணம் விளக்கிட முடியும். இந்து வேதம் தான் இன்றைக்கு தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கு வகைப்பட்ட வாழ்க்கை முறைகளிலும், தேக்கங்களையும், வீக்கங்களையும், முடக்கங்களையும், அடக்கங்களையும், ஒடுக்கங்களையும், கலக்கங்களையும், குழப்பங்களையும், கவலைகளையும், சிக்கல்களையும், நலிவு ளையும், மெலிவுகளையும், பற்றாக்குறைகளையும், ஏக்கங்களையும், ஏமாற்றங்களையும், எரிச்சல்களையும், வெறுமைகளையும், வறுமைகளையும், அறியாமைகளையும், தெரியாமைகளையும், புரியாமைகளையும் அகற்றி; எங்கும் அமைதியையும், மகிழ்வையும், ஒற்றுமையையும், பற்றையும், பாசத்தையும், சமாதானத்தையும், சமத்துவத்தையும், சகோதரத்தத்துவத்தையும் பொதுவுடமையையும், கூட்டுறவையும் உருவாக்கிட முடியும், உருவாக்கிடமுடியும், உருவாக்கிட முடியும். ஏனென்றால், 'இந்து வேதம் தான், காலங்கள் தோறும் கடவுள்களாலேயே தேவைக்கேற்ப விளக்கங்களும் விரிவுரைகளும் வழங்கப்படுகின்ற ஒரே ஒரு வேதம்'.

நமது இந்துவேதம்தான், அருளுலகையும் பொருளுலகையும் நேரடியாக இணைத்துத் தருகின்ற ஒரே ஒரு வேதம். நமது இந்துவேதம்தான், இந்த மண்ணுலகில் தோன்றக் கூடிய அனைத்து வகைப்பட்ட இனத்தவருக்கும், மொழியாளருக்கும், நாட்டவருக்குமுரிய பொது வேதம். நமது இந்து வேதம்தான், இம்மண்ணுலகில் பல்வேறு இனத்து மக்கள் இயற்கையாக தோன்றியது போலவே காற்று, கருப்பு, பேய், பிசாசு எனும் நான்கு வகைப்பட்ட கட்டுப்பாடற்ற, காட்டாற்று போக்குடைய முரட்டுத்தனமான அருளுலகத்தவர்களும்; குடும்ப ஆண்டவர், குல தெய்வம், கிராம தேவர் தேவதை, நாட்டுக்கடவுள் எனும் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட மெல்லிய அருவியின் போக்குடைய, பண்பட்ட நன்மை தரக்கூடிய அருளுலகத்தவர்களும் தோன்றினார்கள்; எனவே, அருளுலகத்தவர்களுக்கும், பொருளுலகத்தவர்களுக்குமிடையே நட்பும், தோழமையும், சமத்துவமும் தான் உண்டே தவிர; யாரும் யாருக்கும் தலைவரோ, எசமானரோ, முதலாளியோ, நதிபதியோ இல்லை என்று

மிகத் தெளிவாக கூறுகிறது. நமது இந்து வேதம்தான், அருளுலகத்தவர்கள் பொருளுலகத்தவர்களுக்கு உதவி செய்பவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து; பொருளுலகத்தவர்கள், அருளுலகத்தவர்கள் வாழ்வதற்குரிய வாழிடங்களாக நூற்றுத் தொண்ணூற்றிரண்டு வகைப் பட்ட உண்ணாழிகள், (இருக்கைகள் அமளிகைகள், திருவடிகள்) நாற்பத்தெட்டு வகைப்பட்ட கோயில்கள், நாற்பத்தெட்டு வகைப்பட்ட கருவறைகள், நாற்பத்தெட்டு வகைப்பட்ட வெட்ட வெளிக் கருவறைகள், 48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையக்கருவறைகள், நாற்பத்தெட்டு வகைப்பட்ட கோயில்மூலக் கருவறைகள் என்று வகை வகையான அருளுலகத்தவர் வாழிடங்களை அமைக்கக் கூடிய வேத ஆகம விதி முறைகளை வழங்குகின்ற ஒரே வேதம். ஏனென்றால், இது போல் எந்த வேதத்திலும், எந்த மதத்திலும் எட்டு வகைப்பட்ட அருளுலகத்தவர்களும் வாழுவதற்குரிய வாழிடங்களின் வகைகளை நூற்றுக்கணக்கில் அறிவிக்கவில்லை, அறிவிக்கவில்லை, அறிவிக்கவில்லை, அறிவிக்கவே இல்லை; அறிவிக்க முடியாது, அறிவிக்க முடியாது, அறிவிக்க முடியாது, அறிவிக்கவே முடியாது என்பது தான் உண்மை. எனவே தான், இந்த உலகுக்கு நிலையான நன்மையை தரக்கூடிய உண்மையான வேதம் இந்துவேதம் தான் என்றும்; கோடிக்கணக்கான கடவுளர்கள் பற்றிய உண்மைகளைக் கூறக்கூடிய ஒரே வேதம் இந்து வேதம் தான் என்றும்; கடவுள்களை வரவழைப்பதற்கும், மனிதர்கள் கடவுளைத் தேடிச் சென்று காண்பதற்கும், கடவுள்களை மனிதர்களாக பிறப்பெடுப்பதற்கும், மனிதர்களை கடவுள்களாக மாற்றுவதற்கும் உரிய வழி வகைகளை எண்ணற்றுத் தருகிற ஒரே வேதம் இந்து வேதம் தான் என்றும், இந்த உலகில் தோன்றக்கூடிய அனைத்து வேதங்களுக்கும் மூலமாக, முதலாக, தாயாக, கருவாக, உயிராக, உள்ளீடாக இருப்பது இந்து வேதம்தான் என்றும்; இந்த மண்ணுலகில் எத்தனை மதங்கள் தோன்றினாலும் சரி, அத்தனை மதங்களுக்குமுரிய மூலக்கோயில்களை உருவாக்கி கொடுத்துள்ள பெருமைக்குரிய வேதம் இந்து வேதம்தான் என்றும்; கடவுள்களை நேரடியாக சந்தித்திட்ட, சந்தித்திருக்கின்ற, சந்தித்திடக்கூடிய அருளாளர்களை உடைய ஒரே வேதம் இந்துவேதம்தான் என்றும், அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் கூறுகிறார்கள். அதாவது, இந்த மண்ணுலகில் எத்தனை எத்தனை வேதங்களைத் தோற்றுவிக்கின்ற அருளாளர்கள் தோன்றினாலும் அவர்களால் கடவுளைச் சந்திக்க முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது என்று கூறுகின்ற ஒரே ஒரு வேதம் இந்து வேதம்தான்.

இம்மண்ணுலகில் புதியபுதிய வேதங்களையும், மதங்களையும் தோற்றுவிக்கக் கூடிய அருளாளர்கள்; தங்கள் குடும்பத்துக்குரிய ஆண்டவர்களோடோ அல்லது தங்கள் குலத்துக்குரிய குலதெய்வங்களோடோ அல்லது தங்களுடைய கிராமத்துக்குரிய தேவன், தேவி, தேவர், தேவதை முதலியவர்களோடோதான் தொடர்பு உள்ளவர்களாக, உள்ளதாக பாராட்டிக் கொள்ளமுடியுமே தவிர; தங்களுடைய நாட்டுக் கடவுள்களோடோ, மண்ணுலகக் கடவுள்களோடோ, விண்ணுலகக் கடவுள்களோடோ, பிண்டக் கடவுள்களோடோ, அண்டக்கடவுள்களோடோ, பேரண்டக் கடவுள்ளோடோ அண்டபேரண்டக்கடவுள்களோடோ தொடர்புபடுத்திப் பேச அல்லது உரிமை பாராட்ட இயலாது, இயலாது, இயலாது, இயலவே இயலாது; முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது. ஏனென்றால், அனைத்து வகைப் பட்ட கடவுள்களோடும் தொடர்பு கொண்டிட, உரிமை, உறவு கொண்டாடிட உதவுகின்ற ஒரே வேதம் இந்து வேதம்தான், இந்து வேதம்தான், இந்து வேதம்தான். எனவே, எனவே, எனவே, அருளாட்சி

நாயகமான தஞ்சைத் தாத்தா, குவலய குருபீடம், குருமகாம் சன்னிதானம், ஞால குருசித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்; தாம் அறிவித்துள்ள அருட் போரின் ஆயத்தப் பணிகளுக்காகவும், அருளாட்சி அமைப்புப் பணிக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது அறி விக்கப்பட்டுள்ள அல்லது உருவாக்கப் பட்டுள்ள அருட்செல்வர்களாகிய இந்துக் கள் அனைவரும் புதிய தெளிவோடும், புதிய தெம்போடும், புதிய நம்பிக்கையோடும், புதிய உற்சாகத்தோடும், புதிய ஊக்கத் தோடும், புதிய அக்கறையோடும், புதிய ஆர்வத்தோடும் செயல்படப் புறப்பட வேண்டும், புறப்பட வேண்டும், புறப்பட வேண்டும், புறப்பட்டே ஆக வேண்டும். இது தான் அருளாணை பெற்ற குருவாணை என்று; நமது தலைவர், குருதேவர் ஞாலகுரு, குருமகா சன்னிதானம், குவலய குருபீடம், எல்லாம்வல்லசித்தர், பரப்பிறம்மம், நிறை யக்ஞர், அரசயோகி, அண்டபேரண்ட அனாதி ஆதிசத்திகள்சன்னிதானம், அண்ட பேரண்ட அனாதி ஆதிகடந்த தம்பிரான் அடிகளார், அந்தணர் அண்ணல், ஞானாச் சாரியார் அருளாணை பெற்ற குருவாணை களை வழங்கு ஓலை நாயகமாக இருந்து வழங்கும் செய்தி, செய்தி, செய்தி.

6. அன்பு இந்துமதப் பற்றாளர்களே! நாம், நமது இந்து மதத்தை மாற்று மதத் தவர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்று வதற்காகப் புறப்படவில்லை, புறப்பட வில்லை, புறப்படவில்லை, புறப்படவே இல்லை. நமக்கும், மாற்று மதத்தவர் களுக்குமிடையே எந்தவிதமான கருத்து வேறுபாடோ, மாறுபாடோ, போராட்ட மோ, சண்டைச்சச்சரவோ உருவாவதற்கு இடமே இல்லை, இடமே இல்லை, இடமே இல்லை. இப்பேருண்மையினை, இந்துக்கள் நன்கு தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி ஏற்றுக் கொண்டு செயல்படப்புறப்பட்டாக வேண்டும், செயல் படப்புறப்பட்டாக வேண்டும், செயல்படப் புறப்பட்டாக வேண்டு , செயல்படபுறப் பட்டேயாகவேண்டும். ஏனென்றால், இன் றைய நிலையில், நாம், உடனடியாக நமது இந்துக்களுக்கு இந்துவேதத்திலும் இந்து மதத்திலும் விருப்பமும், நம்பிக்கையும், ஈடு பாடும் ஏற்படும்படிச் செய்தேயாக வேண் டும், ஏற்படும்படிச் செய்தேயாக வேண்டும், ஏற்படும்படிச் செய்தேயாக வேண்டும். அப் பொழுதுதான், குறிப்பிட்ட கால அளவுக் குள் நம்மால் நாம் எதிர்பார்க்கின்ற சாதனை களைச் சாதிக்க முடியும்.

7. நமது இந்து மதம் மிக விரைவில் அழிந்து போகுமோ! இருந்த இடம் தெரியாமலே போய்விடுமோ! என்று அச்சப்படுகின்ற அளவிற்கு நம் நாட்டில் செயல்படுகின்ற வேற்று நாட்டு மாற்று மதங்கள் கோடிக்கணக்கில் அன்னிய நாடு களிலிருந்து பணத்தையும், நவீன சாதனங் களையும், மற்ற அனைத்து விதமான உதவி களையும், பெற்று; அசுர வேகத்தில் இந்து மதத்தை அல்லது இந்துக்களைத் தங்களுடைய மதத்திற்கு மாற்றுவதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். இம் முயற்சிகளுக்கு முழுமை யான ஆதரவுகளை யும், ஏந்துகளையும், உதவிகளையும் துணை களையும், தேவையான பாதுகாப்புக் களையும் தந்து கொண்டிருக்கிறார்கள், நமது அரசியல்வாதிகளும், சமய, சமுதாய சீர் திருத்தவாதிகளும், பகுத்தறிவுவாதிகளும், நாத்திகர்களும், சந்தர்ப்பவாதிகளும், இந்து மதப்போலிகளும், மற்றுமுள்ள அப்பாவி ஏழை மக்களும். எனவே, நாம் நமக்கு எந்த வகையிலும் எவரிடமிருந்தும் எப்படிப்பட்ட சிறிய உதவியையும் கூட எதிர்பார்க்க இயல வில்லை, இயலவில்லை, இயலவில்லை, முடியவில்லை, முடியவில்லை, முடிய வில்லை, முடியவே இல்லை. இதே நேரத்தில், நாம் அமைதியாக அன்பு வழியில், அறவழியில் எவ்விதமான ஆர்ப்பாட்ட முமின்றி நம்முடைய இந்து வேதத்தைப்

பற்றியும், இந்து மதத்தைப் பற்றியும், இவற்றின் வரலாறுகளைப்பற்றியும், போதனைகளைப்பற்றியும், சாதனைகளைப் பற்றியும், எடுத்துக்கூற முற்படும் போது நம்மவர்களிடமிருந்து தான்; நம்மை இந்து மத வெறியர்கள் என்று குறை கூறி குற்றம் சாட்டுகின்ற நிலை உருவாகிறது. இன்னும் சொல்லப் போனால், நம்மவர்களிடமிருந்து தான், நாம் திருநூறு பூசுவதையும், உருத் திராக்கம் அணிவதையும், பூசைகள் செய் வதையும் பற்றிய எதிர்ப்பும், மறுப்பும், கேலியும், கிண்டலும், மிளிர்கின்றது. இதற் கெல்லாம் ஒரே ஒரு காரணம், நம் மக்கள் இந்து வேதத்தை நூல்வடிவில் பெற்று அன்றாடமோ அல்லது அடிக்கடியோ படித்துப்பார்க்கக் கூடிய வாய்ப்பு வசதிகள் கடந்த சில நூற்றாண்டுகளாக இல்லாமல் போய்விட்டது, இல்லாமல் போய்விட்டது, இல்லாமல் போய்விட்டது. இன்னும் சொல்லப் போனால், இமயம் முதல் குமரி வரை வாழுகின்ற நமது இந்துக்களுக்கு பதினெண்சித்தர்களால் இந்துவேதம் 396 நூல்களாகவும், இந்துமதம் 36 நூல்களாகவும் மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன என்ற பேருண்மை தெரியாமலே இருக் கின்றது, தெரியாமலே இருக்கின்றது, தெரியாமலே இருக்கின்றது. இப்பேருண்மை யினை உலகுக்கு உணர்த்துவதற்காகத்தான் விண்ணுயர்ந்த கோபுரத்தையுடைய தஞ்சைப் பெரியகோயில் கட்டப்பட்டது. அதைத் தலைமைப்பீடமாகக் கொண்டு இந்து வேத ஆகமங்களை ஓதுகின்ற கல்வி நிலையங்களும்; கற்கின்ற கல்விநிலை யங்களும்; நோற்கின்ற பயிற்சி கல்விநிலை யங்களும்; பொதுமக்கள் இந்து வேத ஆகம அறிவைப் பெறுவதற்குரிய இந்து வேத ஆகம பாடசாலைகளும்; இந்து மதத்துக்குத் தேவை யான நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட் பட்டத்தவர்களை உருவாக்குவதற்குரிய குரு குலங்களும், தருகுலங்களும், திருகுலங்களும், கருகுலமும் நிறுவப்பட்டு; மிகப்பெரிய அளவில் இந்துமத மறுமலர்ச்சிப் பணிகளும், வளவளர்ச்சிப் பணிகளும், ஆட்சி மீட்சிப் பணிகளும் முறைப்பாக செய்யப்பட்டன. அதனால் தான் பனிமுடிய வடஇமய மலையின் விளிம்பு முதல் கடலலை எந் நேரமும் தழுவிக் கொண்டிருக்கும் தென் கோடி கன்னியாகுமரி கடற்கரை மணல் பரப்புவரை இந்துமதச் சாத்திரநூல்களும் தோத்திர நூல்களும் தொகுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன; தேவைக்கேற்ப புதிய புதிய சாத்திரங்களும் தோத்திரங்களும் எழுதப்பட்டன; மண்ணாலும், செங் கலாலும், சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட கோயில்கள் எல்லாம் நெடுங்காலம் நிலைத் திருக்கும் வண்ணம் கருங்கல் கட்டிடங் களாக மாற்றப்பட்டன. ஆனால், ஆனால், ஆனால், இன்றைக்கு தஞ்சைப் பெரிய கோயில் வெறும் காட்சிப் பொருளாகத்தான் இருக்கிறது. அந்த பெரியகோயிலிலேயே, விண்ணுயர்ந்த கோபுரத்தின் அருகிலேயே வற்றாத தண்ணீர் ஊற்றுள்ள கிணற்றங் கரையிலே அமர்ந்திருக்கக் கூடிய கோயிலில்; அதாவது வன்னி மரத்தடியிலே பீடம் அமைத்து சிலையாக வீற்றிருக்கின்ற இந்து வேத நாயகம், இந்து மதத்தந்தை, இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரிய குருபீடக் குருதேவர், குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களைப் பற்றிய எந்தவித வரலாறுமே வெளிப்படாத நிலைதான் இருக்கின்றது, இருக்கின்றது, இருக்கின்றது. இவற்றை எண்ணி நாம் தான் நமது பணிகளை எங்கிருந்து துவக்குவது? என்னென்ன சொல்லித் துவக்குவது? எப்படி எப்படி துவக்குவது? என்று தொடர்ந்து ஆய்வுகள் நடத்திக் கொண்டிருக்கின்றோம். இனியும் நாம் இப்படியே ஆய்வுகள் நடத்திக் கொண்டிருக்கக் கூடாது. இந்து வேதத்தைப் பயன்படுத்தி இருளடைந்தும், பாழடைந் தும், சிதைந்தும், சீரழிந்தும் கிடக்கின்ற

இந்துக் கோயில்களை எல்லாம் புதுப்பித்தாக வேண்டும். அதாவது, நமது நாட்டுக் கடவுள் கள் வாழும் இடங்களையும், கிராமத்து தேவர் தேவதைகள் வாழும் இடங்களையும், குலதெய்வங்கள் வாழுகின்ற இடங் களையும், குடும்ப ஆண்டவர்கள் வாழுகின்ற இடங்களையும் புதுப்பிக்கின்ற முறை களையும், பூசை செய்கின்ற முறைகளையும், பத்தி செய்கின்ற முறைகளையும்; அவர் களிடமிருந்து சத்தி, சித்தி, முத்தி பெறுகின்ற முறைகளையும்; இந்திய நாடு முழுவதும் அறிவித்திடவேண்டும், அறிவித்திட வேண் டும், அறிவித்திட வேண்டும்; பரப்பிட வேண்டும், பரப்பிட வேண்டும், பரப்பிட வேண்டும்; செயல் நிலைக்குக் கொண்டு வர வேண்டும், செயல் நிலைக்குக் கொண்டு வர வேண்டும், செயல் நிலைக்குக் கொண்டு வர வேண்டும். அப்பொழுது தான், இந்து வேதப் படி காற்று, கருப்பு, பேய், பிசாசு எனும் நான்கு வகைப்பட்ட முரட்டுத் தனமிக்க அருளுலகத்தவர்களும்; ஆண்டவர் தெய்வம், தேவர், தேவதை, கடவுள் எனும் நான்கு வகைப்பட்ட மென்மைத் தன்மையுடைய அருளுலகத்தவர்களும் உலகெங்கும் அந்தந்த மண்ணின் பக்குவத்துக்கேற்ப இயற்கை யாகவே தோன்றிடுவார்கள் என்பதையும்; அவர்களோடு அந்தந்த மண்ணில் தோன்றக் கூடிய அருளாளர்கள் தாங்கள் தங்களது பயிற்சி முயற்சி, தேர்ச்சி முதிர்ச்சிகளாலும்; பத்தி, சத்தி சித்தி முத்திகளாலும் அவர்களைத் தொடர்பு கொண்டு அவர்கள் நாட்டு மக்களுக்கு நன்மை செய்யக் கூடி யவர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும்; அதற்காகவே இந்த உலகில் தோன்றக்கூடிய அனைத்து வகையான மொழியினர்களும் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய அருளாற்றல் மிக்க ஒலிகளை வழங்கக் கூடிய எழுத்துக்களையும், சொற்களையும், வாக்குகளையும், வாக்கியங்களையும், வாச கங்களையும் இந்து வேதம் வழங்கியிருக்கிறது என்ற பேருண்மையையும் உலகுக்கு உணர்த்த வேண்டும்.

8. I அதாவது, நமது இந்து வேதம் மிகத் தெளிவாக அந்தந்த மண்ணுக்குரிய கடவுள் கள், தேவர் தேவதைகள், தெய்வங்கள், ஆண்டவர்கள், பேய், பிசாசு, காற்று, கருப்பு முதலியவைகள் அந்தந்த மண்ணுக்குரியவர் களுடன்தான் தொடர்பு கொண்டு செயல் பட்டிடும்.

II அருளுலகத்தவர்கள், அவரவர்கள் பிறந்த அல்லது தோன்றிய அல்லது வானுலகிலிருந்து முதன்முதல் வந்து தங்கிய மண்ணைத்தான் அதாவது நாட்டைத்தான் தங்களுக்கு உரியதாக எண்ணுவார்களே தவிர; வேறொரு புதிய மண்ணையோ, நாட்டையோ, புதிய மண்ணுக்குரிய மக் களையோ, புதிய நாட்டுக்குரிய மக் களையோ விரும்ப மாட்டார்கள், நம்ப மாட் டார்கள், ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

III அருளுலகத்தவர்கள், தங்களுக்குரிய நாடு, மொழி, இனமக்கள் என்ற முக்கோண எல்லைக்குள் தான் இருந்து செயல்படு வார்களே தவிர; இந்த முக்கோண எல் லையைக் கடந்து செயல்பட முன்வர மாட்டார்கள், செயல்பட முன்வர மாட் டார்கள், செயல்பட முன்வரமாட்டார்கள்.


IV அருளுலகத்தவர்கள், எந்த நாட்டு மக்களாக இருந்தாலும் தங்களுடைய நாட்டு மக்களின் மொழியைக் கற்றுக் கொண்டும்; தங்களுடைய நாட்டு மக்களைப் போல உடை உடுத்திக் கொண்டும்; தங்களுடைய நாட்டு மக்களின் உணவு முறையை ஏற்றுப் பக்குவப்படுத்திக் கொண்டும்; தங்கள் நாட்டு மக்கள் பயன்படுத்துகின்ற இசைக்கருவி களையும், பூசைப் பொருள்களையும், பூசை மொழிகளையும் பயன்படுத்திக் கொண்டும்; தங்களை வழிபடத் தயாராக இருப்பவர் களைத்தான் ஏற்றுக் கொள்வார்கள், ஏற்றுக் கொள்வார்கள், ஏற்றுக் கொள்வார்கள்.

V அருளுலகத்தவர்கள், தங்கள் அருளை வேண்டுகின்ற மக்கள் எங்கிருந்தாலும் சரி;

அவர்கள் தங்கள் வாழ்நாளில் ஒரே ஒரு முறையாவது தாங்கள் இருக்கின்ற நாட்டுக்கு வந்து தங்களது கோயில் எந்தக் காட்டுக்குள் இருந்தாலும் சரி, எந்த மலை உச்சியில் இருந்தாலும் சரி, அங்கு நேரில் வந்து ஒரு நாளாவது தங்கி தங்களுக்கு விருப்பமான பூசனைப் பொருட்களையும் படையல் பொருட்களையும் வழங்கிப் பூசைகளைச் செய்து சென்றால் தான்; அவர்களை ஏற்றுக் கொள்வார்கள்; அவர்களுக்கு அருள்புரிவார்கள்; அவர்களுக்குப் பாதுகாப்பு தருவார்கள்.

VI வேதம், மதம் என்பவைதான், ஒரு நாட்டையும், அந்த நாட்டுக்குரிய இன மக்களையும், அந்த நாட்டுக்குரிய மொழிகளையும் கட்டுக்கோப்பாகப் பாதுகாத்திடும்.

VII வேதம், மதம் என்பவைதான், ஒரு நாட்டுக்குரிய அகப்பண்பாட்டையும், புற




நாகரீகத்தையும், பாரம்பரியமான உரிமைகளையும், பெருமைகளையும், தொன்றுதொட்டு வரக்கூடிய வரலாற்றுச் சிறப்புகளையும், முன்னோர்களான சான்றோர்களும், ஆன்றோர்களும் தோற்றுவித்து வளர்த்துக் கட்டிக் காத்திட்ட வாழ்வியல் மதிப்பீடுகளையும். . . முழுமையாகப் பாதுகாத்திடும், முழுமையாகப் பாதுகாத்திடும், முழுமையாகப் பாதுகாத்திடும்.

VIII எந்த ஒரு வேதமானாலும் சரி, மதமானாலும் சரி; அது தான் பிறந்த நாட்டுக்குரிய மொழியையும், இனத்தையும், பண்பாட்டையும், நாகரீகத்தையும், உரிமையையும், பெருமையையும், வளர்த்திடுவதற்காக; மாற்று நாடுகளின் மொழியையும், இனத்தையும், பண்பாட்டையும், நாகரீகத்தையும், உரிமையையும், பெருமையையும் சிதைத்துச் சீரழித்து செல்வாக்கிழக்கும்படி செய்திடத்தான் முயலும், செய்திடத்தான் முயலும், செய்திடத்தான் முயலும். . . என்ற பேருண்மைகளை எண்ணி; ஒவ்வொரு வேத மதமும் அவரவருடைய நாட்டுக்குள்ளும் இனத்தவருக்குள்ளும் மொழியினருக்குள்ளும் மட்டும் வாழ்ந்திடும்படி செய்திடல் வேண்டும். இல்லாவிட்டால், ஆக்கப்பூர்வமான செயல்களுக்குப் பயன்படக்கூடிய வேதமும் வேதமதமும் மிகப்பெரிய அழிவுகளை உண்டாக்கக்கூடிய அழிவுச் சக்திகளாக மாறக்கூடும். அதாவது, கடவுளும், கடவுளுக்குரிய வேதமும், மதமும் எந்தக் காலத்திலும் நாடு, மொழி, இனம் என்ற முக்கோண எல்லைக்குள் தான் இருக்க வேண்டும், இருக்க வேண்டும், இருக்க வேண்டும். அப்பொழுதுதான், உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு உருவாகும் என்ற கருத்தைத்தான், கொள்கையைத்தான், குறிக்கோளைத்தான், செயல்திட்டத்தைத் தான்; அண்டபேரண்ட மாளும் பதினெண் சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும் அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளுறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் முன்னூற்றுத் தொண்ணூற்றாறு நூல்களில் இந்து வேதமாக அருளியுள்ளார்கள். இந்த இந்து வேதம் தான், ரிக்வேதம் எனப்படும் இருக்கு வேதம்; யசூர் வேதம் எனப்படும் அசுர வேதம்; சாமவேதம் எனப்படும் யாமவேதம்; அதர்வண வேதம் எனப்படும் அதர்வான வேதம் ஆகிய நான்கு வேதங்களாக இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறது, வாழ்ந்து கொண்டிருக்கிறது, வாழ்ந்து கொண்டிருக்கிறது.

9. நம் நாட்டில் பொருளாதார வசதி படைத்த செல்வர்கள் எண்ணற்றோர் இருக்

கிறார்கள். அவர்கள், கோயில் கட்டிடங்களைக் கட்டுவதிலும்: கோயில் கட்டிடங்களுக்கு பல்வேறு வண்ணங்களைப் பூசுவதிலும், கோயிலிலுள்ள கடவுளர்களுக்கு வகைவகையான நகைகள் செய்வதிலும், உலாவருவதற்குரிய வாகனங்கள் செய்வதிலும், கோயில் திருவிழாக்களை வான வேடிக்கைகளோடும் ஆட்டபாட்டங்களோடும் கொண்டாடுவதிலும்; தாங்கள் விரும்புகின்ற கோயில்களின் உண்டியல்களில் தங்களுடைய வருமானத்தின் பெரும் பகுதியைக் கொண்டு போய் கொட்டுவதிலுமாகத்தான்; தங்களுடைய கருத்தையும், முயற்சியையும், காலத்தையும் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள், செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள், செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவர்கள் யாருமே, தாங்கள் கொண்டாடும் திருவிழாக்களுக்கும், தாங்கள் செய்கின்ற நகைகளுக்கும், வாகனங்களுக்கும், தாங்கள் வண்ணப் பூச்சுக்கள் பூசி மகிழ்கின்ற கோபுரங்களுக்கும், கோயில்களுக்கும், தாங்கள் கட்டிக் கொண்டிருக்கக்கூடிய வடிவழகு மிக்க கோயில்களுக்கும், தாங்கள் பழுது பார்த்துச் செப்பனிட்டு குடமுழுக்குச் செய்து கொண்டிருக்கின்ற கோயில்களுக்கும் உரிய கடவுள்களைப் பற்றிக் கூறுகின்ற இந்துமத நூல்களையும், இந்து வேத நூல்களையும் பாதுகாக்க வேண்டும்!; படித்துப் பார்க்க வேண்டும்!; பலரும் படித்துப் பார்க்கும்படி செய்ய வேண்டும்; இந்துக்கள் அனைவரின் கைகளிலும், வீட்டுப்பூசை அறைகளிலும், பள்ளிக் கூடத்து நூலகங்களிலும் அழகிய வடிவில் சிறிய பெரிய புத்தகங்களாக வடிவப்படுத்தப் பட வேண்டும் என்ற அக்கறையோ, ஆர்வமோ, விழிப்புணர்வோ, சிந்தனையோ, எண்ண எழிச்சியோ, செயல் முயற்சியோ உருவாகவில்லை, உருவாகவில்லை, உருவாகவில்லை, உருவாகவே இல்லை, உருவாக்க முடியவில்லை, உருவாக்க முடியவில்லை, உருவாக்க முடியவில்லை, உருவாக்க முடியவே இல்லை என்பது தான்; இன்றைய நமது இந்துக்களின் நிலை, இந்துக்களின் நிலை, இந்துக்களின் நிலை.

10. யாரேனும் நம்மை இந்து மத வெறியர்கள் என்று கூறினால்; நமக்கோ, இந்து வேதத்துக்கோ, இந்து மதத்துக்கோ, வெறியுணர்வு வந்ததில்லை, வந்ததில்லை, வந்ததில்லை; வரவில்லை, வர வில்லை, வரவில்லை, வராது, வராது, வராது, வரவே வராது என்று தெளிவாகக் கூறுங்கள். அதற்குச் சான்றாக, சாட்சியாக, நமது இந்துக்களின் வீடுகளில் தான் மாற்று மதக் கடவுள்களின் படங்களும், மாற்று மத வேத புத்தகங்களும் இருக்கின்றனவே தவிர; எந்த ஒரு மாற்று மதத்தவர் இல்லத்திலும் நமது கடவுள்களின் படங்களோ, நமது கோயில்களின் படங்களோ, நமது அருளாளர்களின் படங்களோ இருந்ததில்லை, இருந்ததில்லை, இருந்ததில்லை, இருப்பதில்லை, இருப்பதில்லை, இருப்பதில்லை, இருக்கப் போவதில்லை, இருக்கப் பாவதில்லை, இருக்கப் போவதில்லை, இருக்கப் போவதே இல்லை என்ற நடைமுறைப்பேருண்மையை விளக்கிக்கூறுங்கள்; என்ற நடைமுறைப் பேருண்மையை விளக்கிக்கூறுங்கள்; என்ற நடைமுறைப் பேருண்மையை விளக்கிக் கூறுங்கள்; இதற்கு மேலும், எவராவது சாட்சியோ, சான்றோ கேட்பார்களேயானால்; இந்த நாட்டிலுள்ள மாற்று மதக் கோயில்களில் நமது இந்துக்கள் கூட்டம் கூட்டமாக சுற்றிச்சுற்றி வருவதைக் காட்டுங்கள், அதே நேரத்தில், நமது இந்துக் கோயில்களுக்கு விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிற்கு ஒரு சில மாற்று மதத்தவர்கள்கூட வந்துவழிபாடு செய்வதில்லை, வழிபாடு செய்வதில்லை வந்துவழிபாடு செய்வதில்லை; என்ற பேருண்மைகளை விளக்கியுரையுங்கள் என்ற பேருண்மைகளை விளக்கியுரையுங்கள், விளக்கியுரையுங்கள்; இதற்கு மேலும் நாம் ஏதாவது

கூறப் போனால்; நம் முயற்சிகள், நாம் சற்றும் எதிர்பார்க்காத தீய விளைவுகளை விளைவித்திட நேரிடலாம், நேரிடலாம், நேரிடலாம்.

11. நமது இந்து வேதம் தான், மனித வாழ்க்கையில் ஏற்படக் கூடிய எல்லா வகையான துன்பங்களுக்கும், தொல்லை களுக்கும், இழப்புகளுக்கும், இன்னல்களுக் கும், தோல்விகளுக்கும், ஏமாற்றங்களுக்கும், ஏக்கங்களுக்கும், வருத்தங்களுக்கும், கவலை களுக்கும்.... காரணகாரியங்களை விளக்கு கின்றன. அதாவது, சிலருக்கு விண்மீன் பாதிப்பு, சிலருக்கு கோள் பாதிப்பு, சிலருக்கு நாள் பாதிப்பு, சிலருக்கு இராசி பாதிப்பு, சிலருக்கு இலக்கண பாதிப்பு, சிலருக்கு ஊழ்வினை பாதிப்பு, சிலருக்கு பரம்பரை திட்டு பாதிப்பு, சிலருக்கு கண்ணேறு பாதிப்பு, சிலருக்கு தெய்வ குற்றங்களால் பாதிப்பு, சிலருக்கு ஆண்டவர் தெய்வம் முதலியவர்களால் பாதிப்பு, சிலருக்கு மந்திரவாதிகளால் பில்லி, சூனியம், ஏவல், செய்வினை பாதிப்பு, சிலருக்கு உலகியலாக ஆள்வினை பாதிப்பு, சிலருக்கு சூழ்வினை பாதிப்பு, சிலருக்கு வினைபாதிப்பு, சிலருக்கு குடும்பத்திலுள்ள கணவன், மனைவி அல்லது குழந்தைகள் முதலிய வர்களின் யோகக்குறைவால் பாதிப்பு, சிலருக்கு உட லில் நாகவரியியல் (ரேகை) தோற்றத்தால் பாதிப்பு என்று அறிவியல் முறைப்படி பல்வேறு காரணங்களைக் கூறி; அந்த பாதிப்புக்குரிய காரணங்களை எப்படி யெல்லாம் அகற்றிக்கொள்ளலாம், போக்கிக் கொள்ளலாம், நுக்கிக் கொள்ளலாம் என் பதற்குரிய வழிவகை களும், வழிகாட்டி களும், வழித்துணைகளும் மிக மிகத் தெளிவாக அறிவிக்கப்பட்டிருக் கின்றன, அறிவிக்கப்பட்டிருக்கின்றன, அறிவிக்கப் பட்டிருக்கின்றன. இப்படி, இந்து வேதமும், இந்துமதமும் கூறுவது போல் வேறு எந்த ஒரு வேதமோ வேறு எந்த ஒரு மதமோ கூறவில்லை, கூறவில்லை, கூற வில்லை, கூறவே இல்லை; கூறமுடியவில்லை, கூறமுடியவில்லை, கூறமுடியவில்லை, கூறமுடியவே இல்லை. ஏனென் றால், இந்து வேத நூல்களும் இந்து மத நூல்களும் தான் காலங்கள் தோறும் கடவுள்களாலே தேவைக்கேற்ப எடுத்து எழுதப்பட்டு வருகின்றன. ஆனால், இந்த உலகில் எல்லா வேதத்திற்கும் மதத்திற்கு முரியவர்கள் குடும்ப ஆண்டவர், குல தெய்வம், கிராமத்து தேவர், தேவதை, தேவன், தேவி, தேவ தூதர்...... முதலியவர்களைச் சந்தித்தவர் களாகத்தான் இருக்கிறார்களே தவிர; யாருமே கடவுளை சந்திக்கவில்லை, சந்திக்கவில்லை, சந்திக்க வில்லை, சந்திக்கவே இல்லை. எனவே தான், எந்த ஒரு வேதமோ, வேத் மதமோ, மனித வாழ்க்கையில் ஏற்படக்கூடிய இன்னின்ன பாதிப்புகளுக்கும், குறைகளுக்கும் கவலை களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் பரிகார மாக இன்னின்ன ஊர்களில் உள்ள இன்னின்ன கோயில்களுக்குச் சென்று, இந்தஇந்த கடவுள்களுக்கு இப்படி இப்படிப்பட்ட படையல் பொருட்களைப் படைத்து, பூசைகளைச் செய்யுங்கள்; இந்தஇந்த பொருட்களைக் காணிக்கையாகச் செலுத்துங்கள்: இப்படி இப்படிப்பட்ட விரதங்களை (வீர தவங்களை)ச் செய்யுங்கள்; விரைவில் நன்மை ஏற்படும், நன்மை ஏற் படும், நன்மை ஏற்படும் என்று கூற முயலவில்லை, கூறமுயலவில்லை, கூற முயலவில்லை, கூறமுயலவே இல்லை; கூற முடியவில்லை, கூறமுடியவில்லை, கூறமுடிய வில்லை, கூறமுடிவேயில்லை, ஏனென்றால், இந்து வேதத்தையும் இந்து மதத்தையும் தவிர வேறு எந்த ஒரு வேதமோ மதமோ; குடும்ப ஆண்டவர், குல தெய்வம், கிராமத்து தேவர், தேவதை, தேவன், தேவி, நாட்டுக்கடவுள்கள், மண்ணுலகக் கடவுள் கள், விண்ணுலகக் கடவுள்கள், வானிலுள்ள 27 மீன்கள், 12 இராசிகள், 9 கோள்கள், ஏழு நாட்கள்; பற்றி நேரடியான தொடர்பு

கொண்டு முறையான, நிறைவான, முழுமை யான விளக்கங்களை வழங்கவில்லை, வழங்கவில்லை, வழங்கவில்லை, வழங்க வேயில்லை. இன்னும் சொல்லப்போனால், எந்த ஒரு வேதமோ அல்லது வேத மதமோ அருளுலகில் ஒவ்வொரு குடும்பத்தையும் கவனிக்க குடும்ப ஆண்டவர் உண்டு; ஒவ்வொரு குலத்தாருக்கும் அல்லது கூட்டத் தாருக்கும் அல்லது இனத்தாருக்கும் அல்லது வட்டாரத்தாருக்கும் பாதுகாப்பளித்து நன் மைகள் வழங்கிட குல தெய்வங்கள் உண்டு; ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு நகரத்திற்கும் உரிய மக்களைப் பாதுகாத்து நன்மை விளை விப்பதற்காக கிராமத்து தேவர்கள், தேவதைகள், தேவன்கள், தேவி கள் உண்டு; குறிப்பிட்ட மொழியினருக்கும் இனத்தவருக்குமுரிய நாட்டுக்கு என்று பாதுகாப்பளிக்கவும், நன்மைகள் தரவும், நாட்டுக் கடவுள்கள் உண்டு; இவர்களிலே மண்ணுலகக் கடவுள்கள், விண்ணுலகக் கடவுள்கள் என்று இருபிரிவினர்கள் உண்டு; இவர்களிலே அருவக் கடவுள்கள், அரு வுருவக்கடவுள்கள், உருவ அருவக் கடவுள் கள், உருவக்கடவுள்கள் என்ற நான்கு பிரிவினர்கள் உண்டு; என்று கூறவில்லை. ஆனால் இந்துவேதம் தான் கடவுள் களிடையிலே எத்தனையெத்தனை வகைக் கடவுள்கள் இருக்கின்றார்கள் என்பதை யெல்லாம் மிகத்தெளிவாக வகைப்படுத்தி: வரிசைப் படுத்தி; அந்த வரிசைகளைப் பட்டியலிட்டுக் காட்டி, கூட்டி; மொத்தம் கடவுள்களில் (8,84,,736) எட்டு லட்சத்து எண்பத்தி நான்காயிரத்து எழுநூற்று முப்பத்தாறு வகையினர் இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள் என்று மிக மிகத் தெளிவாக விளக்குகிறது, விளக்குகிறது, விளக்குகிறது. இது போல், இந்த உலகில் இதற்கு முன் தோன்றிட்ட அல்லது தோன்றியிருக்கின்ற அல்லது தோன்றிக் கொண்டிருக்கின்ற எந்த ஒரு வேதமோ அல்லது வேத மதமோ கடவுள்களைப் பற்றிய பேருண்மைகளைப் பட்டியலிட்டுக் காட்டவில்லை. இன்னும் சொல்லப் போனால், நமது இந்து வேதமும் இந்து மதமும் தான், கடவுள்களில் ஆண்மை நிலைக் கடவுள்கள், பெண்மைநிலைக் கடவுள்கள், ஆண்மைநிலையும் பெண்மை நிலையும் கலந்த அலிநிலைக் கடவுள்கள் என்று மூன்று வகைப்பட்ட கடவுள்கள் இருக்கின்றார்கள் என்ற பேருண்மையை விளக்குகின்றது, விளக்குகின்றது, விளக்கு கின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாக, நமது இந்து வேதத்திலும், இந்து மதத்திலும் தான் பல கடவுள்களுக்கு பிறந்த நாள், நேரம், மீன், இராசி, இலக்கணம் முதலியவைகளைப் பற்றிய குறிப்புகளும்; கடவுள்களில் எந்தெந்த கடவுள்களுக்கு எந்தெந்த ஊர்களில் எந் தெந்த கிழமைகளில் எந்தெந்த முகூர்த்த நேரங்களில் திருமணங்கள் நடந்தன என்ற குறிப்புகளும்; கடவுள்களுக்கிடையில் எந் தெந்த கடவுள்களுக்கு எந்தெந்த கடவுள் களோடு என்னென்ன காரணங்கள் பற்றி எப்படியெப்படிப்பட்ட போர்கள் நடந்தன அல்லது சண்டை சச்சரவுகள் நிகழ்ந்தன என்ற குறிப்புகளும்; எந்தெந்த ஊர்களில் எந்தெந்த அருளாளர்களுக்காக எந்தெந்த கடவுள்கள் நேரில் தோன்றி என்னென்ன அருள் வழங்கினார்கள் என்ற விவரங்களும் மிகமிகத் தெளிவாக ஆண்டு, திங்கள் (மாதம்), கிழமை, நேரம், அந்த நேரத்திற் குரிய நட்சத்திரம் (மீன்) முதலிய விவரங்களோடு மிகமிக தெள்ளத் தெளிவாக திட்டவட்டமாக குறிக்கப்பட்டிருக் கின்றன. இந்த மாபெரும் பேருண்மையை, ஒவ்வொரு இந்துவும் எண்ணி எண்ணிப் பார்க்க வேண்டும், சிந்தித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதற்குரிய முயற்சிகளைச் செய் வதற்குத் தான், நமது குருதேவர், இந்து வேத நாயகம், இந்து மதத் தந்தை, குவலய குருபீடம், இந்து மதத்தின் முழுமுதல் தலை மை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்

அவர்கள் பேரூர், சிற்றூர், கிராமம், குக் கிராமம், பட்டிதொட்டி என்ற வேறு பாடின்றி தமது அடியார்களை உருவாக்கிச் செயல்பட்டு வருகிறார்.

12, இந்த உலகில் எத்தனையோ வேதங் களும் வேதமதங்களும் தோன்றி இருக் கின்றன; தோன்றிக் கொண்டிருக்கின்றன; தோன்றவும் போகின்றன ஆனால், எந்த ஒரு வேதமும் சரி, மதமும் சரி, யாராவது ஒரு கடவுளையாவது மண்ணுலகுக்கு வர வழைத்து சந்தித்ததாகவோ அல்லது மண்ணுலகில் இருந்து விண்ணுலகுக்குச் சென்று சந்தித்ததாகவோ கூறவில்லை, கூறிக் கொண்டிருக்கவில்லை, கூறவும் இல்லை, கூறவும் முடியாது. ஏனென்றால், எந்த ஒரு வேதத்தையும், வேதமதத்தையும் உண்டாக்கு கிறவர்கள் உண்மையிலே கடவுளைச் சந்திப் பார்களேயானால்; அந்த கடவுள் எந்தக் கடவுளாக இருந்தாலும் சரி, அந்தக் கடவுள் உறுதியாக இந்து வேதத்தைத்தான் சொல்லும், சொல்லும், சொல்லும், சொல்லக்கூடும், சொல்லக்கூடும், சொல்லக் கூடும்; சொல்ல முடியும், சொல்லமுடியும். சொல்லமுடியும் ஏனென்றால், அண்ட பேரண்டமாளுகின்ற பதினெண்சித்தர் களும், பதினெட்டாம் படிக்கருப்புகளும் தாங்கள் எழுதிய இந்து வேத நூல்களையும் இந்துமத நூல்களையும் நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுள்களுக்கும், 48 வகைப் பட்ட வழிபடு நிலையினர்களுக்கும், 48 வகைப்பட்ட சித்தர்களுக்கும் முறையாக அறிவித்துத்தான் அண்டபேரண்டம் முழு வதையும் செயலுக்கு கொண்டு வந்துள் ளார்கள். எனவே தான், இந்து மதத்தின் அருளாளர்கள் சந்தித்திட்ட கடவுள்களும்; இந்துமதப் பத்தியாளர்களை சத்தியாளர் களை சித்தியாளர்களை முத்தியாளர்களை சந்திக்க வந்த கடவுள்களும்; இந்து வேதம் குறிப்பிடுகின்ற கடவுள்களும்; தங்கள் தங்களுடைய கைகளில் இந்து வேத நூல்களை வைத்துக் கொண்டுதான் இருக் கின்றன. இன்னும் சொல்லப்போனால், இந்து மதத்தில் கலைமகள் என்ற ஒரு கடவுளும், திருமால் என்ற ஒரு கடவுளும், குருபகவான் என்ற ஒரு கடவுளும், பிறம்ம தேவன் என்ற ஒரு கடவுளும், சனி பகவான் என்ற ஒரு கடவுளும் எந்நேரமும் வேதத் தைப் படித்துக் கொண்டே இருக்கிறார்கள். இவர்களை அல்லாமல், சிவன், சிவபெரு மான், பரமசிவன், ஈசுவரன், பரமேசுவரன், மகேசுவரன், சருவேசுவரன், சங்கரன், உருத் திரன்... எனப்படும் கடவுள்கள் இந்து வேதத்தின் நாயகர்களாக இருந்து; இந்து வேதத்தை தேவர் தேவதைகளுக்கும், தேவன்களுக்கும், தேவிகளுக்கும், தெய்வங் களுக்கும், ஆண்டவர்களுக்கும், மானுடர் களில் சிறந்த முனிவர்களுக்கும், இருடி களுக்கும், ஞானிகளுக்கும், மகான்களுக்கும், தங்களுடைய மனைவிமார்களுக்கும், உடன் இருக்கும் மற்ற தேவர்களுக்கும், தெய்வங் களுக்கும், ஆண்டவர்களுக்கும் (இந்து வேதத்தை) வாக்காகவும், வாக்கியமாகவும், வாசகமாகவும் வழங்கிக் கொண்டிருக் கிறார்கள், வழங்கிக் கொண்டிருக்கிறார்கள், வழங்கிக் கெண்டிருக்கிறார்கள். இந்த இந்து வேத நாயகங்கள், யார் யாருக்கு, எந்தந்த இடங்களில், எப்பொழுது, எப்பொழுது, என்னென்ன நிலைகளில் இருந்து இந்து வேதத்தை அருளினார்கள் என்ற நிகழ்ச்சிகள் மிகப் பெரியபெரிய வரலாறுகளாக இந்து மதத்தில் இருக்கின்றன. எனவே தான், இந்த உலகத்தில் புதிது புதிதாக வேதத்தையும் வேதமதத்தையும் தோற்றுவித்தவர்கள்; தங் களை; உருவமே இல்லாத அதாவது வடிவமே இல்லாத, யாருமே பார்க்க முடி யாத, எங்கோ தொலைதூரத்தில் இருக்கின்ற ஓர் ஆண்டவர், ஒரு தெய்வம் அல்லது ஒரு தேவன், ஒரு தேவி, அல்லது ஒரு தேவர், அல்லது ஒரு தேவதைக்குப் பதிலியாக அல்லது வாரிசாக அல்லது தூதராக அல்லது தொண்டராக அறிவித்துக் கொண்டு தான் செயல்பட்டிருக்கிறார்களே தவிர அல்லது செயல்பட்டுக் கொண்டிருக்

கிறார்களே தவிர; எந்த ஒரு வேதத்தையும், வேதமதத்தையும் தோற்று வித்தவர்களோ சரி அல்லது தோற்றுவித்துக் கொண்டி ருப்பவர்களோ சரி; தங்களுடைய கடவுளின் பெயரை, தங்களுடைய கடவுளின் வடி வத்தை, தங்கள் கடவுள் ஆணா, பெண்ணா, அலியா, என்பதை; திருமணம் ஆகிவிட்டதா, இல்லையா என்பதை; குழந்தைகள் உண்டா இல்லையா என்பதை; உறவினர்கள் உண்டா இல்லையா என்பதை; அவர்களோடு செயல்படு கின்றவர்கள் பற்றிய விவரங்கள், அவர் களுடைய உடை வகைகள், நகை வகைகள், உணவு வகைகள், விருப்பமான இசை வகைகள், நடன வகைகள், கூத்து வகைகள், இலக்கிய வகைகள், இம்மண் ணுலகில் விருப்பமான இடங்கள், அவர்களுடைய திருவிளையாடல்கள், அவர்களுடைய திருத் தோற்றங்கள், அல்லது பிறப்புக்கள். . . . முதலிய விவரங்களை எடுத்துக் கூற முயல வில்லை, எடுத்துக்கூற முயலவில்லை எடுத்துக்கூற முயலவில்லை எடுத்துக்கூற முயலவே இல்லை. ஏனென்றால், இந்த உலகில் இந்து வேதத் துக்கும், இந்து மதத்துக்குமுரிய வர்களைத் தவிர வேறு யாரும் கடவுள்களைச் சந்தித்ததில்லை, சந்தித்ததில்லை, சந்தித்த தில்லை, சந்தித் ததே இல்லை. ஏனென்றால், இந்து வேதத்தின் மூலமும் இந்து மதத்தின் மூலமும் தான் , கோடிக்கணக்கிலுள்ள கடவுள்களைச் சந்திக்கலாம், சந்திக்கலாம், சந்திக்கலாம். இப்படிக் கூறுவதற்கு சாட்சியங்களையும், சான்றுகளையும், ஊன் றுகளையும் கேட்பார்கள். அவர் களுக்குச் சொல்லுங்கள்; .இந்து வேதநாயகர் களான, இந்து வேதத்தலைவர்களான, சிவன்கள் சிவபெருமான்கள், பரமசிவன்கள், ஈசுவரர் கள், பரமேசுவரர்கள், மகேசுவரர்கள், சங்கரர்கள், உருத்திரர்கள்..... எனப் படுபவர் கள் 64 முறை இந்த உலகுக்கு வந்து மக்களை நேரில் சந்தித்து மக்களோடு பேசிப்பழகி, திருவிளையாடல்கள் நிகழ்த்தியிருக்கிறார் கள்! திருவிளையாடல்கள் நிகழ்த்தியிருக் கிறார்கள்!! திருவிளையாடல்கள் நிகழ்த்தி யிருக்கிறார்கள்!!!. .அடுத்து; மாயோன்கள், மால்கள், திருமால்கள், பெருமால்கள் எனப்படும் கடவுள்களும், பிறம்மன், பிறம்ம தேவன் வருணன், வருண தேவன், இந்திரன், இராசேந்திரன், மகேந் திரன், தேவேந்திரன், சத்திகள், பராசத்திகள், மகாசத்திகள், ஈசுவரிகள், சருவேசுவரிகள், பரமேசுவரிகள், மகேசுவரிகள், மலைமகள்கள், அலைமகள் கள், கலைமகள்கள், பிறம்ம சத்திகள், வருணதேவிகள், இந்திராணிகள், தேவேந் திரராணிகள், இராசேந்திரராணி கள், மகேந்திரராணிகள், காளிகள், மாகாளிகள், கொற்றவைகள், திரிசூலிகள், மாரியம்மன் கள், அங்காளம்மன்கள், பகவதிகள், செல்லியம்மன்கள், முத்தாளம்மன்கள், இசக் கியம்மன்கள், காமாட்சியம்மன்கள்..... முத லிய கடவுள்களும்; பனிமூடிய இமயத் தின் விளிம்பு முதல் நலக்கடலலைகள் நித்தம் தவழுகின்ற கன்னியாகுமரிக் கடற்கரை மணற்பரப்பு வரை பரந்து விரிந்து கிடக்கின்ற இந்து வேத இந்தியாவுக்குள், இந்துமத இந்தியாவுக்குள் கணக்கற்ற முறை நேரில் தோன்றியிருக்கிறார்கள், தோன்றி யிருக்கிறார்கள், தோன்றியிருக்கிறார்கள், அப்படி, இவர்களெல்லாம் தோன்றி அருள் புரிந்த இடங்களும், அருள் புரியப்பட்ட மக்களும் பல்லாயிரக்கணக்கில் வரலாற்றுச் சான்றுகளாகவும், ஊன்றுகளாகவும் இருக் கிறார்கள். இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இன்னும் சொல்லப்போனால், இந்து வேத நாடாகவும், இந்துமத நாடாகவும் இருக்கின்ற இந்தியாவுக்குள் இன்றைக்கும் மேற்படி கடவுள்கள் எல்லாம் நேரில் வந்து தோன்றி காட்சி அளித்து அருள் வழங்கி அருளாளர் களை உருவாக்கி மக்களுக்கு நன்மையை விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள், நன்மையை விளைவித்துக் கொண்டிருக் கிறார்கள், நன்மையை விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

13. இப்படி, இந்து வேதக் கடவுள்களும் இந்து மதக் கடவுள்களும் நேரில் தோன்றிய வரலாறுகளும், நேரில் தோன்றி அருள் புரிந்து கொண்டிருக்கின்ற வரலாறுகளும் ஆயிரக்கணக்கில் இருக்கின்ற பெருமை இந்து வேதத்துக்குத்தான் இந்து மதத்துக்குத் தான் உண்டு! இந்து வேதத்துக்குத் தான் இந்து வேதத்துக்குத்தான் இந்து மதத்துக்குத்தான் உண்டு!! இந்து மதத்துக்குத்தான் உண்டு!!!. அதாவது, இந்த உலகில் எந்தவொரு வேதமோ, மதமோ தங்களுடைய கடவுள் நேரில் வந்ததாக ஒரு போதும் குறிப் பிட்டதில்லை, குறிப்பிட்டதில்லை, குறிப் பிட்டதில்லை, குறிப்பிட்ட தேயில்லை; குறிப்பிட இயலாது, குறிப்பிட இயலாது, குறிப்பிட இயலாது, குறிப்பிடவே இயலாது; குறிப்பிட முடியாது, குறிப்பிட முடியாது, குறிப்பிட முடியாது, குறிப்பிடவே முடியாது. ஏனென்றால், இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் தவிர; தோன்றக் கூடிய எல்லா வேதங்களும், வேத மதங்களும், 1. குடும்ப ஆண்டவர், 2. குல தெய்வம், 3. கிராமத்து தேவர், தேவதை, தேவன், தேவி எனும் மூன்று வகையினருடைய நேரடி வாரிசுகளாகவோ அல்லது பதிலிகளாகவோ அல்லது தூதுவர்களாகவோ அல்லது பத்தியாளர்களாகவோ, சத்தியாளர்களா கவோ, சித்தியாளர்களாகவோ, முத்தியாளர் களாகவோ தோன்றியவர்களால்தான் அருளப்பட்டவை அல்லது தோற்றுவிக்கப் பட்டவை ஆகும். எனவே, இந்து வேதத் தையும், இந்து மதத்தையும் தவிர எந்தவொரு வேதமோ, வேதமதமோ கடவுளர்களோடு எந்தவிதத் தொடர்பும் உடையவைகளாக இருக்க இயலாது, இயலாது, இயலாது, இயலவே இயலாது; இருக்க முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது. எனவேதான், இந்து வேதத்தையும் இந்து மதத்தையும் போல எந்தவொரு வேதமும், மதமும் கடவுள்களைப் பற்றியும், அவர்களு டைய அளப்பரிய அன்பு பற்றியும், அவர்கள் அடிக்கடி நேரில் வந்து மனிதர்களோடு தொடர்பு கொள்வது பற்றியும், அவர் களோடு மனிதர்கள் அடிக்கடி தொடர்பு கொண்டது பற்றியும், தொடர்பு கொள்வது பற்றியும், கூறத் தெரியாதவைகளாக, இருக்கின்றன. இப் பேருண்மையினை, இந்து வேதத்துக்கும், இந்துமதத்துக்கும் உரிய இந்துக்கள் அனைவரும் முறையாகவும், நிறைவாகவும், முழுமையாகவும் தெரிந்து, ஆராய்ந்து, அறிந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி, ஏற்று ஒப்புக் கொண்டு; இந்த நாட்டுக்கு வந்துள்ள மாற்று வேதத்தவர்களிடமும், வேற்று மதத் தவர்களிடமும் விளக்கி உரைப்பார் களேயானால்; உலக மக்கள் அனைவரும் இந்து வேதத்துக்கும், இந்து வேதமதத்துக்கும் உரியவர்களாகி விடுவார்கள்.

14. இந்த நாட்டுக்கு வந்துள்ள மாற்று வேதத்தவர்களும், வேற்று மதத்தவர்களும் பாவங்களைப் பற்றியும் பாவமன்னிப்புக் களைப் பற்றியுமே அதிகமாகப் பேசுகிறார் கள். ஆனால், அந்தப் பாவங்கள் ஏன் ஏற்படுகின்றன? எப்படி ஏற்படுகின்றன? எதற்காக ஏற்படுகின்றன? அவற்றை ஏற்படாமலேயே தடுக்கக்கூடாதா? தடுக்க முடியாதா? என்று சிந்திக்கவிடாமல்; செய்துவிட்ட பாவங்களுக்கு பாவ மன்னிப்பு கேட்டால் தான் மன்னிப்பு கிடைக்க முடியும் அல்லது பெற முடியும்; இல்லா விட்டால், தண்டனை கிடைக்கும், என்றும் அச்சுறுத்துகின்றன. ஆனால், இந்து வேத மும் இந்து மதமும், வாழ்க்கையில் நிகழக் கூடியவற்றிற்கு தவறுகள், குறைகள், பாதிப் புக்கள், விதியின் ஆட்சி, ஊழ் வினையின் ஆட்சி, ஆள்வினையின் ஆட்சி, வினையின் ஆட்சி, நாள், கோள், மீன், இராசி, இலக்கணம் முதலியவைகளின் வல்லாட்சி; காற்று, கருப்பு, பேய், பிசாசு முதலியவை களின் தாக்குதல்; அருளுலகப் பயிற்சி, முயற்சி, தேர்ச்சி, முதிர்ச்சிகளைத் தவறாகப் பயன்படுத்துகின்ற தன்னலமிக்க வெறியு ணர்வுடைய மந்திரவாதிகளின் பில்லி,

சூன்யம், ஏவல், செய்வினை, வைப்பு, கழிப்பு, மருந்து, கண்ணேறு முதலிய எண்வகைத் தாக்குதல்கள் ஆகியவற்றைத்தான் காரணமாக விளக்குகின்றது. இவற்றிற் கெல்லாம் மேலாக, இந்த உலகிலேயே இந்து வேதமும், இந்து மதமும்தான் இப்பிறப்பில் நல்லவர்களுக்கு வரக்கூடிய கேடுகளுக்கும், கெட்டவர்களுக்கு வரக்கூடிய நன்மை களுக்கும் காரணமாக முற்பிறவிப் பயன்கள் இருக்கின்றன என்ற ஓர் அரிய, பெரிய, ஒப்புயர்வற்ற, ஈடு இணையற்ற, விளக் கத்தையும் தருகின்றன. எனவே, இந்து வேதம், மக்களின் வாழ்க்கையில் ஏற் படக்கூடிய தவறுகளுக்கும், குறைகளுக்கும் பாவம் எனப்படுகின்ற அறமற்ற செயல் களுக்கும் கடுமையான தண்டனை காத்திருக்கின்றது என்று அச்சுறுத்தாமல்; உரிய பரிகாரங்களைச் செய்ய எண்ணற்ற வழிவகைகளையும், ஏந்துகளையும், துணைகளையும் கூறுகிறது. இத்துடன் பொதுமக்களிடம் இந்து வேதமும், இந்து மதமும், 'மறுபிறப்பிலாவது நல்வாழ்வு வாழ்வதற்காக இப்பிறப்பில் உண்மையைச் சொல்லுங்கள்; நன்மையைச்செய்யுங்கள்; ஒழுக்கமாக வாழுங்கள்; நீதிக்குக் கட்டுப்படுங்கள்; நேர்மையாகச் செயல் படுங்கள்; உங்களால் இயன்ற உதவிகளைப் பிறருக்கு வழங்குங்கள்....' என்று இனிய, எளிய, கனிவான, எளிமையான, பரிந்து ரைகளை வழங்குகின்றது. இது போல், வேறு எந்த ஒரு வேதமோ, வேதமதமோ கருத்துரை வழங்கவோ, தத்துவப்பரிந்துரை அளித்திடவோ, செயல் சித்தாந்தத்தை அளித்திடவோ இயலாது, இயலாது, இயலாது, இயலவே இயலாது; முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது. எனென்றால், இந்த இந்து வேதமும், இந்து மதமும் தான் இந்த மண்ணுலகு பற்றியும், இதை அடுத்து அடுக்கடுக்காக உள்ள வானுலகு, விண்ணுலகு, விசும்பு உலகு, ககன உலகு, ஆகாய உலகு, பால்வெளி உலகு, பரவெளி உலகு என்று ஏழு உலகங்கள் பற்றியும்; அருளுலகில் உள்ள காற்று, கருப்பு, பேய், பிசாசு, ஆண்டவர், தெய்வம், தேவர் தேவதை, கடவுள் எனும் எட்டு வகையினர் பற்றியும்; மனிதரின் முற்பிறப்பு, மறுபிறப்பு, இப்பிறப்பு பற்றியும்; மனிதரின் ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்று பற்றியும்; விண்மீன்கள், கோள்கள், இராசிகள், நாள்கள், இலக்கணங்கள் எனும் ஐந்து பற்றியும், மிகத் தெளிவாக, தனித்தனியாக விளக்கியுரைத்து, இவற்றிற் கிடையேயுள்ள இணைப்பு, பிணைப்புக்கள் பற்றியும், அவற்றின் பயன்கள் பற்றியும் மிகமிகத் தெளிவாக விளக்குகின்றன. இவை யெல்லாம், கோடிக்கணக்கான கட வுள்களால் அனுபவப் பூர்வமாக உணரப்பட்டும், உணர்த்தப்பட்டும், இந் துக்களால் புரிந்து கொள்ள முடிகின்றன. ஆனால், சற்றும் எதிர்பாராத வகையில் இவைகளையெல்லாம் மறந்து நமது இந்துக்கள், மாற்று வேதங்களுக்கும், வேற்று மதங்களுக்கும், முதன்மையளித்து தங் களையே கூட மாற்றிக் கொள்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம்; நமது இந்துமத அரசர்களும், அரசியல் தலைவர்களும், அரசியல்வாதிகளும், கலைஞர்களும், மதத் தலைவர்களும், பொறுப்போடும், பொறுமை யோடும் செயல்படாததுதான், செயல் படாததுதான், செயல்படாததுதான். இதற் காக நாம், மாற்று வேதங்களையோ, வேதத் தவர்களையோ, வேற்று மதங்களையோ, மதத்தவர்களையோ குறைசொல்லக் கூடாது, குற்றம் சாட்டக் கூடாது, குறை சொல்லவோ குற்றம் சாட்டவோ கூடாது. ஆனால், நாம், உடனடியாக, நமது மதத் தலைவர்களையும், மதநிறுவன நிர்வாகங்களையும் மெய்யான மதவாதிகளையும், நமது மதத்தைப் பற்றிய பேருண்மைகளையும், வரலாறுகளையும், மதிப்பீடுகளையும், அரிய போதனை களையும், பெரிய சாதனைகளையும், உயரிய தத்துவங்களையும், நடைமுறைக்கேற்ற

செயல் சித்தாந்தங்களையும், கோயில் களைப் பயன்படுத்த வேண்டிய வழிவகை களையும், நெறிமுறைகளையும், எளிமையாக விளக்கியுரைக்க முயலவேண்டும், முயல வேண்டும், முயல வேண்டும், முயன்றேயாக வேண்டும்.

அதற்கு, "இந்து வேதம் வளர்ப்போம்;
இந்து மதம் காப்போம்";
"இந்து வேத விளக்கம் வழங்குவோம்"

"இந்துகளுக்கு விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும் விளைவிப்போம்", என்ற முழக்கங்கள்தான்; உடனடியாக பட்டி, தொட்டி, குக்கிராமம், கிராமம், சிற்றூர், பேரூர், நகரம், மாநகரம் முதலிய இடங்களில் எல்லாம் ஒலிக்கச் செய்ய வேண்டும், ஒலிக்கச் செய்யவேண்டும், ஒலிக்கச் செய்ய வேண்டும், ஒலிக்கச் செய்தே ஆக வேண்டும். இதைத்தான், நமது இந்து வேத நாயகம், இந்த மதத் தந்தை, கருகுல ஆதீனம், கருமூலப் பண்டாரம் இந்து மதத்தின் முழு முதற்தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு அருளிய பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதி, இந்து மதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண் சித்தர் பீடத்தின் பீடாதிபதி, பரபிறம்மம், குருமகாசன்னிதரனம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறாராகிய அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் தோற்றுவித்துள்ள இந்து வேதாகமப் பாடசாலை செய்து வருகிறது, செய்து வருகிறது, செய்து வருகிறது.

15. அன்பு இந்து மதப் பற்றாளர்களே! கடந்த கால் நூற்றாண்டு காலத்திற்கு மேலாக நமது அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் கொளுத்தும் வெய்யிலிலும், கொட்டும் மழையிலும், நட்ட நடுநிசியிலும், பட்டப்பகலிலும், கூடாரங் கூட இன்றி வெட்டவெளிகளில் நாடு முழுவதும் குறுகிய கால இந்து வேதாகம பாடசாலை வகுப்புக்கள் நிகழ்த்தி; நமது இந்து வேத, இந்து மத நிறுவன நிர்வாகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக, செயல்படுத்துவதற்காக கணிசமான அளவு [1]மடாதிபதிகள், [2]பீடாதிபதிகள், [3]சன்னிதானங்கள், [4]ஆதீனங்கள், [5]தம்பிரான்கள், [6]பண்டாரங்கள், [7]பண்டார சந்நதிகள்' [8]பண்டார சந்நிதிகள், [9]ஏம கோடிப் பீடங்கள், [10]காம கோடிப் பீடங்கள், [11]சோம கோடிப் பீடங்கள், [12]வாம கோடிப் பீடங்கள், [13]அரியவாள், [14]சூரிய வாள், [15]சீரியவாள் [16]பெரியவாள், [17]நேரியவாள், [18]வீரியவாள் எனப்படும் பதினெட்டு வகைப் பட்ட அருட்பட்டத்திற்குரிய அருளாளர் களையும் உருவாக்கி முதலில் உடனடியாக நாடு முழுவதும் பரவலாக எல்லா இடங்களுக்கும் சென்று இருக்கு வேதம் (ரிக்வேதம்), அசுர வேதம், (யசூர்வேதம்) யாம வேதம், (சாமவேதம்) அதர்வான வேதம் (அதர்வன வேதம்) எனும் நான்கு வேதங்களையும் பயன்படுத்தி; தேவைக்கேற்ப ஓமசாலை, ஓக சாலை, யாகசாலை, யக்ஞசாலை, வேள்விச் சாலை எனும் ஐந்தில் ஒன்றையாவது வளர்த்து; மக்களுக்கு அருளை, அருட் சத்தியை அருட்பயனை மருந்தா கவும், விருந்தாகவும், வழங்குகின்ற பணிகள் நிகழும்படி செய்துள்ளார். இதுதான், அருட்பணி விரிவாக்கத்திட்டம். இந்த அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில் ஆங்காங்கே உரையாடல்கள் மூலமும், கருத்துப் பரிமாற்ற சிந்தனை அரங்குகள் மூலமும், பட்டிமன்றங்கள் மூலமும், மேடைப் பேச்சுகள் மூலமும், நமது இந்து வேத நூல்களையும் இந்துமத நூல்களையும், இவை சார்ந்த வரலாறுகளையும், இலக்கியங்களையும், மகான்கள், ஞானிகள், இருடிகள், தவசிகள் . . . முதலியோர்களின் போதனைகளையும், சாதனைகளையும் விளக்கியுரைக்கும்படி செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றோடு, பாழடைந்த கோயில்களுக்கும்; அருள் நலம் குன்றிய கோயில்களுக்கும்; பொதுமக்களின்

வாழ்வில் பெரும்பாலானவர்களுடைய குடும்ப ஆண்டவர்களுக்கும், குல தெய்வங் களுக்கும் இடையில் நல்ல தொடர்பு இல்லாமல், போய்விட்டமைக்கும்; பதி னெண்சித்தர்களின் குடமுழுக்குப் பூசை முறை நூலின்படி புத்துயிர்ப்புக்கள் செய்து தருவதும், பதினெண் சித்தர்கள் இருக்கு வேதத்திலும், யாம வேதத்திலும் முழுமை யாகவும், அசுர வேதத்திலும், அதர்வான வேதத்திலும் குறிப்பாகவும், வெளியிட் டுள்ள 1. பிறப்பியல், 2. பெயரியல் 3. அங்கவியல் 4. வரியியல், 5. மனையியல் எனும் ஐந்தர, ஐந்திர, ஐந்திறங்களின் சாத்தர, சாத்திர, சாத்திறங்களின் மூலம் மக்களுக்குத் தேவையான வாழ்வியல் வழிகாட்டல்களையும், பரிந்துரைகளையும், பாதிப்பிற்குரிய பரிகாரங்களையும், மேன் மைக்கும் நன்மைக்குமுரிய அருளூறு பூசை நெறிமுறைகளையும், விதிகளையும், வழி முறைகளையும், சாதனங்களையும் ஏந்து களையும் வழங்கிடக்கூடிய செயல் திட்டமும், இந்த அருட்பணி விரிவாக் கத்திட்டத்திலேயே இணைக்கப்பட்டி ருக்கின்றன. இவற்றைச் சார்ந்தே அருட் கணிப்பு, அருள்வாக்கு, திட்சை வழங்குதல், குண்டலினி, ஓகம், யோகம், தவம், முதலிய பயிற்சிகளை வழங்குதல் எனும் செயல் திட்டங்களும் நடை முறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இவற்றால், நம் மக்கள் அனுபவப்பூர்வமாக, அறிவுப் பூர்வமாக, ஆராய்ச்சிப்பூர்வமாக நமது இந்து வேதமும், இந்து மதமும் இந்த உலகில் தோன்றக் கூடிய அனைத்து வகைப்பட்ட வேதங்களிலிருந்தும், மதங்களிலிருந்தும் வேறுபட்டு, தனித்து, ஒப்புயர்வற்று, சிறந்து விளங்குகிறது என்ற பேருண்மையை உணர முடிகின்றது, உணர முடிகின்றது, உணர முடிகின்றது.

16. மேலே கூறியவைகளின் நுட்ப திட்பங்களை நாடுமுழுவதும் பரப்புவதற் காக; இப்பொழுது, நமது இந்து வேதாகம பாடசாலையில் வாரத்தில் சில நாட்கள் மட்டும் வசதி வாய்ப்பு போல் வந்து இந்து வேத ஆகமங்களையும், இந்துமத நூல்களையும் கற்றுக் கொண்டிருக்கின்ற மகளிர்களிலும், மாணவிகளிலும் சில மகளிர்களும் சில மாணவிகளும் மிகுந்த ஆர்வத்தின் காரணமாக தாங்களே நாடு முழுவதும் சென்று மேடையேறி இந்து வேத நூல்களின் பெருமைகளையும், அரிய பயன் களையும், இந்துமத நூல்களின் அரிய பெரிய பயன்களையும் கொள்கைகளையும் விளக்கி யுரைத்து; இந்து வேதத்தை வளர்த்திடவும், இந்துமதத்தைக் காத்திடவும் தயாராகிவிட் டார்கள். இது ஆண்களுக்கு இந்து வேதத்திலும், இந்து மதத்திலும் அக்கறை யில்லை, ஈடுபாடில்லை, பற்றில்லை, பாசமில்லை, அழுத்தமான பிடிப்பில்லை என்ற நடைமுறைப் பேருண்மையைத் தான் விளக்குகிறது. இன்னும் சொல்லப் போனால், பதினெண் சித்தர்கள், தங்க ளுடைய இந்து வேதக் கொள்கைகளையும், இந்து மத நடைமுறைகளையும், பெண்களை மூலமாக, முதலாக, அடிப்படையாக உள்ளீ டாக, உயிராக, சாதனமாக, விழியாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப் பயனாகக் கொண்டு தான் உருவாக்கி யிருக்கிறார்கள், உருவாக்கியிருக்கிறார்கள், உருவாக்கியிருக்கிறார்கள். அதாவது, நமது இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் கூறுகின்ற மந்தர பூசை, மந்திர பூசை, மந்திற பூசை, மாந்தர பூசை, மாந்தரீக பூசை எனும் ஐந்து பூசைகள் மட்டுமே பெண்ணின் துணையின்றி செய்யக் கூடியவைகளாக வைத்திருக்கிறார்கள். ஆனால், தந்தர பூசை, தந்திர பூசை, தந்திற பூசை, தாந்தர பூசை, தாந்தரீக பூசை, எந்தர பூசை, எந்திர பூசை, எந்திற பூசை, ஏந்தர பூசை, ஏந்தரீக பூசை, தவ பூசை, சித்த பூசை, ஞான பூசை எனும் பதிமூன்றையும் பெண்கள்தான் செய்ய முடியும் என்றும்; பெண்களின் துணையோடு தான் ஆண்கள் செய்ய முடியும் என்றும்; ஆனால், ஆண்களின் துணையே இல்லாமல்

கூடப் பெண்கள் செய்யலாம் என்றும் வகுத்துள்ளார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக, நாற்பத்தெட்டுவகைச் சித்தர்களில் பெண்களை விரும்பாத ஞானசித்தர் வகையைச் சேர்ந்தவர்களைத் தவிர மற்றுமுள்ள 47 வகைச் சித்தர்களும், 48 வகைப்பட்ட வழிபடு நிலையினர்களும், 48 வகைப்பட்ட கடவுளர்களும், இவர்களுக்கெல்லாம் கருவாக, குருவாக விளங்கும் பதினெண் சித்தர்களும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் மட்டுமே; 1 பத்தி நிலை, 2 சத்தி நிலை, 3 சித்து விளையாடல் நிலை, 4 சித்தி நிலை, 5 முத்தி நிலை எனும் ஐந்து நிலைகளையும் தனித்தனியே ஆண்டு அநுபவித்து கடந்த நிலை பெற்ற பிறகே செய்யக் கூடிய இயந்திர பூசை, இயந்தர பூசை, இயந்திற பூசை, ஈந்தர பூசை, ஈந்தரீக பூசை எனும் பேராற்றல் மிக்க அண்ட பேரண்ட அருளாட்சி ஆற்றலைத்தர வல்ல ஐந்து வகைப்பட்ட பூசைகளையும்; 1. பேதை, 2. பெதும்பை, 3. மங்கை, 4. மடந்தை, 5. அரிவை, 6. தெரிவை, 7. பேரிளம் பெண் எனும் ஏழுபருவத்துப் பெண்களையும், இந்த ஏழு பருவங்களில் அங்கவியல் சாத்தர, சாத்திர, சாத்திறப்படி கண்டுபிடிக்கப்படுகின்ற 8. குமரிப் பெண், 9. நங்கைப் பெண்ணையும் சேர்த்து ஒன்பது வகைப்பட்ட பெண்களையும் பயன் படுத்தித்தான் செய்யமுடியும், என்று மகளிருக்கு முதன்மையும் மேன்மையும் ஒப்புயர்வற்ற சிறப்பும், இந்து வேத நூல்களிலும், இந்துமத நூல்களிலும் மிகத்தெளிவாக, வலிமையாக நிலை நாட்டப்பட்டிருக்கின்றன,

17. `அன்பு இந்துமதப் பற்றாளர்களே! நமது இந்து வேதக் கொள்கைகளிலும், இந்துமத நடை முறைகளிலும் மகளிருக்கு வழங்கப்பட்டிருந்த அதாவது பெண்களுக்கு அளிக்கப்பட்டிருந்த எல்லா வகையான அரிய, கூரிய, சீரிய, பெரிய, நேரிய, வீரிய உரிமைகளையும், பெருமைகளையும் அளப்பரிய பயன் நல்கும் செயல் நிலைமைகளையும், செல்வாக்கு நிலைகளையும், ஆட்சி நிலைகளையும், சாதனை நிலைகளையும், போதனை நிலைகளையும், சாதன நிலைகளையும், ஏந்து நிலைகளையும், இணையில்லாத் துணை நிலைகளையும் வழிகாட்டல் நிலைகளையும் அருளூறு நிலைகளையும், பாதுகாப்பு நிலைகளையும் காலப்போக்கில் எப்படியோ, எப்பொழுதோ, எவ்வாறோ மாற்றாரும், வேற்றாரும் விரோதிகளும், எதிரிகளும் மிகமிக நுட்பமாக அழுத்தந்திருத்தமாக, ஆணித்தரமாக நன்கு திட்டமிட்டு அடியோடு உடைத்துத் தகர்த்துத் தூள்தூள் ஆக்கிவிட்டார்கள், உடைத்துத் தகர்த்துத் தூள்தூள் ஆக்கி விட்டார்கள், உடைத்துத் தகர்த்துத் தூள்தூள் ஆக்கி விட்டார்கள். அதாவது, இந்துவேதம், "பெண்கள் பூசைக்காக, மாதந்தோறும் மலர்கின்ற மலர்கள்", என்று குறித்திருந்தும்; பெண்கள் மாதந்தோறும் பூப்படைந்து மலர்வதை கொடிய தீண்டத்தகாத பாவத்துக்குரிய, பூசைகளிலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவதற்குரிய தீட்டு நிலை என்ற ஒருகருத்தை இந்துக்களிடையே புகுத்திவிட்டார்கள், அதன் மூலம், பெண்கள் கோயில்களிலும், வழிபாட்டுக் கூடங்களிலும், பூசைக்குரிய மன்றங்களிலும் சபைகளிலும் முதன்மை பெறுவது, அரிய பயன் நல்கு ஆட்சி பெறுவது முதலியவைகள் அனைத்தும் தடுக்கப்பட்டுவிட்டன, தடுக்கப்பட்டுவிட்டன, தடுத்துக் கெடுக்கப்பட்டுவிட்டன, தடுத்துக் கெடுக்கப்பட்டுவிட்டன, தடுத்துக் கெடுக்கப்பட்டுவிட்டன. தடுத்துக் கெடுக்கப்பட்டே விட்டன. அதன் பிறகுதான், பெண்கள் பூசாரிகளாக, அருட்சினையாளர்களாக, குருக்கள்களாக, குருமார்களாக, குருதேவர்களாக, அருளுலகத் தலைமைப் பொறுப்புகளில் செயல்படமுடியாமல் போய்விட்டது, செயல்படமுடியாமல் போய்விட்டது, செயல்படமுடியாமல் போய்விட்டது, செயல்பட முடியாமலேயே போய் விட்டது.

இப்படி அருளுலகில் பெண்கள், இகழ்ச் சிக்கும் தாழ்ச்சிக்கும் உரியவர்களாக ஆக்கப்பட்டுவிட்ட காரணத்தினால்தான்; இந்துவேதம், மறைக்கப்பட்டு மறக்கப்பட்டது, இந்து மதம் இகழ்ச்சிக்குரியதாகி தாழ்ச்சியுற்று வீழ்ச்சி பெற்றது. இவற்றிற் கெல்லாம் பரிகாரம் செய்யும் முகமாகத் தான் இப்பொழுது நமது இந்து வேத நாயகம், இந்து மதத்தந்தை குவலய குரு பூடம், கருமூலப்பண்டாரம், கருகுல ஆதீனம், பரபிறம்மம், ஞாலகுரு, அந்தணர்அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்; இந்து வேதாகம பாடசாலையில் அதிகமாக பெண்களை வேதாகமக்கல்வி பெறும்படி தயாரித்து வருகிறார். அதன் பயனாக, கணிசமான அளவு பெண்கள், இளம்வயதினர், முதியவர் என்ற வேறுபாடின்றி எல்லோருமே இந்து வேதமும், இந்து மதமும் மிகவிரைவில் மக்களிடையில் மறுமலர்ச்சியையும், வள வளர்ச்சியையும், ஆட்சி மீட்சியையும், பெறுமாறு செய்வதற்காக; நேரடியாக பதினெண்சித்தர் மடத்தின், பீடத்தின் அருட்பணி விரிவாக்கத் திட்டங்களில் பெரும்பங்கு பெற ஆரம்பித்திருக்கிறார்கள்.

18. அன்பு இந்து மத பற்றாளர்களே! தென்பாண்டி மண்டலம், இந்து மதப் பத்தியாளர்களும், பற்றாளர்களும், அக்கறை யாளர்களும் அறிஞர்களும் மிகுந்த ஒரு பகுதியாகும். எனவேதான், இந்தத் தென்பாண்டி மண்டலப்பகுதிகளில் இந்து வேதாகமப் பாடசாலையின் மாணவிகளாக உள்ள இளம்பெண்களும், மகளிர்களும்; பொது மேடைகளில், இந்து வேதம் பற்றியும், இந்து மதம் பற்றியும், சொற்பொழிவுகள் நிகழ்த்த ஏற்பாடுகள் செய்யுமாறு நமது குருதேவர் திருவுளம் கொண்டுள்ளார். மேலும், இந்த மாணவிகள, ஆர்வமிகுதியின் காரணமாக, மாற்று வேதத்தவர்களும், வேற்று மதத்தவர்களும் வருத்தமுறும் வண்ணம் கருத்துக்களை கூறிவிடுவார் களோ என்று கருதித்தான்; கூடுமானவரை நமது குருதேவரே கலந்து கொள்ளக் கூடிய நிகழ்ச்சிகளில் மட்டுமே இந்து வேதாகம பாடசாலையின் இளம் மாணவிகள் சொற்பொழிவாற்ற அனுமதித்து வருகின் றார். ஆனால், இந்த மாணவிகள், முழுக்க முழுக்க, நமது கடவுள்கள் கையில் வைத் திருக்கக் கூடிய மூவிலைச் சூலத்தின் விளக்கமாக இருக்கின்ற இருக்கு வேதம்; அதன் மூன்று பிரிவுகளான அசுர வேதம், சாம வேதம், அதர்வான வேதம் எனும் நான்குவேதங்களிலிருந்துதான் கருத்துக்களை அப்படியே எடுத்துக் கூறி விமர்சனம் செய்து தங்களுடைய சொற்பொழிவுகளை நிகழ்த்து கிறார்கள். இந்த மாணவிகளின் பிள்ளை மொழி, குழந்தை மொழி நமது இன்றைய இந்துக்களிடையில் கண்டிப்பாக கணிசமான அளவாவது இந்து வேதம், இந்து மதம் பற்றிய விழிச்சி உணர்வை, எழிச்சி உணர்வை உருவாக்கிடும், உருவாக்கிடும், உருவாக்கிடும், உருவாக்கியே தீரும். அதாவது, இன்றைக்கு, நம் நாட்டிற்கு வந்துள்ள மாற்று வேதங்களும், வேற்று மதங்களும் ஒரே ஒரு கடவுள்தான் உண்டு என்றும், அந்தக் கடவுளுக்கு உருவமோ, வடிவோ, வாழ்வோ, கண்டு பிடிக்க முடியாதனவாக அமைந்திருப்பதாகவும், அந்தக் கடவுளை யாருமே பார்க்க முடியாது என்றும், அந்தக் கடவுள் யாரையும் பார்க்க வரமாட்டார் என்றும் கூறுகின்றன, ஆனால், இருக்கு வேதத்திலோ, 8,84,736 (எட்டு இலட்சத்து, எண்பத்து நாலாயிரத்து, எழு நூற்று முப்பத்தியாறு) வகைப்பட்ட வெவ்வேறான கடவுளர்களின் பெயர் களையும், அவர்களின் வடிவங்களையும், வாழ்வியல்களையும், உடைமுறைகளையும், விருப்பமான உணவு வகைகளையும் அவர்களிடமுள்ள வகைவகையான ஆயு தங்களையும், பல்வேறு வகையான ஆற்றல்களையும், அவர்களுடைய 48 வகைப்பட்ட ஆற்றல் நிலைகளையும், அதிகார நிலைகளையும், பொறுப்பு நிலை களையும், உரிமை நிலைகளையும், உறவினா

வகைகளையும் அவர்கள் இம் மண்ணுலகுக்கு வந்து சென்று கொண்டிருப்பது பற்றியும், அவர்கள் இம் மண்ணுலகில் சந்தித்திட்ட மனிதர்கள் பற்றியும், அவர்களுக்கு வழங்கிய போதனைகள் பற்றியும், அவர்களுக்காக, சாதித்த சாதனைகள் பற்றியும் மிகமிகத் தெளிவான, விளக்கமான, காலக் கணக்கீட்டுடன் கூடிய வரலாற்றுச் செய்திகள் பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றன.

இப்படி, இருக்கு வேதச்செய்திகள் இருப்பதோடு; நமது தமிழகத்தில், இந்து வேதநாயகமாகப் பொறுப்பு வகிக்கக் கூடிய சிவன்கள், சிவபெருமான்கள், பரமசிவன்கள், ஈசுவரர்கள், சர்வேசுவரர்கள், பரமேசுவரர்கள், மகேசுவரர்கள் எனப்படுகிறவர்களில் 64 (அறுபத்தி நான்கு) பேர்கள் நேரில் வந்து திருவிளையாடல்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள் அற்புதங்கள் செய்திருக்கிறார்கள், மக்களுக்குக் காட்சியளித்திருக்கிறார்கள், பத்தர்களுக்கு உதவியிருக்கிறார்கள். அடுத்து, திருமால், பெருமால், மாயோன், நாராயணன் எனப்படக்கூடிய கடவுள்கள்; மனிதர்களாகவே பிறப்பெடுத்துச் செயல்பட்டுள்ள வரலாறுகள் இருக்கு வேதத்திலே குறிக்கப்பட்டிருக்கின்றன. இம் மண்ணுலகுக்கு பதினெண் சித்தர் மடத்தின் மூலம் இந்து வேதத்தை அருளியவரும், இம்மண்ணுலகில் பதினெண் சித்தர் பீடத்தின் மூலம் இந்து வேதத்தைத் தோற்றுவித்தவருமான ஆதி சிவனாரின் மகன் முருகன் 32 ஆண்டுகாலம் வாழ்ந்து, தன் மனைவி வள்ளி நாச்சியார், தெய்வானை நாச்சியாருடன் பதினெட்டுப் படை வீடுகளில் பிறப்பிறப்பற்ற பிறவாக்கைப் பெரியோனாக வாழ்ந்து; அன்றாடம் பல நூறாயிரக்கணக்கான மக்களுக்கு அருளுலகப் பாதுகாப்புக்களையும், அருட்செல்வங்களையும், அருளுலக அனுபவங்களையும், சித்து விளையாடல் ஆற்றல்களையும் வாரிவாரி வழங்கி அருளாட்சி நிகழ்த்திக் கொண்டிருக்கிறான். இவன் மட்டுமின்றி இம் மண்ணுலகில் ஆங்காங்கே கோயில்களில் குடிகொண்டிருக்கக் கூடிய கருப்பண்ணசாமிகள், காரணமூர்த்திகள், ஆண்டிகள், ஐயனார்கள், முத்தையாக்கள், இலாடசன்னாசிகள், சங்கிலிக்கருப்புகள், வீச்சுக் கருப்பண்ணசாமிகள், தில்லை பிறம்மராயர், முறையூர் ஐயனார், ஆதிக் கருப்பராயர், கொட்டாரத்தான்கள் சுடலைகள், முத்தாலம்மன்கள், பிறம்ம சத்திகள், காளியம்மன்கள், மாரியம்மன்கள், பேச்சியம்மன்கள், செல்லியம்மன்கள், அங்காளம்மன்கள், அங்காள பரமேசுவரிகள், பகவதியம்மன்கள், காமாட்சியம்மன்கள் மாசாணியம்மன்கள், காத்தாயிஅம்மன்கள், மோகினி அம்மன்கள், இடாகினி அம்மன்கள், சங்காத்தம்மன்கள், சக்கரத்தம்மன்கள் திருமறைக்காட்டு யாழைப் பழித்த மொழியாள் உடனுறை திருமறைக்காட்டீசர், கன்னியாகுமரியில் குடியிருக்கும் கன்னியாகுமரியம்மன், சங்கரன் கோயிலில் குடியிருக்கக்கூடிய கோமதியம்மன் உடனுறை சங்கர நாராயணர், திருநெல்வேலியில் காந்திமதியம்மன் உடனுறை நெல்லையப்பன், சிவகாசி வாழ் சிவன், சிவகாமி, தென்காசி வாழ் ஈசுவரன், ஈசுவரி, பெரியகுளம் வாழ் அறம்வளர்த்த நாயகி இராசசோழீசுவரர், மதுரை மீனாட்சி சொக்கநாதர், திரிசிரபுரம் மட்டுவார்குழலி தாயுமானவர், திருவரங்கத்து அரங்கநாயகி அரங்கன், குணசீலம் சீனிவாசப்பெருமால் பத்மாவதி நாச்சியார், கும்பகோணத்து ஒப்பிலியம்மன், ஒப்பிலியப்பன், காஞ்சி வரதம்மாள், வரதப்பன், திருவேங்கடத்து வேங்கடவன், வேங்கடவள், திருச்சாணூர் அம்மன், அவினாசி இலிங்கேசுவரர், இலிங்கேசுவரி, தாராசுரம், தாராபுரம், தாரமங்கலம் இலிங்கேசுவரர் இலிங்கேசுவரி, கங்கை கொண்ட சோழபுரம் சோழீசுவரர், சோழீசுவரி, தஞ்சைப் பெரியகோயில் பெரிய உடையார், பெரிய நாயகி, கோனூர் நாட்டு அகத்தீசுவரர், அகத்தீசுவரி, திருவையாறு

ஐயாறப்பர், ஐயாறம்மை, கும்பகோணத்து நாகேசுவரர் நாகேசுவரி, கும்பேசுவரர், கும்பேசுவரி, சக்கரபாணிப் பெருமால், தாயாரம்மாள், வைத்தீசுவரன் கோயில் வைத்தீசுவரன் தையல் நாயகி, சீர்காழி வேதபுரீசுவரர், வேதபுரீசுவரி, சட்டநாதர், கரூர் பசுபதீசு வரர், பசுபதீசுவரி, கொடுமுடி மகுடே சுவரர், மகுடேசுவரி, காவிரி நட்டாற்றீ சுவரர், நட்டாற்றீசுவரி, காஞ்சி ஏகாம்பரேசுவரர், காமாட்சி, திருவண்ணா மலை உண்ணாமுலையம்மன், அண்ணா மலையீசர், திருகாளத்திவாழ் காளத்தீசுவரர், காளத்தீசுவரி, திருவானைக்காவல் உறை அகிலாண்டேசுவரி நீர்காத்தலிங்கம், சிதம்பரம் வாழ் சிவகாமி, கூத்தர் பெருமான், காசி விசாலாட்சி, விசுவநாதன், பராந்தகன், பராந்தகிப்பிராட்டி, அயோத்திஇராமர் சீதை, ஆஞ்சநேயர், துவாரகை கண்ணன், பாமா உருக்குமணி, மதுரை தாத்தா பாண்டி முனீசுவரர், தாத்தா கோச்சடை முனீசுவரர், தாத்தா புதுக்கோட்டை பொற்பனையான் கோட்டை முனீசுவரர், தாத்தா திருவரங்கத்து மொட்டைக் கோபுரத்து முனீசுவரர், தாத்தா கரூர் நாட்றாயர், நாச்சியப்பன், முனியம்மாள், தாத்தா வீரப்பூர் மந்திரமகா முனீசுவரர், பெரியகாண்டியம்மன், பொன்னர்சங்கர், நாமக்கல் மோகனூர் நாவலடியான், செல்லத்தம்மன், கரூர் தாத்தா முத்தையா, சோழமாதேவி சேலம் கோட்டை முனீசு வரர், மேட்டூர் முனீசுவரர், அலை வாய்ப் பட்டி முனீசுவரர், அக்கரைப்பட்டி முனீசு வரர்,... என்று பட்டியலிட்டுக் கொண்டு போனால் கணக்கிலடங்கா கடவுளர்கள் அன்றாடம் ஆயிரமாயிரம் மக்களுக்கு அருள்வழங்கிக் கொண்டிருக் கிறார்கள். இந்தக் கடவுளுக்கெலலாம் வாழ்க்கை வரலாறுகள் இருக்கின்றன. இவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளெல்லாம் திருவிழாக் களாகக் கொண்டாடப்படுகின்றன. எனவே, மாற்று வேதங்களும், வேற்று மதங்களும் கூறுகின்ற 'ஒரே ஒ கடவுள்' பற்றி இந்து வேதாகமப் பாடசாலை மாணவிகள் எழுப்புகின்ற எண்ணற்ற கேள்விகளுக்கு விடையே இல்லாமல் இருக்கின்றன என்பதால்; நம் நாட்டு மக்கள் இனியாவது மாற்றுவேதங்கள் பற்றியும் வேற்று மதங்கள் பற்றியும் அறிவுப்பூர்வமாக இந்து வேதமும், இந்து மதமும் கூறுகின்ற அருளுலகச் செய்திகளின் அடிப்படையில் சிந்திக்கத் துவங்க வேண்டும், சிந்திக்கத் துவங்க வேண்டும், சிந்திக்கத் துவங்க வேண்டும், சிந்திக்கத் துவங்கியேயாக வேண்டும். அந்தச் சிந்தனைத்தீ காட்டுத்தீ போல் வானுயரக் கொழுந்துவிட்டுச் சுடர் விட்டு எரிவதோடு, வெகு வேகமாக எங்கும் பரவி காடு போல் மண்டிக்கிடக்கின்ற இந்து வேத இந்துமத 1. மறுப்புகளையும், 2 வெறுப் புகளையும், 3 எதிர்ப்புகளையும், 4 துரோ கங்களையும், 5 விரோதங்களையும், 6 இகழ்ச் சிகளையும், 7 தாழ்ச்சிகளையும், 8 வீழ்ச்சி களையும், 9 சிதைவுகளையும், 10 சீரழிவு களையும், 11 கேலிகளையும், 12 கிண்டல் களையும் 13 போலிகளையும், 14 காலிகளையும், 15 அன்னிய வேத மதத்தவர்களின் கூலிகளையும் 16 வேலி களையும், 17 கங்காணிகளையும், 18 நாத்தி கர்களையும் இருந்த இடம் தெரியாமல் எரித்துச் சாம்பலாக்கிக், காற்றில் பறந்து கரைந்து மறைந்து போகும்படிச் செய்திடும்.... இருந்த இடம் தெரியாமல் எரித்துச் சாம்பாலக்கிக் காற்றில் பறந்து கரைந்து மறைந்து போகும்படிச் செய்திடும்.... இருந்த இடம் தெரியாமல் எரித்துச் சாம்பலாக்கிக் காற்றில் பறந்து கரைந்து மறைந்து போகும்படிச் செய்திடும்.

19. நமக்கு மாற்று வேதத்தவர்களி டமோ, வேற்று மதத்தவர்களிடமோ ஊசி முனையளவு கூட வருத்தமேயில்லை, வெறுப்பில்லை, மறுப்பில்லை, பகையே யில்லை. நாம், நமது இந்து மதத் தலைவர்களிடமும், இந்துமத நிறுவன நிர்வாகங்களிடமும், இந்துமதப் பெரியவர்

களிடமும், பத்தியாளர்களிடமும், இந்து மதத்தில் உள்ள படித்த மக்களிடமும்தான் வருத்தமடைகிறோம் வருத்தமடைகிறோம். வருத்தமடைகிறோம். அதிலும் குறிப்பாக, அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியும், பதினெண் சித்தர்களின் தாய்மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் படித்துப் பட்டம் பெற்று; அவற்றின் மூலமே வாழ்க்கை நடத்துகின்ற தமிழாசிரியப் பெருமக்களிடம் தான் நமக்கு அதிக வருத்தம், அதிக வருத்தம், அதிக வருத்தம். ஏனென்றால்! ஏனென்றால்! ஏனென்றால்! பெரும்பாலும் படிப்பறிவு இல்லாதவர்களாகவும் எதையும் சிந்தித்துப் பார்க்கும் பொறுப்பும், பொறுமையும் இல்லாதவர்களாகவும், மாற்று வேதத்தவர்களுக்கும், வேற்று மதத்தவர்களுக்கும் கங்காணிகளாக, கூலிகளாக, அடிமைகளாக, எடுபிடிகளாக, பாதுகை தாங்கிகளாக, வேலிகளாகச் செயல்படுகின்றவர்களாகவும், இருக்கின்ற பகுத்தறிவுவாதிகள் என்று கூறிக் கொள்ளும் நாத்திகவாதிகளோடு சேர்ந்து கொண்டு; தமிழ்மொழி வளமாகவும், வலிவாகவும், பொலிவாகவும் வளர்த்து வைத்திருக்கின்ற இந்து வேதக் கொள்கைகளையும் இந்து மத நடைமுறைகளையும் எதிர்த்து, மறுத்து, வெறுத்து, பகைத்து, நகைத்து, கேலியும், கிண்டலும் பேசித்திரிகிறார்கள், பெரும்பாலான தமிழாசிரியர்கள், பெரும்பாலான தமிழாசிரியர்கள், பெரும் பாலான தமிழாசிரியர்கள். அதாவது, ஏறத்தாழ, முறையாக தமிழ்படித்த எல்லா தமிழாசிரியர்களுக்கும், தமிழ் மொழி இலக்கியங்களில் நூற்றுக்கு 75 விழுக்காட்டிற்கு மேல் அல்லது நூற்றுக்கு 90 பங்குக்கு மேல் இருப்பவையெல்லாம் கடவுள்களைப் பற்றியும், மத வாழ்க்கை பற்றியும், மதப் பெரியார்களின் வாழ்வியல்கள் பற்றியும், வரலாறுகள் பற்றியும், போதனைகள் பற்றியும், சாதனைகள் பற்றியும் விளக்குவனவாகத்தான் இருக்கின்றன, விளக்குவனவாகத் தான் இருக்கின்றன. விளக்குவனவாகத் தான் இருக்கின்றன என்ற பேருண்மை தெரிந்திருந்தும் இப்பேருண்மையினை மறந்தும், துறந்தும், புறக்கணித்து ஒதுக்கியும், பதுக்கியும் விட்டு; துணிச்சலாக மன சாட்சியைக் கொன்று விட்டு நாத்திக வாதத்தை பகுத்தறிவின் பெயராலும்,. சீர்திருத்தத்தின் பெயராலும் பேசித் திரிகிறார்கள். இது எப்படி என்று தெரியவில்லை, தெரியவில்லை, தெரியவில்லை, புரியவில்லை, புரியவில்லை, புரியவில்லை, புரியவேயில்லை. இவற்றை எண்ணிப் பார்த்திட்டால்; பெரும்பாலான தமிழாசிரியர்களின் சோரம் போன நிலை, போலி நிலை, கூலி நிலை, கருங்காலி நிலை, காட்டிக் கொடுக்கும் துரோக நிலை, தெளிவாகிடும், தெளிவாகிடும், தெளிவாகிடும். அதாவது, நமது தெய்வீகச் செந்தமிழ் நாட்டைப் பொறுத்தவரை நமது அகப் பண்பாட்டிற்கும், புற நாகரீகத்திற்கும் தனிமனிதவாழ்வின் ஒழுக்கத்திற்கும், குடும்ப வாழ்வின் அன்புநிறை பற்றுக்கும், பாசத்திற்கும், சமுதாய வாழ்வின் கட்டுக்கோப்பிற்கும், பிடிப்பிற்கும், உயிர்த் துடிப்புமிக்க ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், அரசியல் வாழ்வின் நீதிக்கும் நேர்மைக்கும், சட்டதிட்ட நெறி முறைக்கும், மொழிப் பற்றிற்கும், இனப்பற்றிற்கும், இன ஒற்றுமைக்கும், நாட்டுப் பற்றிற்கும் நாட்டு ஒற்றுமைக்கும் வரலாற்றுப் பூர்வமான மொழி, இன, நாட்டு அறிவிற்கும், பண்பாட்டுப் பிடிப்பிற்கும் நாகரீகப் பிடிப்பிற்கும், முழுக்க முழுக்க ஊற்றுக் கண்ணாகவும், பேராற்றல் மிக்க பாதுகாப்புச் சத்தியாகவும் விளங்குவன பதினெண் சித்தர்களின் தாய்மொழியும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளியுள்ள இந்து வேதக் கொள்கைகளும், இந்து வேத நடைமுறைகளும் தான். இப்பேருண்மைக்குச்

சான்றாகவும், ஊன்றாகவும் தான் தமிழ் இலக்கியங்களிலும், தமிழ்நாட்டுத் தெருக் களிலும், ஊர் எல்லைகளிலும் உள்ள கோயில்களிலும், வகைவகையான கடவுளர் களின் வரலாறுகளும், அக்கடவுள்களின் திருவிளையாடல்களும், அக்கடவுள்களின் அருளைப் பெற்ற அடியார்களின் வாழ்க்கை வரலாறுகளும், போதனைகளும் சாதனை களும் இலக்கியங்களாகவும் கலையழகு மிக்க சிலைகளாகவும், களி பேருவகை நல்கும் திருவிழாக்களாகவும், கோயில்களில் நிகழும் இசைப் பாடல்களாகவும், நாட்டியங்களா கவும், நாடகங்களாகவும், கூத்துக்களாகவும், கதை விரிவுரைகளாகவும்; வாழ்ந்து வருகின்றன. வாழ்ந்து வருகின்றன. வாழ்ந்து வருகின்றன. அதாவது, இந்த உலகில் தோன்றிட்ட, தோன்றிக் கொண்டிருக்கக் கூடிய அல்லது, தோன்றக்கூடிய எந்தவொரு வேதமானாலும் சரி, அல்லது வேத ஆகமமானாலும் சரி அல்லது வேத ஆகம மதமானாலும் சரி ஏட்டளவிலோ, அல்லது, நாட்டு நடை முறையிலோ அல்லது தங்கள் கோயில் கட்டிடங்களிலோ, கடவுளின் வடிவத்தையோ அல்லது கடவுளர்களின் வடிவங்களையோ அல்லது கடவுள் களையோ தொடர்பு கொண்டிட்ட மனிதர்கள் பற்றியோ செய்திகளை காண முடியாது, காணமுடியாது, காணமுடியாது, காணவே முடியாது. ஆனால், ஆனால், ஆனால், அண்ட பேரண்டமாளும் பதி னெண் சித்தர்கள், அருளூறு அமுதத் தெய் வீகச் செந்தமிழ் மொழியில் என்றென்றும் நிலைத்து இருக்கக்கூடிய இந்து வேதம் என்னும் பொருளில் இருக்கு வேதம் என்று பெயரிட்டு அருளியுள்ள இந்து வேதத்திற் குரிய முந்நூற்றுத்தொண்ணூற் நாறு நூல்களிலும், இந்து மதத்திற்கென அருளி யுள்ள முப்பத்தாறு நூல்களிலும், 8 ,84, 736 வகைப்பட்ட கோடிக்கணக்கான கடவுள்கள் பற்றிய வடிவமைப்புக்கள், வாழ்வியல் ஒழுகலாறுகள் நடைமுறைகள், விருப்பு வெறுப்புக்கள், அருஞ்செயல்கள், அருள் வழங்கிய நிகழ்ச்சிகள், அருள் பெற்றிட்ட அருளாளர்களின் பட்டியல்கள், அருளாளர்களின் வரலாறுகள், முதலியவை தெள்ளத்தெளிவாக விளக்கப்பட்டிருக் கின்றன, தெள்ளத்தெளிவாக விளக்கப் பட்டிருக்கின்றன, தெள்ளத்தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

இதுதான் தமிழ் நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் உரிய தனிப்பட்ட தன்னிகரற்ற பெருமைக்குரிய சிறப்பாகும், பெருமைக்குரிய சிறப்பாகும், பெருமைக்குரிய சிறப்பாகும். இப் பேருண்மைகளை மிகமிக எளிமையாக இப்பார் முழுதும் உள்ள படிப்பறிவே இல்லாத பாமரமக்களும் உணருமாறு விளக்கவேண்டுமென்றால்; தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு சிவாலயத்திலும், கடவுளைக் கண்டவர்கள் என்று பெயரிட்டு அறுபத்திமூன்று நாயன்மார்களின் சிலைகள், அவர்களுடைய பெயர், ஊர், பிறப்புபற்றிய குறிப்பு, முதலியவற்றுடன் வரிசையாக சிலைகளாக நிற்பதையும், நிறுத்தப் பட்டி ருப்பதையும்; இவர்களோடு, அண்மைக் காலங்களில் வாழ்ந்திட்ட பட்டினத்தார், தாயுமானவர், அருணகிரியார், இராமலிங்க அடிகளார்....... முதலியோருடைய திருக் கோயில்களையும், உலக முழுதுமுள்ள படிப்பறிவில்லாத பாமர மக்களுக்கு சுட்டிக் காட்டி விளக்கினால் போதும்; சுட்டிக் காட்டி விளக்கினால் போதும்; சுட்டிக் காட்டி விளக்கினால் போதும்; தமிழருடைய இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் ஒப்பாக, சமமாக, இணையாக எந்தவொரு வேதமோ, வேதமதமோ, இம்மண்ணுலகில், தோன்றியதில்லை, தோன்றியிருக்கவில்லை, தோன்றிடவும் முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது என்ற பேருண்மையை; படிப்பறிவில்லாத பாமர ரே, ஊசிமுனையளவு கூடத்தயக்கமோ, மயக்கமோ, கலக்கமோ, குழப்பமோ இல்லாமல் ஒப்புக் கொண்டிடுவார்கள்,

ஒப்புக் கொண்டி டுவார்கள், ஒப்புக் கொண்டிடுவார்கள். ஏனென்றால்! ஏனென் றால்! ஏனென்றால்! இந்த உலகிலுள்ள எந்தவொரு வேதத்திலும் சரி, வேதமதத் திலும் சரி கடவுளைப் பற்றிய செய்திகளும் இல்லை. கடவுளைக் கண்டவர் களைப் பற்றிய செய்திகளும் இல்லை.

*21. அன்பு இந்து மதப் பற்றாளர்களே!*

நமது பதினெண் சித்தர் மடம், பீடம் எப்பொழுதும் இலைமறைகாயாக இருந்தே செயல்பட்டிடும். அதாவது, தொன்று தொட்டு நமது பதினெண்சித்தர்மடம் 108 திருப்பதிகளிலும், 243 சத்தி பீடங்களிலும், 1008 சிவாலயங்களிலும், பதினெண் சித்தர் மடத்தால் தயாரிக்கப்பட்ட 18 வகை அருட்கலைஞர்கள், அருளாளர்கள், அரு ளுலகத் தலைவர்கள்: வாழையடிவாழை யாகச் செயல்பட்டு இந்து மதத்திற்கு வழியாக, வழிகாட்டியாக, வழித் துணையாக, வழிப்பயனாக, அனைத்துக்கும் விழியாக செயல்படும்படிச் செய்திருக்கிறது. அதா வது, இந்த பதினெண்சித்தர் மடம் பதினெட்டுப்பேர்கள் மூலம்தான் இந்து வேத நூல்களும் இந்து மதநூல்களும் ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும், வழங் கப்படக் கூடிய செயல் திட்டத்தை வகுத்திருக்கிறது. ஆனால், காலப்போக்கில் அந்நிய நாடுகளில் தோன்றக்கூடிய வேதங்களும், அவற்றிற்குரிய வேத மதங்களும், நமது இந்து வேதத்தையும், வேத மதத்தையும் சிறுகச்சிறுகப் பாதித்து அப் பாதிப்புக்களால் இந்து வேத வாழ்வியல் களும், இந்து மத நடைமுறைகளும், இந்து மதத்தின் நிறுவன நிர்வாகங்களும், இந்துக்களும் மிகப்பெரிய அளவில், பாதிப்புக்களைப் பெற்று; இனிமேல், <u>'இந்து மதம்', இறந்திடுமா? மறந்திடுமா?</u> என்ற கேள்விக்குரிய நிலை, ஏற்படும்பொழுது, தான்; பதினெண்சித்தர் மடத்தில் வாழையடி வாழையாக வருகின்ற ஞால குரு சித்தர் கருவூறாரின் பாரம்பரியத்தில் மடாதிபதியாக, பீடாதிபதியாக, அருளாட் சிப் பொறுப்பேற்பவர்கள் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் பாது காப்பதற்குரிய முயற்சியில் ஈடுபடுவார்கள். இம் முயற்சி கூட மாற்று வேதங்களோடோ, வேற்று மதங்களோடோ, போராடுவதாக அமைவதில்லை, அமைந்ததில்லை, அமை யாது. அதாவது உலக வேதங்களுக் கெல்லாம் மூல வேதமாக, முதல் வேதமாக, தாய் வேதமாக, அடிப்படை வேதமாக கடவுள்களாலேயே எழுதப்படுகின்ற வேதமாக, இருக்கின்ற இந்து வேதத்தின் கருத்துக்களை; இந்துக்களாக இருக் கின்றவர்களுக்கு மட்டும் முதலில் எடுத்துக் கூறி அவர்கள் இந்துவேத ஞானத்தைப் பெற்று மெய்யான இந்துக்களாக வாழுமாறு செய்யும், பதினெண்சித்தர்மடம். அப் பொழுதே, அமைதியான முறையில், அன்பான வழியில் (இந்து வேதத்தின் கருத்துக்களை) பொது இடங் களில் பதினெண்சித்தர் மடத்து இந்து வேதாகம பாடசாலையில் படித்துப்பட்டம் பெற்ற வர்களும், இந்து வேதாகம பாடசாலையின் போதகர்களும், ஆசிரியர்களும், ஆசான் களும், ஆச்சாரியர்களும் இந்து வேதத்தின் கருத்துக்களை, இந்து வேதாகம விளக்க அருளுரையாக வழங்குவார்கள். அப்படி வழங்கப்படும் அருளுரைகளின் மூலம் மாற்று வேதத்தவர்களும், வேற்றுமதத் தவர்களும் தங்களை உரிய திருத்தங்களுக்கு ஆளாக்கிக் கொள்வார்கள். அதன் பிறகு, இந்து வேத ஞானத்தால், இந்துக்கள், மிகத் தெளிவான, இந்துமத வாழ்க்கையை வாழ ஆரம்பித்திடுவார்கள். இவர்களைப் போலவே மாற்று வேதத்தவர்கள் இந்து வேதாகம விளக்கங்களின் மூலம் எவ் விதமான எரிச்சலோ! எதிர்ப்புணர்வோ! மறுப்புணர்வோ! வெறுப்புணர்வோ! பகையுணர்வோ! வஞ்சஉணர்வோ! போராட்ட உணர்வோ! வறட்டுப் பிடிவாத

உணர்வோ! இல்லாமல் தங்கள் தங் களுடைய வேதாகமங்களை தங்கள் தங்களுடைய நாட்டு எல்லைக்குள், இன எல்லைக்குள், மொழி எல்லைக்குள் மட் டுமே செயல்படுத்த வேண்டு மென்பதை உணர்ந்து தங்கள் தங்களுடைய மதத்தை தங்கள் தங்களுடைய நாட்டுக்கு மட்டுமே உரியதாக ஆக்கிக் கொண்டு விடுவார்கள். அதனால், உலக மதங்களின் விடுதலை, உலக நாடுகளின் விடுதலை, உலக மொழிகளின் விடுதலை,, உலக இனங்களின் விடுதலை, உலகப் பண்பாடுகளின் விடுதலை, உலக நாகரீகங்களின் விடுதலை.... முதலிய விடுதலைகள் அனைத்தும் மலர்ந்து, அவற்றின் மூலம் பதினெண் சித்தர் களுடைய இந்து வேதக் கொள்கையான 'உலக ஆன்ம நேய ஒருமைப்பாடும்', 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயமும்' 'உலகச் சமாதான வாழ்வும்' 'உலக அமைதியும்' 'உலக ஒற்றுமையும்'. . உருவாகிடும், உருவாகிடும், உருவாகிடும். அதன் மூலம் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு என்ற நான்கு வகைப்பட்ட வாழ்விலும், *(1)* குடும்ப ஆண்டவர் *(2)* குலதெய்வம் *(3)* கிராமத்தேவர் தேவதை, *(4)* நாட்டுக் கடவுள் எனும் நால்வரும் நன்கு போற்றிப் பேணப்பட்டு நன்மைகள் செழித்திடும். அப்பொழுது, காற்று, கருப்பு, பேய், பிசாசு, எனும் நால்வரும் கட்டுப் படுத்தப்பட்டு, அவர்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் அனைத்தும் குறைக்கப்பட் டிடும், மக்களும், அறவி வாழ்க்கை, உறவி வாழ்க்கை; துறவி வாழ்க்கை, மறவி வாழ்க்கை எனும் நான்கு வாழ்க்கையின் பயன்களை நன்கு தெரிந்து புரிந்து தெளிந்து அவரவர் விருப்பம் போல்; எவர் வேண்டுமானாலும், எந்தவித வாழ்க்கையை வேண்டுமானாலும் விருப்பம் போல் ஏற்று வாழ்வதற்குரிய எல்லாவகையான வசதி வாய்ப்புக்களும் சமூதாயச் சம்மதத்தோடு, அரசியல் பாதுகாப்போடு, குடும்ப வாழ்வினரின் உதவியோடு, பராமரிப்போடு நிகழ்ந்திடும் நிகழ்ந்திடும், நிகழ்ந்திடும், நிகழ்த்தப்பட்டிடும் நிகழ்த்தப்பட்டிடும், நிகழ்த்தப்பட்டிடும். இப்படிப்பட்ட விடு தலை வாழ்வு, உரிமை வாழ்வு, பெருமை வாழ்வு மனித சமுதாயத்தில் மலர்ந்து மணம் பரப்பிட வேண்டும் என்பதற்காகத்தான் பதினெண் சித்தர்கள், இந்து வேதத்தின் மூலம், இருக்கு வேதம், அசுர வேதம், யாம வேதம், அதர்வான வேதம் என்ற நான்கு வேதங்களையும் அருளுலக இலக்கியங் களாக வழங்கியது போல்; பொருளுலக இலக்கியங்களாக கதை, காதை, கவிதை, கீதை என்ற நான்கு வகைப்பட்ட அருளுலக இலக்கியங்களையும் வழங்கியிருக்கிறார்கள். இவற்றைக் கொண்டு, "இந்துக்கள் நிறை வாழ்வு வாழ்ந்து உலகோரின் குறைபோக்கு பவர்களாக வாழவேண்டும்" ஆனால்! ஆனால்!! ஆனால்!!! இன்றைக்கு, அந்நிய நாடுகளிலிருந்து மாற்று வேதத்தவர்களும், வேற்று மதத்தவர்களும் இந்துக்களின் குறைபோக்க வருவதாகத் தொடர்ந்து படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து படை யெடுத்துக் கொண் டிருக்கிறார்கள், தொடர்ந்து படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே தான், இந்து வேதாகம பாடசாலை இப்பொழுது துவக்கப்பட்டு இந்து வேதாகம விளக்கப் பணிகள், நமது குருதேவர், அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியாரால் பதினெண் சித்தர் மடத்துக்கும் பீடத்துக்குமுரிய குருபாரம்பரிய மரபுப்படி, *1)* அருளு ரைகளாக, *2)* அறிவுரைகளாக, *3)* அருளார்ந்த அறிவுரைகளாக, *4)* அறிவார்ந்த அருளுரைகளாக நாடு முடுதும் முழக் கப்படுகின்றன. இவற்றின் செயல் வடிவங் களாக 'சித்தர் கருவூறார் அருட்கோட் டங்கள்' நாடு முழுதும் அமைக்கப்பட்டு *1.* இருக்கு வேதயாக சாலைகள், *2.* அசுர வேதயாக சாலைகள் *3.* யாம வேதயாக சாலைகள் *4.* அதர்வான வேதயாக

சாலைகள் என்று நான்கு வகைப்பட்ட யாகசாலைகள் அமைக்கப்பட்டு அருளை அனுபவப் பொருளாக, மருந்தாகவும், விருந்தாகவும் வழங்குகின்ற பணி அருட் பணி விரிவாக்கத் திட்டமாக வியூகம் பெற்றிருக்கின்றது. அதாவது, இந்து வேதீத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய நோய், நொடி, தொல்லை, துன்பம், தோல்வி, இழப்பு, ஏமாற்றம்...... முதலியவைகளுக்குரிய காரண காரியங் களைக் கண்டுபிடித்து; அவற்றிற்குரிய விளக்கங்களையும், பாதிப்பு நீக்கு பரிகாரங் களையும் வழங்குகின்ற நெறிமுறை களும், வழிவகைகளும் பதினெண் சித்தர்களின் இந்துமதத்தில்தான் இருக்கின்றன, பதி னெண் சித்தர்களின் இந்துமதத்தில்தான் இருக்கின்றன, பதினெண்சித்தர்களின் இந்துமதத்தில்தான் இருக்கின்றன; என்ற இப் பேருண்மையினை; உலகுக்கு உணர்த்தும் பணியில் தான் உங்களைப் போன்றோர் ஈடுபட்டுள்ளீர்கள் என்பதை நீங்கள் எல்லாம் புரிந்து செயல்பட்டிட்டால்தான் உரிய பயன்கள் பெரிய அளவில் விளைந் திடும், விளைந்திடும், விளைந்திடும். எனவே, இறுதியாக நாம் மாற்று வேதத்தவரை, வேற்று மதத்தவரை மனம் புண்படாமல் சிந்திக்கச் செய்வதற்காக இந்து வேத வழியில் நின்று "கடவுள், மதம், என்ற இரண்டும் அந்தந்த நாடு, மொழி, இனம் என்ற எல்லைக்குள்தான் இருக்க முடியும், இருக்க வேண்டும்", என்ற பேருண்மையை அடுத்து விளக்குகின்றோம்.

*22. அன்பு இந்து மதப் பற்றாளர்களே!*

நமது இந்து வேதம் என்பது *396* நூல்களாக இருந்த போதிலும், இருக்கு வேதம் என்ற ஒன்றே ஒன்று தான் அனைத்துக்கும் அடிப்படை. இதில்*110592* உரைக்கோவைகள்; அதாவது, தனித்தனி யான செய்திகள் பட்டியலிடப்பட்டுத் தரப்படுகின்றன. இவைகள் தான், மக்களுக்கு, காதுக்குள் மட்டும் கூறக் கூடியவை வாக்கு என்றும்; குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் எழுதிக் காட்டப்படக் கூடியவை வாக்கியம் என்றும்; எல்லோ ருக்குமே படிப்பதற்கு தரக்கூடியவை வாசகம் என்றும் மூன்று பெரும் பிரிவுகளைப் பெற்றிருக்கின்றன. முதல் பதினெண் சித்தர் மடாதிபதியும், பீடாதிபதியுமான ஆதி சிவனார், தன்மனைவி மலைமகளுக்கும், மகன் முருகனுக்கும் இந்த இருக்குவேதத்தை பாடம் சொல்லும் போதுதான் இருக்கு வேதத்தை எளிமைப்படுத்தக் கருதி வாக்காக இருப்பவைகளை அசுர வேதம் என்றும், வாக்கியங்களாக இருப்பவைகளை அதர் வான வேதம் என்றும், வாசகங்களாக இருப் பவைகளை யாமவேதம் என்றும் மூன்று தனித்தனி வேதங்களாகப் பிரித்தார். ஆனால், அண்ட பேரண்டமாளும் பதி னெண்சித்தர்கள் அருளுலகப் பயன்கள் கருதி என்றென்றும் இருக்கக் கூடிய இந்து வேதத்தை இருக்கு வேதம் எனப் பெயரிட்டு *1,10,,592* என்ற எண்ணிக்கைக்குரிய உரைக் கோவைகளாக, அதாவது, தனித்தனி செய்திகளாக எழுதியதால்; ஆதி சிவனார் *(1)* அண்டபேரண்டமாளும் மூலப் பதினெண் சித்தர்கள் *(2)* மூலப்பதினெட்டாம் படிக் கருப்புகள் எனும் இருவகையினரையும் துணைக்கு அழைத்துக் கொண்டு, அவர்கள் இம்மண்ணுலகுக்கு அனுப்பப்பட்ட *(3)* நாற்பத் தெட்டு வகைப்பட்ட கடவுள்கள் *(4)* *48* வகைப்பட்ட வழிபடு நிலையினர்கள் *(5)* *48* வகைப்பட்ட சித்தர்கள் எனும் மூவர் குழுவையும் சேர்த்து ஓர் ஐவர் குழுவை உருவாக்கி அந்த ஐவர் குழுவின் பெரு முயற்சியால் இருக்கு வேதத்தில், கிடைத்த வாக்குகளை வைத்துக் கொண்டு அசுர வேதத்திற்கென *1,10,592* . தனித்தனி வாக்குகளை உருவாக்கி அசுர வேதத்தை உருவாக்கினார். இதைப் போலவே, இருக்கு வேதத்தில், கிடைத்த வாக்கியங்களை வைத்துக் கொண்டு *1,10,592* வாக்கியங்களை உருவாக்கி அதர்வான வேதத்தையும், இருக்கு வேதத்தில் கிடைத்த வாசகங்களை வைத்துக் கொண்டு *1,10,592* வாசகங் களை உருவாக்கி யாம வேதத்தையும்

உருவாக்கினார். அதாவது இருக்கு வேதத்தின் விளக்கமாகத்தான், விரிவுரையாகத்தான் நுட்ப திட்ப உரையாகத்தான் மற்ற மூன்று வேதங்களும் அமைந்திருக் கிருக்கின்றன.

**இருக்கு வேதம் 9999**

1. ஓர் இனத்துக்குரிய கடவுள்கள்; அந்த இனத்தவர்களை மட்டுமே பாதுகாத்திடு வார்கள்.

2. ஒரு மொழிக்குரிய கடவுள்கள்; அந்த மொழிக்குரியவர்களை மட்டுமே பாதுகாத் திடுவார்கள்.

3. ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள்; அந்த நாட்டவர்களை மட்டுமே பாதுகாத்தி டுவார்கள்.

**அசுர வேதம் 9999**

1. ஒரு குடும்பத்துக்குரிய ஆண்டவர்கள்; அந்தக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களை மட் டுமே பாதுகாப்பார்கள்.

2. ஒரு குலத்துக்குரிய தெய்வங்கள்; அந்தக்குலத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமே பாதுகாப்பார்கள்.

3. ஒரு கிராமத்துக்குரிய தேவர் தேவதைகள்: அந்தக்கிராமத்துக்குரியவர் களை மட்டுமே பாதுகாப்பார்கள்.

4. ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள்; அந்த நாட்டுக்குரியவர்களை மட்டுமே பாது காப்பார்கள்.

**யாம வேதம் 9999**

1. ஒரு மொழிக்குரிய கடவுள்கள்; அந்த மொழியிலேயே கூறப்படும்பூசைமொழி களையும், பாடப்படும் பாடல்களையும், விடுவிக்கப்படும் வேண்டுகோள்களையும் மட்டுமே ஏற்று அருள் புரிந்து பாதுகாப் பளித்திடுவார்கள்.

2. ஓர் இனத்துக்குரிய கடவுள்கள்; அந்த இனத்தாருக்குரிய உடை, உணவு, உறவு முதலிய பழக்க வழக்கங்களையே விரும்பி ஏற்று அருள் புரிந்து; தங்கள் இனத்தவரை மட்டுமே பாதுகாத்திடுவார்கள்.

3. ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள்; அந்த நாட்டின் எல்லைக்குள்ளேயே, தாங்கள் வாழும் கோயில்களுக்குள்ளேயே இருந்து அருள் புரிந்து; தங்கள் நாட்டவரை மட்டுமே பாதுகாத்திடுவார்கள்.

**அதர்வான வேதம் 9999**

1. ஒரு மொழிக்குரியவர்களின் கடவுள்கள், வேற்றுமொழிகளைக் கற்றுக் கொள்ளமாட்டார்கள்; மாற்று மொழியி னரை ஏற்றுப்பாதுகாக்கமாட்டார்கள்'

2. ஓர் இனத்துக்குரியவர்களின் கடவுள்கள், வேற்று இனத்தவர்களைத் தெரிந்து கொள்ள மாட்டார்கள்; மாற்று இனத்தவரை ஏற்றுப் பாதுகாக்கமாட் டார்கள்;

3. ஒரு நாட்டுக்குரியவர்களின் கடவுள்கள் வேற்று நாட்டுக்குவர மாட்டார்கள்; மாற்று நாட்டாரை ஏற்றுப் பாதுகாக்கமாட்டார்கள்.

இவற்றை இன்றைய உலகில் மதத்தின் பெயராலும், கடவுளின் பெயராலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய பிரிவினைகள், போட்டி, பொறாமைகள், பகைமைகள், வெறுப்புகள், மறுப்புகள் எதிர்ப்புகள், ஆக்கிரமிப்புகள், மதமாற்று வெறிகள், சண்டை சச்சரவுகள், போராட்டங்கள், இழிவு அழிவுகள், போர்கள்..... முதலிய அனைத்தையும் அகற்றுகின்ற மாபெரும் பணியை; இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு அருளிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியும், இந்து மதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியும், நான்குயுக நாயகமும், பரப்பிறம்மமும், இந்து வேத நாயகமும், இந்துமதத் தந்தையும். அனாதி ஆதி கடந்த தம்பிரான் அடிகளாரும், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியாருமான சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் துவக்கியுள்ளார். அந்நிய நாடுகளிலிருந்து

வந்திருக்கக்கூடிய மதங்களும், கடவுள்களும், இந்த நாட்டுக்குரிய கட்டிடக் கலை அமைப்புப்படி தங்களுக்குரிய கோயில்களைக் கட்டிக் கொள்ள மறுக்கின்றன, வெறுக்கின்றன, எதிர்க்கின்றன. அதாவது, பிடிவாதமாக இந்த மதங்களும் கடவுள்களும் தாங்கள் பிறந்த நாட்டுக்குரிய கட்டிடக்கலையைத்தான் விரும்புகின்றன, ஒப்புக்கொள்கின்றன. இதைப் போல வேதான், அந்நியநாடுகளிலிருந்து வந்திருக்கக்கூடிய மதங்களும் கடவுள்களும் இந்த நாட்டில் தொன்றுதொட்டு, காலங் காலமாக, பாரம்பரியமாக, பண்பாட்டின் கூறுபாடாகவும், நாகரீகத்தின் கூறுபாடாகவும் இருக்கின்ற உடைவகைகளையும், உறவுமுறைப் பழக்கவழக்கங்களையும், உணவு வகைகளையும், இசைவகைகளையும், பூசைக்குப் பயன்படுத்துகின்ற பொருள்களையும், ஏற்றுக்கொள்ள, ஒப்புக்கொள்ள பயன்படுத்திக் கொள்ள மறுக்கின்றன, வெறுக்கின்றன, எதிர்க்கின்றன, பகைக்கின்றன, இழித்துப் பழித்துப்பேசுகின்றன, இப்படி அந்நிய நாடுகளிலிருந்து வந்துள்ள ஒவ்வொரு மதமும், ஒவ்வொரு கடவுளும், பிடிவாதமாக, தங்களுடைய நாட்டுக்குரிய தனித்தன்மைகளையே நம்நாட்டில் புகுத்திடவும் வளர்த்திடவும் முயலுகின்றன புகுத்திடவும் வளர்த்திடவும், முயலுகின்றன. புகுத்திடவும் வளர்த்திடவும் முயலுகின்றன. எனவே தான்!!,! எனவே தான்!!!,,,, நம் நாட்டில் நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும், இனப்பற்றும் பண்பாட்டுப் பிடிப்பும், நாகரீகப் பிடிப்பும், ஒற்றுமையும் ஒருமைப்பாடும், சமுதாயக் கட்டுக்கோப்பும்.... பெருமள்வில் சிதைந்து, சீரழிந்து, எல்லாத் துறைகளிலும் எல்லா நிலைகளிலும் கவலைக்குரிய அச்சத்துக்குரிய அழிவுக்குரிய நிகழ்வுகளே, செயல்களே, நிலவுகின்றன. நிலவுகின்றன, நிலவுகின்றன, அல்லது விளைந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட இக்கட்டான நிலைகளை உணர்ந்துதான் நமது ஞாலகுரு, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் இந்து வேத ஆகம பாடசலையில் தொடர்ச்சியாகப் போதனைகளை நிகழ்த்தப்படுவதை நிறுத்தி விட்டார், நிறுத்தி விட்டார், நிறுத்தி விட்டார். எப்பொழுதாவதுதான், இந்து வேத ஆகம பாடசாலையில் போதனைகள் நிகழுகின்றன, பாடங்கள் நடைபெறுகின்றன, வேதங்கள் ஓதப்படுகின்றன, வேதங்கள் ஓதப்படுகின்றன, வேதங்கள் ஓதப்படுகின்றன. வேதப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அளிக்கப்படுகின்றன, அளிக்கப்படுகின்றன. ஆனால், ஆனால், ஆனால், நமது ஞாலகுரு அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் வேதம் ஓதிகளையும், வேத வித்துக்களையும், வேதவிற்பண்ணர்களையும், வேதவாத்தியார்களையும், வேத ஐயர்களையும், வேத சாத்திரியார்களையும், வேதசூத்திரியார்களையும், வேத தோத்திரியார்களையும், வேத நேத்திரியார்களையும், வேத வேத்திரியார்களையும், வேத ஆச்சாரியர்களையும், வேத போதகர்களையும், இந்து வேதாகமப் பாடசாலையின் மாணவ மாணவியர்களையும், நாடுமுழுவதும் சென்று நமது கோயில்களிலும், பத்தியுள்ளம் கொண்டோர் கூடுமிடங்களிலும், நமது இந்து வேதமத ஈடுபாடுள்ள நிறுவனங்களிலும், நிர்வாகங்களிலும் இந்து வேத ஞானத்தை, இந்து வேத அறிவை, இந்து வேத சிந்தனையை, இந்து வேத உணர்வை, இந்து வேதஈடுபாட்டை, இந்து வேத நாட்டத்தை இந்து வேத விருப்பத்தை வளர்க்கும் பணியில் ஈடுபடும்படிச் செய்துள்ளார், வளர்க்கும் பணியில் ஈடுபடும்படிச் செய்துள்ளார், வளர்க்கும் பணியில் ஈடுபடும்படிச் செய்துள்ளார். இப்பணி அணி பெற்றால்தான், இந்து வேதாகம பாட சாலை கோயில்கள் தோறும் நிறுவப்படும். மாவட்டங்கள் தோறும் அல்லது வட்டங்கள் தோறும் இந்து வேதாகமத்திற்கென குருகுலங்கள், திருகுலங்கள், தருகுலங்கள் உருவாக்கப்பட்டு இவை மூன்றும் கருகுலத்தின் தலைமையின் கீழ் இயங்கி நமது முன்னோர்களான

முனிவர்களும், இருடிகளும், மகான்களும், ஞானிகளும், தவசிகளும் உருவாக்கிச் சென்றுள்ள நமது வாழ்வியல் மதிப்பீடு களும், பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளும், நாகரீக வெளிப்பாடுகளும் விழிச்சி பெறும், ,விழிச்சி பெறும், விழிச்சி பெறும், எழிச்சி பெறும் எழிச்சி பெறும், எழிச்சி பெறும், பயிற்சிக்குரிய– னவாகிடும் பயிற்சிக்குரியனவாகிடும், பயிற்சிக்குரிய னவாகிடும். அதனால் உ.யர்ச்சி மிக்க செழுச்சி விளைந்திடும் அப்பொழுதுதான், அப்பொழுதுதான், அப்பொழுதுதான் நமக்கேற்பட்டுவிட்ட வீழ்ச்சிகளும், தாழ்ச் சிகளும், இகழ்ச்சிகளும் அகற்றப்பட்டு மாட்சிமிகு ஆட்சிநிலை நமக்கு ஏற்பட்டிடும் ஏற்பட்டிடும், ஏற்பட்டிடும். நாம், நம் மக்களிடம், 'இந்துமதம் இறந்திடுமா? மறந்திடுமா?' என்ற வினாவை எழுப்பி இந்து வேதச்சிந்தனைகளையும், இந்துமதச் சிந்த னைகளையும் வளர்க்கவேண்டும், வளர்க்க வேண்டும், வளர்க்க வேண்டும். அதற்காக, "நமது இந்து வேதம் கூறுகின்ற "அந்தந்த நாட்டு மக்கள் தங்கள் தங்களின் மொழிக்கும் இனத்துக்கும் உரிய மதமும், கடவுளும்; தங்கள் தங்களுடைய நாட்டவருக்கு மட்டும்தான் பயன்பட்டிடும், பயன்பட்டிடும், பயன்பட்டிடும்" என்ற கருத்தை நம் நாட்டவர்களாவது நன்கு தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி, ஏற்றுக்கொண்டு செயல்பட்டிட முன்வருமாறு செய்ய வேண்டும், முன் வருமாறு செய்யவேண்டும், முன் வருமாறு செய்ய வேண்டும்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!
ஓம் தென்னாடுடைய சிவனேபோற்றி!
ஓம் எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி!
ஓம் அரகற நமப்பார்வதி பாதமேபோற்றி!
ஓம் அரகற மகாதேவப் பாதமேபோற்றி!

**பின்னுரை:-**

நமது கொள்கை என்ன? குறிக்கோள் என்ன? என்று கேட் பவர்களிடம் படித்துக் காட்டுங்கள். நம்மைச் சேர்ந்தவர்களுடைய வீட்டு நிகழ்ச்சி களிலும், ஊர்த்திரு விழாக்களிலும், பொது நிகழ்ச்சிகளிலும், கல்விச் சாலைகளிலும், படித்துக் காட்டுங்கள். நம்மவர்கள் சென்று சந்திக்கக் கூடிய பெரிய மனிதர்களிடம் படித்துக் காட்டுங்கள். அப்பொழுதாவது, நாம் எதிர்பார்க்கின்ற அல்லது நமக்குத் தேவையான தொண்டர்களும், ஆதரவாளர் களும், உதவியாளர்களும், ஏந்தாளர்களும், கிடைப்பார்களா?! என்று பார்ப்போம். அதுமட்டுமல்ல, அதுமட்டுமல்ல, அதுமட்டு மல்ல; நம்மவர்களுக்கிடையிலே கணிசமான அளவு நம்முடைய இந்து மறுமலர்ச்சி இயக்கம், நமது இந்து முன்னேற்ற கழகம், நமது அருட்பணி விரிவாக்கத் திட்டம், நமது வழிபாட்டு மன்றங்கள், நமது கருத்துப் பரிமாற்ற சிந்தனை அரங்குகள், நமது கருகுலத் திருவிழாக்கள், குருதேவரின் சுற்றுப் பயண, அருட்பணிகள்.... முதலிய வற்றிற்குரிய அடிப்படையான, உள்ளீடான, உயிரோட்டமான கொள்கைகளும், குறிக் கோள்களும், நோக்கங்களும், போக்குகளும் முழுக்க முழுக்க நமது இந்து வேத நூல்களிலும் இந்து மத நூல்களிலும் தான் இருக்கின்றன; நமது இந்து வேத நூல்களிலும் இந்து மத நூல்களிலும்தான் இருக்கின்றன நமது இந்து வேத நூல்களிலும் இந்து மதநூல்களிலும் தான் இருக்கின்றன என்ற பேருண்மை தெரியவே தெரியவில்லை, புரியவே புரியவில்லை. இல்லாவிட்டால், இந்து மதம் இருக்குமா?! இறக்குமா?! இந்துமதம் இருக்குமா?! இறக்குமா?! இந்து மதம் தேவையா?! இல்லையா?! என்ற வினாக்கள்; மாற்று மதத்தவர்களிடம் எழுவதைவிட இந்துக்களிடம்தான் அதிக மாக எழ நேரிடும், எழநேரிடும், எழநேரிடும். அதனால், என்றாவது ஒருநாள் எதிர் பாராதது எதுவும் நிகழலாம், நிகழலாம், நிகழலாம். அதை எண்ணியாவது, இந்துப் பற்றாளர்கள் மிகப் பெரிய தியாகங்களைச் செய்து வீடுவீடாக, தெருத்தெருவாக கிராமம் கிராமமாக நமது பணிகள் அணி பெறும்படி முயற்சி செய்யுங்கள், முயற்சி செய்யுங்கள், முயற்சி செய்யுங்கள்.

# இந்து வேதமும், இந்து மதமும் அருளப்பட்ட முத்தமிழ் மொழி

பதினெண் சித்தர்களின் தாய்மொழியும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழி; 'முத்தமிழ் மொழி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுத் திகழ்வது பற்றிய காரணங்கள் இந்துவேதமான இருக்குவேதத்தில் மிகமிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன,

அதாவது,

1. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழிதான் எல்லா வகையான தரங்களையும், திரங்களையும், திறங்களையும் பெற்றுத் திகழ்கிறது என்பதனால் முத்தமிழ் மொழி என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது' என்றும்;

2. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியின் எழுத்துக்களில் மெய்யெழுத்துக்கள் எனப்படும் இம்மொழிக்கு உடல்போன்ற எழுத்துக்கள் வல்லினம், மெல்லினம் இடையினம் என்ற மூன்று பெரும்பகுப்புக்களைப் பெற்றுத் திகழ்வதால்தான், முத்தமிழ்மொழி என்று சிறப்பாகக் குறிக்கப்படுகிறது' என்றும்;

3. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ்மொழியின் உயிரெழுத்துக்கள் எனப்படும் இம்மொழிக்கு உயிர் போன்ற எழுத்துக்கள்; குறில் என்றும் (குட்டெழுத்துக்கள்) நெடில் என்றும் (நெட்டெழுத்துக்கள்) ஆயுதம் (ஆயுத எழுத்து) என்ற மூன்று பெரும் பகுப்புகளைப் பெற்றுத் திகழ்வதால் "முத்தமிழ் மொழி" என்று சிறப்பாகப் பாராட்டப் படுகிறது' என்றும்;

4. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ்மொழி மனிதர்கள் பெற்றுத் திகழும் ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றின் வடிவமைப்புக்களையும் வாழ்வியல் நிலைகளையும் இவை மூன்றும் இணைந்துதான் சீவன் உருவாகின்றது என்ற பேருண்மையினையும் தெள்ளத்

தெளிவாக, துல்லிசமாக, திட்டவட்டமாக, நுட்பமாக, வரையறுத்து ஒட்பத்துடன் விளக்குவதால் முத்தமிழ்மொழி என்று போற்றப்படுகின்றது என்றும் இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியில்தான் மனிதரில் காணப்படுகின்ற ஆண், பெண், அலி என்ற மூன்று வகைப்பட்டவர்களுடைய சிவனை முறையே சிவலிங்கம், சத்திலிங்கம், இலிங்கம் என்று வகைப்படுத்திப் பெயரிட்டுக் காட்டப்படுகின்றன என்பதால் முத்தமிழ் மொழி என்று சீராட்டப் படுகின்றது' என்றும்;

5. 'இந்த அருளூறு அமுத தெய்வீக செந்தமிழ்மொழியில் தான் மனிதருக்கு, முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு என்ற மூன்று வகைப்பட்ட பிறப்புக்கள் உண்டு என்ற பேருண்மை திட்டவட்டமாக, அழுத்தந்திருத்தமாக, ஆணித்தரமாக விளக்கப்படுகிறது என்பதால் முத்தமிழ்மொழி என்று புகழப்படுகிறது என்றும்',

6) 'இந்த அருளூறு அமுத தெய்வீக செந்தமிழ் மொழியில்தான் குழந்தை பிறதந்வுடன் அக்குழந்தை எப்போது இறக்கும்? எப்படியெப்படி வாழும்? என்னென்ன சாதனைகளையும், போதனைகளையும் உருவாக்கும்? என்னென்ன வயதில் என்னென்ன வகையான இன்பங்களையும், துன்பங்களையும், இழப்புக்களையும், ஈட்டங்களையும், நன்மைகளையும், தீமைகளையும், அழிவுகளையும், செழிப்புகளையும், மெலிவுகளையும், வலிவுகளையும், நலிவுகளையும் பொலிவுகளையும், நோய்களையும் நொடிகளையும்... என்று கணித்திடுவதற்குரிய ஐந்தர நூல்களையும், ஐந்திர நூல்களையும், ஐந்திற நூல்களையும் பெற்றுத் திகழ்கிறது என்பதால் முத்தமிழ்மொழி என்று சிறப்பாகக் குறிக்கப்படுகிறது என்றும்,

7) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் உயிர் (பசு), இறை(பதி), தளை (பாசம்), என்ற முப்பெரும் உண்மைகள் சான்றுகளோடும், ஊன்றுகளோடும் தெள்ளத் தெளிவாக விளக்கப்படுகிறது என்பதால் முத்தமிழ் மொழி என்று புகழ்ந்து போற்றிக் குறிக்கப்படுகிறது என்றும்',

8) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் அருளுலகச் சத்தியினை, உள்ளத்து உணர்வினைப் பெறும் சத்தி (இச்சாசத்தி), உடலின் உழைப்பால் பெறும் சத்தி (கிரியா சத்தி), அறிவின் உழைப்பால் பெறும் சத்தி(ஞான சத்தி) என்று மூன்று பெரும் வகையாகப் பகுத்துக் காட்டப்படுகிறது என்பதால் முத்தமிழ் மொழி என்று சீராட்டிப் பாராட்டப்படுகிறது. என்றும்',

9) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியில்தான் மனித வாழ்க்கையில் துய்க்கக்கூடிய, துய்ப்பதற்குரிய பக்குவமான போக நிலை, ஒருவனுக்கு உருவாவதற்கு அவனுடைய ஓகநிலை, யோகநிலை, மோகநிலை என்ற மூன்றும் உரிய அளவு அமைய வேண்டும்

அல்லது பெரிய அளவு அமைய வேண்டும் அல்லது உருவாக்கப்பட வேண்டும் அல்லது அமைக்கப்பட வேண்டும் என்ற விளக்கம் வழங்கப்படுவதால்; அதாவது செந்தமிழ் மொழியில்தான் ஓகநிலை, யோக நிலை, மோக நிலையும் என்ற மூன்றும் தனித்தனியாகப் பிரித்து விளக்கப்பட்டு அல்லது இந்த மூன்றும் சரியான அளவில், சரியான பக்குவத்தில் உரிய முறைகளில் ஒன்று சேர்ந்துத்தான் போகநிலை உருவாகிறது என்ற முப்பெரும் கொள்கை, முப்பெரும் பேருண்மை அல்லது முப்பெரும் தத்துவம் விளக்கப்படுவதால்தான் முத்தமிழ் மொழி என்று பாராட்டிச் சீராட்டப்படுகிறது' என்றும்,

10) இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியில் தான்; மனிதன் செலுத்துகின்ற பத்திக்குரிய பயன் சத்தி, சித்தி, முத்தி என்ற மூன்று கட்டங்களில் கிடைக்கின்றன அல்லது மனிதன் முத்தி பெறுவதற்கு அதாவது முழுமை பெறுவதற்கு பத்தி, சத்தி, சித்தி என்ற மூன்று நிலைகளை அல்லது படிகளை கடந்தாக வேண்டும் என்று அருளுலகச் செயல் நிலையில் உள்ள முப்பெரும் நிலைகள் பத்தியை அடிப்படையாகக் கொண்டும் விளக்கப்படுவதால் தான் முத்தமிழ் மொழி என்று புகழ்ந்து பாராட்டப் பெறுகிறது' என்றும்,

11) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் தான்; மனித வாழ்க்கையில் மனிதன் ஆற்றுகின்ற செயல்கள் அதாவது செய்கின்ற வினைகள் 'ஆள் வினை' எனப் பெயரிடப்படுகிறது. இந்த ஆள்வினை மனிதனுடைய ஏட்டறிவினாலோ, பட்டறிவினாலோ, தொடர் முயற்சியாலோ வெற்றி பெறுவதில்லை, முழுமை பெறுவதில்லை என்பதுதான் உண்மை. இந்த உண்மையை மிகத் தெளிவாக 'ஆள்வினை' என்பது ஊழ்வினை, விதி, சூழ்வினை என்ற மூன்றாலதான் வெற்றி பெறுகிறது, முழுமை பெறுகிறது என்று திட்டவட்டமாக, தெளிவாக, விளக்கமாக வரையறை செய்து கூறுவதால்தான் முத்தமிழ் மொழி என்று போற்றிப் புகழ்ந்து சீராட்டப்படுகிறது' என்றும்,

12) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியில்தான் பொருளுலகப் பயன்களுக்காக இருநூற்று நாற்பத்தேழு (247) எழுத்துக்கள் என்ற ஒரு வகையும், அருளுலகப் பயன்களுக்காக எழுபத்தைந்து (75) எழுத்துக்கள் என்ற ஒரு வகையும், பொருளுலக, அருளுலக ஆட்சியினை என்றென்றும் செய்யும் அல்லது நிகழ்த்தும் பதினெண் சித்தர் பீடாதிபதிகளுக்கென ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், இரங்கல் என்ற ஐந்தொழிலையும் செய்யும் எல்லா வல்லமைகளையும் பெற்ற பரபிரம எழுத்தென ஒரே ஓர் எழுத்தென்ற ஒருவகையும் ஆக மூன்று வகைப்பட்ட எழுத்துக்கள்; இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழிக்குரிய முந்நூற்று இருபத்தி மூன்று எழுத்துக்களில் இருக்கின்ற காரணத்தினால்தான் முத்தமிழ் மொழி என்ற தனித்த சிறப்பையும், பெருமையையும், சீராட்டையும், பாராட்டையும் பெற்றுத் திகழ்கிறது' என்றும்,

13. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியில்தான் இந்துவேதம் எனும் இருக்குவேதத்தின் உரைக் கோவைகள் பயன்படுத்தப்பட வேண்டிய நெறிமுறைகள்

அடிப்படையில்;) 1) காதுக்குள் மட்டும் வாய்மொழி வாக்காக அதாவது வாய் உரையாக ,அருளப்பட வேண்டிய இந்துவேத உரைக் கோவைகள் வாக்குகள் என்றும் (2) குருவாக இருப்பவர்கள் மாணுக்கரின் பக்குவமறிந்து மழையில் எழுதிக் காட்டியோ (அ) தரையில் தண்ணீரால் எழுதிக்காட்டியோ சீக்கிரமாக மாணவன் மனதில் நிலை நிறுத்திக் கொள்ள மட்டுமே வாய்ப்புக்கொடுத்து உடனுக்குடன் அழித்துவிட வேண்டிய இந்துவேத உரைக் கோவைகளை வாக்கியங்கள் என்றும்; (3) இந்துவேதப் பேருண்மைகளில் எல்லோரும் யார் மூலம் வேண்டுமானாலும் தெரிந்து கொள்வதற்காக நிலையாக ஏடுகளில் வெளிப்படையாக் எழுதி வைத்திருக்கக் கூடிய இந்துவேத உரைக்கோவைகளை வாசகங்கள் என்றும் மூன்று தனித்த பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளதால் தான் முத்தமிழ் மொழி என்று குறிப்பாக தனித்து சிறப்பித்து பாராட்டி சீராட்டிப் போற்றிப் புகழப்படுகிறது' என்றும்

14) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ்மொழியில்தான், இந்துமதத்தில் எல்லாமக்களும் எளிதாகப் பத்தி செய்து தங்களுக்குத் தேவையான சத்தி, சித்தி, முத்திகளைப் பெறுவதற்காக கந்தழிநிலை ஓம்பல் (வழிபடல்), வள்ளிநிலை ஓம்பல், கொடிநிலை ஓம்பல் என்று இயற்கையாக உள்ள முப்பெரும் சுடர்களை, முப்பெரும் நெருப்புகளை, முப்பெரும் தீகளை வழிபடும் நெறிமுறைக்குரிய மூன்று வகைப்பட்ட ஓம்பலுக்குரியவைகள் முத்தீ ஓம்பல் இலக்கியங்களாக, தனித்தனியாக வழங்கப்பட்டிருப்பதால் தான் முத்தமிழ்மொழி என்று சிறப் பித்து பாராட்டி, சீராட்டி போற்றிப் புகழப்படுகிறது' என்றும்

15) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியில்தான், கல்வியில் பொருளுலக வாழ்வுக்குரியவைகளை சொல்லித் தருகின்ற ஆசிரியரின் மொழிநிலை என்றும், கல்வியில் அருளுலக வாழ்வுக்குரியவைகளை சொல்லித்தருகின்ற குருவின் மொழிநிலை என்றும், கல்வியில் பொருளுலக, அருளுலகக்கல்வியை செய்முறையாகப் பயிற்றுவிக்கின்ற வாத்தியாரின் மொழிநிலை என்றும் மூன்று வகைப்பட்ட மொழிநிலைகள் இந்துவேதத்தின் முந்நூற்றுத் தொண்ணூற்ரூறு (396) நூல்களிலும், இந்துமதத்தின் முப்பத்தாறு (36) நூல்களிலும், திட்ட வட்டமாக மிகநுட்பத்தோடு தனித்தனியாகப் பிரித்து வகைப்படுத்தி தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டிருப்பதால் தான் முத்தமிழ் மொழி என்று குறிப்பாக சீராட்டி, பாராட்டி போற்றிப் புகழப்படுகிறது' என்றும்

16) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியில்தான், உலகமக்கள் அனைவருக்கும் உரிய பொதுவேதம், மூலவேதம், முதல்வேதம், கடவுளர்களாலேயே எழுதித் தரப்படும் வேதம் என்று பாராட்டப்படும் இந்து வேதத்திலும், இந்துவேதமதமான இந்து மதத்திலும், தமிழ் மொழியின் எழுத்துக்களில் மூன்றுவகை, தமிழ்மொழியை மாணுக்கரிடம் கூறுவதில் மூன்றுவகை, தமிழ் மொழியைப் பயன் படுத்துகின்ற ஆசிரியர், குரு, வாத்தியார் என்ற மூவரும் பயன்படுத்துகின்ற தமிழில் மூன்றுவகை என்ற பாகுபாடுகள், வேறுபாடுகள், பிரிவுகள் வரையறை செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கெல்லாம் மேலாக அருளுலகப் பொரு

ளுலகச் செல்வங்களை அறிவுறுத்தி வழங்குவதில் இட்டு வழங்குகின்ற நெறிமுறைக்குரிய தமிழ்மொழி என்று ஒருவகையும், தொட்டு வழங்குகின்ற நெறிமுறைக்குரிய தமிழ்மொழி என்று ஒருவகையும், சுட்டி வழங்குகின்ற நெறிமுறைக்குரிய தமிழ்மொழி என்று ஒருவகையும் என்று மூன்று வகையாக தமிழ்மொழி பிரித்துக் காட்டப்பட்டுள்ளதால் முத்தமிழ்மொழி என்று சீராட்டி, பாராட்டி சிறப்பித்துப் போற்றப்படுகிறது' என்றும்

17) இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியில்தான்; இம் மண்ணுலகில் எழுதப்படுகின்ற இலக்கியங்கள் அனைத்துக்கும் வழிகாட்டியாக, அடிப்படைகளாக, நெறிகாட்டிகளாக, முறை விளக்கிகளாக, அண்ட பேரண்டங்களில் வளரும், வளர்ந்திட்ட, வளர்ந்து கொண்டிருக்கின்ற, வளரப் போகின்ற முத்தமிழ்மொழியின் இலக்கியங்களின் தொகுப்புகளாக; மூன்று வகைப்பட்ட இலக்கியங்கள்; (1) உலகியல் வாழ்வியல்களை, அதாவது பொருளியல் வாழ்வியல்களை விளக்குகின்ற இலக்கியங்கள் மேல்கணக்கு இலக்கியங்கள் என்றும், (2) பொருளியல் வாழ்வியலுக்குத் தேவையான நேம, நியம, நிடத, நிட்டை, நீதி, விதி முதலியவைகளை விளக்குகின்ற இலக்கியங்கள் கீழ்கணக்கு இலக்கியங்கள் என்றும், (3) அருளுலக வாழ்வியலுக்குத்தேவையான வேதத்தை விளக்குகின்ற இலக்கியங்களும், மதத்தை விளக்குகின்ற இலக்கியங்களும் மையக்கணக்கு இலக்கியங்கள் என்றும்; மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால், ஒவ்வொரு வகைக்கும் பதினெண் சித்தர்களை நினைவு கூர்ந்திடுவதற்காக பரந்து விரிந்திபட்ட அண்ட பேரண்ட அருளாட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியின் இலக்கிய பரப்புக்களிலிருந்து, குவியல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கியங்களின் தொகுப்பாக பதினெண் மேல்கணக்கு நூல்கள், பதினெண் கீழ்கணக்கு நூல்கள், பதினெண் மையக்கணக்கு நூல்கள் என்று மூன்று வகைப்பட்ட தொகை நூல்கள் தயாரிக்கப்பட்டு; முத்தமிழ்ச் சங்கத்தின் மூலம் இம்மண்ணுலகுக்கு வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், பதினெண் மேல்கணக்கு நூல்களும், கீழ்கணக்கு நூல்களுமே முத்தமிழ் சங்கத்தில் மிகுதியாகக் கற்பிக்கப்பட்டன. இந்த பதினெண் மையக் கணக்கு நூல்கள், பதினெண் சித்தர் மடத்திலும், பீடத்திலுமே கற்பிக்கப்பட்டன. அதிலும், குறிப்பாக, இந்தப் பதினெண் மையக்கணக்கு நூல்களில் வேதத்தைப் பற்றிய நூல்கள் பதினெண் சித்தர் மடத்திலும், மதத்தைப் பற்றிய நூல்கள் பதினெண் சித்தர் பீடத்திலும் கற்பிக்கப்பட்டன. இப்படி பதினெண் மேல்கணக்கு, கீழ்கணக்கு, மையக்கணக்கு நூல்களைக் கற்பிப்பதற்கு முத்தமிழ்ச் சங்கம், பதினெண் சித்தர் மடம், பதினெண்சித்தர் பீடம் என்ற மூன்று வகைப்பட்ட நிறுவன நிர்வாகங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன என்பதும் சிறப்பாகப் போற்றி புகழ்வதற்குரியதாகும்.

18) இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான், இலக்கணப் பகுப்பு

1. **எழுத்திலக்கணம் (எழுத்து + இலக்கணம்)**
2. **சொல்லிலக்கணம் (சொல் + இலக்கணம்)**
3. **பொருளிலக்கணம் (பொருள் + இலக்கணம்)**

என்று மூன்று பெரும் பகுப்புக்களாக பகுக்கப்பட்டு தனிப்பெரும் இலக்கணப் பகுதிகளாக வளர்க்கப்பட்டிருக்கின்றன, வளர்க்கப்பட்டிருக்கின்றன, வளர்க்கப்பட்டிருக்கின்றன, இது போல், இம்மண்ணுலகில் எம்மொழிக்கும் இலக்கணப்பகுப்பு அமைக்க இயலாது, அமைக்க முடியாது என்ற தனிச்சிறப்பால் தான் அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழி முத்தமிழ் மொழி என்று சிறப்பித்துப்போற்றி பாராட்டி புகழப்படுகிறது. இம்மட்டின்றி, இம் முத்தமிழ் மொழியின் இலக்கியங்கள் 1) வாழ்வியலில் நடைமுறையில் எளிதாகப் பேசப்பட்டும், எழுதப் பட்டும் வளர்க்கப்படும் உரைநடைத் தமிழ் இலக்கியங்கள் மட்டும் **'இயல்'** இலக்கியங்கள் என்று தனித்துப் பிரிக்கப்பட்டும், 2) வாழ்வியல் உணர்வுகளையும் கருத்துக்களையும் சுவை கூட்டி நீட்டிக் குறைத்து பல்வேறு வகையான ஒலிநயங்களோடு இனிய இசையாகப் பாடி வளர்க்கப்படும் இசைத் தமிழ் இலக்கியங்கள் மட்டும் **இசை** இலக்கியங்கள் என்று தனித்துப் பிரிக்கப்பட்டும், 3) வாழ்வியல் நிகழ்ச்சிகள், கருத்துக்கள், செய்திகள் முதலியவற்றை விளக்கிட உரைநடையும், இசையும் கலந்து இவற்றிற்கேற்ப உடலை வளைத்து, நெளித்து அங்கங்களை ஆட்டி பல்வேறு கதியில் குதித்தும் ஆடுகின்ற நாட்டியமும் கலந்து வளர்க்கப்படும் நாடகத் தமிழ் இலக்கியங்கள் மட்டும் **நாடக** இலக்கியங்கள் என்று தனித்துப் பிரிக்கப்பட்டும் மூன்று வகைத் தமிழ்கள் முப்பெரும் தனிப் பிரிவுகளாக வளர்க்கப்படும் மரபு அருளூறு அமுத தெய்வீக செந்தமிழ் மொழியில் மட்டுமே இருப்பதால் முத்தமிழ் மொழி என்று சிறப்பித்து பாராட்டி, சீராட்டி, போற்றிப் புகழப்படுகிறது.

இப்படியாக அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழி முத்தமிழ் மொழி என்று குறிக்கப்படுவதற்குரிய, பெயரிடப்படுவதற்குரிய, சிறப்பிக்கப்படுவதற்குரிய, சீராட்டப்படுவதற் குரிய பாராட்டப்படுவதற்குரிய காரணங்கள் பதினெட்டு காரணங்களாக, பதினெண் சித்தர் களின் எண்ணிக்கையைக் குறிக்கும் வண்ணம் பட்டியலிடப்பட்டு இந்துவேதத்தில் காட்டப் படுகின்றன.



# இந்து வேதமும், தமிழ் மொழியும்

1) பதினெண் சித்தர்களுடைய தாய்மொழியும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுத தெய்வீக செந்தமிழ்மொழி என்ற அடைமொழியோடு தான் இந்து வேதத்தில் தமிழ்மொழி எல்லா இடங்களிலும் குறிக்கப்படுகின்றது. இது மூலப் பதினெண் சித்தர்களாலும், மூலப் பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்தொன்பது (1359) அண்ட பேரண்டங்களிலுமுள்ள மண்ணுலகங்களின் தலைவர்களான; ஈசர்களான; மணீசர்களுக்கு, அருளப்பட்டது, அருளப்படுகிறது, அருளப்படவிருக்கிறது, அருளப்படுகின்ற ஒன்று என்ற குறிப்பு இந்து வேதத்தில் பல இடங்களில் மிகமிகத் தெளிவாக, வெளிப்படையாக, எளிமையாக விளக்கியுரைக்கப்படுகிறது.

2) இத்தெய்வத்தமிழ், ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்தொன்பது சொற்களால் அடைமொழி கூறப்பட்டு கொடுக்கப்பட்டு சிறப்பிக்கப்படுகின்றது. இத்தெய்வத் தமிழுக்கு '**இந்து**' என்ற பொருள் கொடுக்கப்பட்டு 'தமிழே இந்துவேதம்', 'இந்து வேதமே தமிழ் மொழி', என்று சிறப்பிக்கவும் படுகின்றது. இந்துமத நூல்களில்

'தமிழ் மொழியே பூசை மொழி'
,, அருட்சினை மொழி'
,, தவமொழி'
,, ஞானமொழி'
'தமிழ் மொழியே அருவங்களின் மொழி'
,, அருவுருவங்களின் மொழி'
,, உருவ அருவங்களின் மொழி'
,, உருவங்களின் மொழி'
'தமிழ் மொழியே அணுவின் மொழி'
,, ஆவியின் மொழி'
,, ஆன்மாவின் மொழி'
,, ஆருயிரின் மொழி'
'தமிழ் மொழியே பயிரின மொழி'
,, உயிரின மொழி'
,, ஐம்பூத மொழி'
,, ஐந்தர மொழி'
,, ஐந்திர மொழி'

'தமிழ் மொழியே ஐந்திற மொழி'
,, திருக்கல்களின் மொழி'
,, தருக்கல்களின் மொழி'
,, கருக்கல்களின் மொழி'

'தமிழ் மொழியே குருக்கல்களின் மொழி'
,, கடவுளர்களின் மொழி'
தேவர்களின் மொழி'
தெய்வங்களின் மொழி'
,, ஆண்டவர்களின் மொழி'

'தமிழ் மொழியே காற்றுக்களின் மொழி'
கருப்புக்களின் மொழி'
பேய்களின் மொழி'
பிசாசுகளின் மொழி'

'தமிழ் மொழியே சித்தர்களின் மொழி'
,, முனிவர்களின் மொழி'
,, இருடிகளின் மொழி'
,, கணங்களின் மொழி'

'தமிழ் மொழியே ஓகாசன மொழி'
,, யோகாசன மொழி'
,, போகாசன மொழி'
,, மோகாசன மொழி'
,, ஓம சித்தி மொழி'
,, ஓக சித்தி மொழி'
,, யாக சித்தி மொழி'
,, யக்ஞ சித்தி மொழி'

'தமிழ் மொழியே வேள்விசித்தி மொழி'

'தமிழ் மொழியே கந்தழிநிலைச் சித்திமொழி'
,, வள்ளிநிலைச் சித்திமொழி'
கொடிநிலைச் சித்திமொழி'

'தமிழ் மொழியே அனைத்துவகைப் பத்திமொழி'
அனைத்துவகை சத்தி மொழி'
அனைத்துவகை சித்தி மொழி'
அனைத்துவகை முத்தி மொழி'

.... .... ....

என்றிப்படி இருநூற்று நாற்பத்து மூன்று (243) சொற்றொடர்களுக்கும் மேல் பல சொற்றொடர்களில் தமிழ் மொழியின் அருளுலகச் சிறப்பு விதந்து விளக்கிப் பாராட்டப்படுகிறது.'' என்று பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி இந்துவேத நாயகம், இந்துமதத்தந்தை இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், குருமகாசன்னிதானம் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் தமது குருபாரம்பரியத்திலும், இலக்கிய பாரம் பரியத்திலும், அரச பாரம்பரியத்திலும் குறிப்பிடுகின்றார். இவரே நான்காவது உகமான கலியுகத்தின் முதல் பதினெண் சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, முத்தமிழ்சங்கத் தலைவர் என்ப தால் இந்துவேதம் பற்றியும், இந்துமதம் பற்றியும், இவர் வழங்குகின்ற அருட்கொடைகளே இந்த நான்காவது உகத்துக்கு அடிப்படையானவை.

3) தமிழ்மொழி எழுத்துக்களின் எண்ணிக்கையான முந்நூற்று இருபத்துமூன்று (323), { பொருளுலக எழுத்துக்கள் (247) + அருளுலக எழுத்துக்கள் (75) + பதினெண் சித்தர் பீடாதிபதிக்கென ஓர்எழுத்து } என்ற எண்களை வைத்துக் கொண்டுதான் அருளாளர் கள், திருவருட் செல்வர்கள், பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர் கள், தவசிகள், ஞானிகள், இருடிகள், முனிவர்கள், சித்தர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், அடியார்கள்.... முதலியவர்கள் தங்களுடைய அருட்பாக்களில் குறிப்புப் பொருள்களை விளக்கி யுள்ளனர்; குறிப்பாகப் பொருள்களை விளக்கியுள்ளனர். இவற்றை

''இரண்டும் மூன்றும் தெரியாத என்னை''
''இரண்டும் இரண்டு மூன்றும் தெரியாத என்னை''
''மூன்றும் இரண்டும் தெரியாத என்னை''
''மூன்றும் இரண்டு மூன்றும் தெரியாத என்னை''
''மூன்றும் ஐந்தும் தெரியாத என்னை''
''ஐந்தும் மூன்றும் தெரியாத என்னை''
''இரண்டும் ஆறும் தெரியாத என்னை''
''ஆறும் இரண்டும் தெரியாத என்னை''
''எட்டுத் தெரியாது தறிகெட்டு அலையும் என்னை''
''இரண்டும் எட்டும் தெரியாத என்னை''
''எட்டும் இரண்டும் தெரியாத என்னை''

... என்று ஞானப்புலம்பலாக, அருட்புலம்பலாகப் பாடியுள்ளனர். எனவே இந்த முந்நூற்று இருபத்து மூன்று (323) என்ற எண் அருளுலக முதன்மை பெற்ற சிறப்பு எண்களுள் ஒன்றாகும்.

4) தமிழ்மொழியின் முந்நூற்று இருபத்து மூன்று எழுத்துக்கள் (323), பதினாறு வகைப்பட்ட எழுத்துக்களாக பிரித்துப் பிரித்துத் தனித்தனி பெயர்களால் பெயரிடப்பட்டு, பட்டியலிடப்பட்டு, மனித வாழ்வுக்குரிய பதினாறு வகைச் செல்வங்களாகப் பாராட்டப் படுகின்றன. இதுவே தமிழ் மொழிக்குரிய மிகச் சிறந்த சிறப்பாகும்.

1. உயிரெழுத்து [பன்னிரண்டு (12)]
2. மெய்யெழுத்து [பதினெட்டு (18)]
3. உயிர்மெய்யெழுத்து [இருநூற்றுப் பதினாறு (216)]
4. ஆயுத எழுத்து [ஒன்று (1)]
5. வல்லின எழுத்து [[ஆறு (6)]
6. மெல்லின எழுத்து [ஆறு (6)]
7. இடையின எழுத்து [ஆறு (6)]
8. குற்றியலுகர எழுத்து.
9. குற்றியலிகர எழுத்து.
10. நெட்டெழுத்து [ஏழு (7)]
11. சுட்டெழுத்து. [ஐந்து (5)]
12. உயிர்ப்பு எழுத்து
13. புத்துயிர்ப்பு எழுத்து
14. பிறணவ எழுத்து
15. நச்செழுத்து
16. அமுத வெழுத்து.

5) இந்த பதினெண் சித்தர்களின் தாய்மொழியும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுத தெய்வீக செந்தமிழ்மொழியின் எழுத்துக்கள் பதினெண் சித்தர்களால் பயன் கருதி; அருளாற்றல் வகைகருதி மொத்தத்தில் பதினெட்டுவகை (18) எழுத்துக்களாகப் பட்டியலிடப்பட்டுக் காட்டப்படுகின்றன. அதாவது, தமிழ்மொழி எழுத்துக் களின் பயன் நிலைகளுக்குரிய பதினெட்டு வகைப்பட்ட பெயர்கள் மட்டும் தான் பட்டியலிட்டுக் காட்டப் பட்டிருக்கின்றனவே தவிர, ஒவ்வொன்றிற்குமுரிய எழுத்துக்கள் என்னென்ன என்று தெளிவாகப் பட்டியலிட்டுக் காட்டப்படவில்லை.

1) அத்தர எழுத்து, 2) அத்திர எழுத்து
3) அத்திற எழுத்து, 4) சாத்தர எழுத்து,
5) சாத்திர எழுத்து,' 6) சாத்திற எழுத்து,
7) சூத்தர எழுத்து, 8) சூத்திர எழுத்து,
9) சூத்திற எழுத்து, 10) தோத்தர எழுத்து,
11) தோத்திர எழுத்து, 12) தோத்திற எழுத்து,
13) நேத்தர எழுத்து 14) நேத்திர எழுத்து,
15) நேத்திற எழுத்து 16) வேத்தர எழுத்து
17) வேத்திர எழுத்து 18) வேத்திற எழுத்து

என்றிப்படி தமிழ்மொழி எழுத்துக்களின் பதினெட்டு வகைப்பட்ட பெயர்கள் பட்டியலிடப் பட்டுக் காட்டப்பட்டுள்ளன இந்து வேதத்தில்.

6) தமிழ்மொழி பூசைமொழியாகப் பயன்படுத்தப்படும் போது பதினெட்டு வகைப்பட்ட மொழியாக பெயரிட்டுச் சிறப்பிக்கப்படுகிறது. இச்சிறப்புக்குரிய இலக்கியங்கள் இந்துமதத்தின் இலக்கியங்களாகவே திகழுகின்றன,

1) திருவாக்கு 2) திருவாக்கியம்
3) திருவாசகம் 4) தருவாக்கு
5) தருவாக்கியம் 6) தரு வாசகம்
7) கரு வாக்கு 8) கருவாக்கியம்
9) கரு வாசகம் 10) குரு வாக்கு
11) குருவாக்கியம் 12) குருவாசகம்
13) மருள் வாக்கு 14) மருள் வாக்கியம்
15) மருள் வாசகம் 16) அருள்வாக்கு
17) அருள் வாக்கியம் 18) அருள்வாசகம்.

இவை, பதினெண் சித்தர்கள் தமிழ்மொழியை நன்கு திட்டமிட்டு வரையறைப் படுத்தி, நெறிமுறைப்படுத்தி, வகைப்படுத்தி, பக்குவமாக இம்மண்ணுலகின் நன்மைக்கும், மேன்மைக்கும், வாய்மைக்கும், உய்வுக்கும், உரிய தெய்வீக சாதனமாகவே வழங்கியிருக்கிறார் கள் என்பதைத் தெளிவாக விளக்குகிறது.

7) பதினெண் சித்தர்கள், தாங்கள் பதினெட்டு என்ற எண்ணிக்கைக்குரியவர் களாக ஒரு குழுவாக, ஒரு கூட்டமாக, ஒரு கழகமாக, ஒரு சங்கமாக இருந்து செயல்படுவதால் தான், அனைத்தையும் சாதிக்க முடிகின்றது என்ற பேருண்மையை விளக்கும் வண்ணம் முதல் யுகத்தின் ஆரம்பத்தில்; கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டம் எனப்படும் குமரிக்கண்டத் தின் பனிமூடிய மலைமுகடுகளையுடைய தென் இமயமலையின் தென் கங்கை ஆறு, தென்யமுனை ஆறு, தென் இந்துஆறு எனும் மூன்று ஆறுகளும் உருவாக்கிய முக்கோண ஆற்றிடைக் குறை யில் உருவாக்கிய முத்தமிழ்ச்சங்கத்தில்,

1. பதினெண் மேல்கணக்கு நூல்கள்
2. பதினெண் மையக்கணக்கு நூல்கள்
3. பதினெண் கீழ்கணக்கு நூல்கள்

என்ற மூன்று வகைப்பட்ட தொகைநூல்களை வழங்கினார்கள். இதுவே, முத்தமிழ் மொழி என்ற சிறப்பை சிறப்பிக்கின்றது.

8) பதினெண் சித்தர்கள் முத்தமிழ் மொழி என்று தங்களுடைய தாய்மொழியும் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியை பாராட்டி, சீராட்டி, போற்றிப் புகழ்ந்து பெருமிதப்படுவதற்குரிய காரணங்கள் பல... இந்துவேதத்தின் (396) முந்நூற்றுத் தொண்ணூற்றாறு நூல்களிலும், இந்து மதத்தின் (36) முப்பத்தாறு நூல்களிலும் பல இடங்களில் நேரடியாகவும், குறிப்பாகவும் எல்லோரும் புரிந்து கொள்ளும் வண்ணம் தெளிவாக விளக்கியுரைக்கப்படுகின்றன. அவற்றுள், அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழி தரமான மொழி, திரமான மொழி, திறமான மொழி என்று அதனுடைய பண்பு நலனைச் சிறப்பித்துப் பட்டியலிட்டுப் பாராட்டுவது குறிப்பிடத் தக்கது. இதைப் போல, தமிழ்மொழியின் ஆற்றல், அருளாற்றல், செயல்தரம், செயல்திரம், செயல்திறம் இளமுறியாக் கண்டத்துள் இருந்த எந்த ஒரு மொழியாலும் குண்டலினி, குண்டழினி, குண்டளினி (ஆக்கல், அழித்தல், காத்தல்) என்ற மூன்றையும் தமிழ்மொழி போல் செயல்படுத்த முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது என்பதால் தான்; அருளூறு அமுத தெய்வீக செந்தமிழ் மொழி அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியாக இருக்கின்றது என்பதோடு; 'முத்தமிழ் மொழி' என்றும் சிறப்பிக்கப்படுகிறது.

9) அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழி இந்த ஞாலத்தின் (தொங்கிக் கொண்டிருக்கக் கூடிய உலகத்தின்) முதல் பெருநிலப்பரப்பான; இளமை மாறாத மண்ணை யுடைய நிலப்பகுதிகளையே மிகுதியாகக் கொண்ட இளமுறியாக் கண்டத்தில்; தென்னிமய மலையில் தோன்றி இளமுறியாக் கண்டத்தின் ஏழாயிரம் (7000) கல் தொலைவிற்கும் நீண்டு பல கிளைகளாகப் பிரிந்து விரிந்து பரந்து பாய்ந்தோடிட்ட குமரியாற்றினால் சிறப்புறும் குமரிக் கண்டத்தில்; பதினெண் சித்தர்களின் அரசவாரிசாக, பாரம்பரியமாக ஆதிசிவனார், முருகப் பெருமான், அனாதிக் கருவூரார் என்று வழிவழியாக வந்து பாண்டியர், சோழர், சேரர் என்று மூன்று பெரும் பிரிவாகப் பிரிந்திட்ட முடியுடை மூவேந்தர்களால் வளர்க்கப்பட்ட போற்றிப் பேணிப் பாதுகாக்கப்பட்ட சிறப்பினையுடையது தமிழ் மொழி' என்ற பொருளை விளக்கும் வண்ணமே. அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழிக்கு முத்தமிழ்மொழி என்று சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது.

10) அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுத தெய்வீக செந்தமிழ் மொழியை இம்மண்ணுலகில் கல்தோன்றி மண் தோன்றா காலத்திலேயே பேசினார்கள் என்பதால்; தமிழ்மொழியை கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே, இம்மண்ணுலகில் தோன்றிய, இம்மண்ணுலகில் தோற்றுவிக்கப்பட்ட, இம் மண்ணுலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட, இம் மண்ணுலகில் பேசப்பட்ட மொழி எனும் பொருளில் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய மொழி முதல் தமிழ்மொழி, மூலத் தமிழ்மொழி," என்ற பாராட்டு வாசகத்தை அருளியுள்ளனர். இதற்கு விளக்கமாக. இந்துவேதத்தில் இந்தஉலகு. ஞாலம் முதலில் நெருப்புக் கோளமாகவும். பிறகு பனிக்கட்டிக் கோளமாகவும், பிறகு தண்ணீர்க் கோளமாகவும். இருந்த பிறகு தண்ணீருக்குள்ளிருந்து கற்பாறைகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்த, 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் தான் பதினெண் சித்தர்கள் இம்மண்ணுலகிற்கு வந்து 'முத்தமிழ்' மொழியைப் பேசினார்கள் என்ற செய்தி வழங்கப்படுகிறது.

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**

# அன்றுடப் பூசைமொழி

1) "மத வேறுபாடின்றி, மொழி வேறுபாடின்றி, இன வேறுபாடின்றி, நாட்டு வேறுபாடின்றி எல்லா மனிதர்களும், தங்களுடைய **'மறுபிறப்பைத் தெரிந்து கொள்ளவேண்டும்'; 'முற்பிறப்பை அறிந்து கொள்ள வேண்டும்'; 'இப்பிறப்பை புரிந்து கொள்ள வேண்டும்;** அப்பொழுதுதான் மனித வாழ்க்கையின் பயனை பதட்டமின்றி, அவசரமின்றி, மயக்க தயக்கமின்றி, அச்சகூச்ச மாச்சாரியமின்றி.... நிதானத்தோடும், அமைதியோடும், மகிழ்ச்சியோடு துய்த்து மகிழமுடியும். அதற்காகத் தான், அண்ட பேரண்டங்களை ஆளும், இந்துவேதமான இருக்குவேதத்தில் அன்றுடப் பூசைமொழி ஆதிசிவனுரால் அருளூறு அமுதத் தெய்வீகசெம்மொழியான முத்தமிழ் மொழியில் சிறப்பாக வழங்கப்பட்டிருக்கிறது.

இருக்குவேதம் : காண்டம்-2 மண்டலம்-8.
நாள் உரைக்கோவை வாசகம்-39.

2) "எல்லா மானுடரும் தங்களுடைய எல்லையில்லா ஆசைகளாலும், வாழ்வியல் தொல்லைகளாலும், அருளுலக செல்வங்களான பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைப் பெறுவதற்கு அதிகமாக காலத்தையோ, பயிற்சியையோ, முயற்சியையோ, பொருளையோ செலவிட முடியாது என்பதற்காகத் தான்; அன்றுடம் (அ) வாய்ப்பும், ஒய்வும் கிடைக்கும் போது கால் யாம (சாம) நேரத்தையாவது செலவிட்டு பத்தி, சத்தி, சித்தி, முத்திச் செல்வங்களைப் பெறுவதற்காகவே **'அன்றுடப் பூசைமொழி'** எனும் அமுதத்தை பதினெண் சித்தர் மடத்தின் முதல் மடாதிபதியும், பீடாதிபதியுமான அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் ஆதி சிவனுர் அவர்கள் இந்துவேதத்தின் ஒருபிரிவான அசுரவேதத்தில் வழங்கியிருக்கிறுர்."

[அசுரவேதம்: காண்டம்-4. மண்டலம்-28. நாள்வாக்கு 39]

3) "இப் பூவுலகில், இப்பூமியில், இப்புவியில், இவ்வையகத்தில், இம்மாஞாலத்தில், இவ்வுலகில் தோன்றிட்ட பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் ஈசர்களாகத் தோன்றியுள்ள மணீசர்கள் மிக எளிதாக மொழி, இனம், நாடு, மதம் கடந்து அகத்துள் எழுப்புகின்ற மூலாதாரப் பிறணவ ஒலிகளின் மூலம் தங்களுடைய சீவனில் அடங்கியிருக்கும் ஆவி, ஆருயிர், ஆன்மா என்ற மூன்றையும் தனித்தனியாகப் பிரிக்கும் கலையைக் கற்றிட, நோற்றிட உதவுவதற்காகவே நுட்ப, திட்ப ஒலிகளை சுவைமிக்க இனிய பொருளாழமுடைய அருளாற்றல் ஊற்றெடுக்கின்ற சொற்களால் உருவாகிட்ட இருபத்து மூன்று வகைப்பட்ட காயந்திரிகளில் நான்கே நான்கு காயந்திரிகளை மட்டும் தேர்ந்தெடுத்து;

க. “அருட்சினை காயந்திரி மந்திரம்”

வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனுகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்ருயே உனை வாழ்த்தி வணங்குகிறேன்.
ஏனேவாகி இன்னல் பல்லாற்ருனும் உழல்பவர்க்கு
நானுகிய அடியேன் நலம் வேண்டுகிறேன்.
தானுகவே தழல்தரு கொடுமைமிகு துயரமெல்லாம்
வீணுகி விலகியோடி ஒழியட்டும்.

உ. “அருளூறு காயந்திரி மந்தரம்”

ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக !
தத்துவ வித்துக்கள் அரணுகுக !
பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்
தீயே யோகப் பரஞ்சோதி யாகும் !

ங. “அருளூறு காயந்திரி மந்திரம்”

ஓம் சத்தியே காத்தாயி அயனுய வித்தின் மகவே
வாலையே கன்னியே குமரியே நங்கையே தீயென மலர்ந்திடு
தீயே உன்னேடு தூர்த்திடு பிறச்சினையாவும்
தாயே என்னேடு உயிரினப் பயிரினக் காப்புவழங்கிடு.

ச. கற்பூர சோதி வழிபாட்டு காயந்திரி மந்தரம்

கற்பூரம் பாக்கு வெற்றிலை பழம் தேங்காய்
பக்குவமாய்ப் பண்ணிய பலகாரங்கள் பலவும்
படைத்தேன் ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!
அனைத்தையும் காத்திடுக! காத்திடுக! காத்திடுக!
அருள் செழித்திடுக! செழித்திடுக! செழித்திடுக!
எங்கும் நலம் விளைக! நலம் விளைக! நலம் விளைக!
நான்மறையே நான்முறையே நானெறியே நான்வேதமே
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!

அன்ருடப் பூசைமொழி என்று பெயரிட்டு இந்துவேத, இந்துமத தலைமை ஆச்சாரிய 'குருபீடமான ஆதிசிவனுர் அதர்வான வேதத்தில் அருளியுள்ளார். இதனைப் பயிற்சி செய்வதற்காகவே அதர்வான வேதத்தில் குண்டலினி, குண்டளினி, குண்டழினி என்ற மூன்றையும் பற்றிய பயிற்சிக்கு இந்த அன்ருடப் பூசைமொழியில் கூறியுள்ள நான்கு காயந்திரிகளை மட்டும் வாழ்வில் ஓய்வும், வாய்ப்பும் கிடைக்கும் போதெல்லாம் குறைந்தது பதினெட்டு, முப்பத்தாறு, நாற்பத்தெட்டு, அறுபத்துநான்கு, தொண்ணூற்ருறு, நூற்றெட்டு முறை என்று ஓதிப் பயிற்சி செய்ய வேண்டும். அன்ருடம் 108 முறைகளுக்கு மேலே நூற்றுக் கணக்கில் இந்த அன்ருடப் பூசைமொழியில் உள்ள நான்கு காயந்திரிகளையும் ஓதுபவர்கள் மிக விரைவில் ஆவி, ஆருயிர், ஆன்மா என்ற மூன்றையும் சீவனிலிருந்து பிரித்திடவும்; பிரித்தவற்ருல் கூடுவிட்டு கூடு பாய்தல், ககனமார்க்கப் பயணம், காற்று, கருப்பு பேய், பிசாசு என்ற நால்வர்களையும் இனங்கண்டு கொள்ளல்; குடும்ப ஆண்டவர், குலதெய்வம், கிராமதேவர் தேவதை, நாட்டுக் கடவுளர் எனும் நால்வரோடு தொடர்பு கொள்ளவும்; தாங்களே பிறவாமை, இறவாமை, பிறப்பிறப்பற்ற பெருநிலை (மரணமிலாப் பெருவாழ்வு) முதலியவைகளைப் பெற்றிடவும் முடியும், முடியும் முடியும். இதனுல், இந்த அன்ருடப் பூசைமொழி நான்கு வேதத்திலும் 'அன்ருடப் பூசைமொழி அமுது' 'அன்ருடப் பூசைமொழி எனும் கற்பகத் தரு' என்று அறிமுகப்படுத்தப்படுகிறது.

அதர்வான வேதம்: காண்டம்-8. மண்டலம் 36. நாள்வாக்கியம்-39.

4) "அண்ட பேரண்டங்களில் அருளாட்சி புரியும் இந்துவேதமான இருக்குவேதம், இம்மண்ணுலகத்தாருக்கு மட்டும், செயல் படுத்தப்படுகின்ற வாக்கு, வாக்கியம், வாசகம், என்ற நிலைகளுக்கேற்ப அசுரவேதம், அதர்வான வேதம், யாம வேதம் என்ற மூன்று பெரும் பிரிவுகளைப் பெற்று நான்கு வேதங்களாக ஞானவள்ளல், அருட்கொடை வள்ளல், இந்துவேத நாயகம், பதினெண் சித்தர் மடாதிபதி, பீடாதிபதி ஆதிசிவனுரால் விண்ணுலக, ஐவர் குழுவையும், மண்ணுலக ஐவர் குழுவையும் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நான்கு வேதங்களும் (4,42,368) உரைக்கோவைகளை வாக்குகளை, வாக்கியங்களை, வாசகங்களைப் பெற்றிருப்பதால் இவ்வளவையும் மனிதர்கள் படித்துப்பயன்படுத்திட இயலாது என்பதால், நான்கு வேதங்களின் சாரத்தை அகச்சத்தியை, பேராற்றலை எளிதாக, எல்லா மானுடரும் பெற்றிடுவதற்காக அன்ருடம் கால்யாம நேரத்திற்குள் ஓதுவதற்குரிய **அன்ருடப் பூசைமொழி எனும் நான்வேதச் சுருக்கம்** ஆதிசிவனுரால் இறுதியில் உருவாக்கப்பட்டது. இதை முறையாகப் பயன்படுத்துகிறவர்கள் பத்தி, சத்தி, சித்தி, முத்திகளை எளிதில் பெறுவதற்குரிய ஓகாசனம், யோகாசனம், மோகாசனம், போகாசனம் எனும் நான்கையும் பயிற்சி செய்வதற்குரிய தேர்ச்சி, முதிர்ச்சிகளைப் பெற்றிடுவர்.

யாம வேதம் : காண்டம் 48 : மண்டலம் 47 : நாள்வாசகம்-39.

5) இத்தகைய அரிய பயன்களையும், பெருமைகளையும், கொண்டுள்ள **'அன்ருடப் பூசைமொழியை'** எல்லா மொழியினரும் **தங்களுடைய மொழி**

யில் ஒலிநயம் கெடாமல் உச்சரிப்பு கெடாமல் மொழிபெயர்த்து; தங்களுடைய வேதத்துக்கும், மதத்துக்கும், கடவுளுக்கும் புறம்பானது என்று எண்ணிடாமல் ஓதினால், ஒலிநயம் கெடாமல் பயன்படுத்தினால் அருளுலகப் பயிற்சிகளிலும், முயற்சிகளிலும், விரைவில் தேர்ச்சியையும், முதிர்ச்சியையும் பெற்றிடலாம்.

6) இந்த இந்துவேதத்தில் (8,84,736) எட்டு இலட்சத்து எண்பத்து நாலாயிரத்து, எழுநூற்று முப்பத்தாறு வகைப்பட்ட கடவுளர்களுடைய வரலாறுகளும், வாழ்வியல்களும்; அவர்களை அணுகுவதற்குரிய அணுகுமுறைகளும் மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. இதுபோல் கடவுளர்களைக் காணவும், அவர்களோடு தொடர்பு கொள்ளவும், கடவுளர்களாகவே மாறிடவும், கடவுளர்களை வரவழைக்கவும், கடவுளர்களின் ஆற்றல்களை மானுட வாழ்வில் பயன்படுத்திக் கொள்ளவும் பூசை, தவம், ஞானம் என்ற முப்பெரும் வழிகளை அண்ட பேரண்டமாளும் இந்துவேதம் அருளுகிறது.

7) இந்துக்களாக உள்ள ஒவ்வொருவரும், இந்துவேதத்தை தெரிந்து கொள்ளவும், இந்துமதத்தை புரிந்து கொள்ளவும் முயற்சித்தேயாக வேண்டும். அப்படியில்லாமல் அவரவர்க்கு விருப்பமான குடும்ப ஆண்டவரையோ, குலதெய்வத்தையோ, கிராம, தேவர் தேவதையையோ, நாட்டுக் கடவுளரையோ மட்டும் விரும்பி, நம்பி பத்தி செலுத்தி வாழ்ந்து விட்டு செல்வது முழுமையான வாழ்க்கை ஆகாது. இதற்காக, இந்து வேதாகம பாடசாலையோடும், இந்துமத அருட்பணி விரிவாக்கத் திட்டத்தோடும், இந்துமதத் தலைமைக் குரு பீடமான பதினெண் சித்தர் மடத்தோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**

# ஒவ்வோர் இந்துவின் நினைவிலும் நிற்கவேண்டிய நினைவுரையான

# நி றை ற வு ரை

1. இன்றைய நிலையில், இந்துக்களாக வாழுகின்றவர்களிலும், இந்துக்களாக இல்லாத மற்றவர்களிலும், 'இந்து' என்ற சொல்லுக்குரிய பொருளையும், வரலாற்றையும், விளக்கத்தையும் தெரியாதவர்கள் தான் மிகுதியாக இருக்கிறார்கள். இதே போல், 'இந்து வேதம்' 'இந்துமதம்' என்ற சொற்களுக்குரிய பொருளையும், பொருள்கூறும் நூல்களையும், நூல்களின் வரலாறுகளையும் தெரிந்து கொள்ளாதவர்களே மிகுதியாக இருக்கிறார்கள். இதனால், இந்த மண்ணுலகில் தோன்றக்கூடிய அனைத்துவகையான மொழியினருக்கும், இனத்தவருக்கும் நாட்டவருக்கும் 'மானுட வாழ்வியலின் மதிப்பீடுகளை', தனிமனிதவாழ்வு பக்குவப்படவேண்டிய நெறிமுறைகளை, குடும்பவாழ்வு முழுமையாக வடிவப்பட்டு இன்பத்தையும், அமைதியையும், நிறைவையும், நிம்மதியையும் தருமாறு அமைவதற்குரிய ஒழுகலாறுகளை, மரபுகளை, பழக்க வழக்கங்களை; சமுதாயம் என்ற கட்டமைப்பு, எல்லோரும் சமத்துவ சகோதரத் தத்துவ பொதுவுடமைக் கூட்டுறவு வாழ்வைத் துய்த்திடுவதற்குரிய சட்டதிட்டக் கட்டுப்பாட்டு விதிகளை, நீதிகளை, நிட்டைகளை, நிடதங்களை, நேமங்களை; அனைத்துச் சமுதாயங்களும், ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுடனும் கூடி வாழக்கூடிய அரசியல் அமைப்புக்குரிய சட்டங்களை, திட்டங்களை, கட்டுப்பாடுகளை, நிறுவன நிர்வாக அமைப்புக்களை, ஆளுநர்களின் பொறுப்புக்கேற்ற கடமைகளை, உரிமைகளை, பெருமைகளை....மிகமிகத் தெளிவாக, எளிமையாக, ஒன்று இரண்டு என்று எண்ணிக்கையிட்டு பிரித்து, வரிசைப்படுத்தி எழுதிக் காட்டியிருக்கின்ற நூல்களின் தொகுதி தான் இந்துவேத நூல்கள், இந்துமத நூல்கள்.

2. இந்துவேதம்; இருக்குவேதம், அசுரவேதம், அதர்வான வேதம், யாமவேதம் என்று நான்குவகைப்படும். இவை, ஒவ்வொன்றிலும் 1,10,592 கருத்துக்கள் எண்ணிக்கையிடப்பட்டு எழுதப்பட்டிருக்கின்றன.

3. இருக்கு வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொருகருத்தும், **'இருக்குவேத உரைக்கோவை வாசகம்'** எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

4. அசுர வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்தும் **'அசுரவேத வாக்கு'** எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

5. அதர்வான வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்தும் '**அதர்வான வேத வாக்கியம்**' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

6. யாம வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்தும் '**யாம வேத வாசகம்**' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

7. இந்த நான்கு வேதங்களிலும், ஒவ்வொரு வேதத்திலும் காண்டங்கள் என்ற பெயரில் நாற்பத்தெட்டு பிரிவுகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஒவ்வொரு காண்டமும், மண்டலம் என்ற பெயரில் நாற்பத்தெட்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒவ்வொரு மண்டலத்திலும் நாற்பத்தெட்டு கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இவைமுறையே

1) இருக்கு வேத நாள் உரைக் கோவை வாசகம்,
2) அசுர வேத நாள் வாக்கு,
3) அதர்வான வேத நாள் வாக்கியம்,
4) யாம வேத நாள் வாசகம்.

என்று பெயரிடப்பட்டுள்ளன. இந்தப் பகுப்புமுறை பதினெண் சித்தர்கள் எதையும் எண்ணிக் கையிட்டு நறுக்குத் தெரித்தாற் போல சுருக்கமான சொற்றொடர்களில் அழகுறக் கூறும் பாங்குடையவர்கள் என்பதை விளக்குகிறது.

8. இந்துவேதம் நான்கு வேதங்களாகப் பகுக்கப்பட்டிருந்தாலும், இவற்றுள் கூறப்பட்டுள்ளவை (396) முந்நூற்றுத் தொண்ணூற்ருறு நூல்களாகப் பட்டியலிடப் பட்டுள்ளன.

9. இந்த முந்நூற்றுத் தொண்ணூற்ருறு நூல்களிலும், உள்ள கருத்துக்கள் நான்கு இலட்சத்து, நாற்பத்திரண்டாயிரத்து முந்நூற்று அறுபத்தெட்டு (4,42,368)சுலோகங்கள் எனப்படுகின்ற சூலகங்களாக { (சூல்=கரு, அகம்=உள்ளே இருப்பவை), எனவே **சூலகங்கள்** என்ருல், வேதத்தில் உள்ள கருவான உயிரோட்டக் கருத்தை சுருக்கமாகக் கூறும் சொற்றொடர் என்று பெயர் } சுருக்க கருத்து விளக்கச் சொற்றொடர்களில்; எளிதில் நினைவில் வைத்துக்கொள்ளும் வண்ணம் கூறப்பட்டுள்ளன. இச்சூலகங்களில் பெரும்பாலானவை, ஒரு வரிச் சொற்றொடராகவும், இருவரிச் சொற்றொடராகவும் இருக்கின்றன. சில ஆயிரங்கள்தான் நாலைந்துவரிச் சொற்றொடர்களை உடைய சுலோகங்கள்.

10. நான்கு வேதங்களிலும் மிகமிகத் தெளிவாக பெயரிடப்பட்டு வடிவமைப்பும், வாழ்வியலும், விருப்பமும், அருளாற்றலும் அமைக்கப்பட வேண்டிய கோயிலமைப்பும், உண்

ணுழியின் அமைப்பும், கருவறை அமைப்பும், மூலவர் அமைப்பும், எழுந்தருளி அமைப்பும் .... முழுமையாக விளக்கப்பட்டுள்ள நிலையில் உள்ள கடவுள்கள் மொத்தம் 8,84,736 (எட்டு இலட்சத்து, எண்பத்து நாலாயிரத்து, எழுநூற்று முப்பத்தாறு) ஆகும். இப்பட்டியல், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான **முத்தமிழ்**மொழியின் அண்ட பேரண்டங்கள் அளாவிய வளர்ச்சியினையும், காலத் தொன்மையினையும், மேன்மையினையும், வளர்ச்சியின் நுண்மையினை யும், திண்மையினையும், ஒண்மையினையும், திட்டமிடப்பட்ட கட்டுக் கோப்பான பாங்கினையும், கோடிக்கணக்கான சொற்கள் குவிந்து கிடக்கின்ற அருமையினையும், பெருமையினையும் விளக்கு கிறது, விளக்குகிறது, விளக்குகிறது. எனவேதான் ''ஒவ்வொரு தமிழனும், தன்னுடைய தாய் மொழியான முத்தமிழ் மொழி ஒரு கடவுள் மொழி, தேவமொழி, தெய்வமொழி, ஆண்டவர் மொழி, வேதமொழி இளமைமாறாத கன்னிமொழி, பிறப்பிறப்பற்ற இறைமைமொழி, அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழி என்பதனை உணர்ந்து முத்தமிழ்மொழியின் உரிமையையும், பெருமையையும் போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்த்திட தன்னுடைய இன்னுயிரையும் ஈயத்தயாராய் இருக்க வேண்டும்.'' என்று இருக்குவேதம் மிகத்தெளிவாக விளக்குகிறது.

(இ.வே.கா-1. மண்-48. நாள்-உ.வா.5)

11. இந்துமதம் என்பதற்கு முப்பத்தாறு (36) நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நூலிலும் 4800 (நாலாயிரத்து எண்ணூறு) இந்துமதக் கருத்துரை வாசகங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

*12. இந்து மதத்திற்குரிய முப்பத்தாறு(36) நூல்களிலும் கூறப்பட்டுள்ள மொத்த இந்துமதக் /கருத்துரை வாசகங்கள் 1,72 800 (ஒரு இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எண்ணூறு) என்று பட்டயலிடப் பட்டுள்ளன.*

*13. இப்படி, பதினெண்சித்தர்கள், வேதநூல்களின் கருத்துச் சொற்றொடர்களை யும்; சுலோகங்களையும், இந்துமதக் கருத்துரை வாசகங்களையும் பட்டியலிட்டுக் காட்டியிருப் பதற்குக் காரணம் வேறு யாரும் புதிதாக எழுதி இவற்றில் சேர்த்துவிடாமல் இருப்பதற்காகத் தான் என்று இந்து வேத நூல்களையும், இந்துமத நூல்களையும் அருளியுள்ள ஆதிசிவனார் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.*

14. ஆதிசிவனார், முத்தமிழ் வளர்ப்பதற்குரிய முத்தமிழ்ச் சங்கமும், இந்துவேதம் வளர்ப்பதற்குரிய பதினெண் சித்தர் மடமும், இந்துமதம் பயிற்றுவித்துப் பரப்புவதற்குரிய பதினெண் சித்தர் பீடமும் நெறிமுறையான நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களை முழுமை யாக அமைத்து இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் அருளுவதற்கு முன்னால்;

**அனாதிக்காலம்** எனப்படுகின்ற 4,85,920 ஆண்டுகள் எனப்படும் மிகப் பெரிய இடைவெளிக் காலத்தில் அண்ட பேரண்டங்களிலிருந்து இம்மண்ணுலகிற்கு வந்திட்ட

பதினெண் சித்தர்கள், பதினெட்டாம் படிக் கருப்புகள், பல்வேறு வகையான அருளுலகத்தவர்கள், பல்வேறு வகைப்பட்ட அண்ட பேரண்ட பொருளுலகத்தவர்கள் ... எனப்படும் பல்வேறு வகைப்பட்டவர்களால் அவரவர்களுடைய சூழ்நிலைகளுக்கும், ஏற்பட்டிட்ட தேவைகளுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்ப இந்துவேத நூல்களிலிருந்தும், இந்துமத நூல்களிலிருந்தும் கருத்துக்கள், கொள்கைகளாகவும், பயிற்சிகளாகவும், வழங்கப்பட்டிட்டன.

15. ஆதிசிவனுர், இந்துவேதநூல்களையும், இந்துமத நூல்களையும் நெறிமுறையான நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்கள் மூலம் ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் இம்மண்ணுலகிற்கு அருள ஆரம்பித்த காலம் இன்றைய கிறித்துவ ஆண்டுக் கணக்குப்படி 1994 ஆம் ஆண்டுக்கு 38,87,175 (முப்பத்தெட்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து நூற்று எழுபத்தைந்து) ஆண்டுகளுக்கு முன்னுல் ஆகும்.

16. சுருக்கமாக, எல்லோருடைய நினைவிலும், அண்ட பேரண்டங்களில் அருளாட்சிபுரியும் முத்தமிழ் மொழியும், இந்துவேதமும், இந்துமதமும், இம்மண்ணுலகிற்கு வந்து, அறிமுகமாகிவிட்ட காலத்தொன்மை அனுதிக்காலத்தையும், ஆதிசிவனுர் காலத்தையும் சேர்த்துக் கணக்கிட்டு 43,73,095 ஆண்டுகள் என்று கணக்கிடப்பட்டுள்ளன பதினெண் சித்தர் பீடாதிபதிகளால். அதாவது, ஆதிசிவனுர் தொடங்கி முத்தமிழ் மெய்ஞ்ஞான சபைத் தலைவர், இந்துவேத நாயகம், இந்துமதத்தந்தை, அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியார் எனப்படும் பதினெண் சித்தர் மடாதிபதியும், பீடாதிபதியுமாக அருளுலக அரியனையில் அமரும் ஞான வேந்தர்கள்; தங்கள் தங்களின் வாழ்வியல் காலத்தை அடிப்படையாகக்கொண்டு எழுதுகின்ற 1. '**குருபாரம்பரியம்**' (இந்துவேத, இந்துமத வரலாறு), 2. **இலக்கிய பாரம்பரியம்** (தமிழ்மொழிவரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, தமிழர் சமுதாய வரலாறு, தமிழர் அகப்பண்பாட்டு வரலாறு, தமிழர் புறப்பண்பாட்டு வரலாறு) (3) அரச பாரம்பரியம் (இந்து வேதமும், இந்து மதமும் யாண்டும் பரவியுள்ள இந்தியா எனப்படும் நாட்டை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட உலக அரசியல் வரலாறு, நிலவியல் வரலாறு, மானுடவியல் வரலாறு, அரசாங்கங்களின் வரலாறு, அரசுக்குரிய அரசாங்கம், அமைச்சு, படை, குடிமக்கள் முதலியவர்கள் பற்றிய விளக்கங்கள், வரலாறுகள், மிகப்பெரிய போர்கள், புகழுக்குரிய சாதனைகளைச் சாதித்த மன்னர்கள்) எனும் முப்பெரும் நூல்களிலும் கையாளப்படுகின்ற 'இந்துமத ஆண்டு' என்ற காலக்கணக்கீடு அனுதிக் காலத்தையும், ஆதிசிவனுர் காலத்தையும் சேர்த்தே கணக்கிடப்படுகிறது. இதன்படியே,

| | | | |
|---|---|---|---|
| (i) | அனுதி காலம் | — | 4,85,920 |
| (ii) | கீரன் உகம் | — | 17,24,080 |
| (iii) | தீரன் உகம் | — | 12,90,000 |
| (iv) | தூரன் உகம் | — | 8,64,000 |
| (v) | கலியன் உகம் | — | 5,095 |
| | | | 43,73,095 ஆண்டுகள். |

இன்றைக்கு 1994 என்று நாம் குறிக்கும் ஆங்கில ஆண்டை ஒவ்வோர் இந்துவும், இந்துமத ஆண்டு 43,73,095 என்று குறித்திட ஆரம்பிக்கவேண்டும். ★அப்பொழுதுதான், முத்தமிழ்

மொழி; முத்தமிழ் மொழியிலுள்ள இந்து வேதம்: முத்தமிழ் மொழியிலுள்ள இந்துமதம்; இந்து வேதமும், இந்து மதமும் பிறந்திட்ட தமிழ் நாடு, இந்து வேதத்துக்கும் இந்துமதத்துக்கும் இருப்பிடமாக, காப்பிடமாக, கருவூலமாக விளங்கிடும் தமிழ் நாட்டுக் கோயில்கள் இந்து வேதத்துக்கும், இந்துமதத்துக்கும் மூலவர்களாக, காவலர்களாக, நாயகர்களாக, வாரிசுகளாக வித்துக்களாக, நாற்றங்கால்களாக, விதைப் பண்ணைகளாக, நாற்றுப் பண்ணைகளாக விளங்குகின்ற..தமிழர்கள்....முதலியோரின் தொன்மைகளும், மேன்மைகளும், நுண்மைகளும், திண்மைகளும், ஒண்மைகளும், பண்புகளும், பயன்களும், உரிமைகளும், பெருமைகளும்... **காலக் கணக்கீட்டு, அடிப்படையில் மதிக்கப் பட்டிடும்!** காலக் கணக்கீட்டு அடிப்படையில் மதிக்கப்பட்டிடும்!! காலக்கணக்கீட்டு அடிப்படையில் மதிக்கப்பட்டிடும்!!!

17. இந்து வேதமும், இந்துமதமும் அறிவிக்கின்ற பத்தி நெறிமுறை வழிகள் நான்கு.

(i) **திருமுறை** 'அனைத்தையும் மறந்தும், துறந்தும், விருப்பம் போல் உடை உடுத்தியும், உடுத்தாமலும் எங்கும் திரிந்தலைந்தும், விரும்பிய இடத்தில் கிடந்தும், அமர்ந்தும், கண்மூடியோ, கண்திறந்தோ ஐம்புலனையும் ஒருமுகப்படுத்தி அருளுலகத்தவரிடம் பத்திசெலுத்தும் பத்தி நெறிமுறை வழியே **திருமுறை**'.

*[ இ. வே. கா. 1- மண் - 47 - நாள் 2. கோ வா - 1 ]*

(ii) **தருமுறை** 'அவரவர் விருப்பத்திற்கும் வசதி வாய்ப்பிற்கும், சூழ்நிலைக்கும் துணைக்கும், ஏந்திற்கும் ஏற்பக் கிடைக்கக்கூடிய பயிரினங்கள், வேர், தண்டு, இலை, பூ முதலியவைகளை உதிரியாகவும், சரமாகவும், மாலையாகவும், கட்டிப்பயன்படுத்தியும், அத்துடன் பயிரினங்களின் கிழங்கு, தண்டு, இலை, பூ. காய், கனி முதலியவைகளை சமைத்துப் பக்குவப் படுத்தியும், சமைக்காமலும் படையலிட்டும்; தம் விருப்பம் போல் குரல் எழுப்பியும், பாடல் பாடியும். கருவிகளை இசைத்தும், ஆட்டங்கள் ஆடியும் அருளுலகத்தவரிடம் பத்தி செலுத்தும் பத்தி நெறிமுறை வழியே **தருமுறை**''

[இ.வே.கா-1. மண் : 47 வா-2]

(iii) **கருமுறை** : 'அவரவர் விருப்பத்திற்கும், வசதி வாய்ப்பிற்கும், சூழ்நிலைக்கும், துணைக்கும், ஏந்திற்கும், ஏற்ப; கிடைக்கக்கூடிய விருப்பமான உயிரினங்களின் குருதியும், சமைத்த இறைச்சியும், ஊண் சோறும் படைத்து தம்விருப்பம் போல் குரல் எழுப்பியும், பாடல் பாடியும் கருவிகளை இசைத்தும், ஆட்டங்கள் ஆடியும், அருளுலகத்தவரிடம் பத்தி செலுத்தும் பத்தி நெறிமுறை வழியே **கருமுறை**''

[இ.வே.கா-1 மண் : 47 நா.2.வா-3]

(iv) **குருமுறை** : ''அனைத்தையும் மறந்தும், துறந்தும் எந்தவொரு கடவுளையும் நினைக்காமல், கோயிலுக்கும் போகாமல் எந்தவொரு பூசையையும் செய்யாமல் தான்

தேர்ந்தெடுத்த குருவின் அருகிலேயே இருந்து வாழ்ந்து அவருக்குத் தேவையான அனைத்து அணுக்கத் தொண்டுகளையும் செய்வதையே பத்தி வாழ்க்கையாக ஏற்று வாழும் நெறிமுறை வழியே **குருமுறை**".

[இ.வே.கா-1 மண்-47. நா.2.வா-4]

18. <u>இந்துவேதமும் இந்துமதமும் அறிவிக்கின்ற, கடவுளைப் பரவும் நெறிகள் நான்கு</u> :

(i) பத்தியாளர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் விரும்புகிற குடும்ப ஆண்டவர்கள் குலதெய்வங்கள், கிராமத்து தேவர் தேவதைகள், நாட்டுக் கடவுளர்கள் முதலியவர்களிடமும்; அலைந்து திரியும் காற்று, கருப்பு, பேய், பிசாசு முதலியவற்றிடமும் பத்தி செலுத்துவதற்காக தங்களுடைய வசதி வாய்ப்புகளுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்ப பலி பொருள்களையும, படையல் பொருள்களையும் மற்ற பூசனைப் பொருள்களையும் படைத்து தம்விருப்பம் போல் குரல் எழுப்பியும், பாடல்பாடியும் கருவிகளை இசைத்தும், ஆட்டங்கள் ஆடியும், பரவிடுதற்குரிய நெறிகளாக பூசை நெறிகள், வணங்கும் நெறிகள், வழிபடும் நெறிகள், கும்பிடும் நெறிகள் எனும் நான்கு வகை நெறிகள் திட்டவட்டமாக விளக்கமாக அருளப்பட்டுள்ளதை தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து நம்பி ஏற்று, ஒப்புக் கொண்டு விருப்பத்தோடு செயலாக்குபவர் நிறைவான பயனைத் துய்ப்பர்"

[இ.வே. கா-1. மண்-47. நா.2.வா-5]

19. <u>இந்துவேதமும், இந்துமதமும் அறிவிக்கின்ற கடவுளைப் பரவும் முறைகள் நான்கு</u>.

"பத்தியாளர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் விரும்புகிற குடும்ப ஆண்டவர்கள், குல தெய்வங்கள், கிராமத்துத் தேவர் தேவதைகள், நாட்டுக் கடவுளர்கள் முதலியவர்களிடமும், அலைந்து திரியும் காற்று, கருப்பு, பேய், பிசாசு முதலியவற்றிடமும் பத்தி செலுத்துவதற்காக தங்களுடைய வசதி வாய்ப்புகளுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்ப பலி பொருள்களையும், படையல் பொருள்களையும் மற்ற பூசனைப் பொருள்களையும் படைத்து தம் விருப்பம் போல் குரல் எழுப்பியும், பாடல்பாடியும், கருவிகளை இசைத்தும், ஆட்டங்கள் ஆடியும் பரவிடுவதற்குரிய முறைகளாக அழுகை முறை, தொழுகை முறை, எள்ளல் முறை, ஏசல் முறை எனும் நான்குவகை முறைகள் திட்டவடிவமாக விளக்கமாக அருளப்பட்டுள்ளதை தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி, ஏற்று ஒப்புக்கொண்டு விருப்பத்தோடு செயலாக்குபவர், நிறைவான பயனைத் துய்ப்பர்".

[இ.வே. கா-1 மண்-47 நா.2.வா-5]

20. இப்பூவுலகத்தார்க்கு, இப்புவிப்பரப்பார்க்கு, இப்பூமியார்க்கு, இவ்வையகத்தார்க்கு, இம்மாஞாலத்தவர்க்கு, இவ்வுலகத்தார்க்கு அண்ட பேரண்ட அருளாட்சி நிகழ்த்தும்

மூலப் பதினெண் சித்தர்கள் அருளிடும் 'அடிப்படையான அருளுலகப் பேருண்மையாவது; விண்ணுலகிலிருந்து வந்த கடவுள்களானாலும் சரி, மண்ணுலகிலிருந்து உருவான கடவுள்களானாலும் சரி; அவர்கள் முதன்முதல் தங்கிச் செயல்பட்டிடும் நாட்டையும், மொழியையும், இனத்தாரையும், இனத்தாரின் உறவுமுறை, உடைமுறை, உணவுமுறை, கலைமுறை, மற்ற பழக்க வழக்க நெறிமுறை ... முதலியவைகளை மட்டுமே என்றென்றும் விரும்பிடுவார்கள். இதை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். அதனால், அந்தந்த நாட்டுமக்கள் தங்களுடைய நாட்டுக்குரிய கடவுளர்களிடத்து மட்டுமே பத்தி செய்து பயனடைய வேண்டும். அந்தந்த இனத்து மக்கள், தங்களுடைய இனத்துக்குரிய கடவுளர்களிடத்து மட்டுமே பத்தி செய்து பயனடைய வேண்டும்; அந்தந்த மொழிக்குரிய மக்கள், தங்களுடைய மொழிக்குரிய கடவுளமுடத்து மட்டுமே பத்தி செய்து பயனடைய வேண்டும்''.

[இ.வே.காண்-5. மண்-17. நா.2.வா-16]

**குறிப்பு** : இதே கருத்து அசுரவேதம், அதர்வானவேதம், யாமவேதம் மூன்றிலும் மேலும் தெளிவாக விளக்கப்படுகின்றது.

21. இந்துவேதத்தில் சாதிகள் பற்றிய விளக்கம் :

''அருளுலகிலுள்ள 8,84,736 வகைப்பட்ட கடவுள்களிடத்தும், பத்தி செலுத்தி சத்தி, சித்தி, முத்திகளைப் பெற்றிடும் சாதனையாளர்கள் சாதுக்களாவார்கள். இந்த சாதுக்களின் வழித்தோன்றல்கள் தங்களுடைய ஆதியாக இருக்கின்ற சாதுக்களின் பெயரைக்குறித்து **'தாங்கள் குறிப்பிட்ட சாதுக்களை ஆதியாக உடையவர்கள்'** எனும் பொருளை உடைய சொல்லான **'சாதி'** எனும் பிரிவை இந்துவேதத்தில், இந்து மதத்தில் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளனர் என்பதால்; **'முன்னோர் வழிபாடும் மூத்தோரை மதித்தலுமே இந்துவேதசாரம்'** என்ற தத்துவம் செயலாகிறது. இது, சமுதாயம் எனும் ஆலமரத்தின் எண்ணற்ற வேர்களாக இருந்து சமுதாயக் கட்டுக்கோப்பைப் பாதுகாத்திடப் பயன்பட்டிடல் வேண்டும்''

[இ.வே.கா-32. மண்-36 நா.2.வா-46]

22. ''இப்பரந்த வையகத்தில் இயற்கையாக, பல்வேறான தட்பவெப்ப நிலைகளுக்கும், மண்வளங்களுக்கும், நீர் வளங்களுக்கும், ஏற்ப அணுக்கள், உயிரணுக்கள், அருளணுக்கள், இணைந்தும் பிரிந்தும் கூடியும் கணக்கற்ற வகைவகையான பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றியது போலவே, 'கணக்கற்ற வடிவ, வண்ண, உருவ, தோற்ற அங்க, அழகு வடிவங்களில் வெவ்வேறான அமைப்புக்களை உடைய மானுடர்கள் தோன்றியுள்ளனர். இவர்கள், தொடர்ந்து பிறப்புக்கள் தோறும் அவரவர்கள் தோன்றிய இடங்களிலேயே தொடர்ந்து தோன்றிடுவர் என்பதனால்; அவரவர் தங்கள் தங்களுடைய நாட்டையும் நாட்டாரையும், இனத்

தையும், இனத்தாரையும், மொழியையும் மொழியாரையும் விரும்பி போற்றிப் பாதுகாத்து பெருமிதமிக்க உரிமை மிக்க வாழ்வுடன் வாழச் செய்திடல் வேண்டும். அதனுல், தம்மைப் போலவே, ஒவ்வோர் நாட்டாரும், இனத்தாரும், மொழியாரும், அவர்க்குரிய நாட்டையும், நாட்டாரையும், மொழியையும் மொழியாரையும், இனத்தையும் இனத்தாரையும், கெடுதலே வராத விடுதலே வாழ்வு, உரிமைமிக்க பெருமிதவாழ்வு வாழுதற்கு உதவிடல் வேண்டும். இதற்காகவே, இந்துவேதம், நாட்டு விடுதலே, இன விடுதலே, மொழிவிடுதலே, எனும் முக்கோண தத்துவப்பீடத்தையே இந்துவேத பீடமாக அறிவிக்கிறது.

[இ.வே. கா-32 மண்-36 நா.2.வா-47]

23. **இந்துவேதமும், இந்துமதமும் கூறும் வாழ்வியல் நெறிமுறைகள் நான்கு :**

''இம்மண்ணுலக பிறப்புக்களில் அரியது, உயரியது, சீரியது, பெரியது, மானுடப் பிறப்பேயாகும். இப்பிறப்பினே வீணுக்கிடாது அவரவரின் அகஉணர்வும், புறஉணர்வும் விழித்த நிலேயில் அறவியாக, உறவியாக, துறவியாக, மறவியாக மாறிமாறி அனேத்தையும் துய்த்து உய்வு பெற்றிடல் வேண்டும் என்பதையே அண்ட பேரண்டமாளும் இந்துவேதமான இருக்கு வேதத்தில் விளக்குகின்றனர் மூலப்பதினெண் சித்தர்கள்.

[இ.வே. கா-1: மண்-17: நா.2.வா-33]

24. **இந்துவேதத்தில் மருத்துவ உணவுக் கொள்கை.**

''அனேத்து வகையான பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் தலேவராக, ஈசராக தோன்றிட்ட மனிசர்கள்; தங்கள் விருப்பம் போல் கண்டதையெல்லாம், விரும்பியதையெல்லாம், உண்டு நோயுற்று அவதிப்பட்டதால்; அண்ட பேரண்டங்களிலிருந்து வந்திட்ட அருளுலகத்தவர்கள் பரந்துபட்ட இப்பூவுலகில் வாழுகின்ற வெவ்வேறு வகையான உடல் கூறுகளுடைய மானுட இனத்தார்கள் தங்கள் தங்களுடைய வட்டாரங்களில் இயற்கையாகக் கிடைக்கக் கூடிய பயிரினங்களிலும், உயிரினங்களிலும் எவையெவற்றை எப்படிச் சமைத்து உண்ண வேண்டும்? எவையெவற்றை எப்படிச் சமைத்து உண்ண வேண்டும்? என்பதை விளக்கிடுவதற்காக உணவுநூல் அடுக்களை சாத்தர, சாத்திர சாத்திற நூல்கள், மடநூல், சாத்தர, சாத்திர, சாத்திறங்களை என்பனவற்றை மிகத்தெளிவாக திட்டவட்டமாக எழுதி அருளியுள்ளனர். இதன்படி, கூடுமானவரை அந்தந்த நாட்டார், வட்டாரத்தார், இயற்கையாக தங்களுக்குக் கிடைக்கக்கூடிய, பயிரினங்களையும், உயிரினங்களையுமே உணவுக்குப் பயன்படுத்துதலே நோயற்ற வாழ்வைத் தரும்.

[இ.வே. கா-7, மண்-19 நா.2.வா-27]

25. இந்துவேதத்தில் மருத்துவ உடைக்கொள்கை :

"இவ்வையகத்தில் பல்வேறு வகையான தட்பவெப்ப சூழ்நிலைகள் மலைமுகடு முதல் அலைகடலிடைத் தீவுகள் வரை வேறுபட்டிருக்கின்றன. இவற்றிற்கேற்பவே மெய்யைப் போர்த்துவது, தலைப்பாகை அணிவது, பாதுகை அணிவது அமைதல் வேண்டும். தேவையில்லாமல் மெய்யை ஆடைகளால் போர்த்துவதும், தலைப்பாகை அணிவதும், பாதுகை அணிவதும், நோய்நிலைகளை, தேய்நிலைகளை, ஓய்நிலைகளை, மாய்நிலைகளை .... விரைந்து அதிகப்படுத்திடும். அதனால், உடம்பில் அதிகமான ஆடை அணியாமல் இருப்பதே உடம்புக்கும், உள்ளத்திற்கும், சிந்தைக்கும், உணர்வுக்கும், செயல் நிலைகளுக்கும், நலத்தையும், வளத்தையும், வலிவையும், பொலிவையும், சுறுசுறுப்பையும், வழங்கிடும்".

[இ.வே.கா:7 மண்-19 நா.2.வா:28]

26. இந்துவேதமும், இந்துமதம் கூறும் உயிர்நோய் உடல்நோய்.

"அண்டபேரண்டமாளும், மூலப்பதினெண்சித்தர்கள், தங்களோடு பதினெட்டாம் படிக் கருப்புகளையும், கடவுளர்களையும், வழிபடுநிலையினர்களையும், சித்தர்களையும், மற்றவர்களையும், அவ்வப்போது துணையாக அழைத்துக் கொண்டு, இம்மாஞாலத்தில் கல்தோன்றி மண் தோன்றாக் காலம் முதலே வந்து சென்று; அருட்கொடையாக இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் தேவைக்கேற்ப வழங்கியுள்ளனர். எனவேதான், பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும், வரக்கூடிய அனைத்து வகைப்பட்ட நோய் நொடிகளுக்குரிய **சீந்நூ** மருத்துவத்தையும், **சீந்நூர்** மருத்துவத்தையும் இந்து வேதத்திலும், இந்துமதத்திலும் வழங்கியுள்ளனர். இதில் மிகத்தெளிவாக உயிருக்கு வரக் கூடிய நோய்கள், உடலுக்கு வரக்கூடிய நோய்கள், அவற்றிற்குரிய மருந்துகள் அனைத்தையும் வழங்கியுள்ளனர். இம் மருத்துவமுறைகள் உலகம் முழுவதுமுள்ள அனைத்துவகைப்பட்ட நாட்டாருக்கும், இனத்தாருக்கும், மொழியாருக்கும் பயன்படக் கூடியவை. இருப்பினும் உலகம் முழுதும் உள்ளாருக்குப் பயன்படக் கூடிய மருந்துகளைத் தயாரிப்பதற்குரிய கற்கள், மணல்கள், மண்கள், நீர்கள், உப்புகள், உலோகங்கள் .... அதிக அளவில் இந்துவேதமும், இந்துமதமும் பிறந்த தமிழ்நாட்டில், திருவிடத்தில் இந்தியாவில் மிகுதியாக இருக்கின்றன, கிடைக்கின்றன. இவற்றைப் பயன்படுத்தி மருந்துகள் தயாரிக்கும் சித்த மருத்துவ முறைகளும், சித்தர் மருத்துவ முறைகளும் என்றென்றும் இலைமறை காயாக, நிலவறைக் கருவூலப்பொருள்களாக, இருப்பதை உணர்ந்து உலகோர் உய்வு பெறல்வேண்டும்.

*[இ.வே. காண்-7 மண்-19 நா2.வா-29]*

27. இந்துவேதம் கூறும் நோயற்ற நல்வாழ்வும், மரணமிலாப் பெருவாழ்வும்

"அண்ட பேரண்டமாளும் மூலப் பதினெண்சித்தர்கள், அருட்கொடையாக வழங்கியுள்ள இந்து வேதத்திலும், இந்து மதத்திலும், அறிவுக்கொடையாக உள்ள சூண்டலினி, குண்டளினி, குண்டழினி ஆசிரமப் பயிற்சிகளும் ஓகாசன, யோகாசன, மோகாசன, போகாசன, தவப் பயிற்சிகளும் பூசை விதிகளில் கூறப்பட்டிருக்கும் 1. கஞ்சாஇலை 2. கசகசா பால் 3. தென்னைமரத்து கள் 4. பனைமரத்து கள் 5. ஈச்சமரத்து கள் 6. பதப்படுத்தப்பட்ட

பழச்சாறு 7. தேன் 8. பால் 9. கருப்பஞ்சாறு 10. வில்வம் 11. துளசி 12. வெட்டிவேர் 13. பறவைகளின் பசுங்குருதி 14. வெள்ளாட்டுக் குட்டியின் பசுங்குருதி 15. எள்நெய் 16. உண்ணுதற்குரிய நீர்வாழ், நிலம் வாழ் உயிரின இறைச்சி ... முதலியவை முறையாக பெண்களில் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அறிவை, தெரிவை, பேரிளம்பெண் எனும் ஏழுபருவத்திற்கு ஏற்பவும், ஆண்களில் பாலுகர், சிறுஅர், இளைஞர், நட்டாள், பெரியவர், முதலியவர் கிழவர், எனும் ஏழு பருவத்திற்கேற்பவும் பயன்படுத்தியும், இந்துவேத உணவு முறையால் நோயற்ற நல்வாழ்வையும், மரணமிலாப் பெருவாழ்வையும் பெற்றிடலாம்''

*[இ.வே. காண்-7 மண்-19 நா.2.வா-30]*

## 28. இந்துவேதமும், இந்துமதமும் கூறும் மாறுஇளமை.

''அண்ட பேரண்டங்களிலிருந்து, இம்மாஞாலம் நீர்க்கோளமாக இருந்து, நட்ட நடுவில் கற்பாறை மட்டும் முளைத்திருந்த காலத்தில் வந்திட்ட மூலப்பதினெண் சித்தர்கள் [கற்பாறை பகுதிகளைச் சுற்றி எங்கும் பரவி இருந்த பெருநீர்ப் பரப்புக்கு இந்துமாக்கடல் என்று பெயர் வைத்தனர்.] அதாவது, பதினெண் சித்தர்களின் தாய்மொழியான முத்தமிழ் மொழிக்கு, தெய்வத்தமிழ் மொழிக்கு, வண்டமிழ் மொழிக்கு, ஒண்டமிழ் மொழிக்கு, தீந்தமிழ் மொழிக்கு, செந்தமிழ் மொழிக்கு, பைந்தமிழ் மொழிக்கு இந்துவேதத்தில் பொருளாகக் கூறப் படும் 1) நாற்பத்தெட்டு சொற்களின் பட்டியலிலும் 2) அறுபத்து நான்கு சொற்களின் பட்டியலிலும் 3) தொண்ணூற்றுறு சொற்களின் பட்டியலிலும் 4) நூற்றியெட்டு சொற்களின் பட்டியலிலும் 5) இருநூற்று நாற்பத்து மூன்று சொற்களின் பட்டியலிலும் 6) முந்நூற்றுத் தொண்ணூற்றுறு சொற்களின் பட்டியலிலும் 7) நானூற்றுமுப்பத்திரண்டு சொற்களின் பட்டியலிலும் 8) நானூற்று எண்பத்தாறு சொற்களின் பட்டியலிலும் 9) எழுநூற்று இருபத் திரண்டு சொற்களின் பட்டியலிலும் 10) தொள்ளாயிரத்து எழுபத்திரண்டு சொற்களின் பட்டியலிலும் 11) ஆயிரத்தெட்டு சொற்களின் பட்டியலிலும் 12) ஆயிரத்து முந்நூற்று ஐம்பத் தொன்பது சொற்களின் பட்டியலிலும்; முதல் சொல்லாக இருக்கின்ற; பொருளாழமிக்க, அழகிய, இனிய, சொல்லான '**இந்து**' என்ற சொல்லால் '**இந்துமாக்கடல்**' என்று பெயரிட்டனர். அதுபோல், மாறுத இளமை தரும் வேதத்துக்கும், மதத்துக்கும் 'இந்து' என்ற பெயரை வழங்கிய பதினெண் சித்தர்கள், மாறுத இளமை தரும் மருந்துக்கும் 'இந்து' என்று பெயரிட்டனர். இந்த 'இந்து' என்ற சொல்; இம் மாஞாலத்தில் கற்பாறையும், மணலும், மண்ணும் படிப்படியாகத் தோன்றி, பயிரினங்கள் முளைத்த காலத்து, மாறு இளமை தரும், மாறுப் பசுமையுடைய கஞ்சாஇலையை மாறுத இளமை தரும் அமுதம் தயாரிக்கும் மூல மெனக் கண்டறிந்து இந்துவேத வாழ்வியலிலும், இந்துமத வாழ்வியலிலும் மறையாக நெறி முறைப்படுத்தினர். இதனை, இந்து வேதமும், இந்துமதமும் பிறந்த நாட்டைத் தவிர வேற்று நாட்டில் முழுமையான வளத்தோடு விளைவித்திடவும் முடியாது, பயன்படுத்திடவும் முடியாது.

இதை மூலப் பதினெண் சித்தர்கள்,

மாதப் பருவ பூசையில்
நிலவொளி படா
ஆவி ஆருயிர் ஆன்மா
இணையும் இலிங்கத்தில்
பசு நெய்யோடு இந்துவை
கலந்து பூசி

காரிருள் அகல கதிரவன்
ஒளி மறைய
காலம் பத்து யாமம்
கடந்து கருக்காக
நெருக்கி வருடி எடுத்து
நறுக்கிய பீர்க்கு
சுரக்காய் கொடிக்கு உள்ளீடாக்கி
அறுபதாண் டகவை
கடந்தோடும் இளமை ஒழித்தோடும்
நெறிமுறைப்படி பயன்படுத்திட
எய்திடலாம் துய்த்திடலாம் மாறுவிளமை
என்பதே இந்துவேதம்.

*[இ.வே. கா-7 மண்-19 நா.2.வா-31].*

29. <u>இந்துவேதமும் இந்துமதமும் கூறும் மரணமிலாப் பெருவாழ்வு :</u>

"அண்ட பேரண்டமாளும், மூலப் பதினெண் சித்தர்கள், மண்ணுலகங்களின், தோற்றங்களின் போதும் சிதைவுகளின் போதும் கடல்நீர் கடையப்பட்டு மரணமிலாப் பெரு வாழ்வுக்குரிய அமுதம் வெளிப்படுவது பற்றியும், அண்ட பேரண்டங்களில் உள்ள தேவர் உலகங்களிலிருந்து மரணமிலாப் பெருவாழ்வுக்குரிய அமுதத்தைக் கொண்டு வருவது பற்றியும், சித்தர் மருத்துவமுறையில் மரணமிலாப் பெருவாழ்வைத் தரக்கூடிய அமுதம் தயாரிக்கப்படுவது பற்றியும், சிறந்த திருவருட் செல்வர்களுக்கு மட்டும் அவரவர் காலத்தில் வாழுகின்ற சிவன் களும், சிவபெருமான்களும், பரம சிவன்களும், மகா சிவன்களும், சர்வசிவன்களும், சீவன்களும் சீவபெருமான்களும், பரம சீவன்களும், மகாசீவன்களும், சர்வசீவன்களும் தேவர் உலகத் திலிருந்து மரணமிலாப் பெருவாழ்வுக்குரிய அமுதத்தை இம்மண்ணுலகில் கொடுத்தோ (அ) அருளாளர்களை தேவருலகத்திற்கோ (அ) இந்த உலகம் கடந்த கங்குல் பகலற்ற இடத்துக்கோ அழைத்துச் சென்று, மரணமிலாப் பெருவாழ்வுக்குரிய பத்தி செய்யும் நான்குமுறைகளும், நான்கு வழிவகைகளும், நான்கு நெறிகளும், செயல் வடிவில் வழங்கப்பட்டிருப்பதுதான் இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்குரிய பெருமையாகும். இப்பெருண்மைகளை விளக்கித்தான் அறுதிக்காலத்தில் உருவாகிட்ட எண்ணூறுக்கும் மேற்பட்ட வேதங்களையும், வேதமதங்களை யும் வென்று அகற்றி, இந்து வேதத்தையும், இந்துமதத்தையும் இம் மண்ணுலகம் முழுவதும்

நிலைபெறச் செய்திட்டார், ஆதிசிவனுர். இதற்காக ஆதிசிவனுர் 7000 கல் பரப்பளவு பெற்றிருந்த இளமுறியாக் கண்டம் எனும் குமரிக்கண்டத்தில் இருந்த தென்னிமய மலை அடிவாரத்தில் முத்தமிழையும் முத்தமிழ் மூலம் இந்து வேதத்தையும், இந்துமதத்தையும் கற்பிப்பதற்குரிய திருவிடத்தை, திராவிடத்தை உண்டாக்கிஞர். அத்திருவிடத்தில் தயாரான தமிழர்கள் திருவருட்செல்வர்களாக அருளாளர்களாக, ஆன்மீகவாதிகளாக, ஆத்திகர்களாக, திருவிடத்தவர்களாகத் தயாராஞர்கள். இத்திருவிடத்தார்களை, திராவிடர்களைப் பயன்படுத்தி இந்து வேதமும், இந்துமதமும் யாண்டும் பரவியுள்ள முதல் இந்தியாவை உருவாக்கிஞர். இந்த முதல் இந்தியாவில் தயாரான இந்துக்களை வைத்துக் கொண்டு தெற்கே இருந்த இமயமலைக்கும், வடக்கே இருந்த விந்திய மலைக்கும் இடையில் ஒன்பது கோள்களுக்காக இந்தியாக்கள் ஒன்பது என்றும், பன்னிரண்டு இராசிகளுக்காக இந்தியாக்கள் பன்னிரண்டு என்றும், இருபத்தேழு விண்மீன்களுக்காக இந்தியாக்கள் இருபத்தேழு என்றும் ஆகமொத்தம் நாற்பத்தெட்டு இந்தியாக்களை உருவாக்கிஞர். இந்த இந்தியாக்களை உருவாக்கிட தமிழர்கள் திருவிடத்தார்கள், திராவிடத்தார்கள், திராவிடர்கள் திருவருட்செல்வர்களாக, ஆத்திகர்களாக, ஆன்மீகவாதிகளாக இந்து வேதத்தையும், இந்து மதத்தையும், இவை கூறப்பட்டுள்ள முத்தமிழ்மொழியையும் முறையாகக் கற்பிக்கும் நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களை உடைய திருவிடங்களை நிர்வகிக்கும்; நிர்வகித்துக் காப்பாற்றும்; திருவருட் செல்வர்ளாக, திருவிடத்தார்களாக, திராவிடத்தார்களாக, திராவிடர்களாக விளங்கிஞர்கள். எனவேதான், தமிழர்களே இந்து வேதத்துக்கும், இந்துமதத்துக்கும் மூலவர்கள், காவலர்கள், நாயகர்கள், தலைவர்கள், வாரிசுகள், வித்துக்கள், நாற்றங்கால்கள், விதைப் பண்ணைகள், நாற்றுப் பண்ணைகள், முழுமுதற் தலைமை ஆச்சாரியார்கள், முழுமுதற் தலைமை ஆச்சாரியக் குருபீடங்கள், முழுமுதற் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர்கள் என்ற உரிமையையும், பெருமையையும், இருக்கு வேதத்தின் இறுதியிலும், இருக்கு வேதத்திலிருந்து பிரிக்கப்பட்ட அசுரவேதம், அதர்வான வேதம், யாமவேதம் எனும் மூன்று வேதங்களின் ஆரம்பத்திலும் தெளிவாக திட்டவட்டமாக, வெளியிட்டுள்ளனர். அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்கள்.

[இ. வே. கா-48; மண்-38; நா.2.வா-45]

[அ. வே. கா-1 மண்-1 நா.வா-1]

[அத வே கா-1 மண்-1 நா.வாக்-1]

[யா.வே. கா-1 மண்-1 நா.வாச-1]

## 30. அருளுலகம் பற்றிய அறியாமைகள் அகலட்டும்.

"அஞதிக்காலத்தில் தோன்றிட்ட எண்ணூறுக்கும் மேற்பட்ட வேதங்களும், வேதமதங்களும், அருளுலகைப் பற்றி வளர்த்திட்ட தவருன கற்பனைகள், முறைகேடான கதைகள், பொய்யான சரித்தரங்கள், சரித்திரங்கள், சரித்திறங்கள், பயனில்லாத மந்தர, மந்திர, மந்திறப் பூசை மொழிகள், வாய்மையற்ற பூசைவிதிகள், உய்வைத் தரமுடியாத

போலியான மதச்சடங்குகள்.... முதலியவற்றால் விளைந்திட்ட அருளுலக அறியாமைகளை அகற்றிட ஆதிசிவனாரும், அவரது திருமகனார் முருகப் பெருமானாரும், இவர்கள் உருவாக்கிய நாற்பத்தொன்பது திருவிடத்தைச் சேர்ந்த இந்தியாக்களும், திருவிடத்துச் செயல்வீரரான திராவிடர்களும், முயன்றுமுயன்று உரியபயன்கள் பெரிய அளவில் விளையாமையால்; ஆதிசிவனாரின் திருமகனான முருகப் பெருமான், தம்தந்தைக்கே இந்துவேத இந்துமதப் பிறணவங்களின் இயலாமைகளை விளக்கி அருளுரை வழங்கினார். அதன் பயனாக ஆதிசிவனாரும், விண்ணுலக ஐவர் குழுவையும், மண்ணுலக ஐவர் குழுவையும் ஒன்று கூட்டி இருக்குவேதத்தில் வாக்காகக் கூறப்பட்டுள்ளவைகளைத் தனித்தனியாகப் பிரித்து அசுரவேதம் என்றும், வாக்கியங்களாகக் கூறப்பட்டுள்ளவைகளைத் தனியாகப் பிரித்து அதர்வான வேதம் என்றும், வாசகங்களாகக் கூறப்பட்டுள்ளவைகளைத் தனியாகப் பிரித்து யாமவேதம் என்றும் அருளுலகில் ஈடுபடக் கூடிய அருளாளர்களுக்காக, ஆன்மீகவாதிகளுக்காக, பத்தியாளர்களுக்காக, ஆத்திகர்களுக்காக பத்தியாளர்களுக்காக, ஆத்திகர்களுக்காக, திருவிடப் பணிகளைச் செய்யும் திராவிடர்களுக்காக ஒரேவேதமாக இருந்த இந்துவேதத்தை நான்கு வேதங்களாக ஆக்கினார். இவற்றை அறிவிக்கும் வண்ணமாக இருக்கு வேதத்தின் இறுதியிலும், மற்ற மூன்று வேதங்களின் ஆரம்பத்திலும், **'அருளுலக அறியாமைகள் அகலட்டும்'!** என்று தலைப்பிட்டே அருளுலகு பற்றிய பல உண்மைகளை மிகத்தெளிவாகவும், திட்டவட்டமாகவும் ஐயமற எளிமையாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கங்கள் அருளப்பட்டுள்ளன. அவை இருக்குவேதத்தில் காண்டம்-48இல் மண்டலம்-47 - இல் 48 உரைக்கோவை வாசகங்களிலும் விளக்கப்பட்டுள்ளன. இவையே, மற்ற மூன்றுவேதங்களின் காண்டம்-1இல் மண்டலம் 2இல் உள்ள 48 வாக்குகளிலும், வாக்கியங்களிலும், வாசகங்களிலும் விளக்கப்பட்டுள்ளன.

[இ.வே. கா-48 மண்-46 நா.உ.வா-46]

## 31. இந்துவேத, இந்துமத அருளூறு பாதுகாப்புக்கலைகள்.

"அண்ட பேரண்ட அருளாட்சி நிகழ்த்தும் அருட்கொடை வள்ளல்களான மூலப் பதினெண் சித்தர்கள், இந்துவேதத்திலும், இந்து மதத்திலும் உலகம் முழுதும் உள்ள எல்லா மொழியினருக்கும் எல்லா இனத்தவருக்கும், எல்லா நாட்டவருக்கும், அருளுலகச் சத்திகள் மூலம் பாதிப்புகளை அகற்றி பாதுகாப்புக்களைத் தரக்கூடிய அருளூறு கலைகளாக

| | | |
|---|---|---|
| 1. கடவுட் கலைகள் | - | ஒன்பது |
| 2. தெய்வீகக் கலைகள் | - | ஒன்பது |
| 3. பேய்க் கலைகள் | - | ஒன்பது |
| 4. நோய்க் கலைகள் | - | ஒன்பது |
| 5. தேய் கலைகள் | - | ஒன்பது |
| 6. அருட் கலைகள் | - | நாற்பத்தெட்டு |

7. ஆய கலைகள் - நாற்பத்தெட்டு
8. ஓய் கலைகள் - ஒன்பது
9. மாய் கலைகள் - ஒன்பது.

என்று ஒன்பது வகைப்பட்ட கலைகளை அருளியுள்ளனர். இவற்றின் விரிவான செயல் வடிவங்கள் இருக்கு வேதத்திலிருந்து தோற்றுவிக்கப்பட்ட மற்ற மூன்று வேதங்களில் இருக்கின்றன.

[இ.வே. காண்டம்-48 மண்-46 நா.உ.வா-47]

32. இந்துவேதமும், இந்து மதமும் ஏன்?

அனாதி காலமெனும் 4,85,920 ஆண்டுகள் இடைவெளியில் அண்ட பேரண்டங்களிலிருந்து வந்த அனைத்து வகைப்பட்ட அருளுலகத்தவர்களும், பொருளுலகத்தவர்களும்; இப் புவிப் பரப்பு முழுதும் தோன்றிட்ட எண்ணூறு வகைகளுக்கும் மேற்பட்ட இனத்தாரோடு எல்லா நிலைகளிலும் இரண்டறக் கலந்து பழகி; இம்மண்ணுலகில் இயற்கை ஈன்றெடுத்திட்ட மனிசர்களால் உருவாக்கப்பட்டிட்ட வேதங்களாலும், வேத மதங்களாலும் தொடர்ந்து நிகழ்ந்து வரும் வெறிநிறை பிரிவினைச் செயல்களும், போட்டா போட்டி சண்டை சச்சரவு போர்களும் தொடர்ந்து தொல்லைகளையும், துன்பங்களையும், அழிவுகளையும் இழிவுகளையும் அமைதியின்மைகளையும், ஒற்றுமையின்மைகளையும், நிம்மதியின்மைகளையும், நிறைவின்மை, களையும் விளைவித்து வருவதை தடுக்க முடியவில்லை, தடுக்கமுடியவில்லை, தடுக்கமுடியவில்லை, தடுக்கவே முடியவில்லை. அம்மட்டின்றி ஏறத்தாழ எல்லா வேதங்களும், வேத மதங்களும் தங்கள் தங்களின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும், ஆக்கிரமிப்பிற்கும், ஆட்சிக்கும் வறட்டுப் பிடிவாதத்தோடும், முரட்டு வெறியோடும் முயற்சிப்பனவாகவே இருந்திட்ட காரணத்தினால்; வேதத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும், கூட்டம் கூட்டமாக மக்கள் சண்டைச் சச்சரவுகளையும், போர்களையும், கொலை கொள்ளை போன்ற கொடுமைகளையும், ஏமாற்றுக்களையும் நிகழ்த்திடும் கலையை, கலையின் ஆச்சாரத்தை வேத நீதியாகவும், வேதமத நியதியாகவும் ஆக்கின. அதனால், தனிமனித வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும் கண்மூடித்தனமான வறட்டுப் பிடிவாதமும்; பிறரை அடக்கி ஆளும் ஆதிக்கவெறியும்; தான், தங்களுடையது என்ற அகம்பாவமும், ஆணவமும்; தனக்கென்ற, தங்களுக்கென்ற பேராசை வெறியும், பதவி வெறியும், புகழ் வெறியும் நியாயமான மனித உணர்வுகளாக ஆக்கப் பட்டுவிட்டன, எல்லா வேதங்களாலும், வேதமதங்களாலும். அந்த காலகட்டத்தில்தான் அண்ட பேரண்டங்களிலிருந்து வந்திட்ட அனைவருமே; இம்மாஞாலத்தில் மனிசர்களைக் காப்பாற்ற வேண்டும் என்றால் பண்படுத்திட வேண்டுமென்றால் அண்ட பேரண்டங்களை ஆளுகின்ற இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் அவை அருளப்பட்டுள்ள அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ்மொழியும், இம்மண்ணுலகத்தார்க்கு

முறைப்படி வழங்கப்பட்டேயாக வேண்டும் என்ற பரிந்துரையை அண்டபேரண்டமாளும் மூலப் பதினெண்சித்தர்களிடம் வழங்கினார்கள். அப்பரிந்துரைகளின் அடிப்படையிலேயே தொடர்ந்து ஆய்வுகள் நிகழ்த்தி இம்மண்ணுலகில் தக்க இடத்தைத் தேர்ந்தெடுத்து அண்டபேரண்டமாளும் முத்தமிழுக்கும், இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் நாற்றங்காலாக, விதைப் பண்ணை யாக தேர்ந்தெடுக்கப்பட்ட மணீசர்களை தயாரிப்பதற்குரிய திருவிடத்தை உருவாக்கி அங்கு முத்தமிழைக் கற்பித்து தமிழர்களை உருவாக்கி; அத் தமிழர்களையே மெய்யான ஆத்திகர் களாக, ஆன்மீகவாதிகளாக, பத்தியுணர்வு உள்ளவர்களாக, அருளுலக நாட்டமுடையவர்களாக திருவிடத்துத் திராவிடர்களாக தயாரித்தே!, தயாரித்த பிறகே; அத்திராவிடர்களிடம் இந்து வேத நூல்களையும், இந்துமத நூல்களையும் ஒப்படைத்து அவர்களையே திருவருட்செல்வர் களாக, திருவருள் வித்துக்களாக, திருவருள் விதைப்பண்ணைகளாக, திருவருள் நாற்றுப் பண்ணைகளாக, திருவருள் கல்வி கற்பிக்கும் திருவிடத்தின் வாரிசுகளாக, திருவிடத்தார்களாக, திருவருட் செல்வங்களுக்காக வாழும் திராவிடர்களாக, இந்த உலகம் முழுவதும் அனுப்பி இந்துவேதத்தாலும், இந்து மதத்தாலும், தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும், அரசியல் வாழ்விலும் மனித உணர்வு, மனிதப் பற்று, மனிதப் பாசம், மனிதஅன்பு மனிதக் காதல், மனித நட்பு, மனிதத் தோழமை, மனித வாழ்வியலின் புனிதம், மனித வாழ்விய லின் இனிமை, மனித வாழ்வியலின் கனிவு, மனித வாழ்வியலின் ஒற்றுமை, மனித வாழ்வியலின் உறவு, மனித வாழ்வியலின் உரிமை, மனித வாழ்வியலின் சமாதானம், மனித வாழ்வியலின் சகோதரத் தத்துவம், மனித வாழ்வியலின் பொதுவுடமைச் செயல் சித்தாந்தம், மனித வாழ்வி யலின் நிம்மதி, மனித வாழ்வியலின் நிறைவு, மனித வாழ்வியலின் அமைதி, மனிதவாழ்வியலின் அடக்கம், மனித வாழ்வியலின் கூட்டுறவுப் பண்பு, மனித வாழ்வியலின் கூடிவாழும் நாகரீகம், மனித வாழ்வியலின் இரக்கம், மனித வாழ்வியலின் ஈகை, மனித வாழ்வியலின் கட்டுப்பாடு, மனித வாழ்வியலின் கடமை உணர்வு, மனித வாழ்வியலின் முறையான இன்பத்துய்ப்பு, மனித வாழ்வியலின் பொறுப்புணர்வு, மனிதவாழ்வியலின் பொறுமையுணர்வு, மனித வாழ்வியலுக் குரிய தனிமனித வாழ்க்கை ஒழுகலாறுகள், குடும்பக் கூட்டமைப்பு ஒழுகலாறுகள், சமுதாயக் கூட்டமைப்பு விதிகள், நியதிகள், நீதிகள், அரசியல் நிறுவன நிர்வாக வடிவமைப்புக்கள், சட்டதிட்ட கட்டுப்பாடுகள், விதிகள், நியதிகள், நீதிகள் .... முதலிய அனைத்தையும் இறை உணர்வின் அடிப்படையிலும், அருளுலக கொள்கை, குறிக்கோள், கோட்பாட்டு நடைமுறை களின் துணையிலும் வளர்த்திடுவதற்காக; வளர்த்து நற்பயன்களை விளைவித்திடுவதற்காக திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதுவே, மூலப் பதினெண் சித்தர்கள் இம்மண்ணுலகுக்காக உருவாக்கிய அருட்பணி விரிவாக்கத் திட்டம்.

**[இருக்கு வேதம் காண்டம்-1, மண்டலம்-2**
**நாள் உரைக் கோவை வாசகம்-3**

**மற்ற மூன்று வேதங்களிலும் இதே செய்திகள் சுருக்கி விளக்கி இதே எண்ணிக்கை உடைய காண்டம், மண்டலம், நாள், வாக்கு, வாக்கியம், வாசகமாக அருளப்பெற்றன.]**

33. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய தாத்தா பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, எல்லாம் வல்ல சித்தர், பரபிறம்மம், அருட்கொடை வள்ளல், ஞானவேந்தர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர், அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் அவர்கள் கி.பி. 785 முதல் கி.பி. 1040 வரை மீண்டும் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியும் அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியுமான முத்தமிழ் மொழியும், அண்ட பேரண்டங்களில் ஆட்சி செய்யும் இந்துவேதமும், இந்து மதமும் மீண்டும் இம்மண்ணுலகம் முழுவதும் பரவி இம்மண்ணுலக வாழ்வில்; உலக அமைதியும், நிம்மதியும், நிறைவும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும், மகிழ்வும், சமாதானமும், நிதானமும், மெய்யான நட்பும், தோழமையும், அன்பும், உறவும், அருளுலக ஈடுபாடும், இறைப் பற்றும், மத நம்பிக்கையும், வேதப் பிடிப்பும் விளைந்து உலக ஆன்மநேய ஒருமைப்பாடும்; உலகச் சமத்துவச் சகோதரத்தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயமும் உருவாகி, மொழி விடுதலை, இனவிடுதலை, நாட்டு விடுதலை, பண்பாட்டு விடுதலை, நாகரீகவிடுதலை முதலிய விடுதலைகளை உலகெங்குமுள்ள சிறு கூட்டத்தார் முதல் பெரிய பெரிய கூட்டத்தார்கள் வரை நிலையாக எவ்விதப் பாதிப்பும் இன்றி துய்த்திடுவதற்குரிய அருளாட்சியை உருவாக்கிடப் பாடுபட்டார். அதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அவருடைய குரு பாரம்பரியத்திலும், இலக்கிய பாரம்பரியத்திலும், அரசபாரம்பரியத்திலும் பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு கோணங்களில், பல்வேறு நோக்குகளில், பல்வேறு போக்குகளில் விளக்கப்பட்டுள்ளன. அவரே, தமது முயற்சிகள், தாம் உருவாக்கிய இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசின் மன்னர்களாலும், அரசியல் அதிகாரிகளாலும், அரசியல் சார்ந்த அரசியல் வாதிகளாலும், போலியான இந்து மதவாதிகளாலும்; ....தொடர்ந்து விளைவிக்கப்பட்ட துரோகங்களால் சூழ்ச்சியான விரோதங்களால் வீணாக்கப்பட்டதால்; நிலவறைக்குள் சென்று நீள்தவத்தில் ஆழ்ந்திட முடிவெடுத்திட்டார். அப்பொழுது அவர் எழுதிட்ட **"நிலவறையின் வாயிலிலே"** என்ற நூலில்; தாம் எழுதிய முப்பெரும் பாரம்பரியங்களின் செய்தித் தொகுப்பை, கருத்தோட்டத்தை, வரலாற்று உண்மைகளை மிகவும் சுருக்கி அழகுபட, சுவைமிக்க சிறிய சிறிய சொற்றொடர்களாகவும், சிலபல சொற்றொடர்கள் சேர்ந்த பொன்மொழிக் கருத்துரைகளாகவும் வழங்கியுள்ளார். அவற்றின் ஒருபகுதியை மட்டும் ஈண்டு குறிப்பிட்டு இந்த நிறைவுரையை நிறைவு செய்ய முயலுகிறோம்.

34. ''.......நான்கு யுகங்களாக அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியும், அருளூறு அமுதத் தெய்வீக செம்மொழியுமான முத்தமிழ் மொழியில் அருளப்பட்ட இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் இம்மண்ணுலகம் முழுதும் உருவாகியுள்ள அனைத்து வகைப்பட்ட மொழியினருக்கும், இனத்தவருக்கும், நாட்டவருக்கும், வழங்கிட அனுப்பப்பட்டுக் கொண்டே இருந்திட்டதால்; தமிழர்கள், அருளுலகச் செல்வங்களை வழங்கும் திருவிடத்தார்களாக; அருளாட்சியை நிலைநிறுத்திடும் திராவிடர்களாக உலகெங்கும் சென்று தங்கிட்டவர்களாக, தங்கிடுபவர்களாக, தங்கப் போகிறவர்களாக ஆகி விட்டார்கள். எனவேதான், இவர்

களிடையில் தாய்மொழிப்பற்று, தாய்மொழிவழி இனப்பற்று, தாய்மொழிவழி நாட்டுப்பற்று, தாய்மொழிவழி பண்பாட்டுப்பற்று, தாய்மொழிவழி நாகரீகப்பற்று, மொழியுரிமை உணர்வு, மொழித்தூய்மை உணர்வு, மொழிப் பெருமித உணர்வு, இன உரிமை உணர்வு, இன ஒற்றுமை உணர்வு, இனப் பெருமித உணர்வு, நாட்டுரிமையுணர்வு, நாட்டு ஒற்றுமை உணர்வு, நாட்டுப் பெருமித உணர்வு, பண்பாட்டுப் பிடிப்புணர்வு, பண்பாட்டுப் பெருமித உணர்வு, நாகரீகப் பிடிப்புணர்வு, நாகரீகப் பெருமித உணர்வு .... முதலிய உணர்வுகள் வளமாகவும், வாளிப்பாக வும், கட்டுக்கோப்பு மிக்க வடிவமைப்பாகவும் ஆட்சி நிலை பெறவில்லை. அதாவது, உலகெங்கும் திருவிடச் செல்வங்களைக் காப்பாற்றும் திருவிடத்தார்களாக, உலகெங்கும் இந்துவேத, இந்து அருளாட்சியை நிலைநிறுத்துவதற்காக திராவிடர்களாக, அருட்செல்வர்களாக, சென்று தங்கிட்ட தமிழர்கள் தங்களுடைய மொழி, இனம், நாடு, பண்பாடு, நாகரீகம், சார்ந்த தனித் தன்மைகளையும், பண்பியல்புகளையும், நாத்திகக் கூறுகளையும், வரலாற்று உரிமைகளையும், பெருமைகளையும், மறந்தும், துறந்தும், மறுத்து வெறுத்துப் புறக்கணித்து ஒதுக்கியும் செயல் பட ஆரம்பித்திட்ட காரணத்தால் தான் இம்மண்ணுலக மக்கள் அனைவருக்கும் பொதுவாக வழங்கப்பட்ட முதல் வேதத்துக்கும், வேத மதத்துக்கும், உரிய மூலவர்களாக, நாயகர்களாக, தலைவர்களாக, குருபீடங்களாக, ஆச்சாரியார்களாக உரிமையோடும், பெருமையோடும் செம் மாந்த வாழ்வு வாழவேண்டிய தமிழர்கள், அந்நிய நாடுகளில் மட்டுமின்றி தாய்நாட்டிலேயே அநாதைகளாக, அடிமைகளாக, கூலிகளாக, எடுபிடிகளாக, வாழ நேரிட்டுவிட்டது, வாழ, நேரிட்டுவிட்டது, வாழ நேரிட்டுவிட்டது. இவர்களை ஒன்று திரட்டவும், ஒற்றுமைப்படுத்தவும் இவர்களுடைய மொழிஉணர்வு, இனஉணர்வு, நாட்டுணர்வு, பண்பாட்டுணர்வு, நாகரிக உணர்வு, வரலாற்றுணர்வு .... முதலியவை விழிச்சியும், எழிச்சியும், ஆட்சிமீட்சியும், செழிச்சி மாட்சியும் அடைந்திடச் செய்யவும், தோற்றுவிக்கப்பட்ட நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக் களின் தலைவர்களாகவும், தளபதிகளாகவும், முன்னணிச் செயல் வீரர்களாகவும், வளர்ந்திட்ட வர்களில் ஏறத்தாழ எல்லோருமே போலிகளாக, தன்னல வெறியர்களாக, தானென்ற அகம் பாவ, ஆணவ அடாவடிக்காரர்களாக, பதவிக்கும் பொருளுக்கும், புகழுக்கும் பேராசை கொண்ட வெறியர்களாக, எதையும் எப்போதும் அந்நியருக்குக் காட்டிக் கொடுக்கும், கயவர் களாக மாறிவிடுகிறார்கள், மாறிவிடுகிறார்கள், மாறிவிடுகிறார்கள். எனவே, எனவே, எனவே, முத்தமிழின் அருமை பெருமைகளும், அரிய பயன்களும், முத்தமிழில் உள்ள இந்துவேதத்தின் அருமை பெருமைகளும், அரிய பயன்களும் நான்கு யுகங்களாகத் தமிழர்களையும், தமிழர்கள் மூலம் உலகத்தார்களையும் காத்துவரும் இந்துவேதமதமான இந்துமதத்தின் அருமைகளையும் பெருமைகளையும், அரிய பயன்களையும், தெரிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி ஒப்புக் கொண்டு, ஏற்று, நடைமுறைப் படித்திடுமாறு செய்திட்டால்தான் தமிழர்களைத்

தமிழர்களாக்கிட முடியும். அப்படித் தமிழர்களை தமிழர்களாக்கிய பிறகுதான் தமிழர்களை ஒன்று திரட்டவோ, ஒற்றுமைபடுத்தவோ; அவர்களிடம் இந்து வேதத்தையோ, இந்து மதத்தையோ ஒப்படைக்கவோ முற்படலாம், முற்படலாம், முற்படலாம்....''

இவ்வளவில், விரிவஞ்சி இந்துவேதத்துக்கும் இந்து மதத்துக்கும் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவராக விளங்கிய பதினோராவது பதினெண்சித்தர் மடாதிபதியும், பீடாதிபதியும், பன்னிரண்டாவது அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியாருமான குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூரின் வாசகத்தை நிறுத்தி; இந்த நிறைவுரையை நிறைவு செய்கிறோம்.

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி
பதின்மூன்றுவது அந்தணர் அண்ணல்
ஞானுச்சாரியார்
பதினெண் சித்தர் மடம்.

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**

# விரைவில் வெளிவர இருக்கும்

## பதினெண் சித்தர் மடம் வெளியீடுகள்

**13, குமார சாமி தெரு, வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை-53.**

| | | விலை |
|---|---|---|
| 1. | இந்து வேதம் முதல் பாகம் | ரு.10 |
| 2. | இந்து வேதம் இரண்டாம் பாகம் | ரு 25 |
| 3. | இந்து வேதம் மூன்றாம் பாகம் | ரு.50 |
| 4. | இந்து வேதச் சிந்தனைகள் | ரு.12 |
| 5. | இந்து மதச் சிந்தனைகள் | ரு.40 |
| 6. | இந்து மத நூல்கள் முதல் பாகம் | ரு.40 |
| 7. | இந்து மத நூல்கள் இரண்டாம் பாகம் | ரு.40 |
| 8. | அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர் வரலாறு | ரு.96 |
| 9. | மண்ணுலகப் பதினெண் சித்தர் வரலாறு | ரு.81 |
| 10. | 48 வகைச் சித்தர் வரலாறு | ரு.40 |
| 11. | 48 வகைக் கடவுளர் வரலாறு | ரு.35 |
| 12. | 48 வகை வழிபடு நிலையினர் வரலாறு | ரு.35 |
| 13. | அருளுலகத்தவர் வாழிட வகைகள் | ரு.60 |
| 14. | குடும்ப ஆண்டவர் பூசை முறை | ரு.64 |
| 15. | குலதெய்வ பூசை முறை | ரு.64 |
| 16. | கிராம தேவர் தேவதை பூசை முறை | ரு.64 |
| 17. | நாட்டுக் கடவுள் பூசை முறை | ரு.64 |
| 18. | நால்வகை பத்தி முறையும், பத்தி நெறியும் | ரு.35 |
| 19. | மந்திரிக்கும் முறைகள் | ரு.96 |
| 20. | காய சுத்தி, காய சித்தி விளக்கம் | ரு.64 |
| 21. | குண்டலினி; சித்தி முறை | ரு.60 |
| | தவசித்தி முறை | ரு.60 |
| | ஞானசித்தி முறை | ரு.60 |
| | பூசைசித்தி முறை | ரு.60 |
| | ஓகாசன சித்தி முறை | ரு.60 |
| | யோகாசன சித்தி முறை | ரு.60 |
| 22. | சேவலோன் போர்க்கலைகள் | ரு.108 |
| 23. | மரணமில்லா பெருவாழ்வு (நேரில் பெறவேண்டியது) | ரு.243 |
| 24. | வசிய மை முதல் மாரண மை வரை | ரு.144 |
| 25. | 48 வகைப்பட்ட மை தயாரிப்பு முறை (நேரில் பெற வேண்டியது) | ரு.192 |
| 26. | முற்பிறவி மறு பிறவி உணர்தல், உணர்த்துதல் | ரு.432 |
| 27. | ஆவி, ஆன்மா, ஆருயிர் பிரித்தறிதல் | ரு.729 |

28. ககனப்பயணம், கூடுவிட்டுக் கூடு பாய்தல் (நேரில் பெற வேண்டியது) ரூ.1359
29. பதினெண் சித்தர் பிறப்பியல் (சாதகம்) முறை ரூ.96
30. பதினெண் சித்தர் வரியியல் (கைரேகை) ரூ.96
31. பதினெண் சித்தர் அங்கவியல் (உறுப்பிலக்கண முறை) ரூ.96
32. பதினெண் சித்தர் பெயரியல் (பெயர் இராசி) முறை ரூ.96
33. பதினெண் சித்தர் மனையியல் (மனையடி சாத்திரம்) முறை ரூ.96
34. பதினெண் சித்தர் கணா நூல் ரூ.192
35. பதினெண் சித்தர்தொடு குறி நூல் (தொடு குறி சாத்திரம், சாத்திரம், சாத்திறம்) ரூ.144
36. பதினெண் சித்தர்விரிச்சி நூல் (சகுண சாத்திரம், சாத்திரம், சாத்திறம்) ரூ.192
37. பதினெண் சித்தர் மன நூல் ரூ.96
38. பதினெண் சித்தர் திருமண நூல் ரூ.96
39. மோகநூல் (நேரில் பெற வேண்டியது) ரூ.729
40. போக நூல் (நேரில் பெற வேண்டியது) ரூ.972
41. தீச்சை பெறுதலும், தருதலும் (நேரில் பெற வேண்டியது) ரூ.972

(இவை கையெழுத்து பிரதிகளான நூல்கள் ஏனெனில் மறையாக, ரகசியமாகக் காக்கப்பட வேண்டியவை என்பதால் அச்சிடப்படவில்லை)

42. பதினெண் சித்தர் மடநூல் (கோயில் கடவுளுக்காக சமைக்கும் முறை) ரூ.96
43. அடுக்களை சாத்தரம், சாத்திரம், சாத்திறம் (மானுடருக்காக சமைத்தல்) ரூ.144
44. பதினெண் சித்தர் குடமுழுக்குப் பூசை முறை ரூ.1359
45. தெய்வீக மருத்துவம் ரூ.25
46. இந்து வேத பூசை மொழி ரூ.96
47. குரு பாரம்பரியம் ரூ.108
48. இலக்கிய பாரம்பரியம் ரூ.108
49. அரச பாரம்பரியம் ரூ.108
50. ஞானாச்சாரியார் வரலாறு ரூ.48
51. 1536 வகைப்பட்ட கடவுளர் விளக்கம் ரூ.64
52. இந்துவேத சிந்தனைகள் இரண்டாம் பாகம் (ஓர் இந்துவின் வாழ்க்கை) ரூ.18

★குறிப்பு : பதினெண் சித்தர் மடத்தில் இருந்து நேரடியாக பெற்றால் புத்தகம் ஒன்றுக்கு 25 விழுக்காடு கழிவு தரப்படும்.